சுடர் 32
கதிர் 253
ஆடி 21 ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை
06 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 30
பக்கங்கள்: 48 +2

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
1kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
அவுஸ்திரேலியா Rs 800/-
லண்டன் Rs 600/-
Parcel.Lk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

## அமைச்சர் ரவியை பதவி விலகுமாறு மைத்திரி கோரிக்கை?

யாழ்ப்பாணம், ஓக. 6
ஊழல் முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்களை அடுத்து அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவைப் பதவியிலிருந்து >> 45

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுமி இறப்பு

கிளிநொச்சி, ஓக. 6
காய்ச்சல் காரணமாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட >> 45

# சிறப்பு அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு துன்னாலையில் நேற்று வீடுவீடாகத் தேடுதல்

### *3 பேர் கைது, ஹன்ரர்கள் மற்றும் மோட்டார் சைக்கிளும் மீட்பு*

யாழ்ப்பாணம், ஓக. 6
பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர், 'பீல்ட் பைக் குறூப்' குவிக்கப்பட்டு துன்னாலையில் நேற்று 5 மணி நேரம் முழுமையான சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது. காலையில் திடீரென முற்றுகையிடப்பட்ட கிராமத்தில் இருந்து சந்தேகத்துக்கிடமானவர்கள் என்று தெரிவிக்கப்பட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர். மணல் ஏற்றப் பயன்படுத்தப்படும் 6 ஹன்ரர்கள், 11 மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டன. இந்தத் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலால் அந்தப் >> 42



## 6 மாதங்களுக்குள் நிச்சயம் மாகாண தேர்தல் நடக்காது

யாழ்ப்பாணம், ஓக. 6
அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவது என்ற கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ள நிலையில், அத்தகைய தேர்தல் ஒன்று அடுத்து வரும் 6 மாதங்களுக்குள் நடத்தப்படுவது சாத்தியம் இல்லை என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தன. புதிய தேர்தல் முறையின் கீழேயே >> 42

# முடிவெடுக்கும் அதிகாரத்தில் முதலமைச்சர் விடாப்பிடி

### *வடக்கு மாகாண அமைச்சரவை விரைவில் மாறும்*

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 6
வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையை விரைவில் முழுமையாக மாற்றியமைப்பதில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதியாக இருக்கிறார். அமைச்சரவையைப் பற்றிய முடிவுகளில் எவரது தலையீடும் இன்றி முடிவெடுக்கும் உரிமை >> 45



## யார் வேண்டுமானாலும் சந்தித்து விவாதிக்கலாம்

### கூட்டமைப்பு விவகாரத்தில் ரெலோவுக்கு புளொட் பதில்

யாழ்ப்பாணம், ஓக. 6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் அதன் அங்கத்துவக் கட்சிகளைச் சேர்ந்த யார்வேண்டுமானாலும், அவர்கள் எந்த மட்டத் தலைவர்க >> 45

## நிமலரூபன், டில்ருக்ஸனின் நினைவுநாளில் கவனவீர்ப்பு

### *யாழ். மையப் பேருந்து நிலையம் முன்பாக செவ்வாயன்று ஒன்றுகூடுமாறு அழைப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 6
சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட அரசியல் கைதிகளான நிமலரூபன், டில்ருக்ஸன் ஆகியோரது நினைவேந்தல் நாளை >> 45

### கேப்பாபிலவு காணிகளை விடுவிக்க

## ராணுவத்துக்கு மேலும் ரூ. 48 மில்லியன் நிதி

யாழ்ப்பாணம், ஓக. 6
கேப்பாபிலவில் உள்ள மக்களின் காணிகளில் இருந்து வெளியேறுவதற்காக இராணுவத்துக்கு மேலும் 48 மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சர் சுவாமி நாதனின் மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட பணத்துக்குக் காடு மண்டிய காணியையே இராணுவம் விடுவித்ததாக மக்கள் குற்றஞ்சாட்டிவரும் நிலையில் மீண்டும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
மேலும் 111 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு >> 45

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் இம்முறை ரூ.6.2 பில்லியன் பிரம்மாண்ட ஆயுள் காப்புறுதி இலாபப்பங்கினை வழங்குகின்றது.

மீண்டும் ஒரு முறை ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு காப்புறுதித் துறையின் பிரம்மாண்ட இலாபப்பங்கான ரூ.6.2 பில்லியனை வழங்குகின்றது. கடந்த 12 வருட வரலாற்றில் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் வழங்கிய மொத்த இலாபப்பங்குத் தொகை ரூ.41 பில்லியனையும் கடந்துள்ளது.

இம்முறை 2016ஆம் ஆண்டிற்கான இலாபப்பங்கினை வழங்குவதுடன், ஒவ்வொரு வருடமும் பாரிய இலாபப்பங்கினை பகிர்ந்தளிக்கின்றது. காப்புறுதித்துறையில் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் முதன்மை இடத்தில் தனித்துவம் மிக்கதாக திகழ்வதுடன், மக்களின் ஆயுள் காப்புறுதித் தேவைகளுக்கு ஏற்ப காப்பீடுகளை வடிவமைக்கின்றது.



பக்கம் ௦௨

## கோண்டாவிலில் நேற்று மாலை 12 பேர் திடீர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட வீதிச் சோதனை நடவடிக்கையின்போது நேற்று மாலை 12 இளைஞர்கள் திடீரெனக் கைது செய்யப்பட்டனர். >> 42

# பிரச்சினை இப்போதைக்கு ஓயாது

யாழ்ப்பாணம், ஓக. 6
வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை விவகாரத்தில் தோன்றியுள்ள சர்ச்சை இப்போதைக்கு முடிவுக்கு வரும் போல் இல்லை என்று நேற்றைய கூட்டத்தின் பின்னர் உதயன் பத்திரிகையிடம் பேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவர் தெரிவித்தார்.
சபையின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட முதலமைச்சரின் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் இரு அமைச்சர்களை அவர்களது பதவிகளைத் தியாகம் செய்யுமாறு முதலமைச்சர் கோரினார். அதனடிப்படையில் விவசாய அமைச்சராக இருந்தவரான பொ. ஐங்கரநேசனும் கல்வி அமைச்சராக இருந்தவரான க. குருகுலராசாவும் தமது பதவிகளைத் தியாகம் செய்தனர்.
ஏனைய இரு அமைச் >> 45

SDB TOP SAVER
20 வருட பூர்த்தியை முன்னிட்டு
சேமிப்பு கணக்குக்கு வழங்கும்
10%
அதிகூடிய வட்டி
SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
011 5 411 411
SDB வங்கி
சனச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுக்கு கன்னத்தில் அறைந்தார் பல் மருத்துவர்!

## மட்டு. போதனா வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, ஓக. 6


பல் வலியால் துடித்துக் கொண்டிருந்த இளம் பெண் ஒருவரை அங்கு கடமையில் இருந்த மருத்துவர் கன்னத்தில் அறைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் நேற்று நடந்தது என்று கூறப்பட்டது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் ஒருவர் பல் பிடுங்குவதற்காகத் தனது தாயுடன் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அந்தப் பெண் பல் வலியால் அழுது கொண்டிருந்தார். மருத்துவரின் அறைக்குள் மகளுடன் செல்வதற்குத் தாயார் அங்கிருந்த உத்தியோகத்தரிடம் அனுமதி கோரினார். எனினும் மகளை மட்டும் செல்லுமாறு உத்தியோகத்தர் பணித்துள்ளார். உள்ளே சென்று திரும்பிய மகள் தன்னை மருத்துவர் கன்னத்தில் அறைந்தார் என்று தாயாரிடம் தெரிவித்துள்ளார். " நாங்கள் கிராமத்திலிருந்து வந்தோம். இங்கு ஒழுங்கான முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வளவு தூரம் வந்தோம். இவர்கள் இப்படி செய்து விட்டார்கள். மருத்துவர் கன்னத்தில் அறைந்தார் என்று மகள் என்னிடம் கூறினார். இதை நாம் யாரிடம் கேட்பது என்பது கூட எங்களுக்குத் தெரியவில்லை" என்று இளம் பெண்ணின் தாயார் கவலையுடன் தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது. (ஐ-10)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 10 பேர் கைது

திருகோணமலை, ஓக. 6

திருகோணமலை ஆண்டாங்குளம் உப்புவெளிப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேர் கைது செய்யப்பட்டனர். இலங்கை மின்சார சபையினரும், உப்புவெளிப் பொலிஸாரும் இணைந்து நேற்றுத் திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேர் கைது செய்யப்பட்டனர். மின் இணைப்பைச் சோதனையிட்ட போது அனுமதியின்றி இவர்கள் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றமை தெரியவந்தது. கைது செய்யப்பட்டவர்கள் ஆண்டாங்குளம் 4ஆம் கட்டைப் மற்றும் 5 ஆம் கட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்களைத் திருகோண மலை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (10. 45)


கொழும்பு சாகிராக் கல்லூரியின் நடைபயணம் நேற்று நடைபெற்றது. இதன்போது பிடிக்கப்பட்டிருந்த பதாகையில் 'நாங்கள் ஓவியா ரசிகர்கள்' என்று எழுதப்பட்டிருந்தது. (ஐ)

# தமிழர்கள் உரிமைகளை பெறுவதற்கான தருணமிது

## யாழில் தெரிவித்தார் அமைச்சர் இராதாகிருஸ்ணன்

யாழ்ப்பாணம்,ஓக.6

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான காலம் கனிந்துள்ளது. இந்த அரசின் ஆட்சியில் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் தலைமைகளுடன் இணைந்து நாமும் போராட வேண்டும். இது தமிழர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பம். இதனைத் தவறவிட்டு பின்னர் உரிமைகளுக்காகப் போராட முடியாது. இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதகிருஸ்ணன் தெரிவித்தார்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது பன்னாட்டு மாநாடு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்றது.

இந்த மாநாட்டைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.அவர் தெரிவித்ததாவது:

தமிழர் பண்பாட்டு இயக்கம் புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களை ஒன்றிணைக்கின்றது. இலங்கையில் வாழ்ந்த ஏராளமான தமிழர்கள் பல புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு வாழ்ந்து வரும் தமிழர்கள் தங்களின் பண்பாடுகளை மறக்காது தமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பின்பற்றி வருகின்றனர்.இது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். ஆனாலும் சில துர்ப்பாக்கிய சம்பவங்களும் இங்கு இடம்பெற்று வருகின்றன. நல்லூர் ஆலயப்பகுதியில் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இது இலங்கையின் நீதித்துறைக்கே சவால் விடுகின்ற செயலாகவே அமைந்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் வடக்குப் பகுதிகளில் இனிமேலும் இடம்பெறாத வகையில் அனைவரும் செயற்பட வேண்டும். தற்போதைய கூட்டாட்சி அரசில் அரச தலைவர் மைத்திரியும்,தலைமை அமைச்சர் ரணிலும் ஒரு இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஒருகாலத்தில் யாழ்ப்பாண தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் இணைக்கவே முடியாது என்ற கருத்துக்கள் இருந்து வந்தன. ஆனால் அவை மாறி இணைந்து செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். நாங்கள் எமது கலாசாரம்,பண்பாடுகள் போன்றவற்றை மறக்காது ஏனைய சமூகத்துடன் பயணிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.உலகில் தமிழர்களுக்கு என்று ஒரு தனி நாடு இல்லை. 7 கோடிக்கும் அதிகமாகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் தமிழ் நாட்டுக்குக் கிடைக்காத அந்தஸ்துகள் கூட இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இருக்கின்றன. தேசிய கீதம் தமிழில் பாடக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.தமிழர்களுக்கு நாடாளுமன்றில் உரிய அந்தஸ்துகள் வழங்கப்பட்டுள்ளன. சில தமிழர்கள் அமைச்சர்களாக இருக்கின்றனர். இன்னும் நாம் பெற வேண்டியவை நிறைய இருக்கின்றன. அவற்றைப் பெற போராடவும் தயாராக இருக்கின்றோம். ஆனால் எமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் இனங்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் உள்ள வடக்கு மக்களும் கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகம், மலையக மக்கள் என முத்தரப்பும் இணைந்து செயற்படவேண்டிய தருணத்தில் உள்ளோம். அண்மையில் ஜேர்மனியை சேர்ந்த ஒருவர் மலையகத் தமிழர்களை மிகக் கேவலமாகச் சுட்டிக்காட்டி கருத்துக்களைப் பதிவு செய்திருந்தார். மலையக மக்களையும் யாழ்ப்பாண மக்களையும் பிரிக்க வேண்டும் எனச் செய்யப்பட்ட சூழ்ச்சியாகும் -என்றார். "உலகத்தில் தமிழர்களின் பண்பாடுகளை அறிந்தவர்கள் அரிதாகிக் கொண்டிருக்கின்றனர். அதனால் பல தமிழ் அறிஞர்கள் ஒன்றிணைந்து தமிழைக் காப்பாற்ற இவ்வாறான மாநாடுகளை நடத்தி வருகின்றனர். அதனை நாம் வரவேற்கின்றோம்.நாம் எமது இலக்கை அடைவதற்காக இலட்சக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்து விட்டோம். தமிழ் மொழி அழிந்து போய் விடக்கூடாது. என்ற நல்லெண்ணத்தில் பல அறிஞர்கள் இணைந்து நாம் இந்த எழுச்சியான மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றோம்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது உரையில் தெரிவித்தார். (ஐ-8)

# உலகத் தமிழ் மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்








யாழ்ப்பாணம்,ஓக.6

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது பன்னாட்டு மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நேற்று ஆரம்பமானது.

கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதகிருஸ்ணன் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். முதல் நாள் நிகழ்வுகள் 10 அமர்வுகளாக இடம்பெற்றன. கல்விக்கான நிதியுதவி, மலர் வெளியீடு, ஆய்வுரைகள் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. மாநாட்டில் 66 ஆய்வுக் கட்டுரைகள் பரிசீலிக்கப்பட்டன. விருந்தினர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். முனைவர் பாஞ். இராமலிங்கம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இந்திய, இலங்கைப் பேராசிரியர்கள்.பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

"தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்காக நூற்றுக்கணக்கான பாடசாலைகளை புலம் பெயர் நாடுகளில் உருவாக்கியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள். அவ்வாறு அவர்களால் உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ்ப் பாடசாலைகள் புலம்பெயர் நாடுகளில் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.தமிழை வளர்ப்பதில் அவர்களும் பெரும் பங்காற்றினார்கள். " என்று உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலதலைவர் வி.சு.துரைராஜா தனது உரையில் தெரிவித்தார்.

"உலகத் தமிழர் பண்பாட்டுப் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சி எடுத்து வரும் இராஜாங்க அமைச்சருக்கு எமது நன்றிகள். அதற்காக யாழ்ப்பாணம் மற்றும் கண்டிப் பகுதிகளில் இருந்து ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். இந்த முயற்சி வெற்றியடைய வேண்டும்" என்று தமிழ் பண்பாட்டு இயக்கத் தலைவர் பாஞ். இராமலிங்கம் தனது உரையில் தெரிவித்தார்.அதேவேளை மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் இடம்பெறும். சென்னை முனைவர் வா.மு.சேதுராமன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கவியரங்கம், பேராளர் கருத்தரங்கம், பேராளர்களின் கருத்துரைகள், இலக்கியத் திரைப்படக் காட்சி, கலைநிகழ்வுகள் இடம்பெறும். நிகழ்வில் பேராளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். (ஐ-8-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பிக்கு உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 6

திஸ்ஸ மாத்தறை பிரதான வீதி, ஹூங்கம மெதஎலிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், பிக்கு ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து நேற்று அதிகாலை 4.45 மணியளவில் நடந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

ஹூங்கம 7ஆம் கிராம சேவைப் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சம்போதி விகாரையில் கடமையாற்றும் 49 வயது மதிக்கத்தக்க பிக்குவே இவ்வாறு உயிரிழந்தார். அவர் மாத்தறை - வெலிகம பிரதேசத்தில் இறப்பு வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தார். வரும் வழியில் பயணித்த காரின் காற்றுப் போன சில்லை மாற்றுவதற்கு நிறுத்தி வைத்திருந்தார்.

பின்புறமாக வந்த வான் காரை மோதித் தள்ளியது. காருக்குள் இருந்த பிக்கு உயிரிழுந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சீதுவை பிரதேசத்தில் இருந்து கதிர்மாமம் நோக்கிச் சென்ற வானே இவ்வாறு காருடன் மோதுண்டுள்ளது. சம்பவத்தில் வான் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். பிக்குவின் சடலம் அம்பலாந்தோட்டை மருத்துவமனையின் சடல அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# மகிந்த மீள வருவார்

## மகிந்தானந்த எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, ஓக. 6

நாட்டில் புதிய அரசு ஒன்றை அமைத்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வருவார். அவரை நாட்டின் தலைமை அமைச்சர் பதவிக்குக் கொண்டு வருவோம்.

இவ்வாறு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாட்டின் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் புதுக் கட்சியான சிறிலங்கா பொதுஜன முன்னணியின் மக்கள் சந்திப்பு கினிகத்தேனை பிடாஸ் விடுதியில் நேற்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் எதிர்வரும் தேர்தல் எதுவாக இருந்தாலும் சரி அந்தத் தேர்தலை வெற்றி கொள்வோம். இந்த அரசுக்கு மக்கள் எதிர்ப்பானவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவோம். தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை பெரிய நெருக்கடிக்குள்ளாக்கி நல்லாட்சி எனும் பேரில் அரசை முன்னெடுத்துச் செல்கின்றனர். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வெளிநாட்டவருக்கு நீண்டகாலக்குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளனர். இந்த துறைமுகத்தின் ஊடாக இந்த நாட்டின் அரசு பயன் பெற முடியாத நிலையில் உள்ளது. அம்பாந்தோட்டை அபிவிருத்தியின் ஊடாகப் பெரிய பொருளாதார நெருக்கடிகளை இல்லாதொழிக்கலாம்.

ஆனால் இந்த துறைமுகத்தை வெளிநாட்டவருக்கு கொடுப்பதனால் இதில் கிடைக்கும் இலாபத்தை நாட்டின் தலைவர்கள் சிலர் தனது சட்டைப் பைக்குள் போடும் நிலை உருவாகியுள்ளது. எதிர்த்துக் கேட்டால் எம்மைச் சரியில்லை என்று இன்றும் எமக்கு எதிராக நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றனர்.


இந்த அரசை மக்கள் வெறுத்து வருகின்றனர். எதிர்வரும் காலத்தில் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களை நடத்தப் போவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவர்களின் தேர்தல் முறையானது பழைய ஆடைத் தொழிற்சாலை போல் அமைகின்றது. நாடாளுமன்றத்தில் முன்னாள் நிதி அமைச்சரும், தற்போதைய அயலுறவுத்துறை அமைச்சருமான ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நிதி மோசடி நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 96 உறுப்பினர்களும் ஆதரவு வழங்கவுள்ளனர்.

இன்று நாடாளுமன்றத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் அதிகமானோர் வாக்களிப்புக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்றும் எம்மிடம் பலர் தெரிவித்துள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை நிச்சயம் வெற்றிபெறும். அமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் - என்றார். (ஐ-10, 43)





முல்லைத்தீவு ஆழிப்பேரலை நினைவாலயத்தில் சிறப்பு வழிபாடு மற்றும் அஞ்சலி நிகழ்வு என்பன நேற்று இடம்பெற்றன. 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்த பொதுமக்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள் இடம்பெற்றன. அதில் கிறிஸ்தவ மதகுருமார்கள், பன்னாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## விசாரணை நடத்தினால் பலர் பதவி விலக நேரிடும்

**எச்சரிக்கிறார் அமைச்சர் சுஜீவ சேனசிங்க**

கொழும்பு, ஓக. 6

ஊழல் மோசடிகள் தொடர்பாகச் சரியான விசாரணைகள் மேற்கொள்ளப்படுமாயின் நாட்டின் பல அரசியல்வாதிகள் தமது பதவிகளை விட்டு விலக நேரிடும்.

இவ்வாறு பன்னாட்டு வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

கடுவலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர், நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:


நான் அனைத்தையும் வெளிப்படையாகவே மேற்கொள்கின்றேன். எவரிடமும் பணத்தைப் பெற வேண்டிய தேவையில்லை. வீட்டையோ, காணியையே பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. என்னுடைய உடைமைகள், வங்கிக் கணக்கு உள்ளிட்ட அனைத்தையும் நான் அரச தலைவருக்குச் சமர்ப்பித்துள்ளேன். எங்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கலாம். . அனைத்து அரசியல்வாதிகள் தொடர்பிலும் ஆராய்ந்து பாருங்கள். அப்படி ஆராய்ந்தால் அனைவரும் பதவி விலக நேரிடும். அனைவருக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அது மகிழ்ச்சியே" - என்றார். (ஐ)

குருத்துவ வைரவிழாக் காணும்

அருட்தந்தை

அமிர்தநாதர் கில்லறியன் வேதநாயகம் அடிகள்

06.08.1957 - 06.08.2017




யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பரிசுத்த புதுமைமாதா ஆலயப் பங்கின் ஏக குருப்பிரசாதியும், அமலமரித் தியாகியும் மூத்தகுருவுமான அருட்தந்தை வேதநாயகம் அடிகள் தமது குருத்துவ திருநிலைப்படுத்தலின் வைர விழாவினைச சிறப்பிக்கும் இந்நாளினில் அருட்தந்தையுடன் இணைந்து இறைமக்கள் நாமும் வாசகநேயர் களும் இறைபுகழ் கூறி, வாழ்த்தி, கௌரவித்து நிற்கின் றோம்.

தமது அறுபது வருட காலக் குருத்துவப் பணியிலே இறைமறைகாயாய தமக்கே உரித்தான தாழ்ச்சி, பொறுமை, செப வாஞ்சை, இரக்கம், அமைதி, கடின ஊழியம் எனும் பண்புகளினால் இறையாட்சியின் வளர்ச்சிக்கு வித்திட்ட விதைகள் விருட்சமாகி நிற்பதை, இவர் பணியாற்றிய பங்குத்தளங்களான மன்னார், பெரியபண்டிவிரிச்சான், அடம்பன், கிளிநொச்சி, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்கள் சான்றுபகரிகின்றன. பிலிப்பைன்சில் சிறந்த கட்டட வரைபடக்கலைஞராக தேறிய இவரின் கைவண்ணம் யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களின் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் மெருகூட்டுவதைக் காணலாம்.

மேலும் 1979 - 1982 வரையிலான காலப்பகுதியில் அமலமரித்தியாகிகளின் இலங்கை முதல்வரின் பிரதிநிதியாக வடபகுதியில் கடமையாற்றியுள்ளார் ஓய்வு பெற்ற நிலையிலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்ற அடிகளாரின் பணி இன்னும் இன்னுமாக இறை உடனிருப்பிலும் அமல அன்னையின் தெய்வீக வழி நடத்துதலிலும் ஓங்கி நிற்க வாழ்த்துகின்றோம்.

"வாழ்க அமலமரித் தியாகிகள்"

தகவல்: பாக்கியநாதர் யோண்கெனடி



## 10ஆம் திருவிழா

### ஏவிளம்பி தன்னில் அனுபூதியையும் ஏற்றருள் செய்கிறான்

நல்லை நகரில்
உறைந்திருந்து எங்கள்
நடேவியந்திடும்
வண்ணமிங்கே
நல்லாண்டுக்கொரு சிறு
சிறுமாற்றம் புகுத்தியே
நம்மை வழிபடச் செய்பவனாம்
படித்தவரோடு பாமரருஞ்
சேர்ந்திங்கே
பல காலமாகப் பஜனைபாடும்
வகுத்தவரப்பினிற் கமைவான
பாடலால்
வழிபடுவோரையும்
இணைத்தது போல்
நீண்ட கால ஓதி வந்த எங்கள்
கந்தரனுபூதியை ஏற்று
சண்டுக வாசலில் ஏவிளம்பி
பெருவிழாவில்
தன் அனுபூதியைப்
பாடவைத்தான்
திருப்புகழ் பஜனை
திருவாசகத்தோடு
அனுபூதிக்கும் ஆங்கோர்
இடங்கொடுத்து
பெருவிழாவில் ஓர் அம்சமாக்கி
முருகன் பெருமை
சேர்த்திங்கே அருளுகின்றான்.

*கவிமணி அன்னைதாஸன்*
*ஊரெழு*

### குவலயத்தைக் காத்திடுவாய் முருகா

வெள்ளிமலை மீதமரும் முருகா
வினைகளெலாம்
தீர்த்தருள்வாய் முருகா
கொள்ளையின்ப மீந்திடுவாய்
முருகா குவலயத்தைக்
காத்திடுவாய் முருகா
தெள்ளுதமிழ்
பொங்கிடவே முருகா
திகழவழி காட்டிடுவாய் முருகா
வள்ளலுனை
வழுத்துகிறோம் முருகா
வறுமை நிலை
போக்கிடுவாய் முருகா

*கலாபூசணம் கலைமாமணி*
*கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

### பரமேஸ்வரன் புதல்வனே

திக்கெங்கும் மயோசை தித்திக்கும் ஒலியோசை
எங்கெங்கும் இசையோசை எத்திக்கும் புகழோசை
சங்கங்கள் கவி பாடிடும் சங்கரனே உனக்காக
சங்கடங்கள் தவிர்ப்பாய் சலனமதை தவிர்ப்பாய்
பார்வதி மைந்தா பரமேஸ்வரன் புதல்வா
பாரெல்லாம் செழிக்க வீதி உலா பவனி வருவாயே

*அரியாலையூர் செல்வி மிதுாந்தி செல்வராஜா*




திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

கஜமுகன் ஹாட்வெயர்

American

P.N.K Group

Distributor for Amercan Mineral Water

No. 587, K.K.S.Road, Jaffna. No. 12 1/1, Stanley Road, Jaffna. (Punnalai Road)

T.P.: 021 221 7277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா




சாவகச்சேரி, ஓக. 6
மீசாலை பாரதி தனியார் கல்வி நிலையத்தில் இயங்கும் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா நேற்றுச் சாவகச்சேரி ஜங்கரன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. பட்டம் பெறும் மாணவர்கள், விருந்தினர்கள், கல்வியியலாளர்கள், சாவகச்சேரி டச்சு சாலை பழநி ஆண்டவர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். விருந்தினர்கள் மாணவர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். 14 மாணவர்களுக்குப் பட்டம் வழங்கப்பட்டது. வடக்கு மற்றும் மத்திய மாகாணத்தமிழ்இணையக் கல்விக் கழக இயக்குநர் இ.கோபிகிருஷ்ணா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் தலைமை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகைசார்வாழ்நாள்பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக ஜப்பான் காக்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப்பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## மைதானத்தைச் சீரமைக்கக் கோரி

# திருமலையில் கவனவீர்ப்பு

திருகோணமலை, ஓக. 6
விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்குமாறு கோரி திருகோணமலை மாவட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
திருகோணமலை கடற்படைத்தள வீதியில் உள்ள மக்கெய்சர் விளையாட்டு அரங்கு நுழைவாயிலில் ஒன்று கூடி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருகோணமலை மக்கெய்சர் மைதானத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் சீரமைத்துத் தருமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர். "நிரந்தரமான விளையாட்டு மைதானம் ஒன்று எங்களது மாவட்டத்தில் இல்லை. இருக்கின்ற மைதானமும் சீரமைப்பின்றிக் கைவிடப்பட்டுள்ளது. அதனால் விளையாட்டுத்திறனுடைய இளைஞர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாமல் உள்ளனர். போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இரவல் மைதானங்களுக்குச் சென்று பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த ஆறு வருடங்களாக அபிவிருத்தி என்ற பெயரில் மைதானம் வெறிச்சோடிக் காணப்படுகிறது. விளையாட்டுத் தேவைக்காக மறுக்கப்பட்ட மைதானம், களியாட்ட நிகழ்வுகளுக்காக அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகின்றது" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர் (ஐ-10,40)



## வாகன விபத்தில் இருவர் படுகாயம்

சாவகச்சேரி, ஓக. 6
மோட்டார் சைக்கிள் - பிக்கப் வாகனம் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இதில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மட்டுவில் வீதி, புத்தூரில் நேற்று நண்பகல் 12.30 மணி அளவில் விபத்து நடந்தது. மோட்டார் சைக்கிளில் கணவன் மனைவி சென்று கொண்டிருந்தனர். சாவகச்சேரி நுணாவில் கிழக்கைச் சேர்ந்த தம்பதியினர் புத்தூர் சாலை வழியாக சாவகச்சேரிக்கு வந்துள்ளனர்.
அவ்வாறு மீசாலை வடக்கைச் சேர்ந்த பிக்கப் வாகனமும் வந்துள்ளது. விரவாணிப்பகுதியில்சாலையின்நடுவேநாய் சாவடைந்த நிலையில் காணப்பட்டதால் அதனை விலகிச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளைச் சாலையின் மையப் பகுதிக்கு செலுத்தியுள்ளார். இதனால் பின்தொடர்ந்து வந்த பிக்கப் வாகனச் சாரதி நிலைகுலைந்து சாலையின் மையப் பகுதியைத் தாண்டி சாலையின் மறுபக்கம் வாகனத்தைச் செலுத்தியுள்ளார். அப்போது வாகனத்தின் முன்பகுதி மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த பெண்ணில் மோதியதில் பெண் வாகனத்தின் மீது தூக்கி வீசப்பட்டார். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் மறுகரையில் வீழ்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதனால் படுகாயம் அடைந்த கணவன் மனைவியை விபத்தை ஏற்படுத்திய பிக்கப் வாகனத்தில் வந்தவர்கள் ஏற்றிச் சென்று சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஐ-10, 9)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு போசாக்குக் கருத்தரங்கு



சாவகச்சேரி, ஓக. 6
தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான போசாக்குக்கருத்தரங்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதில் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரைகளைவழங்கினர். வடக்குமாகாணசுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் இந்தக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.
அதேவேளை பிரதேசத்தில் இயங்கும் தாய்மார் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான போசாக்கு தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## வயோதிபர் சடலமாக மீட்பு


சாவகச்சேரி, ஓக. 6
இயற்கைக் கடன் கழிக்கச் சென்ற வயோதிபர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் கற்குளி சாவகச்சேரியில் நேற்றுக் காலை நடந்தது.
சிவகுரு மார்க்கண்டு என்ற 69 வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இயற்கைக் கடன் கழிப்பதற்குச்சென்றமுதியவரைக்காணவில்லைஎன்று வீட்டுக்காரர் தேடினர். அவர்கள் இயற்கைக் கடன் கழிக்கும் இடத்துக்குச் சென்று பார்த்த போது, முதியவர் வீழ்ந்த நிலையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 9)

## மாடு கடத்திய குற்றச்சாட்டு; இருவர் கைது

மட்டக்களப்பில் அனுமதிப்பத்திரமின்றிச் சட்ட விரோதமான முறையில் 11 மாடுகளைக் கடத்திய குற்றச்சாட்டில் நேற்று இருவர் கைதுசெய்யப்பட்டனர். பாரவூர்தி ஒன்றில் மாடுகள் கடத்திச் செல்லப்படுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதனையடுத்துப் பொலிஸார் நேற்று அதிகாலை சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். மாடுகளை ஏற்றி வந்த பாரவூர்தியை இடை மறித்துப் பொலிஸார் சோதனையிட்டனர். றெதிதென்ன பிரதேசத்திலிருந்து காத்தான்குடிக்குக் களவாக மாடுகள் கடத்தப்பட்டமை தெரியவந்தது. அதனையடுத்து பாரவூர்தியுடன் மாடுகளையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## நுவரெலியாவில் அதிக பனிமூட்டம்

நுவரெலியா, ஓக. 6
நுவரெலியா மாவட்டத்தில் அதிக மழையும், பனிமூட்டம் நிறைந்தகாலநிலையும் நேற்றுக்காணப்பட்டது. ஹற்றன் - கொழும்பு மற்றும் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதிகளில் அதிக பனிமூட்டம் காணப்பட்டது. பனிமூட்டத்தால் வாகன சாரதிகள் பல சிரமங்களை எதிர் கொண்டனர். "நுவெரெலியாவில் பனிமூட்டமான காலநிலை நிலவுவதால் சாரதிகள் வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிரவிட்டுச் செல்லவும்" என்று பொலிஸார் அறிவித்தனர். (ஐ-10)




## தரம் 5 மாணவர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு



வவுனியா, ஓக. 6
இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்புவழிகாட்டல் செயலமர்வு நேற்று நடைபெற்றது. மக்கள் வங்கி வவுனியா கிளையின் ஏற்பாட்டில் வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை 8.30 தொடக்கம் மதியம் ஒரு மணி வரை இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. மக்கள் வங்கியின் வன்னி பிராந்திய முகாமையாளர் சிவா சிவக்கொழுந்து தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் ஜி.ஜங்கரன், கே.ஆர். கமலநாதன் ஆகியோர் விரிவுரைகளை நடத்தினர். கருத்தரங்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர் கு.கோடீஸ்வரன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர், மாணவர்கள், மக்கள் வங்கி பிராந்திய மற்றும் வவுனியா கிளை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி மாவட்டக் கமக்கார அமைப்புக்களின் அதிகார சபையும், கிளிநொச்சி மாவட்டக் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நேற்றுமுன்தினம் குருதிக் கொடை நிகழ்வு ஒன்றை முன்னெடுத்தனர்.
"அன்னதானம் பசியைப் போக்கும், குருதித்தானம் உயிரைக் காக்கும்' எனும் தொனிப் பொருளில் குறித்த குருதிக்கொடை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதில் விவசாயிகள், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (2-16)

# மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டங்களில் கடற்றொழில் சமாசம் புறக்கணிப்பு

## அதன் தலைவர் ராயாகுரூஸ் குற்றச்சாட்டு

மன்னார், ஒக. 6
மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கடற்றொழிலாளர் சமாசத்துக்கான பிரதிநிதித்துவத்தினை வேண்டுமென்றே மாவட்டச் செயலகம் மறுத்து வருகிறது என அதன் தலைவர் ராயாகுரூஸ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: "மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கடற்றொழிலாளர் சமாசத்திற்கான பிரதிநிதித்துவத்தினை வேண்டுமென்றே மாவட்டச் செயலகம் மறுத்துவருகிறது. மாவட்டங்கள்தோறும் கடற்றொழிலாளர் அமைப்புக்களில் சமாசம் மற்றும் சம்மேளனம் என இரு அமைப்புக்கள் உண்டு. வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இரு அமைப்புக்களின் தலைவர்களும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகின்றனர். கூட்டங்களுக்குச் செல்லும் பிரதிநிதிகள் தமது துறைசார் பிரச்சினைகளை அங்குள்ள அதிகாரிகளுக்கும், இணைத் தலைவர்களுக்கும் விளக்குகின்றனர். இதன் போதே மாவட்டத்தின் மீனவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வுகள் எட்டப்படுகின்றன.
மன்னார் மாவட்டத்தில் மட்டும் மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத்தின் சார்பில் அதன் தலைவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. இதனை நாம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருந்தோம். அதன் பிரகாரம் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) இடம்பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு எம்மை அனுமதிக்குமாறு கோரியபோதும் அழைப்பிதழ் இல்லாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவித்து எமக்கான அனுமதி மறுக்கப்பட்டது.
எனவே இனிவரும் காலத்தில் எம்மையும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கு கொண்டு எமது துறைசார் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட அனுமதிக்கவேண்டும். எம்மை அழைப்பதற்கு இணைத்தலைவர்கள் , மாவட்ட அரசியல்வாதிகளும் ஆவனை செய்யவேண்டும். ஏனெனில் இது இன்று உள்ள பிரச்சினை கிடையாது. நீண்டகாலமாக எமக்குள்ள ஓர் பெரும் பிரச்சினை". என்றார்.
"மாவட்டத்தில் சகல தரப்பினரதும் ஓர் பிரதிநிதி ஒருங்கிணைப்புக்கு குழுக் கூட்டத்துக்கு அழைக்கப்படுகின்றார். அவரின் பிரசன்னத்துடனேயே கூட்டம் நடாத்தப்படுகின்றது" என மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர். (21, 101)

# வவுனியா நகரில் துப்புரவுப் பணி



வவுனியா, ஒக. 6
வவுனியா மையப் பேருந்து நிலையம் மற்றும் வவுனியா நகர மையத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் முன்பாகவுள்ள இடங்களைத் துப்பரவு செய்யும் பணி நேற்று முன்தினம் காலை 8.30மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை இடம்பெற்றது.
வவுனியா பொலிஸார், வர்த்தகர்கள், நகரசபையினர் இணைந்து மேற்கொண்ட இந்த டெங்கு நுளம்பு ஒழிப்பு சிரமதானப்பணியில் சுமார் 40 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நாட்டில் பல இடங்களில் டெங்கு நோய்த் தாக்கங்கள் அதிகரித்துள்ள நிலையில் இவர்களின் நடவடிக்கை முன்மாதிரியாக அமைந்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (4)

# போலி சிகரெட் விற்பனை: ரூபா 10 ஆயிரம், தண்டம்

கிளிநொச்சி, ஒக. 6
கிளிநொச்சி பளைப் பகுதியில் போலி சிகரெட்டுக்களை விற்பனை செய்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. கிளிநொச்சிப் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போலி சிகரெட்டுக் களை விற்பனை செய்தவரை பொலிஸார் கைது செய்யதனர். இவரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தினர்.
சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டார் இதனால் அவருக்குப் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ற-10, 6)

# கசிப்புடன் கைதானவருக்கு ரூபா 18 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சி, ஒக. 6
கிளிநொச்சியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட இருவருக்கு 18 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிவான்மன்று.
கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பு வைத்திருந்தார்கள் குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர். கிளிநொச்சி நீதிவான் மன்றில் கடந்த வியாழக்கிழமை அவர்கள் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களில் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் மற்றையவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து கிளிநொச்சி நீதிவான்மன்று பணித்தது. (46)

# முருங்கன், நானாட்டானில் கட்டடங்கள் திறந்து வைப்பு



மன்னார், ஒக. 6
மன்னார் முருங்கன் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சத்திர சிகிச்சை விடுதி மற்றும் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரிக்கான விடுதி ஆகியனவற்றை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் திறந்து வைத்தார்.
குறித்த நிகழ்வில் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.
சுதந்திர சுகாதார சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் சுகாதார சுதேச மருத்துவ மற்றும் சிறுவர் நன்னடத்தை அமைச்சு வடக்கு மாகாணம், எய்ட்ஸ், கசரோகம், மலேரியா, நோய்களை அழித்தொழிப்பதற்கான உலக நிதியத்தின் கருத்திட்டத்தின் கீழ் இவை அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன. (4)

# மருத்துவமனை பிள்ளையார் ஆலய உண்டியல் உடைத்து பணம் திருட்டு

வவுனியா, ஒக. 6
வவுனியா பொது மருத்துவ மனையிலுள்ள பிள்ளையார் ஆலயத்தின் உண்டியல் நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு, அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்ட இரண்டாது சம்பவம் இது. கடந்த வருடம் இதே மாதம் அந்த உண்டியல் உடைக்கப்பட்டது. என மருத்தவ நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
வவுனியா பொது மருத்துவமனையின் மருத்துவர்கள் விடுதிக்குச் செல்லும் முதன்மை வாயிலில் பிள்ளையார் ஆலயம் உள்ளது. உண்டியல் கதவு மருத்துவமனைக்குள் இருக்கிறது. அதனை உடைத்தே அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. மருத்துவ மனை நிர்வாகத்தினரால் பொலிசாருக்கு நேற்றயதினம் முறைப்பாடு கொடுப்பட்டது. முறைப்பாட்டினையடுத்து பொலிசார் அங்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். எதிர்வரும் 21ஆம் திகதியன்று ஆலயத்தில் குடமுழுக்கு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (21)



# வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திடீர் இடமாற்றம்

வவுனியா, ஒக. 6
வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய விஜயமுனி சோமரத்னவுக்குத் திடீர் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவிசாவளைப் பகுதியில் காணப்படும் பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரியாக அவர் கடமையேற்கவுள்ளார். கடந்த ஒன்றரை வருடங்களாக வவுனியா பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய நிலயிலேயே அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வவுனியாவின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக அம்பலாங்கொடைப் பகுதி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய முதன்மை உயர்பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பொறுப்பேற்கவுள்ளார். எனத் தெரிவிக்கப்பட்டது. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வரங்கு நாளை

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் எட்டாவது ஆய்வரங்குநாளைதிங்கட்கிழமைமாலை4மணியளவில்இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின்கவிஞர்முருகையன்கேட்போர்கூடத்தில்இடம்பெறவுள்ளது. ஒக்ரோபர் புரட்சியும் இரண்டாம் உலகப் போரும் என்ற தலைப்பில் இடம்பெறவுள்ள இவ் ஆய்வரங்குக்குத் தோழர் தி. அனோஜன் தலைமைதாங்கவுள்ளதுடன், ஆய்வுரையைத்தோழர்டேவிட்சுரேன் ஆற்றவுள்ளார். இதில்பலவிடயங்கள்தொடர்பாகஆராயப்படவுள்ளன. ஆய்வுரையைத்தொடர்ந்துதிறந்தகலந்துரையாடலும்இடம்பெறவுள்ளது. எனவே ஆர்வமுள்ள அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு புதியஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியினர் கேட்டுக்கொண்டனர். (21)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபலமான கல்வி நிறுவனம் ஒன்றுக்கு வரவேற்பாளர் தேவை. நன்கு ஆங்கில அறிவும் கணினி அறிவும் கட்டாயமாக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய திறமையிருப்பின் நன்று தகைமையுடையோர் எதிர் வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரக் கோவையினை அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல - 5539
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலை வாய்ப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வேலை வாய்ப்புக்கள்
லேபல், பொதியிடல் பகுதிக்கு ஆண், பெண் தேவை.
வயது 18 - 50 வரை சம்பளம் OT யுடன் 35,000/=
சாப்பாடு, தங்குமிடம் இலவசம்.
விமான நிலையத்தில் அணியும் யூனிபோம் வெள்ளை
சேட், கறுப்பு டவுசர், சொக்ஸ், சூ
நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.

077 052 8891

## VACANCY in Supermarket

- Experienced supermarket Manager
- Executives
- Management Trainees

Send your CV within 14days with contacts numbers to our email address or by the post

Human Resources Manager
46,36th Lane Colombo 06.
E-mail: anfccolombo@sltnet.lk
Contact no-0114389584

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம்
ஒன்றுக்கு கணக்காளர் தேவை.
(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

கணக்காளர் (உதவியாளர்)

தகைமைகள்-

- க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும.
- ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- வருமான வரி கணக்குகள் தொடர்பான பூரண அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.
- கணக்காய்வு நிறுவனத்திலோ அல்லது நிதி நிறுவனத்திலோ கணக்காய்வு உதவியாளராகப் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை, போட்டோ பிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ... இணைத்து 15.08.2017 ... விண்ணப்பிக்கவு...

விண்ணப்ப முகவரி :- ...
173, ...
சுன்னாகம்.

# கண்ணதாசனை உடனே மன்னித்து விடுவியுங்கள்

## சிறிதரன் எம்.பி. அரச தலைவருக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணம், ஒக.6

முன்னாள் அரசியல்துறைப்போராளி கண்ணதாசனைப் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவருக்கு அவர்அனுப்பிவைத்துள்ளகடிதத்தில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

எமதுமக்கள்எதிர்பார்த்துக்காத்திருந்த மனிதாபிமானக்கரிசனைக்குரியவிடயங்கள் எவையும் மக்கள் திருப்தி அடையும்வகையில்மேற்கொள்ளப்படவில்லை. அரசின்தொடர்ச்சியான தமிழ் மக்கள் மீதான மெத்தனப் போக்குஅரசுமீதுஎமதுமக்கள்கொண்டிருந்த நம்பிக்கையைப் பலமிழக்கச் செய்கின்றது. வடக்கு-கிழக்கில் நடைபெறுகின்ற வன்முறைச்சம்பவங்களின் பின்னால் மறுவாழ்வு பெற்ற விடுதலைப்புலிஉறுப்பினர்கள்இருப்பதான தோற்றம் பிரமாண்டமான முறையில்வெளிக்காட்டப்படுகின்றது. வடக்குச் சம்பவங்களின் பின்னால் புலிஉறுப்பினர்கள்இருப்பதாகத்தெரிவிக்கும் பொலிஸார், அவர்கள் அவ்வாறு செயற்பட்டிருந்தால் அவர்களைப் பின்னால் இருந்து இயக்கும் சக்திகள்யார்என்பதைஇனம் காட்டத் தவறி வருகின்றனர். இந்த நிலைமை ஏனைய முன்னாள் போராளிகளுக்கிடையேஅச்சத்தைஉருவாக்கிஅவர்களுக்குநிம்மதியற்றஒருஎதிர்காலத்தை உருவாக்கிவருகின்றது.

வவுனியா உயர் நீதிமன்றத்தில் முன்னாள்போராளியானகணேசசுந்தரம் கண்ணதாசன்முன்னாள்விடுதலைப் புலி அமைப்பில் இருந்தபோது அவர் செய்த செயலுக்காக வழக்குத் தொடுக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நீதித்துறைக் கட்டமைப்புக்கு உட்பட்ட வகையில்பொருத்தமாகஇருந்தாலும் முப்பதுவருடகாலப்போரைநிறைவுக்குக்கொண்டுவந்துஅறுபதுவருடகால இனமுரண்பாட்டைத்தீர்க்கமுயற்சிக்கும் நல்லாட்சி அரசின் தத்துவங்களுக்குப் பொருத்தமானது அல்ல.

முன்னாள்போராளிகளுக்குமறுவாழ்வும் அளித்து விட்டு அதே குற்றங்களுக்காக மீண்டும் தனிநபர் வழக்குகளை ஏற்றுக்கொள்ள முனைந்தால் பாரதூரமான சமூக விளைவுகள் ஏற்படும். முன்னாள் போராளிகள் வாழ்வில் தொடர்ந்து நெருக்கடிகளை ஏற்படுத்துகின்ற போது அவர்களுடைய சிந்தனை, செயற்பாடுகளில்விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படும் - என்றுள்ளது. (21)

## தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று முதல் நல்லூரில்

யாழ்ப்பாணம் ஒக.6

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவத்தைமுன்னிட்டுநல்லூர்சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் "தெய்வீகத்தொடர்இசைப் பேருரை" இன்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளது. நல்லை ஆதீனக் குரு மூர்த்த ஆலயமண்டபத்தில்மாலை6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வின் ஆரம்ப நாள் பேருரையாக கம்பராமாயணம் இடம்பெறவுள்ளது. இதனைகானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்தசர்மாநிகழ்த்தவுள்ளார். இந்தத் "தெய்வீகத் தொடர் இசைப் பேருரை" வெவ்வேறு தலைப்புகளில் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மாலை 6.30 மணி தொடக்கம் 8மணி வரை நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (21,ரி)

## கந்தபுராணவாழ்வியல்: 10ஆம்நாள்நிகழ்வுஇன்று

யாழ்ப்பாணம், ஒக.6

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சிவிழா "கந்தபுராண கலாசாரம்இந்தமண்ணின்அடையாளம்" 10ஆம் நாள் வைபவம் இன்றுஞாயிற்றுக்கிழமைமாலை 6.30மணிக்குநல்லைதிருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமயக்கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் செயலாளர்சி.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)

## பரிசில்நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக.6


யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தின் ஆங்கில மொழிப்பயிற்சிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலயக் கலையரங்கில்நடைபெறும்என்றுபாடசாலைச்சமூகத்தினர் தெரிவித்தனர்.

பாடசாலைஅதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (21,ரி)

## திருமுறைப்பெருவிழா

"திருமுறைப் பெருவிழா" நாளை திங்கட்கிழமை காலை இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கைத்திருமுறைமன்றம் திருவாவடுதுறை ஆதீன கொழும்பு இணுவில் திருமுறை சைவசித்தாந்தப் பயிற்சி மையங்களின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்த நிகழ்வு நல்லை ஆதீனக் குருமகா சந்நிதான சுவாமி ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிகஞான சம்பந்தபரமாசாரியர்முன்னிலையில் நடைபெறவுள்ளது. (21)



இந்துக்களின் விரதங்களில் ஒன்றான வரலக்சுமி விரதம் நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. இந்துஆலயங்களில்சிறப்புப்பூசைவழிபாடுகளும்.காப்புகட்டும்நிகழ்வும்இடம்பெற்றன. யாழ்ப்பாணம்வண்ணை பெருமாள் ஆலயத்திலும் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (21,ரி)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக.6

அனலையம்பதி நயினாகுளம் கூழாவடி ஐயனார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை 10மணிக்குநடைபெறும்என்றுஆலய பரிபாலனசபையினர்தெரிவித்தனர்.

... எம் முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமைநடைபெறும்என்றுஉபயகாரர்கள் தெரிவித்தனர். காலை 9 மணிக்குவசந்தமண்டபபூசைஆரம்பித்து, காலை 10 மணிக்கு அம்மன் தேரில்எழுந்தருளும்காட்சிஇடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (21,ரி)

+ + + + + + + + + + + + +

...ப்பாணம் சங்கானை செங்கற்...காதேவப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது என்று ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்தனர். காலை 8 மணிக்கு உற்சவக்கிரியைகள் ஆரம்பித்து மதியம் 12 மணிக்கு விநாயகரின்தேர்பவனிஇடம்பெறும்என்றும் அவர்கள் தெரிவித்தனர். (21,ரி)

+ + + + + + + + + + + + + +

அச்சுவேலிஉலவிக்குளம்சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமைஇடம்பெறுமஎன அறிவிக்கப்பட்டுள்ளது. தீர்த்தத்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டது. (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் விடுமுறையிலும் பிணைமுறி விசாரணை

## தனது வெளிநாட்டுப் பயணத்தை தவிர்த்தார் ஆணைக்குழுத் தலைவர்

கொழும்பு, ஒக 6
இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்துவரும் அரச தலைவர் ஆணைக்குழு இந்த மாதத்தின் விடுமுறை தினங்களிலும் தொடர்ந்து இயங்குமென ஆணைக்குழுவின் தலைவரும் உயர் நீதிமன்ற நீதியரசருமான கே.டி. சித்திர சிறி அறிவித்துள்ளார்.

பெர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த அரச தலைவர் சட்டத்தரணி நிஹால் பர்னாந்து அந்த நிறுவனத்துக்கு எதிரான சாட்சியங்களின் மீதான குறுக்கு விசாரணைகள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவிருப்பதால் அது அந்த வாரம் முழுவதும் நீடிக்கக்கூடும் எனவும், அதனால் ஆணைக்குழு ஒரு சிறிய விடுமுறைக்குப் பின் விசாரணைகளை ஆரம்பிக்க அனுமதிவழங்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

அவரது வேண்டுகோளை நிராகரித்த ஆணைக்குழுத் தலைவர் இந்த விசாரணைக்கு முக்கியத்துவம் கொடுத்து அடுத்த வாரம் நீதிபதிகள் பயிற்சித் திட்டமொன்றுக்குத் தான் பயிற்சியாளராக நேபாள நாட்டுக்குச் செல்லவிருந்த நிலையில் அந்தப் பயணத்தையும் தவிர்த்திருப்பதால் ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவித்தார்.

அத்துடன், ஆணைக்குழுவின் மற்றொரு உறுப்பினரான உயர்நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன, இந்த விசாரணைகளை இயன்றவரை விரைவாக முடிப்பதில் தாங்கள் அக்கறை கொண்டிருப்பதாகவும், அது முடிந்ததும் தங்களது உயர்நீதிமன்றப் பணிகளில் ஈடுபடவேண்டியிருப்பதால் விடுமுறை எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவித்தார். (த)

# ரக்ன லங்கா அவன்கார்ட் தலைவர்கள் மீது 47 குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஒக 6
ரக்ன லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவரான மேஜர் ஜெனரல் பாலித பெர்னான்டோ, மற்றும் அவன்ட் கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவருக்கும் எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 47 குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்சவின் உதவியுடன் ரக்ன லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனம், மற்றும் அவன்ட்கார்ட் நிறுவனம் என்பன உருவாக்கப்பட்டிருந்தன. (த)

# இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரி டம்பத்



கொழும்பு, ஒக 6
இலங்கை இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவப் பிரதித் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ரேனக உடவத்த அண்மையில் ஓய்வு பெற்றதை அடுத்து, நேற்றுமுன்தினம் முதல் இந்தப் பதவிக்கு மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கெமுனு வோச் படைப்பிரிவின் தலைமைக் கட்டளை அதிகாரியாகவும் உள்ள மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோ, இதற்கு முன்னர் முல்லைத்தீவுப் படைகளின் தலைமையகத் தளபதியாகப் பணியாற்றினார்.

இவர் 1983ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்து கொண்டு, 1984ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டாவது லெப்டினன்ட் தர அதிகாரியாக பணியாற்றத் தொடங்கினார்.

காலாட்படை அதிகாரியாக இவர் இரண்டு பற்றாலியன்கள், இரண்டு காலாட் படை பிரிகேட்கள், மூன்று காலாட்படை டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பணியாற்றியவர்.


விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, முதன்மை இராணுவ நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர்,
மகிந்த ராஜபக்ச அரசின் நெருக்கடிகளால் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் டம்பத் பெர்னான்டோ, 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகப் பதவியேற்ற பின்னர், மீண்டும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். (த)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## 06.08.2017

## ஆலய வரலாறு



தமிழர் தாயகத்தை வன்னி மன்னர்கள் ஆண்ட போது அல்வாய் என்ற கிராமத்தில் சில நிலவுடமையாளர்கள் வல்லமை பெற்றிருந்தார்கள். மழவராயர், மாப்பாணர், மணிவீரர் முதலியோர் இந்த மரபில் தோன்றியவர்கள்தான். வீரமாப்பாணர்முதலியார் . குமாரவேலர், கந்தர் ஆகியோர் அவரது புதல்வர்கள். வள்ளி நாச்சியார் அவரது ஒரேயொரு மகள். இவர் உடைச்சி என்று எல்லோராலும் அழைக்கப்படுவர். இவர் ஒரு விதவைப்பெண் ஆவார். இவரது காலத்தில் அக்கம்மா என்ற பெண்தெய்வத்தின் மாயங்கள்பற்றியும் அதன் அதீத ஆற்றல் பற்றியும் ஊர்முழுவதும் ஒரே பேச்சு. ஊரில் கிழக்கே பரந்த பிரதேசம் மாரியில் வெள்ளம் தேங்கி பாரிய குளம்போல்காட்சி தரும் ஒரு குளம். ஒரு கிணறு. ஒரு குகை. துலுக்கன் கோட்டை என்ற காணியில் குகை. அருகில் நாச்சிமார் கோயில். இவையாவும் மாய¸ அக்கை. மாயா¸ கை என அழைக்கப்படும். மாயக்கைப் பிரதேசம். உடம்பே தெரியாது நீட்டிய ஒரு கையினை உடைய ஒரு பெண் தெய்வம். அது பலிகேட்பதாக ஊரவர் பேசிக்கொள்வர். உடைச்சிக்கு மாயா அக்கை மேல் பயபக்தி அதிகம். அவர் அடிக்கடி அக்கம்மா அக்கம்மா என கூச்சலிடுவாராம். அக்காலத்தில் காத்தவராயன் கூத்து பார்க்க உடைச்சி தவறுவதில்லையாம். இதனால் முத்துமாரி மீது அவருக்கு அதிக பிரியம். விதவை ஆகையால் வெண்பட்டு உடுத்தி ஆண்டு தோறும் தோணி மூலம் மதுரை மீனாட்சி தரிசனம் செய்ய செல்வாராம். அங்கு ஒரு அம்மன் வெங்கல சிலையை வாங்கி வந்து தனது வீட்டில் வைத்து பூஜை செய்து மகிழ்வாராம். அந்த அம்மனை தனக்கு பின் யார் ஆதரிப்பார் என்ற கவலை உடைச்சியை வாட்டிய போது அம்பாள் கனவில் தேன்றி "வள்ளீ கவலைப்படாதே உங்கடை அந்தக் காணி வேவிலந்தைக்காணி. எனது தலவிருட்சமாகத் தோன்றி வேம்பும் இலந்தையுமாகக் காட்சி தருகிறதே அது யாருமல்ல வேம்பு நான் மீண்டும் 1993 இல் புதிய நிர்வாகசபை தோன்றிய போதும் 1994 இலந்தை சிவம் என அறிந்து கொள் அதுதான் எனக்கு பிடித்த இடம். அங்கே என்னை வைத்துக்கேற்று" என கட்டி வணங்கப்பெற்று தோன்றியதுதான் இத்திருத்தலம். வள்ளியின் வம்சாவழியினர் பராமரித்து வரலாயினர். இதனைத் தொடர்ந்து 1827 இல் பொது நிர்வாக அமைப்பினை உருவாக்கினர் என்றும் அதில் நாற்பது உறுப்பினர்கள் எனவும் 5 பரிபாலன உறுப்பினர் என்பதும் அமையப்பெற்றதே முதலாவது நிர்வாகம் ஆகும். பின்னர் காலத்திற்குகாலம் நிர்வாகசபைகள் உருவாக்கப்பட்டு பல திருப்பணி வேலை நிறைவு பெற்றன.

இடைக்காலநிர்வாக சபை தேன்றியது. இதனைத் தொடர்ந்து பல திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மீண்டும் 1999 இல் புதிய நிர்வாகசபை பொறுப்பேற்றதுடன் திருப்பணிசபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு இன்று வரை பலதிருப்பணிகள் உள்நாட்டவர்களின் நிதியிலும் புலம்பெயர் அன்பர்களின் பெருநிதியினாலும் பிரம்மாண்ட திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அம்பிகையின் சந்நிதியில் மாதாந்த உற்சவங்களுடன் செவ்வாய்க்கிழமை உற்சவம் மிகவிமர்சையாக நடைபெறும். அம்பிகையின் மகோற்சவம் ஆடி மாத பூரணையை தீர்த்த உற்சவமாகக்கொண்டு 15 தினங்கள் நடைபெறும் திருவிளக்கு பூஜை. சுமங்கலி பூஜை. பக்தோற்சவம் வசந்தோற்சவம். சப்பறத்திருவிழா தேர்த்திருவிழா. தீர்த்தோற்சவம் என்பன விசேஷட திருவிழாக்களாகும். கடந்த இருபது ஆண்டுகளில் ஆலயத்தின் திருப்பணிகள் மிகவும் உன்னதமானபணியாகவும் பலகோடியில் செய்யப்பட்ட திருப்பணிகளைக் காணமுடிகின்றது. "முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு நாளும் தீங்கில்லையே"

தொகுப்பு : திரு. ந. தேவராஜா அதிபர். தர்மகர்த்தாசபை உறுப்பினர்.

### ஆசிச்செய்தி



அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக வேண்டுவார் வேண்டும் வரம் ஈயும் வேவிலந்தைப் பதியாளாக அனைத்து உயிர்களையும் காத்து அருள் வழங்கும் அன்னை இன்று ஆன்மாக்களின் ஆணவ மலம் அறுக்க இரதத்தில் ஏறி அருள் பாலிக்கும் இவ்வேளை அன்னையின் பிரதம குரு என்ற வகையில் ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆலயம் என்பது ஆன்மாக்கள் வயப்படும் இடம் எந்த ஒரு மனிதனும் வழிபாடு என்று வரும்போது தன்னை மறந்து இறைவனுடன் ஐக்கியமாகின்ற இறையருள் கிடைக்க வேண்டும் என ஆசார சீலர்களாக வாழ வழி ஏற்படு கின்றது. இதுவே மஹோற்சவத்தின் சிறப்பு மஹோற்சவம் என்றதும் ஊரே புனிதம் அடையும் ஊர் மக்கள் புனிதம் அடைவர் எங்கும் பக்தி மயமாக உயர்வு பெறும் இதுவே ஒரு ஆலயத்தின் சிறப்பு இந்த வகையில் அம்பிகையின் அருளாட்சியால் அல்வையூர் சிறப்புப் பெற்று உலகம் முழுவதும் வாழும் சைவர்கள் சற்று அல்வாய் பக்கம் தமது பார்வையை திருப்பும் அளவிற்கு கோவி லந்தை பதியாளின் அருள் வியாபிக்கிறது. அன்னையின் இரதோற்சவத்தில் நாமும் வடம் பிடித்து வல்வினை அகன்று இப்பூமியில் மனிதர்களாக வாழப்பழகிக்கொள்வோமாக.

"நல்லதையே செய்வோம் அதனை இன்றே செய்வோம்"

சண்டியாகபானு சதாசிவ சிவகுமாரக் குருக்கள்
ஆலய பிரதம குரு

### ஆசிச்செய்தி



அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு நிகழும் 'ஏ விளம்பி' வருஷ மஹோற்சவத்தினை முன்னிட்டு பதினைந்து நாள்கள் நடைபெறும் திருவிழாவில் பதின்நான்காவது நாளாகிய இன்று ஓர் அங்கமாக விளங்கும் தேர்த்திருவிழா மஹோற்சவம் மிகவும் விமர்சையாக நடைபெறுகின்ற வேளையில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த அடியவர்களும் உள்நாட்டில் வாழுகின்ற அடியவர்களும் ஒன்று கூடி அம்பிகையினுடைய திருநாமத்தை சொல்லி வடம் பிடிக்கின்ற நிகழ்வானது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றது.

இங்கு மங்கள வாத்தியங்கள் சகிதம் கரகம், கற்பூரச்சட்டி, பாற்குடம், காவடிகள் புடைசூழ அன்னை நவகோணதேரில் பவனிவரும் வேளையில் அடியவர்களின் துயரை நீக்கி வேண்டிய வரங்களை வழங்கி சுபீட்சமாக இவ்வையகத்தில் வாழ்வதற்கு நோயின்மை. கல்வி. தனம். தானியம். பஞ்ச பூதங்களின் அருளும் கிடைக்க அருள்மழை பொழிந்து அனைவரும் பலவிதமாக சரியை தொண்டு. கிரியை தொண்டு. அன்னதான தொண்டும் செய்து அம்பிகையின் திருவருளுக்கு ஆளாகும் வண்ணம் உதயன் பத்திரிகை மூலமாக குருவாகிய நாம் அருளும். ஆசியும் கிடைக்க அம்பிகையின் பாத கமலங்களை பணிந்து ஆசி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மஹோற்சவகுரு
சிவாகம கிரியாந்தி கிரியாதுரந்தர
பிரதிஷ்டா சிவாகம ஞானபாஸ்கரன்
ஸ்தாசிவ சுரேஸ்வரக்குருக்கள்
அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன்
லண்டன் விம்பிளி ஈழபதீஸ்வர ஆலயம் - குரு


### ஆலய பரிபாலனசபை தலைவரின் வாழ்த்து



அண்டங்கள் யாவையும் அர்ச்சித்து காக்கும் அன்னை ஆதிபராசக்தி என்றும் அருள் புரியும் ஆலயம் கொண்டு அல்வாயில் அமர்ந்து அருள் ஆட்சி நடத்தும் வேளை அன்னைக்கு இன்று இரத உற்சவம் இரதத்தில் ஏறி அம்பாள் அடியார் குறைகளைத் தீர்க்க ஆனந்தம் கொண்டு ஆண்களும். பெண்களும் வடம்பிடித்து பிணி அகற்ற வருகின்றாள். அல்வாய் வேவிலந்தை பதியுறையும் தேவி அடியார் வேண்டுவன ஈயும் தாய் தெய்வமாக தொன்றுதொட்டு எம்மவரால் போற்றப்படும் தெய்வமாக விளங்குகின்றாள். அல்வாய் என்றால் அது வேவிலந்தையாள் உறையும் பதியென்றே அனைவரும் எண்ணத்தோன்றும்.மடாலயமாக தோன்றி இன்று அனைவரும் வியக்கும் வண்ணம் மூர்த்தி. தலம் தீர்த்த சிறப்புக்களுடன் ஆயிரக்கணக்கான அடியார்களை தன்னகத்தே கொண்டு இருக்கும் தாய் தெய்வமாக விளங்குகின்றாள் அன்னையின் அருட் பார்வையினை அடியவர்கட்கு அருள் கிடைத்து அவர்களின் பெரும் உதவியுடன் பல்வேறு பாரிய திருப்பணி வேலைகளை சிறப்பாக நிறைவு செய்து இன்று புதுப் பொலிவோடு காட்சி தரும் அன்னைக்கு ஆண்டுதோறும் நடைபெறும் மஹோற்சவம் என்பது அனைவராலும் போற்றப்படும் உயர்வான திருவிழாக்களை கொண்டு விளங்குவது அன்னையின் அருளேயாகும்.

திரு.சி.கணேசமூர்த்தி
தலைவர் ஆலயபரிபாலன சபை.

### பரிபாலன சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி



அல்வாய் வேவிலந்தைப் பதியில் கோயில் கொண்டுள்ள எம்பெருமாட்டி ஆண்டு தோறும் பலபுதுமைகளை நிகழ்த்தி ஆயிரம் ஆயிரம் அடியவர்களை தன்னகத்திலே கொண்டு இன்று ஈழவள நாட்டிலே மிகவும் உன்னதமானதும் சக்தி வாய்ந்ததுமான ஆலயமாக மிளிர்வது யாரும் அறிந்ததே. அந்த வகையில் இன்று ஊரவர்களின் பெரும் பங்களிப்புடன் பல்வேறு திருப்பணிகளை மேற்கொண்டுள்ள பெருமை பெற்று விளங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சம். இந்த வகையில் இந்த ஆண்டு மஹோற்சவ குருவாக உற்சவத்தினை நடாத்திக் கொண்டிருக்கும் எமது ஆஸ்தான ஆலய குரு சுரேஸ்வரக் குருக்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் இதே வேளை எமது ஆலய நித்திய குரு சிவகுமார் குருக்களுக்கும் எமது நன்றிகள். எல்லாம் வல்ல அம்பிகை இன்று தேரேறி வந்து அடியார்க்கு அருள்பாலிக்கும் அற்புதமான நிகழ்வுகளை காண்கின்றோம். அன்னையின் அருள்மழையில் நாம் எல்லோரும் நனைந்து அவள் அருள் பெறுவோம். ஆலய உற்சவம் சிறப்புற நடைபெற உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் ஆலயபரிபால சபை சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அம்பிகையினை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

திரு.க.சிவபாதசுந்தரம்
செயலாளர், ஆலயபரிபானசபை

### ஆலயபரிபால சபை பொருளாளரின் வாழ்த்து



அண்டங்கள் யாவும் உள்ள உயிர்கட்கு அன்னையாக விளங்கும் அன்னை வேவிலந்தை பதியாளுக்கு நித்திய நைமித்திய கிரியைகளை சிறப்பாக நடத்தி பெருமை பெற்ற இவ்வேளை இன்று காமிக கிரியை என்று சொல்லப்படுகின்ற உயர்வான கிரியையினை ஆற்றி அனைவரும் வியப்புறும் வண்ணம் சிறப்புப் பெற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் அன்றைய காலத்தில் ஆலய திருப்பணிகள் அரசர்களாலேயே மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று அது சாதாரண பொதுமக்கள் ஒன்று சேர்ந்து நடாத்தக் கூடிய வல்லமையினை அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் கொடுத்துள்ளாள் என்றால் அது நாம் முன்பு செய்த நல்வினைப்பயன் என்று தான் கூற வேண்டும். இத்தகைய சிறப்பு மிகு ஆலயமாக இவ்வாலயம் வளர்வதற்கு எமது உள்ளுர் உறவுகளும் புலம்பெயர் உறவுகளும் முன்னு தாரணமாக திகழ்ந்தனர் இத்தகைய அடியவர்காய் அம்பிகைக்கு வாரி வழங்குவதனால் அம்பிகையின் கடைக்கண் பார்வையினால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்றனர் அல்வாய் வேவிலந்தை பதியில் நடப்பது போல வெகு சிறப்பான நிகழ்வுகள் வேறு எங்கும் நடைபெறவில்லை என அடியவர்ள் கூறக் கேட்டிருக்கின்றோம். எனவே இவ்வாலயத்தின் மகிமைகள் பல உள்ள போதும் இந்த ஆலயத்தின் அம்பிகையின் அருட் சிறப்பும் இதற்கு அணி சேர்ப்பதாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"அன்னை தெய்வத்திற்கு ஈடு இணை ஏது!" "அன்னை தெய்வத்திற்கு ஈடு இணை ஏது"

திரு க.புவனேந்திரன் பொருளாளர், ஆலய பரிபாலன சபை.

### அம்பிகை என்னுமோர் அருமருந்து



ஈழத்திலே தேன் பொந்து ஒன்று உள்ளது அதனை சென்றடையுங்கள் அது தான் திருக்கேதீச்சரம் என்று அன்று நாவலர் பெருமானால் திருக்கேதீஸ்வரம் குறிப்பிடப்பட்டது போல வடமராட்சியிலே அனைத்துப்பிணிகளையும் தீர்க்க வல்ல அருமருந்து ஒன்று உண்டு. அது எங்கே எனில் அதுதான் வேவிலந்தை அருள்மிகு முத்துமாரி அம்மன் எனக்கூறும் அளவுக்கு எம் அன்னை அருட்கடாட்சம் நிறைந்தவளாக விளங்குகின்றாள். அவளின் பதிதனில் பணி செய்ய எமக்கு கிடைத்த பேறு பெரும் பேறு. இத்தகைய இறைபணி எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. நாம் முன்பு செய்த வினைப்பயனே இது எனவே எம்வாழ் நாளை வீணே போக்கி விட்டோம் என வருந்தாது எம்மால் இயலும் வரை அம்பிகைக்கு அளப்பரிய தொண்டுகள் தொண்டு அருள்மழையில் நனைந்திடுவோம். வாழ்க்கை என்பது ஒரு போதுதான் வரும். கிடைத்தற்கரிய மனிதப் பிறவி எடுத்த நாம் இச்சமூகம் பாராட்டும் படி நடக்க வேண்டும். இயலுமானவரை அறப்பணிகள் ஆற்ற வேண்டும் என எமது மனதில் திட சங்கற்பம் பூண்டு இப்பிறவியின் பயன்பணி செய்து வாழ்வதே தவிர வேறு இல்லை என திடமான மனம் கொண்டு இன்றே நற்பணிகள் ஆற்றிடுவோம். அம்பிகைக்கு என மனதில் உறுதி கொள்வோம்.

"பல்லார் முனிய பயனில சொல்லுவார் எல்லோராலும் எள்ளப்படும்" குறள்

திரு. ச. குமாரதேவன்
தர்மகர்த்தாசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 6.2 பில்லியன்

## தங்கமான ஆயுள்காப்புறுதி இலாபப்பங்கு தலைமுறை தலைமுறையாக தொடரும்

தங்கத்தினை தலைமுறை தலைமுறையாக கைமாற்றுவது அவற்றின் பெறுமதி தொடர்ந்தும் அதிகரிப்பதால், அது போல் தான் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் இலாபப்பங்கும். இம்முறை ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் காப்புறுதி வரலாற்றின் பிரம்மாண்ட இலாபப்பங்கான ரூ.6.2 பில்லியனை தமது ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு வழங்குகின்றது.

நாட்டின் ஆயுள் காப்புறுதிதாரர்களுக்கு அதி கூடிய வெகுமதிகளை ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸினால் வழங்க இயன்றமைக்கான காரணங்கள்

- காப்புறுதித் துறை வரலாற்றில் பாரிய ஆயுள் நிதித் தொகையான ரூ. 91.1 பில்லியன்.
- பாரிய ஆயுள் நிதி மிகையூதியத் தொகையில் 90% ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.
- முகாமைத்துவத்தின் கீழ் ரூ. 177 பில்லியனுக்கும் அதிக சொத்துத் தொகையினை தன்னகத்தே கொண்டுள்ளமை.
- ஐந்து தசாப்தங்களாக இலங்கை காப்புறுதி வரலாற்றில் நிலையாய் நிலைத்த ஒரே காப்புறுதியாளன்.

நீங்களும் இன்றே ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுள் காப்புறுதியில் முதலீடு செய்து, பிரம்மாண்ட இலாபப்பங்கின் பங்காளர் ஆகிடுங்கள்.

அழையுங்கள் - (011) 2 357 357

Sri Lanka Insurance
LIFE
வாழ்க்கைக்கு மதிநுட்பமான முதலீடு

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ்
இல.21, வொக்ஸ்ஷொல் வீதி, கொழும்பு 2.
தொ.பே - 0112 357000 ;பக்ஸ் - 0112 447 742
இணையம் - www.srilankainsurance.com

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

உடன் அழையுங்கள் - (011) 2 357 357
AA (lka) Ratings
https://www.facebook.com/SLICorporation/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதுகாப்புச் செயலரைச் சந்தித்தார் சீன ஆலோசகர்

கொழும்பு, ஓக 6
இலங்கையில் உள்ள சீனத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான்வேய் நேற்று முன்தினம் இலங்கைப் பாதுகாப்புச் செயலர், கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 70 வீத உரிமையைச் சீன நிறுவனம் பெற்றுள்ள நிலையிலும், சீன இராணுவத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாத இறுதியில் கொண்டாடப் பட்ட நிலையிலும், சீனக் கடற்படையின் பெருமிதக்கும் வைத்தியசாலைக் கப்பல் இன்று கொழும்புத் துறைமுகம் வரவுள்ள நிலையிலும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

காலிமுகத்திடல் விடுதியில் கடந்த ஜூலை 27ஆம் திகதி நடந்த சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 90 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டத்தில் உரையாற்றிய, சீனத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் சூ ஜியான்வேய், இலங்கையுடன் இராணுவ உறவுகளையும் ஒத்துழைப்புகளையும் மேலும் வலுப்படுத்திக் கொள்ள சீனா எதிர்பார்ப்பதாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (டு)

## சியம்பலாபிட்டிய வாக்குறுதி

# எந்த நிலையிலும் மின்வெட்டோ கட்டண அதிகரிப்போ ஏற்படாதாம்

கொழும்பு, ஓக 6



வறட்சியான காலநிலையால் நீர் மின்சார விநியோகத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளபோதிலும் எந்தக் காரணத்தைக்கொண்டும் மின்வெட்டுக்கோ மின்கட்டண உயர்வுக்கோ தான் இடமளிக்கப்போவதில்லை என மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் மின்பாவனை 44 சிகாவோற் மணியத்தியாலங்களாக அதிகரித்திருக்கிறது. இது கடந்த வருடத்தைவிட 10 சதவிகித அதிகரிப்பாகும். அத்துடன், நீர் மின்னுற்பத்தி 36 சதவிகிதம் வரை குறைந்துள்ளது.

மேலும், நுரைச்சோலை மின்நிலையத்தில் ஏற்பட்டிருக்கும் பழுதால் 300 மெகாவோற் மின் விநியோகமும் தடைப்பட்டுள்ளது. அத்துடன், 60 மெகா வோற் மின்னை வழங்கும் 'சொஸிஸ்டிஸ்' மின்நிலையமும் பழுதுபார்ப்புகளுக்காக மூடப்பட்டுள்ளது.

இவ்வாறு நாலா பக்கமும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளபோதிலும் மின்வெட்டை செயற்படுத்தவோ மின் கட்டணங்களை அதிகரிக்கவோ இடமளிக்கப்போவதில்லை. எவ்வாறாயினும் மக்கள் இயன்றவரை மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்கவேண்டும் - என்றார். (டு)

# நீண்ட காலமாக திருத்தப்படாத மூதூர் மணிக்கூடு

மூதூர் நாற் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள மணிக்கூடு நீண்ட காலமாகச் சரியாகச் செயற்படாது பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் முஸ்லிம், சிங்களப் பாடசாலைகள், கத்தோலிக்க பௌத்த சமயத்தவர்களின் மயானம். பேருந்து நிலையம் என்பன அமைந்துள்ளன.

முக்கிய இடத்தில் உள்ள இந்த மணிக்கூடு செயற்படாதுள்ளமையால் நேரத்தை அறிவதில் மாணவர்களும், பொது மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். இதனைத் திருத்துவது குறித்து உரிய தரப்பினர் கரிசனை செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (டு)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பகமுவவில் மண்சரிவு அபாயம்

அம்பகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில், மண்சரிவு அபாயம் உள்ளதாக, பிரதேச செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, அபாயப் பிரதேசங்களை விட்டு வேறு இடங்களுக்குச் செல்லுமாறும் பாதுகாப்பாக இருக்குமாறும் பொதுமக்களை, பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும், மலையகப் பகுதியில் நிலவும் தொடர் மழை காரணமாக, தொழிலாளர்கள் பணிக்குச்செல்லவில்லை. காற்றும் மழையும் தொடர்வதால் வீதியில் செல்வோர் மற்றும் பணிபுரிவோர் மிகவும் அவதானமாக இருக்குமாறு, மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மரங்கள் சாய்ந்து விழும் வாய்ப்பு உள்ள அதே வேளை, மண் திட்டு சரிந்து விழும் அபாயமும் தோன்றியுள்ளது. எனவே, இது தொடர்பில் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நோட்டன்- கினிகத்தேன வீதி மற்றும் ஹற்றன் நுவரெலியா வீதி எங்கும் பனிமூட்டமாக உள்ளதால் வாகனச் சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு ஹற்றன் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## ஹற்றனுக்கு ரணில் இன்று பயணம்

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, இன்று ஞாயிற்றுக்கிழமை ஹற்றனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, ஹற்றன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள மக்கள் சந்திப்பில் இவர் கலந்துகொள்வதுடன், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவேற்பு நிகழ்வு ஒன்றிலும் கலந்துகொள்ளவுள்ளார்

இந்த நிகழ்வுகளை நுவரெலியா மாவட்ட ஐ.தே.கா நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாஸ ஏற்பாடு செய்துள்ளார்.

தலைமை அமைச்சரின் 40 வருட அரசியல் பிரவேசத்தையொட்டி, இந்த வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஹற்றனுக்குச் செல்லும் ரணில், பிற்பகல் 2 மணியளவில் நுவரெலியா அம்பேவெல தேசிய பால் பண்ணைக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பால் சபை நிலையக் கட்டடத்தைத் திறந்து வைப்பார். (த)


# கனடாவில் கல்வி / வேலை / குடியிருப்பு




**பாடநெறிகள் தொடர்பாக அவசியமான முதன்மைத் தகுதிகள்.**

1. க.பொ.உ. (A/L) பரீட்சையில் சாதாரண 3 சித்திகள்.
2. IELTS, இல்லாத மாணவர்கள் தங்களது ஆங்கில பாடநெறியை கனடாவில் கற்பதற்கு வாய்ப்பு.
3. நல்ல உடல் மற்றும் குண இயல்புகளை கொண்டிருத்தல்.

- கனடாவில் பிரதான சட்ட நிறுவனங்களினால் விசா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- பாடநெறிகளுக்கான கட்டணம் தொடர்பாக வங்கியில் கடன் வசதி செய்துத்தரப்படும்.
- கனடாவில் கல்வியை தொடரும் போதே பகுதிநேர வேலை செய்வதற்கு அனுமதி உண்டு.
- கற்கை நெறியின் பின் நிரந்தர வேலை வாய்ப்பு.
- 3 வருட வேலை அனுபவத்தை தொடர்ந்து நிரந்தர வதிவிட வசதிக்கான அனுமதி.

**011 289 0692** (ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளவும்)

**Consolidated Academic Lanka (Private) Limited**
22-B, Station Lane, (Market Road), Nugegoda.

Email: info@academiclanka.com | Web: www.academiclanka.com

BUILDING BEYOND LIMITS

*Tokyo Cement Company (Lanka) PLC a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers invites applications for the following position.*

## Plant Manager

**Ready Mix Concrete Plant, Jaffna**

**Job Description**

Plant Manager is mainly responsible for the management of the facility, operations of concrete batching plant, procurement raw materials and marketing of concrete. The Plant Manager is required to;

- Oversee employees, Production, machinery and to make sure that plant is running smoothly and efficiently.
- Maintain efficient procurement of raw materials.
- Maintain required quality of the concrete in consultation with quality control staff.
- Market ready mixed concrete -- visiting construction sites, having meetings with necessary officials at the sites and marketing of concrete.

**The person we are looking for must posses**

- Degree or Diploma in Engineering [Mechanical or Civil].
- Minimum 05 years of hands on experience in a managerial position in ready mixed concrete industry or similar industry involving manufacture of goods.

Age has to be below 50 years.

The selected candidate will be entitled to an attractive remuneration package and medical benefits.

***If you think you are the right candidate, please send us your Resume with names and contact details of two non-related referees by post or email to reach us within 10 days of this advertisement. Post applied for has to be mentioned in the top left corner of the envelop or the subject line of the email.***

Manager, HR and Administration (R.M.C)
**TOKYO CEMENT CO. (LANKA) PLC**
No. 12D, Haigh Road, Colombo 04
Email: hrm.rmc@tokyocement.lk

www.tokyocement.lk  TOKYO CEMENT GROUP

# வல்வை முதியோர் இல்லம் பெண்கள்

பிள்ளைகளாலும், உறவினர்களாலும் உடனிருந்து பராமரிக்க முடியாது போனவர்களினதும் தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் அவர்களது நலன்களைப் பேணுவதற்காகவும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நடத்தப்படும் இல்லமாகும். இதுவரை தொடர்பு கொண்ட நபரும் இனிமேல் தொடர்பு கொள்ள இருப்பவர்களும் இவ் இல்லத்தின் சேவையைப் பெற்று பயனடைய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

திரு.V.யோகானந்தவேல்
திருமதி.ரஞ்சினி யோகானந்தவேல் (ராணி)
"பிருந்தாவனம்"
ஊரிக்காடு
வல்வெட்டித்துறை,
இலங்கை.
தொடர்பு: **021 300 7598/ 077 810 6857**
**077 259 4273**

திரு.திருமதி. சிவகுமார்
7/2 -4 MIA MIA STREET
GIRRA WEEN
NSW 2145
AUSTRALIA
T.P - 0061286771012
Email : bamini_lk@yahoo.com

Center for IT & English Language Skills Development & Training
Sponsores by RATNAM FUNDATION
Aaruthal CITE

**இளையோர்களே, தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்ப்பு பெற அரிய வாய்ப்பு**

சிறுவர் இளையோர் மாதர் என்போரின் மகிழ்வுறு வாழ்வுக்கான கல்வி செயற்திறன் மேலோங்க மனிதநேய செயற்திட்டங்களோடு 2006 ஆம் வருட ஏப்ரல் மாதம் ஆறுதல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. தூரநோக்கும் துணிவும் கொண்டு தரமிக்க தகுதி வாய்ந்த மனிதவள மாற்றங்களை ஏற்படுத்தி ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஆறுதல் நிறுவனம் இன்று பல செயற்திட்டங்களை முன்னெடுத்துப் பயணிக்கிறது. முன்னேறிவரும் கணினி யுகத்தில் IT, தொடர்பாடல் ஆங்கிலம் ஆகிய திறன் விருத் திச் செயற்பாடுகளில் இளையோர் தம் அறிவை வளர்த்துக்கொள்ளவும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளவும் ஆறுதல் நிறுவனத்தின் திறன்விருத்தி செயற்திட்டத்தில் இணைவதன் மூலம் கணினி அடிப்படை மற்றும் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்று பின்னர் தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்புகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அல்லது சுயதொழில் ஒன்றை தொடங்குவதற்கான அறிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

Computer Literacy & English Language Skills Development & Training Programme
(Covers ICT,DTP and Communicative English; Syllabus of TVEC - NVQ level 3,4)
Certification: Ministry of skills Development & Vocational Training.

மேற் குறிப்பிட்ட பயிற்சிகளை பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பங்களை நேரடியாக அல்லது கீழ் உள்ள முகவரிக்கு தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக 18. 08.2017 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

Aaruthal
No. 51, Wyman Road,
Nallur, Jaffna.
Phone: 021 221 7092
e – Mail: aaruthaltrinco@gmail.com
web: www.aaruthal.lk




Center for Excellence.

# அருள்மிகு புற்றளை சித்தி விநாயகர் ஆலயம் புலோலி அடியார்களுக்கான விசேட அறிவித்தல்

அருள்மிகு புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தையும் அதன் சொத்துக்களையும் புற்றளையான் அடியார்களின் புனித சின்னமாகக் காப்பாற்றி மகத்தான ஆன்மீகப் பணியில் ஆலய பரிபாலனசபை தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றி வருகின்றது.

புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் பெயரிலோ அல்லது ஆலயத்திற்காகவோ அல்லது பரிபாலனசபையின் பெயரிலோ பணம் சேர்க்கவோ நிதியுதவி கோரவோ பரிபாலனசபை எந்த தனி நபருக்கும் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ அதிகாரம் அளிக் கவில்லை என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஆலயத்திற்காக நிதி பெறவும் நிதியினைப் பேணவும் ஒரேயொரு அதிகாரம் பெற்ற அமைப்பு பரிபாலனசபை மட்டுமேயாகும்.

நிதியுதவி புரிய விரும்புபவர்கள் - தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை சேமிப்புக் கணக்கு இலக்கம் 10032 - 0136239 இற்கு வரவு வைக்கும் வண்ணமும் அல்லது பரிபாலனசபையின் அலுவலகத்தில் கொடுத்து அதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னதானம், அபிஷேகம், விசேட உபயங்கள், திருப்பணி செய்ய விரும்பும் அடியார்கள் பரிபாலனசபையுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*" புற்றளையான் ஆலயம் புற்றளையான் அடியார்களின் புனித சின்னம் "*

ஓம் கணபதியே நம

தலைவர்
K.V.கதிர்காமு

செயலாளர்
S.கணேசலிங்கம்

பரியாலன சபை
புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்

# வெளிப்படுத்தின விசேஷ கூட்டமும் சுகமளிக்கும் ஆராதனையும்

**இக்கடைசி நாள்களில் நிறைவேறும் எச்சரிப்பின் செய்தியை வந்து கேளுங்கள்.**

**காலம்** :- 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
**நேரம்** :- பிற்பகல் 4.30 மணி
**இடம்** :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
**தேவ செய்தி :- பாஸ்டர் ஜோன்கிற்றோ**

**இதை - அறியாதவர்களுக்கு பயம்**
**அறிந்தவர்களுக்கு ஜெயம்**

இதுவோர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

**பிரவேசம் இலவசம்**

பெத்தேல் சபை
போதகர் :- K.Chandrasegar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## கூட்டாட்சி என்ற பெயரை இனி நீக்கவேகூடாது

கூட்டாட்சி (சமஷ்டி) என்பது பிரிவினை அல்ல என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கிறது உயர் நீதிமன்றம். மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் மிக முக்கியமான இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.

தமிழ் அரசுக் கட்சி ஒரு பிரிவினைவாத அமைப்பு என்று அறிவிக்கக்கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்சியின் யாப்பு மற்றும் 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அந்தக் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கை என்பவை இலங்கை அரசமைப்பின் 6 ஆவது திருத்தத்துக்கு மாறானவை, பிரிவினையைத் தூண்டுபவை என்று தெரிவித்தே இந்த மனு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

உயர்நீதிமன்றதலைமைநீதியரசர்பிரசாத் டெப்தலைமையிலான மூன்று நீதியரசர்கள் அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியது. நீதியரசர்கள் உபாலி அபேரட்ண, அனில் குணரட்ண என மூவரும் சிங்களவர்களாக அமைந்த அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

புதிய அரசமைப்புக்கான முயற்சியில் கூட்டாட்சி (சமஷ்டி) என்ற சொல்லைப் பயன்படுத்த முடியாது என்று சிங்கள அரசியல்வாதிகள் நிராகரித்துவரும் நிலையில் இந்தத் தீர்ப்பு வந்திருப்பது மிக மிக முக்கியமானது.

கூட்டாட்சி என்ற சொல் சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினை என்று பொருள்கொள்ளப்பட்டுவிடும் எனக்கூறியே புதிய அரசமைப்பை ஓர் கூட்டாட்சி அரசமைப்பு என்று பெயரிடுவதற்கு சிங்கள அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் அறிவாளிகள், புலமையாளர்கள், நடுநிலையாளர்கள் எனப்படுவோரில் பலர்கூட இந்தக் கருத்தை ஏற்கிறார்கள். அதாவது கூட்டாட்சி என்பது பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் என்று அவர்களும் கருதுகின்றார்கள். அதனால் புதிய அரசமைப்புக்குக் கூட்டாட்சி அரசமைப்பு என்று பெயரிடாமல் இருப்பதேசிறந்தது என்று அவர்களும்நியாயப்படுத்துகிறார்கள்.

இந்த நியாயப்படுத்தல்களை வைத்துக்கொண்டுதான் 'ஏக்க ரட்டய' மற்றும் 'ஒருமித்த நாடு' என்ற வரையறையை புதிய அரசமைப்பில்ஏற்படுத்தஎல்லோருமேஇதுவரையில்முயன்றார்கள். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும்கூட அதனைஏற்றுக்கொண்டது.

'ஏக்க ரட்டய' என்பது ஒற்றையாட்சி என்று பின்னர் வரைவிலக்கணப்படுத்தப்படும் என்ற குற்றச்சாட்டு, சந்தேகம் தமிழர்கள் மத்தியில் தீவிரமாக இருக்கிறது. எனவே 'ஏக்க ரட்டய' என்பது ஒருமித்த நாடு என்பதையே குறிக்கும் என்று அதற்கு விரிவான வரைவிலக்கணம் ஒன்றைக் கொடுத்துவிடலாம் என்பதாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் கண்டு வைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு உருவாகக்கூடிய புதிய அரசமைப்பை ஒற்றையாட்சி என்பதா கூட்டாட்சி என்பதா என்கிற குழப்பம் நீடித்திருக்கும் போதே உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்துள்ளது. அந்தத் தீர்ப்பு, கூட்டாட்சி அல்லது இணைப்பாட்சி என்கிற சமஷ்டி, பிரிவினையைக் குறிக்காது என்பதை ஆணித்தரமாக எல்லோருக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறது. அதனடிப்படையிலேயே ஆங்கிலத்தில் 'பெடரல் பார்ட்டி' என அழைக்கப்படும் தமிழ் அரசுக் கட்சி பிரிவினையைக் கோரும் கட்சியல்ல என்றும் தீர்ப்புத் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே, புதிய அரசமைப்பைகூட்டாட்சி அரசமைப்பாகப் பெயரிடுவதற்கு சிங்களத் தரப்புகளால் இதுவரையில் சொல்லப்பட்டுவந்த நியாயங்கள் அனைத்தும் வலுவிழந்துள்ளன. முற்றிலும் சிங்கள நீதிபதிகளைக் கொண்ட அமர்வே கூட்டாட்சி என்பது பிரிவினை அல்ல என்று தெளிவுபடுத்திவிட்ட பிறகு கூட்டாட்சி நாடு என்று இலங்கையைப் பெயரிடுவதில் எவருக்கும் எந்தத் தடையும் இருக்க முடியாது.

அதனடிப்படையில் புதிய அரசமைப்புக்குச் சர்ச்சைக்குரிய பெயரைவைப்பதைவிடுத்து கூட்டாட்சிநாடு என்றே அது குறிப்பிடப்பட வேண்டும். இந்தத் தீர்ப்பை ஆணித்தரமாக முன்வைத்து 'ஏக்க ரட்ட'வை நீக்கிவிட்டு கூட்டாட்சி நாடு எனப் பெயரிடுவதற்கு முழு அழுத்தத்தையும் கொடுக்கவேண்டும். கூட்டாட்சி என்ற சொல்லின் மீதான சந்தேகங்கள் நீக்கப்பட்ட பின்னர், புதிய அரசமைப்பில் இருந்து அந்தப் பெயர் நீக்கப்படுவதை இனி எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக்கூடாது. கூட்டமைப்பின் கடமை அது.

## என்னமோ நடக்குது மர்மமாய் இருக்குது



ந.லோகதயாளன்

யாழ்ப்பாணக் குடாநாட்டைத்தொடர்ந்தும் பதற்றமாகவே வைத்திருப்பதன் மூலமே, தமது இருப்பைத் தக்கவைக்கலாம்; அதிகாரக் கதிரையை மீளவும் கையகப்படுத்தலாம்எனசிலர்எண்ணுகின்றனர். அவ்வாறு எண்ணும் வர்க்கத்திற்குத் தீனிபோட முனையும் தரப்பினர் எவர் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இவ்வா றிருக்கையில், கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடுகின்றனர் பொலிஸார் என மக்கள் கூறும் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமலும் இல்லை.

இலங்கையில் காலத்துக்குக் காலம், இடம்பெற்ற சிறிய வன்முறையோ அல்லது பெரிய வன்முறையோ அவை, கொழும்பு அரசின் அரசியல் தேவைக்காகவே இடம்பெற்றன என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அது 56, 83 கலவரங்கள் ஆகட்டும், அதற்கு முன்பின்னரான மோதல்கள் ஆகட்டும், அனைத்திற்குமே இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது. அதாவது இலங்கை அரசியலில் ஏதாவதோர் மாற்றம் அல்லது நன்மை தொடர்பில் முயற்சிகள் இடம்பெற்றால், அதனைக் குழப்புவதற்கு, திசைதிருப்புவதற்காகவே இவ்வாறான முயற்சிகளும் கடுங்கோட்பாட்டுத்தரப்புக்களால்வேண்டுமென்றே கட்டவிழ்த்து விடப்பட்டமையே வரலாறாகவுள்ளது.

### மீண்டும் அரங்கேறும் குழப்பியடிப்பு முயற்சிகள்

இதன் ஒரு வடிவமே தற்போது மீண்டும் அரங்கேற்றப்படுகின்றது. அதாவது இலங்கையில் ஓர் அரசமைப்பு மாற்றத்திற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறான மாற்றத்தில் தமிழ் மக்களுக்குச் சாதகமாக எதுவுமே வழங்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் ஓர் அணி நேரடியாக அரசியல் ரீதியில் கடுமையாக முயற்சித்து வருகிறது. அதேபோன்று மறைமுகமாக சிறு சிறு குழுக்களைப் பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலமும் அரசியலில் உறுதித்தன்மையற்ற ஏற்படுத்தவே முயற்சிகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு குழப்பங்களை வடக்கில் அரங்கேற்றுவதன் மூலம், சூட்சுமமாகத் தமது இலக்குகளை அடைய முடியும் என்பதனையும் கடந்த கால அரசியல் சம்பவங்கள் மெய்ப்பித்துள்ளன.

தற்போது நீண்ட இடைவெளியின் பின்பு, வடபகுதியில் மீண்டும் வாள் வெட்டுச் சம்பவங்களும் பொலிசார் மீதான தாக்குதல் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கருத்து இதன் அடிப்படையிலேயே கால் ஊன்றுகின்றது. இவ்வாறு தென்னிலங்கை அரசியலில் பேரின மிக்க அரசியல் சக்திகளின் கபட நாடகத்துக்குக் காலத்துக்குக் காலம் பலிக்கடாக்களாவது வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்களாகவே உள்ளனர். இதுவே தற்போதும் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகிறது. இதற்காக தற்போது முதல் கட்டமாக குடாநாட்டின் இளைஞர் சமூகமே பணயம் வைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் வெளிப்பாடாக, முதலில் வாள் வெட்டுக்களை அரங்கேற்றியவர்களின் திட்டம் வெற்றியளிக்காத நிலையிலேயே, பொலிஸார் இலக்கு வைக்கப்பட்டனர். இவ்வாறு பொலிஸார் இலக்கு வைக்கப்பட்டதும், சூத்திரதாரிகளின் திட்டம் வெற்றி பெற்றது . அதாவது யாழ்ப்பாணக்குடாநாட்டில் உள்ள படையினரின் எண்ணிக்கையை குறைத்து படையினரை வெளியேற்றுமாறு கோரிக்கை விட்ட தரப்புக்களே, தேவைப்பட்டால் பொலிஸாருக்கு உதவியாக படையினரின் உதவியையும் நாடுங்கள் என கூறும் அளவிற்குதிட்டம்வெற்றியளித்துள்ளது.

### இராணுவ இருப்பு குறித்து வடபகுதி மக்களது அச்சம்

அது மட்டுமன்றி, குடாநாட்டில் ஏற்கனவே ஏறக்குறைய 600 விசேட அதிரடிப்படையினர் நிலை கொண்டிருந்த நிலையில், தற்போது மேலதிகமாக ஆயிரம் விசேட அதிரடிப்படையினரைக் களமிறக்கி குடா நாட்டையே ஒரு பதற்றமான , அச்சச் சூழலுக்குள் தள்ளி ஏறக்குறைய இராணுவ முற்றுகை வலயத்திற்குள் கொண்டுவந்து விட்டனர்.

இருப்பினும், இதில் ஒரு சிறு வித்தியாசம். தற்போது விசேட அதிரடிப்படையின் கட்டுப்பாட்டில் கண்காணிப்புப் பணி இருந்து வருகிறது. அடுத்த இலக்கு இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்துவதா என்ற அச்சமும் தற்போது வடக்கு மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

இவை அனைத்திற்கும் அப்பால் நாய்க்கு எங்கு அடிபட்டாலும் பின்னங்காலையே தூக்கும் என்ற பேச்சு வழக்கைப் போன்று, எந்த அசம்பாவிதச் சம்பவம் இடம்பெற்றாலும் மறுநாளே அவை முன்னாள் போராளிகளது வேலையே என்று கூறுவது சாதாரண பொலிஸார் முதல் பொலிஸ் துறை உயர் அதிகாரி வரை மட்டுமன்றி, அரசியல்வாதிகள் வரையிலும் தொற்றியுள்ள நோயின் நிலமையாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேரையும் மீண்டும் ஓர் பொறிக்குள் சிக்க வைப்பதற்கான இரகசிய நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றதோ என்ற விடை கண்டுபிடிக்கப்படாத வினா எழுந்துள்ளது.

அவ்வாறு குறிப்பிட்ட சில போராளிகளை இனம்கண்டு அவர்கள் முன்னர் அமைப்பில் செயற்பட்ட காலங்களில் புரிந்த பணியின் பெயரில் வழக்குத் தாக்கல் செய்து உள்ளே தள்ளுவதற்கும் இரகசிய முயற்சிகள் இடம்பெறுவதாகவே முன்னாள் போராளிகளும் ஆதரவாளர்களும் அஞ்சுகின்றனர். இந்தப் பணியில் மட்டும்எதிர்ப்பு அரசியல்பேசுபவர்களும் விதி விலக்கு அல்ல எனவும் கூறப்படுகின்றது. இதனால் முன்பு வன்னியில் பணியாற்றிய சிலரின் விபரங்களை அரசியல்வாதிகள் கூட தேடிக் கண்டறிய முயல்கின்றனர் எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது.

### மகிந்த தரப்பினரது கருத்துக்கு உரமூட்டும் செயற்பாடுகள்

இந்த நிலமை தமிழ் மக்களை மீண்டும் எங்கே கொண்டு சென்றுவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துவதோடு, வடக்கில் தொடர்ந்தும் குழப்பமே காணப்படுகின்ற நிலையில், எவ்வாறு பொலிஸ் அதிகாரம் மற்றும் தீர்வு முயற்சிகளை மேற்கொள்ள முடியும் எனக் கேள்வி எழுப்பும் மகிந்த தரப்பின் வாதத்துக்கு உரமூட்டும் செயல்களாகவே இவை அமைந்து வருகின்றன.

இவ்வாறு தமது அரசியல் சுயலாபத்துக்காக வடக்கின் இளைஞர்களின் உயிர்களைப் பணயம் வைக்கும் தென்னிலங்கைத் தரப்புக்களின் சதியை உணர்ந்து, தமிழ் அரசியல் தரப்புக்கள் தமிழ் இளைஞர் சமூகத்தை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் இனத்தையே காக்கவேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளன. ஆனால் எமது அரசியல் தரப்புக்களோ எனது கட்சிக்கான ஆசனத்தை நீ கொண்டு சென்றுவிட்டாய் எனவும், அடுத்து வரும் உள்ளூராட்சி சபையில் எமது கட்சிக்கு எந்த வட்டாரம், எத்தனை ஆசனங்கள் ஒதுக்குவார்கள் என்ற உச்ச சிந்தனையில் தவிக்கின்றனர்.

இதன் காரணமாக தமிழ்த் தலைமையில் மாற்றம் என்னும் முயற்சி தான் வெற்றியளிக்கவில்லை. அடுத்த கட்டமாக கூட்டுத் தலைமை என்னும் பெயரிலாவது எமக்கும் ஓர் கதிரையை பிடித்து, அதன் பின்னர் யாரையாவது தள்ளிவீழ்த்துவதன் மூலம் முன்னுக்கு வருவோம் என்ற மனநிலையில் காய்கள் நகர்த்தப்படுகின்றனவே அன்றி, தமிழ் இனத்தினதும், இளைஞர் சந்ததியினதும் இருப்புத் தொடர்பில் எந்த ஆய்வு மாநாடும் நடாத்த எந்த அணியும் இதுவரையும் முன்வந்ததாகவும் தெரியவில்லை.

மாறாக, தோற்றுப்போன அல்லது இடமில்லாதவர்களின் இருப்பிற்காக மட்டுமே ஆய்வுகளும் ஒப்பீடுகளும் இடம்பெறுகின்றன. இந்த இடங்களின் ஆசனங்களை அலங்கரிக்கும் அரசியல் தலைவர்கள், இளைஞர்களினதும் இனத்தினதும் இருப்புக்குக் கூறும் பதில் என்பது ஒன்றுகூடி ஒலிக்காதவரையில் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் கபடநாடகங்களே மேலோங்கி நிற்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கப்பூர் அமைச்சர் சுட்டிக்காட்டிய வேதம்

யாழ்ப்பாணத்தவன் என்ற குறியீட்டுச் சொல் எமக்குக் கிடைத்த பெரும் மதிப்பாகும். இதைச் சிதைக்கின்ற ஒவ்வொரு செயலையும் தூரவீசி எறிவோம். அவற்றுக்குச் சமாதி கட்டுவோம். எம்மை நோக்கிப் புதிய ஒளியொன்று பிரகாமாய்த் தெரிகிறது. அதன் வழியைப் பின்பற்றுவோம்

சேரலாதன்

உங்களிடம் ஆற்றலும் திறமையும் நிறையவே காணப்படுகின்றன. உலகின் பலபாகங்களிலும் பரந்து வாழ்கின்றீர்கள். இதுவரை நீங்கள் மற்றவர்களுக்காக உழைத்தது போதும். இனியாவது உங்களுக்காக உழைக்கப் பாருங்கள். உங்களுக்கு உதவுவதற்கு நாம் எப்போதுமே தயாராகவுள்ளோம். ஏனென்றால், சிங்கப்பூரின் வளர்ச்சியில் உங்களின் பங்கு மகத்தானது. இவ்வாறு யாழ்ப்பாணத்தவரை நோக்கிக் கூறியவர் வேறு எவருமல்லர். சிங்கப்பூரின் தற்போதைய அயலுறவுத்துறை அமைச்சர் தான் அவர்.

அவர் கூறிய கருத்துக்கள் அர்த்தம் நிறைந்தவை. தற்போதைய காலச் சூழலுக்கு உகந்தவை. யாழ்ப்பாணத்தவரின் உழைப்பும் விடாமுயற்சியும் பிரசித்தமானவை. கல்வியில் அவர்கள் ஈட்டிய சாதனையும் மகத்தானது.

**இனவாதிகளின் இலக்காக ஆகிப்போன ஈழத் தமிழர்கள்**

ஆனால் இந்தநாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, போராட்டமே அவர்களின் வாழ்க்கையாகிவிட்டது. இனவாதிகளின் இலக்காக இவர்களே உள்ளதால் காலத்துக்குக் காலம் இனக்கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டு இவர்கள் மோசமான கொடுமைகளை அனுபவித்தனர். இன்றும் கூட இவர்களின் அவலங்கள் தொடர்கின்றன. ஆனால், சோதனைகளைச் சாதனைகளாக மாற்றுபவன்தான் மனிதன். தமக்கென ஒரு நாடு கூட இல்லாது நாடோடிவாழ்க்கை வாழ்ந்த யூத இன மக்கள் அனுபவித்த துயரங்கள் வார்த்தைகளால் சொல்லமுடியாதவை. ஆனால், அவர்கள் அவற்றையெல்லாம் தாண்டி தமக்கெனப் பலமானதொரு நாடாக இஸ்ரேலை உருவாக்கிச் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாண மக்கள் இவர்களை முன்னோடிகளாகக் கொண்டால் என்ன? ஆரம்பத்தில் யூதர்களுக்கென ஒரு நாடு இருந்ததில்லை. ஆனால் எமக்கென ஒரு நாடு இருந்து வருகிறது. அதில் தமிழ் இனத்தவர்களுக்கெனத் தனியானதொரு பிரதேசம் உள்ளது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இவற்றையெல்லாம்விட வேறென்ன வேண்டும்?

**அபரிமித கடல்வளம் கொண்டது யாழ்.குடாநாடு**

யாழ்.குடா நாட்டின் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. அள்ள அள்ளக் குறையாத கடல்வளம் நிறையவே காணப்படுகின்றது. இந்திய மற்றும் தென்பகுதி மீனவர்கள் இவற்றினால் ஈர்க்கப்பட்டு இங்கு படையெடுக்கின்றனர். இதனால் குடாநாட்டு மீனவர்களால் கடலில் இருந்து உயரிய பயனைப் பெறமுடியவில்லை. இந்த நிலைமை உடனடியாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். கடல்வளம் முழுவதும் குடாநாட்டு மீனவர்களைச் சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால், கடலுணவு வகைகளை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கமுடியும். விவசாயமும், மீன்பிடித்தொழிலும் குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றன. விவசாயம் இதில் முதன்மை வாய்ந்தது. ஆனால் நீர்வளம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளதால் நிலத்தடி நீரை நம்பியிருக்கவேண்டியுள்ளது. இதனால் மழை குறைவாகப் பெய்யும் காலங்களில் விவசாயிகள் நீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றனர். மழைக்காலங்களில் நீரைச் சேமித்து வைப்பதற்கான திட்டங்கள் இங்கு உருவாக்கப்படல் வேண்டும். மழைநீரைக் குளங்கள் அமைத்து அதிகளவில் தேக்கிவைக்கமுடியும். தற்போது அமைந்துள்ள குளங்களின் நீர்க்கொள் ளளவை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். சிறிய அணைக்கட்டுக்களையும் அமைத்து நீரைத் தேக்கி வைக்க முடியும். இஸ்ரேல் நாட்டில் பெய்கின்ற மழைநீரில் ஒரு சொட்டுக் கூட வீணாகாது சேமித்து வைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. நாமும் இதை ஏன் பின்பற்ற முடியாது?

விவசாயத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள விவசாயிகள் அளவுக்கு மீறிய வகையில் இரசாயன உரங்களையும் கிருமி நாசினிகளையும் பயன்படுத்துகிறார்கள்.

விளைச்சலைப் பெருக்குவதற்கான நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதில் செலவு அதிகரிக்கும். இலாபம் குறைவடையும். குடாநாட்டின் படித்த இளைஞர்கள் அரசு வேலைகளுக்காகக் காத்திருப்பதை விடுத்து சுயதொழில் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஓரளவு தீர்வு கிடைக்கும். சுவையான பழங்களுக்குக் குடாநாடு பெயர் போனது. ஆனால் இவை இங்கு பெரிய அளவில் செய்கை பண்ணப்படுவதில்லை. இந்த நிலை மாற்றியமைக்கப்பட்டு பெரும் நிலப்பரப்பில் பழமரங்கள் நடப்பட்டு முறையாகப் பராமரிக்கப்படுமாயின் தரமான பழங்களைப் பெறமுடியும்.

**மக்களைக் குழப்பாத அரசியல் தலைமை குடாநாட்டின் தேவை**

இவையெல்லாவற்றுக்கும் மேலாக மக்களைக் குழப்பாத அரசியல் தலைமை இங்கு வேண்டும். எந்த நேரமும் ஏதோ பிரச்சினையைக் கூறி மக்களைக் குழப்பி விடுவதே இங்குள்ள அரசியல்வாதிகளின் வேலையாகிப்போய்விட்டது. வடக்குமாகாண சபைவிடயத்தில் என்ன நடந்தது என்பதை நாம் அனைவருமே அறிவோம். தேவையில்லாத விடயத்துக்குத் தம்மைத் தாமே குழம்பிக்கொண்ட அரசியல்வாதிகள் மக்களுக்கு இடையேயும் குழப்பங்களையும், பிளவுகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை. மக்களைச் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் இவர்கள் விடுவதில்லை. இவையெல்லாம் பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன.

நாம் தொடர்ந்தும் உரிமைகள், சலுகைகள் எனக் கூறிக் கொண்டு காலத்தைக் கடத்திவிடமுடியாது. உள்ளதை வைத்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவதற்கு முயற்சி செய்வதே புத்திசாலித்தனமானது. எமது ஆயுள் குறுகியது. எமக்காக அது காத்திருக்க மாட்டாது.

ஆகவே ஒவ்வொரு வினாடியையும் நாம் பயனுள்ளதாக்க வேண்டும். மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும். நாம் எதிலும் தோற்றுப்போனவர்கள் அல்ல. வெற்றிக்காகப் போராடுபவர்கள் என்பதை இந்த உலகுக்கு உணர்த்துவோம். உலகம் எம்மைத் திரும்பிப்பார்க்கவைப்போம். சிங்கப்பூர் அமைச்சர் எம்மைப்பற்றிக் கூறிய வார்த்தைகளை வேதமாகக் கொண்டு பழையவற்றை அசைபோடுவதை விடுத்துப் புதியவற்றைப் பின்தொடர்ந்து செல்வதற்கு நாம் இனியும் தாமதிக்கக் கூடாது. யாழ்ப்பாணத்தவன் என்ற குறியீட்டுச்சொல் எமக்குக்கிடைத்த பெரும் கௌரவமாகும். இதைச்சிதைக்கின்ற ஒவ்வொரு செயலையும் தூரவீசி எறிவோம். அவற்றுக்குச் சமாதி கட்டுவோம். எம்மை நோக்கிப் புதிய ஒளியொன்று பிரகாமாய்த் தெரிகிறது. அதன் வழியைப் பின்பற்றுவோம். வாழ்வில் உயர்ந்து நிற்போம்.



## ஆசிரியருக்கான கடிதம்

### பாதிப்புற்ற மீனவர்களுக்கும் வறட்சி நிவாரணம்

வழமைக்கு மாறாக அண்மைய நாள்களில் நாட்டின் வடபகுதியில் கடும் வறட்சி நிலவிவருகின்றது. நாட்டின் ஏனைய சில மாகாணங்களிலும் வழமைக்கு மாறான கடும் வறட்சி நிலவினாலும், வடபகுதியில் நிலவும் வறட்சி நிலை வடபகுதி மக்களைப் பல வழிகளிலும் பாதித்து வருகிறது. விவசாயிகளது நெற்செய்கை கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதுடன், சிறுபயிர் வேளாண்மை முயற்சிகளும் விவசாயிகளுக்குப் பயனளிப்பதாக இல்லை. இவை உரிய நீர்ப்பாய்ச்சலுக்குத் தேவையான அளவு நீரைப் பெற இயலாதிரப்பதால் ஏற்படும் பாதிப்புக்களே.

இதேபோன்று, சிறுகடல் தொழிலில் ஈடுபடும் மீனவர்களது தொழில் முயற்சியையும் வழமைக்கு மாறான இந்த வெப்பமான காலநிலை பாதித்துள்ளமை கவலையளிக்குமொன்றே. யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவைக்கடல் மீன்பிடியில் ஈடுபடும் பெருந்தொகையான மீனவக் குடும்பங்கள், வறட்சி காரணமாக சிறுகடல்களின் நீர் வற்றியுள்ள நிலையால் தமது மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள இயலாத நிலை காணப்படுகிறது.

தமது வாழ்வாதாரத்துக்கு மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் யாழ். மாவட்ட சிறுகடல் மீன்பிடித் தொழிலாளர்கள், விவசாயிகள் வறட்சி நிவாரணம் பெறுவது போன்று தாமும் நிவாரணம் பெற உருத்துடையவர்கள். ஆயினும் யாழ். மாவட்டத்தில் 14 பிரதேசங்களில் இத்தகைய சிறுகடல் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் மீனவர்களில் பெரும்பாலானோர் தமக்கான நிவாரண உதவியைக் கோரிப் பெறும் நடைமுறை குறித்துத் தெளிவாக அறிந்திருக்கவில்லை.

அந்த வகையில் யாழ். மாவட்ட நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர், வறட்சியால் தமது மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்ய இயலாது சிரமப்படும் சிறுகடல் தொழிலில் ஈபடும் மீனவர்களுக்கு உதவ முன்வந்திருப்பது இன்றைய சூழ்நிலையில் பாராட்டுக்குரியதொன்று. தமது தொழிற்சங்கத் தரப்புக்கள் ஊடாகவோ, அன்றேல் வேறு சாதகமான வழிமுறையிலோ குறிப்பிட்ட இந்தச் சிறுகடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தமக்கான நிவாரணங்களைப் பெற முயற்சித்தல் அவசிய தேவை என்றாகிறது.

ஒரு நலன் விரும்பி,
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புமா அமைச்சர் ரவியின் பதவி?

## வலுக்கிறது கடும் எதிர்ப்பு

சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் பெப்பர் சுவல் ட்ரசரிஸ் நிறுவனத் தலைவர் அர்ஜூன் அலோசியஸ், முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்களுக்கு எதிராகப் பல்வேறு சாட்சியங்கள் இந்த விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் அரச தலைவர் ஆணைக்குழுவில் பதியப்பட்டுள்ளதால் அரசியல் அரங்கில் பெரும் அதிர்வலைகள் தோற்றம் பெற்றுள்ளன.

குறிப்பாக, அர்ஜூன் அலோசியஸுடன் ரவி கருணாநாயக்க நிதி அமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்ற தொடர்புகளால் பிணைமுறி மோசடி விவகாரத்தில் ரவி கருணாநாயக்கவுக்கு முக்கிய கதாபாத்திரமொன்று இருக்கக்கூடும் என்று சில அடிப்படைக் காரணிகளில் தெரிய வந்துள்ளதால் அவருக்கு எதிராகக் கூட்டு அரசு நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று கருத்துக்கள் வலுப்பெற்றுள்ளன.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விநியோகத்தின்போது மோசடி இடம்பெற்றதாகச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் மீன்வள அமைச்சருமான மகிந்த அமரவீர நிதிமோசடிப் பிரிவில் முறைப்பாட்டைத் தாக்கல் செய்திருந்தார். அதன்பின்னரே பிணைமுறி விவகாரம் பூதாகரமா னதாக மாறியது.

அப்போதைய 100நாள் அரசில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டியூ. குணசேகர தலைமையில் நியமிக்கப் பட்ட நாடாளுமன்ற கோப் குழு இந்த விடயம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகளை நடத்தியது. கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சூழலில் நாடாளுமன்றம் அதிரடியாகக் கலைக்கப்பட்டு ஒகஸ்ட் 8ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டுப் புதிய கூட்டரசு அமையப்பெற்றது.

என்றாலும், புதிய நாடாளுமன்றிலும் பிணைமுறி விவகாரம் முற்றியதால் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் மீண்டும் கோப் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன. இந்தக் குழுவின் அறிக்கையில் அர்ஜூன் மகேந்திரன் பிணைமுறி மோசடியில் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே அரச தலைவர் ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவால் சர்ச்சைக்குரிய மோசடியாகக் கருதப்படும் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி பெப்பர்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்துக்கு விநியோகிக்கப் பட்ட பிணைமுறிகள் தொடர்பில் இதுவரை பல்வேறு உண்மைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

அதன் ஒரு கட்டத்திலேயே அர்ஜூன் அலோசியஸுக்கும் ரவி கருணாநாயக்கவுக்கும் உள்ள தொடர்புகள் குறித்து அண்மையில் வெளியாகிய தகவல்கள் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தன.

ரவி கருணாநாயக்கவும் அவரது குடும்ப மும் தற்போது வசித்துவரும் மொனார்க் ரெசிடன்ஸி மனைத்தொகுதியை அர்ஜூன் அலோசியஸே பெற்றுக்கொடுத்துள்ளதாகவும், அதற்கான வாடகையை அவரே செலுத்திய தாகவும் ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கப் பட்டுள்ளது.

குறுஞ்செய்தி, தொலைபேசி அழைப்புகள் என பலதரப்பட்ட விடயங்களில் இருவருக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து 2ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையில் ரவி கருணாநாயக்கவிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டிருந்தாலும் அனைத்தையும் அவர் மறுதலித்திருந்தார்.

கூட்டு அரசிலும் நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பிலும் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக எதிர்ப்புகள் வலுப்பெற்றுள்ளதால் அவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்ற கருத்து மேலோங்கியுள்ளது. மகிந்த அணி இவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கடந்த வியாழக்கிழமை சபாநாயகரிடம் சமர்ப்பித்திருந்தது. இதனால் விரைவில் பறிபோகக்கூடிய சூழல் அதிகமாக உள்ளதாக அரசின் தகவல் அறியும் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

(த)

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.07.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சுவாமிநாதன் சாந்தகுமார்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

### 45ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 23.06.2017 அன்று இறைபதமடைந்த எங்கள்குடும்பத் தலைவர்

**அமரர் ஞானசேகரம் ஸ்ரான்லி அமலராஜ் (அமலன்)**

அவர்களின் 45 ஆம் நாள் நினைவு கூரல் வழிபாடு இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அக்கராயன்குளம், 8ஆம் கட்டை ஆரோக்கியமாதா ஆலயத்தில் நடைபெறும் அன்னாரின் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து அவரது வீட்டில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு இவரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அக்கராயன்குளம்,
அம்பலப்பெருமாள்.

குடும்பத்தினர்.
077 393 8422

### ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி அன்னப்பிள்ளை சின்னத்தம்பி**

தோற்றம் 16.09.1916
மறைவு 18.07.2016

திதி: சதுர்த்தசி

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

இல.516, (794) கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

### 23ஆம் ஆண்டு நினைவுகளில்

மண்ணில் 07 . 01 . 1936



விண்ணில் 21 . 07 . 1994

**அமரர் தம்பு துரைராசா**

திதி. சதுர்த்தசி [ஞாயிற்றுக்கிழமை] 06.08.2017

அன்புத் தெய்வமே ஐயா!
வாழும் போது பூமிக்கும் எமக்கும் ஐயா!
சுமை தாங்கியாய் இருந்தீர்களே ! இன்று
எம் மனதில் மாறா மனச்சுமையைத் தந்து
எம்மை விட்டுப் பிரிந்ததேனோ ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கும்.

வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

அன்பு மறவாத
பாசமலர்கள்

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 11 . 1942



மறைவு 17 . 08 . 2016

**திருமதி உ ரோகிணி குருசாமி**

திதி : சதுர்த்தசி (06.08.2017)




அன்புத் தந்த எங்கள் அன்னையே!
உமைப் பிரிந்து ஆண்டு ஒன்று மாண்டதம்மா
ஆறாத் துயருடனே நிதம் அழகின்றோம்
உமை உருக்கி எமை தந்த தெய்வமே
[illegible]
நீராறு கண்களில் [illegible] ஓடுதம்மா
பூத்த புதுமலராய் மலர்ந்த உம் வதனம்
நித்தம் எம் இதய பூங்காவில் நினைவாய்
[illegible]
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

[illegible]
[illegible]

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 07 . 1942



மறைவு 29 . 07 . 2015

**அமரர் சின்னப்பொடி மணியம்**

ஆண்டுகள் இரண்டு ஆயிடினும் அன்பு முகம் மறக்கவில்லை
என்று உம் நினைவால் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணிவிளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்!
இன்று வேண்டித் துதித்தே நாம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் இரண்டாம் வருட நினைவுநாள் இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54/09, அத்தியடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் ஐ.ஆர். ரகுநாதன்

# பிறவிக் குறைபாட்டின் அறிகுறிகள்

# இதய நோய்கள்




**இதயமும் தொழிற்பாடும்**
இதயம் நான்கு அறைகளைக் கொண்ட உடலுக்கும் நுரையீரலுக்கும் குருதியை வழங்குகின்ற பம்பியாகும்.

1. மேலே உள்ள வலது மற்றும் இடது சோனை அறைகளைப் பிரிக்கும் சுவர் சோனை அறை பிரிசுவர் எனப்படும்.
2. கீழே உள்ள வலது மற்றும் இடது இதய அறைகளைப் பிரிக்கும் சுவர் இதய அறைப் பிரிசுவர் எனப்படும்.
3. உடல் உறுப்புகளில் இருந்து ஒட்சிசன் (O2) குறைந்த குருதி மேற் பெருநாளம், கீழ் பெரு நாளங்களினூடாக வலது சோனை அறையை அடைந்து முக்கூர் வால்பினூடாக வலது இதய அறையை அடையும். இந்தக் குருதி வலது இதய அறையில் இருந்து பிரதான அறையை அடையும். பின்பு இந்தக் குருதி வலது இதய அறையில் இருந்து பிரதான சுவாசப் பெருநாடியினூடாக நுரையீரல்களைச் சென்றடையும்.
4. நுரையீரல்களில் ஏற்றப்பட்ட குருதி நான்கு சுவாசப் பெருநாளங்களினூடாக இடது சோனை அறையை வந்தடையும். இந்தக் குருதி இடது சோனை அறையிலிருந்து இருகூர் வால்பினூடாக இடது இதயவறையை அடைந்து தொகுதிப் பெருநாடியினூடாக உடலுறுப்புகளைச் சென்றடையும்.

**இதயத்தில் ஏற்படும் பிறவிக்குறைபாட்டு நோய்கள்**
(Congenital Heart Disease)
**இவை எவ்வாறு ஏற்படுகின்றன...?**
இந்தக் குறைபாடுகள் கர்ப்பப்பையில் குழந்தை இருக்கும் போது இதய விருத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் உண்டாகின்றன. அநேகமான சந்தர்ப்பங்களில் இந்தக் குறைபாடுகள உருவாகுவதற்கான காரணங்கள் அறியப்படவில்லை. சிலவேளைகளில் கர்ப்பகாலத்தின் ஆரம்பநிலையில் ஏற்படுகின்ற நோய்களினாலும் குழந்தைகளுக்கு பிறப்பிலிருந்தே காணப்படுகின்ற வேறு சில நோய்களினாலும் இவை ஏற்படலாம்.

- **ஏன் எனது குழந்தைக்கு இந்த நோய் ஏற்பட வேண்டும்..?**

பல கர்ப்பிணித் தாய்மார்களும், அவர்களது வாழ்க்கை துணைவரும் தமது குழந்தைக்கு ஏற்பட்ட குறைபாட்டுக்குத் தாங்கள் தான் காரணமோ எனக் கவலைப்படுகின்றனர். ஆனால் இந்தக் குறைபாடுகள் எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.
உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆயிரம் கர்ப்பத்திலும் 7 சிசுக்களுக்கு (0.7%) இந்தக் குறைபாடுகள் ஏற்படலாம். இவற்றில் அரைவாசிக்கு மேற்பட்ட குழந்தைகளின் குறைபாடுகள் பிரச்சினை அற்றவையாகவோ அல்லது அறுவைச் சிகிச்சை மூலம் முழுமையாக குணப்படுத்தக் கூடியவையாகவோ காணப்படுகின்றன.

குழந்தைக்கு இதய நோய் இருப்பது கண்டறியப்படின் மருத்துவரின் அறிவுறுத்தல்களைச் சரிவரக் கடைப்பிடிக்க வேண்டும். சில இதய நோய்கள் இயற்கையாகவே குணமாகும் தன்மை கொண்டவை. இவற்றுக்கு எந்தவிதமான மருந்துகளோ, அறுவைச் சிகிச்சையோ தேவைப்படாது.
இதயத்தில் உள்ள சில குறைபாடுகளுக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் குழந்தை இறக்கவும் நேரிடலாம். அதேவேளை சில குறைபாடுகளுக்கு சற்று காலம் தாழ்த்தியே அறுவைச்சிகிச்சை தேவைப்படும்.

- **எவ்வாறு குழந்தைகளுக்கு இதய நோய் இருப்பது கண்டறியப்படுகின்றது..?**

சில இதய நோய்கள் கர்ப்பப்பையில் குழந்தைகள் இருக்கும் போதே கண்டறியப்படலாம். மகப்பேற்று மருத்துவ நிபுணர்களினால் வழமையாகச் செய்யப்படும் ஸ்கானில் குழந்தையின் இதயம் தொடர்பில் சந்தேகம் ஏற்படின் குழந்தை இதயவியல் நிபுணரின் உதவியோடு இதய நோய் கண்டறியப்படலாம்.
பெரும்பாலான இதய நோய்கள் குழந்தை பிறந்த பின்பே கண்டுபிடிக்கப்படுகின்றன. புதிதாகப் பிறக்கின்ற ஒவ்வோர் குழந்தைகளும் மருத்துவர்களினால் பரிசோதிக்கப்பட்ட பின்பே வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். பரிசோதனையின் போது பின்வரும் மாற்றங்கள் அல்லது வித்தியாசங்கள் கண்டறியப்படின் குழந்தை இதயவியல் நிபுணரின் (Paedia tric cardiolo gist) ஆலோசனை பெறப்படும்.

1. வித்தியாசமான இதய ஒலி (Murmur)
2. இதயத் துடிப்பு வேகமாற்றம் (Tachycardia / Dyspnoea)
3. மிகக்கூடிய சுவாச வேகம் அல்லது மூச்சுத் திணறல் (Tachy pnvea/ Dyspnoea)
4. நீல நிறமாதல் (Cyanosis)
5. பால் அருந்தாமை (Poor feeding)

சில சந்தர்ப்பங்களின் போது இந்த வித்தியாசங்கள் குழந்தை பிறந்தவுடன் தோற்றம் கொள்ளாது ஓரிரு தினங்களுக்குப் பின்பாகவே வெளிப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழந்தையை ஏற்கனவே வீட்டுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக குழந்தையை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**வளர்ந்தவர்களில் இதய நோயைக் கண்டறிதல்**
பாடசாலைகளில் நடைபெறும் மருத்துவப் பரிசோதனையின் போது இதய நோய்க்குரிய குணங்குறிகள் கண்டறியப்பட்டால் அவர்கள் குழந்தை மருத்துவரினூடாக (Consultant paediatrician) இதயவியல் பிரிவுக்கு அனுப்பப்படுவர்.
சில வேளைகளில் திடீர் மயக்கம், நெஞ்சுப் படபடப்பு (Palpitation) போன்ற காரணிகளினாலும் இவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் இதயவியல் பிரிவுக்கு அனுப்பப்படுவர். இவர்களுக்கு ஈ.சி.ஜி (ECG, ECHO), 24 மணி ஈ.சி.ஜி போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின் இதய நோய் இருப்பின் அது கண்டறியப்படும். இந்தப் பரிசோதனைகளின் பின்னர் அவர்களுக்கு இதய நோய் சம்பந்தமாக பூரணமாக விளக்கமும் அளிக்கப்படும்.

**மருத்துவ வசதி**
யாழ்ப்பாணம் உட்பட குருநாகல், கண்டி, காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் குழந்தை இதயவியல் நிபுணரின் சேவை நிரந்தரமாகக் கிடைக்கப்பெறுகின்றன. கொழும்பு சிறுவர் (Lady Ridgeway) மருத்துவமனையில் மட்டுமே குழந்தைகளுக்கான இதய சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.
இதயத்தில் இருக்கும் சில குறைபாடு களை அறுவைச் சிகிச்சையின்றி Cardiac Catheteri zation மூலம் குணமாக்கலாம்.
அதேவேளை சில அறுவைச் சிகிச்சைகளுக்கு முன்பு Cardiac Catheterization என்னும் பரிசோதனை அத்தியாவசியமாக உள்ளது. இந்த வசதியை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய மாவட்டங்களில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.
குழந்தைக்கு இதய நோய் இருப்பது கண்டறியப்படின் மருத்துவரின் அறிவுறுத்தல்களைச் சரிவரக் கடைப்பிடிக்க வேண்டும். சில இதய நோய்கள் இயற்கையாகவே குணமாகும் தன்மை கொண்டவை. இவற்றுக்கு எந்தவிதமான மருந்துகளோ, அறுவைச் சிகிச்சையோ தேவைப்படாது. இதயத்தில் உள்ள சில குறைபாடுகளுக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் குழந்தை உயிரிழந்து போகலாம். அதேவேளை சில குறைபாடுகளுக்கு சற்றுக் காலம் தாழ்த்தியே அறுவைச் சிகிச்சை தேவைப்படும்.
சில இதய நோய்களுக்கு இதய அறுவைச் சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம் நோயை முழுமையாக குணமாக்கலாம். அதேவேளை சில நோய்களுக்கு பகுதி பகுதியாக ஒன்றுக்கு மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டதன் பிற்பாடும் வாழ்நாள் முழுவதும் இதயவியல் நிபுணர்கள் அவதானிப்பில் இருப்பது அவசியமாகிறது.

குழந்தை இதயவியல் நிபுணர்,
போதனா மருத்துவமனை,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.08.2017

# சூரியகாந்தி

தினக்குரல் ஞாயிறு சிறப்பம்சம்



தர்சன் சங்கரப்பிள்ளை

"ஹலோ...
ஹலோ மைக் ரெஸ்ரிங் ஹலோ...
வன், ரூ, திறி...ஹலோ...ஹலோ..."
"யோ என்னையா கொற கொறன்னு கேக்குது...? எதையாவது கோணாந்து கையில குடுத்து விட்டிடுவீங்க உங்க பாட்ல"
"வேட்டைக்காரன் பார்ட்டி நடாத்தும் அயூப் நினைவுக் கோப்பை மகா நாட்டுக்கு வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவரையும் விழாக் கமிட்டியினர் சார்பாக வருக வருக வென வரவேற்கிறேன்"
தனுஷ், ஜெயபாலன் நடித்திருந்த சேவற்சண்டையைக்கண்முன்னே கொண்டுவந்திருந்தது 'ஆடுகளம்'.
"இரசிகர்களுக்கு ஒரு அன்பான அறிவித்தல்...
எல்லாரும் கயித்துக்கு வெளியில நிண்டு பாருங்கள்...!
மாடுகள் மாத்திரம் தான் கயித்துக்கு உள்ளுக்கு...
மனிதர்கள் கயித்துக்கு வெளியில்..."
"பி அணிக்கான அதிஸ்டம் பார்க்கப் படவிருப்பதால், பி அணி வண்டில் காரர்கள் உடனடியாக மேடைக்கு வரவும்...
"தம்பி கெதியா வாடாப்பா..."
"ஆரைய்யா அது பொன்னாலை வரதன்...? தம்பி, நீயா வரதன்...? பொன்னாலை - மூளாய் வரதன் உடனடியா வாடாப்பா..."
"நேரம் போய்க் கொண்டிருக்கு... வரதன் எங்கிருந்தாலும் உடனடியா வாடாப்பா... அதிஸ்டம் பாக்க வராத வண்டில்காரர் போட்டியிலிருந்து உன்னித்தரமாக விலக்கப் படுவர்"
இப்படியமைந்தது ஊர்காவற்றுறை - சரவணை மாட்டு வண்டில் சவாரிக்களம்.

பக்கம் 18

# பழமைகளையும் பாரம்பரியங்களையும் மீட்க முடிந்த

# சரவணை சவாரித்திடல்

கொல்ல வருகிறது 30



29



குறி 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"காட்சிகளின் அழகிற்காகவும் கதையின் ு லுவிற்காகவும் உண்மையான வாழ்வியல் காட்சிகளும் தோற்றங்களும் வட்டாரம் சார்ந்த பண்பாடுகளும் மிகைப்படுத்தப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன. உதாரணத்துக்கு ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டீர்களெனில் ஓரிரு மாட்டு வண்டிகள்தான் அவ்வப்போது ஓடிக் கொண்டிருக்கும். சினிமாவிலோ பத்து வண்டிகள் ஓடிக் கொண்டிருப்பது போலக் காட்டுவார்கள். அங்கு சினிமாவை அழகுபடுத்தும் கலை பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறது. சாதாரண கிராமத்தை மிகப்பெரிய அழகியல் பூச்சோடு காட்டவேண்டிய அவசியம் தமிழ் சினிமாவுக்கு இருக்கிறது. திருவிழாக்களில் ஒன்று அல்லது இரண்டு கரகாட்டக்காரர்கள், மேலும் வாத்தியம் இசைப்பவர்கள் இரண்டு பேர் இருப்பார்கள். ஆனால், திரைப்படத்திலோ அதையே அதிகதிகமாகக் காட்டி பார்வையாளனை மகிழ்விப்பார்கள். அவர்களால் அசலான வாழ்வைப் படம் பிடிக்க முடிவதில்லை. பத்து வீடுகள் உள்ள கிராமத்தை வரைகலைத் தொழில்நுட்பத்தின் மூலமாய் முப்பது, நாற்பது வீடுகளுள்ள கிராமமாக மாற்ற முடிகிறது" என்று அழகம் பெருமாள் (உயிர்மை – 100வது இதழ்) கூறிய பாரம்பரியங்களையும் பழமைகளையும் மிகைப்படுத்திச் சித்திரிக்கும் தமிழ் சினிமா போலல்லாமல் அந்தக்காலப் பழமையைக் அப்படியே கண் முன்னே கொண்டு வந்திருந்தது சரவணை சவாரித்திடல்.

நெருப்பெரிந்த தரையாகத் திடல் முழுவதையும் வெம்மை பொசுக்கிக் கொண்டிருந்தது. என்றாலும் வண்டில் மாட்டுச் சவாரியின் ருசி பார்வையாளர்களைத் துள்ளிக் குதித்து அங்குமிங்கும் ஓட வைத்தது.

● ● ●

அந்த வெக்கையை அனுபவித்தபடியே ஓங்கி ஒலித்தது ஐம்பது மதிக்கத்தக்க அறிவிப்பாளரின் குரல். உற்சாக பானத்தின் உதவி அவருக்கு அபரிமிதமாகக் கிடைத்திருக்க வேண்டும். அதனால் தான் வெயில் கொடுமை அவருக்குத் தெரியவில்லைப்போலும். 'மைக்'குடன் அவர் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார். சவாரித்திடலும் மக்கள் வெள்ளத்தில் மூழ்கிப்போனது. மதியம். வெயில் உச்சங்கொண்டிருந்தது. காற்று கடுகளவும் இல்லை. கடற்கரையை அண்டி உலர்ந்து, காய்ந்து தரிசாகிக் கிடந்த அந்தத் தரைவையில் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. அவ்வளவும் அங்கு ஆரம்பமாகவிருக்கும் மாட்டு வண்டில் சவாரியைக் கண்பதற்கானது. யாழ்ப்பாணம், வன்னி எனப் பல பகுதிகளிலும் இருந்து லொறிகளிலும் பாரவூர்திகளிலும் வண்டில்களும் மாடுகளும் அவ்விடம் வந்து சேர்ந்திருக்கின்றன. இரண்டு கிலோமீற்றர்களுக்கும் அதிக வீதியோரத்தைக் குடிமனைகளற்ற அவ்விடத்தில் சனக்கூட்டம் நிரப்பிக் கொண்டிருந்தது. வந்துசேர்ந்த வாகனங்களும் ஆங்காங்கே கிடைத்த நிழல்களுக்குள் நிரம்பி வழிந்தன.

'சரவணை உறவுப்பாலம்' (புலம்பெயர்ந்தவர்கள் கூட்டு) அதை நடத்துவதாகச் சவாரிப் போட்டியின் நிதி அனுசரனையாளர்கள் பற்றி அடிக்கடி விழித்தார் அந்த அறிவிப்பாளர். இப்போது பார்வையாளர்கள் மாத்திரமின்றிப் போட்டியாளர்களும் அதிகமாகிவிட்டனர். வண்டில்களைத் தூக்கிக் கொண்டு மாடுகள் பறப்பதுபோல சவாரி களை கட்டத் தொடங்கியது. பின்தொடரும் புழுதியை முந்திக் கொண்டு மாட்டு வண்டில்கள் பறப்பதை புழுதியில் குளித்தபடி பார்வையாளர்கள் பார்த்தார்கள்.

பிரிவு பிரிவுகளாகப் போட்டிகளை நடத்தி, ஒவ்வொன்றிலும் வெற்றியீட்டுகின்ற வண்டில் காளைகளைத் தெரிவு செய்தே இறுதிச் சுற்று நடத்தும் நிலை நடுவர்களுக்கு. மதியமளவில் ஆரம்பிக்கப்பட்ட போட்டிகள், இதனால் மாலை வரை நீடித்தன. அவ்விடத்தில் மக்கள் குவிந்து விட்டதாலும் சவாரிகளின்போது அவர்கள் ஆரவாரித்து ஆனந்தமடைந்ததாலும் அந்த நெரிசல்களுக்கு மத்தியில் எட்டி எட்டித் துள்ளிக் குதித்துப் பார்த்தே எமது பழமையும் பாரம்பரியமுமான அந்த மாட்டு வண்டில் சவாரியை இரசிக்க முடிந்தது. அந்தப் பரந்த வெளியில் அவ்வளவு பேர் குவிந்து கொண்டார்கள்.

● ● ●

வெயிலும் களைப்பும் வாட்டியெடுத்ததால் நிகழ்வுக்கு இடைநடுவே இளைப்பாறுவதற்காக நிழல் தேடி அலைய வேண்டியிருந்தது. அப்படி அலைந்ததில் சிறிது தூரத்திலிருந்த வடலிகளுக்கு அருகில் ஒதுங்கிக் கொண்டேன். என்னைப் போலவே நிழலைத் தேடிச் சிறிது ஓய்வெடுக்கலாம் என்ற நோக்கில் அவ்விடம் வந்து சேர்ந்தனர் சில வயோதிபர்கள். அவர்கள் வெயிலில் வறண்டுவிட்ட தமது நாவுக்கு வெற்றிலையைக் கசக்கி மென்று குளுமை ஊட்டினர். பின்னர் கதையளக்கத் தொடங்கினர்.

"நகுலேசின்ர (உள்ளூர்க்காராக இருக்க வேண்டும்) மாடு ஓடுதாடாப்பா...?"

"சிலமனக் காணேல்ல"

"அந்தக் காலத்தில சவாரி எண்டால், பொடி நடையாவும் கிடைக்கிற சைக்கிளுகள் வண்டிலுகளில ஏறியும் எத்தின இடத்துக்கு அப்புவுக்குத் தெரியாமல் சவாரி பார்க்கப் போறது"

"ம்... அது அந்தக் காலம்"

"இப்ப எங்கயடாப்பா போய் உந்தச் சவாரியளப் பாக்க ஏலும்...? நாம்பனும் இல்ல. வண்டிலும் இல்ல. எல்லாற்ற வீட்டிலயும் லான்மாஸ்ரரும் ரக்ரரும் தான் நிக்குது"

"அதுகளால தானேண்ண வருமானம் கூட வருது. இப்ப சனமும் கூடீற்றுது, சாமான் சக்கட்டுகளின்ர விலையும் கூடீற்றுது. ஆரும் மாடு, வண்டிலோட திரிவாங்களே,..?"

"உதில ஓடுற மாடுகள் எல்லாம் வேலை செய்து பழக்கி எடுத்த தோட்டத்து வண்டில்மாடுகள் மாதிரித் தெரியேல்ல. சவாரியில இப்பயும் பைத்தியமா இருக்கிற ஒண்டு, ரெண்டுபேர் தான் ஆசையில வளர்க்கிற மாதிரிக் கிடக்கு"

"ம்... உந்தச் சோடியளப் பார்த்தா அப்பிடித்தான் கிடக்கு. ஒண்டு ஒரு பக்கம் ஓடுது. தோட்ட வேலைக்கும் வண்டிலுக்கும் வளர்த்து, அதுகளை வண்டில்ல பூட்டி ஓடப்பழக்கி, பிறகு சோடிகட்டிச் சவாரியில ஓட விர்றதுக்கு எவ்வளவு காலம் எப்பிடி எப்பிடியேல்லாம் கஸ்ரப்பட்டு அதுகளைப் பழக்கிறது. அப்பத்தெய நாம்பனுகளும் அப்பிடித்தானே..."

"இந்தக் காலத்தில இப்பிடியொரு சவாரியப் பாக்கிறது அருமை தான்... வாருங்கோ பொன்னையா அடுத்த பகுதி ஓடுது போல கிடக்கு..."

வெற்றிலையை மென்று துப்பியபடி மெல்ல எழுந்தவர்கள் சவாரித் திடல் நோக்கினர்...

● ● ●

அறிவிப்பாளரின் அறிவிப்புக்களையும் சவாரித்திடலையும், வண்டில்மாடுகளின் தயார்ப்படுத்தல்களையும், ஊர்ப்பழசுகளின் கதையளப்புக்களையும் இன்னும் அங்கு நிகழ்ந்த பற்பல சம்பவங்களையும் ஒன்றுதிரட்டி அணுகிய எனக்கு இந்தப் பழசுகள் வாழ்ந்து கடந்த அந்தச் சவாரிக்காலம் கண்முன்னே அசைவது போன்ற அனுபவம் கிடைத்தது.

எமது பழமைகளையும் பாரம்பரியங்களையும் ஓரளவுக்காவது திரையில் காட்டும் திறன் கொண்டதுதான் சினிமா என்பதும் சரவணைச் சவாரித்திடலைப் பார்த்தபோது எனக்குப் புரிந்தது.

"அந்தக் காலத்தில சவாரி எண்டால், பொடி நடையாவும் கிடைக்கிற சைக்கிளுகள் வண்டிலுகளில ஏறியும் எத்தின இடத்துக்கு அப்புவுக்குத் தெரியாமல் சவாரி பார்க்கப் போறது"
"ம்... அது அந்தக் காலம்"

இப்ப எங்கயடாப்பா போய் உந்தச் சவாரியளப் பாக்க ஏலும்...? நாம்பனும் இல்ல. வண்டிலும் இல்ல. எல்லாற்ற வீட்டிலயும் லான்மாஸ்ரரும் ரக்ரரும் தான் நிக்குது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# ஏமன் எமன்

பிரகாஸ்

உள்நாட்டுப் போர், அதனுடன் கூடவே இலவச இணைப்பாக வந்த பட்டினி, கொலரா நோய்த்தாக்கம் என்று மும்முனைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர் ஏமன் நாட்டு அப்பாவி மக்கள். இதன் விளைவாக மனிதகுலம் மிகுந்த நெருக்கடியைச் சந்திக்கும் நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது ஏமன்.

### உள்நாட்டுப் போருக்கான பின்னணி

அரபு நாடுகளில் ஒன்றான ஏமன், சவூதி மற்றும் ஓமன் ஆகிய நாடுகளுடன் தனது எல்லையைப் பகிருகிறது. இந்த நாட்டின் அதிபராக சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்த மன்சூர் இருக்கிறார்.

அவருக்கு எதிராக ஷியா இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்த ஹௌதி ஆயுதக் குழு செயற்பட்டு வருகிறது. தலைநகர் சனாவை தனது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பதே ஹௌதி ஆயுதக் குழுவின் முதன்மை நோக்கம். நாட்டின் பல்வேறு நகர்கள் ஹௌதியின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதனால் ஏமன் அரசுக்கு ஆதரவாகவும், ஆயுதக் குழுவுக்கு எதிராகவும் சவூதி தலைமையிலான அரபு நாடுகளின் கூட்டுப்படை போரிட்டு வருகிறது. கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து இந்தப் போர் உச்சம் பெற்றுள்ளது.

### 25 ஆயிரம் அப்பாவிகள் உயிரிழப்பு

இதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் ஏமனில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 25ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று உத்தியோகபூர்வத் தகவல் உள்ளது. உத்தியோகபூர்வமாற்ற தகவல்களை ஒன்றுதிரட்டினால், சாவுகளின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சத்தைத் தொடும் என்றும் கருத்துக் கணிப்புக்கள் உள்ளன. சுமார் 3 லட்சம் மக்கள் ஏமனை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்கள் மத்திய தரைக் கடலைக் கடந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். சிலர் சவூதியிலும், வேறு சிலர் ஓமனிலும் தஞ்சமடைந்துள்ளனர். ஏமனுக்குள்ளேயே தமது சொந்த இடங்களைக் கைவிட்டு வெவ்வேறு பகுதிகளுக்குள் சென்று வாழ்பவர்களின் எண்ணிக்கையும் சுமார் 10 லட்சம் வரை இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.



### பொசுங்கும் பூக்கள்

'உலகமெங்கும் நடைபெறும் ஆயுதப் போராட்டங்களில் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகக் குழந்தைகளே உள்ளனர்' என்ற ஐக்கிய நாடுகள் சபையின் கூற்று ஏமனுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன...? ஏமன் குழந்தைகளின் துள்ளித்திரியும் கால்கள் துப்பாக்கிச் சன்னங்களால் முடக்கப்படுகின்றன. வெற்றுத் தோட்டாக்களும் வீசப்பட்ட துப்பாக்கிகளுமே அவர்களின் விளையாட்டுப் பொருள்கள். ஏகப்பட்ட பாடசாலைகள் தவிடுபொடியாகியுள்ளன. இதனால் சுமார் 3லட்சம் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் தமது பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டனர். சிலருக்குப் பள்ளி என்பது எப்படி இருக்கும். அதன் அனுபவம்; என்ன என்பதும் தெரியவே தெரியாதிருக்கின்றது.

லட்சக்கணக்கான ஏமன் குழந்தைகளின் அன்றாடத் துன்பியலைப் பிரதிபலிக்கும் குரலாக ஓங்கி ஒலிக்கிறாள் 12 வயதேயான ராணா அராபத்.

"அதோ அந்த இடத்தில்தான் (தூரமாக நின்று ஏ.ஏப்;.பி. செய்தியாளர்களிடம் இடத்தைச் சுட்டுகிறாள்) எமது பள்ளி இருந்தது. வான் தாக்குதலில் அது இடிந்து விட்டது என்று என் பெற்றோர்கள் சொன்னார்கள். எங்கள் நாட்டில் நடக்கும் போரால் எனது கல்வி பறிக்கப்பட்டுள்ளது. நான் என்ன தவறிழைத்தேன் என்று தெரியவில்லை. எனது ஆசிரியர்கள் மற்றும் எனது நண்பர்களின் நினைவுகள் எனக்கு கண்ணீரை வரவழைக்கின்றன. என்னுடன் விளையாடிய நண்பர்கள் பலர் தற்போது உயிருடன் இல்லை. எனக்கு எனது அமைதியான வாழ்க்கை வேண்டும்" என்று குறிப்பிடு கிறாள் அராபத்.



அராபத்

அதோ அந்த இடத்தில்தான் (தூரமாக நின்று ஏ.ஏப்.பி. செய்தியாளர்களிடம் இடத்தைச் சுட்டுகிறாள்) எமது பள்ளி இருந்தது. வான் தாக்குதலில் அது இடிந்துவிட்டது என்று என் பெற்றோர்கள் சொன்னார்கள். எங்கள் நாட்டில் நடக்கும் போரால் எனது கல்வி பறிக்கப்பட்டுள்ளது. நான் என்ன தவறிழைத்தேன் என்று தெரியவில்லை. எனது ஆசிரியர்கள் மற்றும் எனது நண்பர்களின் நினைவுகள் எனக்கு கண்ணீரை வரவழைக்கின்றன. என்னுடன் விளையாடிய நண்பர்கள் பலர் தற்போது உயிருடன் இல்லை. எனக்கு எனது அமைதியான வாழ்க்கை வேண்டும்'

### பட்டினிச்சாவின் விழிம்பில் 200,000 குழந்தைகள்

உள்நாட்டுப் போர் என்றாலேயே உணவுப் பஞ்சம் ஏற்பட்டுப் பசியும் பட்டினியும் தலைவிரித்தாடும். ஏமனிலும் அதேநிலைதான். ஒருவேளை உணவுகூடக் கிடைத்துப் பசியாற்ற முடியாத நிலை. ஏமனில் பட்டினிச் சாவை எதிர்கொண்டவண்ணம் சுமார் 2லட்சம் குழந்தைகள் உள்ளனர் என்று அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது 'சேவ் த சில்றன்' அமைப்பு. வளர்ந்தவர்களையும் இணைத்துக் கொண்டால் இந்த எண்ணிக்கை 5லட்சமாக அமையும்.

இது மனிதப் பேரவலம் நிறைந்த நிலை என்கிறது ஐக்கிய நாடுகள் சபை. ஏமனுக்கு உதவும்படி உலக நாடுகளுக்கு அது அழைப்பையும் விடுத்துள்ளது.

தமது கல்வியைப் பெறுவதற்கு ஏமன் குழந்தைகளுக்கு உரிமை மறுக்கப்பட்டது.

தற்போது குறைந்த பட்சம் உயிர்வாழும் உரிமையையாவது கொடுக்க வேண்டாமா? கூட்டுப் படை குழந்தைகளின் கேடுப் படையாக மாறுவது தகுமா.



### கொடியது கொலரா

ஏமனில் உள்நாட்டுப் போர் கொடுத்த மற்றொரு இலவச இணைப்பு கொலரா. வாந்திபேதி. ஏமன் மக்களை வதைப்பதில் முன்னிற்கும் ஆயுதப் படைகளைத் தோற்கடிக்கும் படியாக அங்கு கொலரா தாண்டவமாடுகிறது. உணவு இல்லை, சிறந்த பொருளாதாரக் கட்டமைப்பு இல்லை, சுகாதாரம் இல்லை, குடிதண்ணீர் இல்லை, சுற்றிலும் போர் இப்படியான பின்னணியில் கொலரா பரவினால் எப்படியிருக்கும்...? சிந்தித்துப் பாருங்கள். மருத்துவமனையில் ஒரு படுக்கையில் கிட்டத்தட்ட மூன்று முதல் ஐந்து வரையிலான கொலரா நோயாளிகள் ஒன்றாக வைத்துப் பராமரிக்கப்படுகின்றனர். இதுவரை சுமார் 4ஆயிரம் மக்கள் கொலராவால் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கையில் சரிபாதி சிறுவர்களும் குழந்தைகளும் தான். ஆக ஏமன் அங்குள்ள அப்பாவிகளுக்கு எமன் ஆகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆசாத்

# குறி வைக்கப்பட்டுள்ளனர் முன்னாள் போராளிகள்

நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் கொலைமுயற்சி, கொக்குவிலில் பொலிஸாரைத் துரத்தித் துரத்தி வாள் வெட்டு மேற்கொண்டமை ஆகிய சம்பவங்களை அடுத்து பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர யாழ்ப்பாணத்துக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதன்போது கருத்து வெளியிடுகையில் நாட்டில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டாலும் அதன் முளைகள் இன்னும் எஞ்சியுள்ளன என்று அவர் தெரிவித்தார்.



### புலிகளைப் பயன்படுத்துவது கைவந்த கலையே

பொலிஸ்மா அதிபர் அவ்வாறு கூறியிருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளும் பொலிஸார் உட்பட ஆயுதப்படையினரும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் தேசிய மட்டத்திலோ, பன்னாட்டு மட்டத்திலோ நெருக்கடிகள் எழும் சர்ந்தர்ப்பத்தில் புலிகளைப் பயன்படுத்துவது வழமையானதுதான். புலிகளின் மீளெழுச்சிப் பரப்புரைகளைக் கட்டவிழ்ப்பதும் அதற்கேற்ற வகையில் சில காட்சிகளை அரங்கேற்றுவதும் வழமையான விடயங்கள்தான். ஆனால் அவர் குறிப்பிட்ட அடுத்த சில விடயங்கள், நிலைமையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தக் கதவுகள் திறக்கப்படுவதைப் புலப்படுத்தும் வகையில் அமைந்தன.

தொடர்ந்தும் பேசியிருந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, வடக்கில் பாதுகாப்புப் பலப்படுத்தப்(படு)மெனவும், முப்படையினரும் தேவையேற்படும்போது களத்தில் இறக்கப்படுவார்கள் எனவும் தேடப்படும் நபர்கள் கைது செய்யப்படும் வரை இப்படியான நடவடிக்கைகள் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவரைப்போன்றே இந்த விடயங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சர் மகிந்த அமரவிர, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 12ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் பற்றிய மீள் பரிசீலனை அவசியம் எனவும் அது ஆராயப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து வடக்குக்கு ஒரு தொகுதி அதிரடிப்படையினர் தரையிறக்கப்பட்டு விட்டனர் எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

### முன்னைய காலங்களில் அதிரடிப் படையின் பயன்பாடு

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுப்படுகொலைகளாக அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கு இந்த அதிரடிப்படையினரே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதை நாம் மறந்து விட முடியாது. ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி, இரண்டு, மூன்று கிராமங்களைச் சுற்றி வளைத்து, நிராயுத பாணிகளான மக்களை ஓரிடத்தில் குவித்து வைத்து, அவர்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டும் வெட்டியும் கொன்று இவர்கள் முன்னாட்களில் செய்த பல கொடூரங்களையே தற்போது நாம் வருடாவருடம் நினைவு கூர்ந்து வருகிறோம். அப்படியான இவர்களைத் திரும்பவும் களமிறக்க ஏற்பாடாகியுள்ளது. அதைப் பலப்படுத்தப் பல நிகழ்வுகளும் அடுத்தடுத்து ஏற்பாடாகின்றன.

இனிவரும் காலங்களில் வடக்கில் இவர்கள் சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர்.

### தமிழர் தரப்பின் நிலைப்பாடுதான் என்ன?

பொலிஸ்மா அதிபரின் மேற்படிக் கருத்துத் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், இப்படியான நடவடிக்கைகளைத் தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனத் தெரிவித்திருந்தார். அப்படியானால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? அறிக்கையுடன் இணங்கிப் போவதா? அல்லது அரசியல் தீர்வு கிட்டும் வரைப் பொறுமை காப்பதா? அல்லது வடக்கின் இராணுவ மயப்படுத்தலுக்கு எதிராக அறவழிப் போராட்டங்களை முன்னெடுப்பதா? அவசரமவசரமாக ஏதோ ஒரு நடவடிக்கையில் இறங்கியே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் தமிழ்த் தரப்பினருக்கு உருவாகிவிட்டது.

ஏனெனில் அடுத்தடுத்து மேடை ஏற்றப்படும் இந்தச் சம்பவங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்ட வகையில் ஏதோ ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் திரைக்குப்பின்னாலிருந்து சிலரால் மேற்கொள்ளப்படுவதாகவே தோன்றுகின்றது.

### வெற்றிகரமாக நடந்தேறிய பின்னணிகள்

நாகர்கோயிலில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிய இளைஞன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான். துன்னாலையில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல். அடுத்து சாவகச்சேரியில் இரண்டு பொலிஸார் தாக்கப்பட்டனர். நீதிபதி இளஞ்செழியனை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் கொலை முயற்சியில் அவரின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தார். கொக்குவிலில் விசாரணைக் காகச் சென்ற பொலிஸார் மீது வாள்வெட்டு. இவற்றைப் பின்னனியாகப் பயன்படுத்தியே யாழ்ப்பாணம் மீண்டும் இராணுவ மயப்படுத்தல்களுக்கு உள்ளாகின்றது. அதாவது யாழ். குடாநாட்டை இராணுவ மயப்படுத்துவதற்காகவே இப்படியான சம்பவங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனெனில் வட பகுதி மக்கள் சந்தித்த பல சம்பவங்கள் இப்படியான சந்தேகங்களை அவர்களுக்குள் எழுப்பியிருக்கின்றன. அவை சந்தேகங்கள் இல்லை உண்மைகள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

### இலங்கைப் பொலிஸ் மீது பெரும் கறை

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரால் சுடப்பட்டனர். அடுத்த நாள் சுன்னாகத்தில் ஒரு பொலிஸ் அதிகாரிமீது வாள்வெட்டு நடத்தப்பட்டதுடன். அதை மேற்கொண்டது புலிகள் என்றும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட அந்தச் சட்டவிரோத நடவடிக்கையைப் புலிகளின் மீளெழுச்சி என்ற மாயைக்குள் புதைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் சாவு விசாரணைகள் மூலமும் வைத்திய அறிக்கை மூலமும் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

மாணவி வித்தியா கொலையின் முக்கிய சூத்திரதாரி தப்பிச் செல்ல முயன்றமைக்கு உதவிய குற்றச்சாட்டில் ஒரு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இன்னொரு பொலிஸ் உதவிப் பரிசோதகர் தேடப்பட்டு வருகிறார். கொழும்பில் பல வழக்குகளில் பொலிஸ் உயர் அதிகாரிகள் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கோடீஸ்வரர் சியாம் கொலை வழக்கில் முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவுக்குச் சாவுத்தண்டனை விதிக்கப்பட்டது. இப்படியாகக் குற்றங்களைச் செய்யவும், குற்றவாளிகளைக் காப்பாற்றவும் பொலிசார் தமது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திய பல சம்பவங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பல கண்டுபிடிக்கப்படாமலும் இருக்கலாம். புலிகளின் மீளெழுச்சி என்ற இன்றைய மாயை, வடக்கில் இராணுவமயப்படுத்தவும் உண்மைக்குற்றவாளிகளை மறைக்கவும் கையிலெடுக்கப்படுவதாகவே தோன்றுகிறது.

### தலைசிறந்த உலக நகைச்சுவை ஒன்று

நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்பன்பிலவின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பதில் பாதுகாப்பு அமைச்சர் சாஹல ரத்னாயக்க, 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது 7தமிழர்கள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்று தெரிவித்திருந்தார். ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு, கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டன. வெலிக்கடைச் சிறைக்குள்ளேயே 53தமிழ் கைதிகள் கொல்லப்பட்டார்கள். உலகறிந்த உண்மை இது. பன்னாட்டு அளவில் இலங்கைச் சனநாயக அரசின் பெயர் நாற்றமெடுத்த காலம் அது. நிகழ்ந்து நெடுங்காலமாகவில்லை. அதை அனுபவித்த பல தலைமுறைகள் நேரடிச் சாட்சிகளாக இன்றும் உயிர் வாழ்கின்றன. இந்த நிலையில் இன்றைக்கே இவர் இப்படிப் புரளி பேசுகின்றார் என்றால் இனிவரும் காலங்களில் இந்தக் கதை எப்படியெல்லாம் கற்பனைப் படுத்தப்படும் என்பது ஊகிக்க முடிந்த ஒன்றே. ஆனாலும் கூட 7 பேரே குறித்த கலவரத்தில் இறந்தனர் என்றே அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்திந்தார். அதுவே ஹான்ஸ் சாட்டிலும் பதிவானது.

முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான ஆசாத்சாலி இது இந்த வருடத்தின் தலைசிறந்த உலக நகைச்சுவை என வர்ணித்திருந்தார். அப்படியிருந்தும் இப்படியொருபடுபொய்யை அவையில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

### கறைகளை மறைப்பதற்குக் காரணம்

அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த ஐ.நா. அறிக்கையாளர் இலங்கையைக் கடுமையாகச் சாடினார். இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படாமை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் பிரச்சினை, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படமை என்பன தொடர்பாக அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார். இது அடுத்த கூட்டத்தொடரில் இலங்கைக்குப் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இதனால் தான் கலவரத்தில் ஏராளம் தமிழர்கள் கொல்லப்பட்டதை மறைக்க வேண்டிய அவசர தேவை ஐக்கிய தேசியக் கட்சி, அரசதரப்பினருக்கு தற்போது எழுந்துள்ளது. அந்த நோக்கத்துக்கமைவாகவே பொலிஸ்மா அதிபர், அமைச்சர் மகிந்த அமரவிர ஆகியோரின் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன.

போர் முடிவுக்கு வந்த பின்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தொடர் கொலைகள், கொள்ளைகள், கிறீஸ்பூதங்கள், வெகுளி வித்தைகள் என்பன தொடர்பாக இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. பின்னர் இடம்பெற்ற வாள்வெட்டுக்கள் சம்பந்தமாகச் சில குழுக்கள் கைது செய்யப்பட்டன. சில நாள்களில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அது மட்டுமின்றி ஒரு குழு கைது செய்யப்பட்டால் இன்னொரு குழு உருவாகி விடுகிறது.

இந்தக் குற்றவாளிகள் அனைவரும் ஒரே மையத்திலிருந்து பயிற்றுவிக்கப்பட்டே களமிறக்கப்படுகின்றனர். அந்த மையம் கைது செய்யப்பட முடியாத அதிகாரமுள்ள சக்தி என்பது மக்களின் எண்ணம். அந்த மையத்தின் அடுத்த கட்ட வேலை புலிகளின் மீளெழுச்சி எனும் மாயையை ஏற்படுத்துவதும் அதன் மூலம் முன்னாள் போராளிகளைப் பலிக்கடாவாக்குவதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13





# செல்லும் வழியின் தூரம்...

ப்ரியமதா பயஸ்

வலைஞர் மடத்தில் இருந்து எப்படியாவது வள்ளி புனத்துக்குப் போய்விடலாம் என்ற எண்ணம் எந்த நேரமும் மனதில் நிலை கொண்டிருந்தது. சேர்த்துவைத்த பொருள்கள், பெறுமதி வாய்ந்த ஓவியங்கள், ஒரு கார்ட்டூன் தொகுப்புக்காகக் காத்திருந்த பயஸின் ஆயிரக்கணக்கான கேலிச்சித்திரங்கள், ஆடுகள், மாடுகள் என்று இவைகளைச் சுற்றியே மனம் அலைந்தது. ஆனாலும் நிலைமை மோசமாகிக்கொண்டே போனது. உடல்நிலை, மனநிலை எதுவும் இயல் நிலையில் இல்லை.

அந்தப் பரந்த கடற்கரை வெளியில் யாரும் தூங்கி விழித்தனர் என்று தெரியவில்லை. காலம் தன் கடமையைச் செய்தது. காலையும் மாலையும் தன் பாட்டுக்கு ஓடிக்கொண்டே இருந்தது. ஆனால், நமக்கு இரவு பகல் எல்லாமே ஒன்றாகவே இருந்தது. நல்ல உணவை வயிறு மறந்தே போய்விட்டது, தூக்கம் என்பதையே கண்கள் இழந்துவிட்டன. நிலை தடுமாறிய வாழ்க்கையில் ஒவ்வொரு பொழுதும் எதேச்சையாகக் கடந்துபோனது.

### வரலாற்று நாயகியாக வழியனுப்பினேன் கணவரை...

அன்றும் ஓயாமல் வந்துவிழும் துப்பாக்கிச் சன்னங்களோடும், அதிர்ந்து விழும் செல்களோடும் வழமைபோன்றே விடிந்தது காலை. கடற்கரைப் பக்கமாகப் போன பயஸ் அவசர அவசரமாக ஓடி வந்தார். அவருக்குப் பின்னால் மூன்று போராளிகள் சகிதம்.

"ஏன் அவசரம்...?" என்பது என் பார்வையிலேயே அவரால் உணரப்பட்டதுபோலும்...!

"நான் அவசரமாகத் தேவிபுரம் போகவேண்டும். இவர்களோடு தான் போகிறேன் ஏதாவது சிக்கல் என்றால், அம்மாக்களோடு நீயும் பிள்ளையும் ஓடி விடவேண்டும். நான் எப்படியும் உங்களைச் சந்திப்பன். பயப்பிடாத." என்று கூறினார்.

தேவிபுரம் என்றதும் என் இதயம் ஒருமுறை நின்றேபோனது. அந்த இடத்தில் இருந்து இந்த இடத்துக்கு வர எத்தனை கஷ்டங்களை, உயிர் பிரியும் வலிகளை அனுபவித்தோம். மீண்டும் அந்த இடத்துக்குப் போவதென்பது எவ்வளவு பாரதூரமான விடயம். மனது தவித்து தலைக்குள் கிறுகிறு என்று வலித்தது. ஆனாலும் என் மனபலம் மீது அவர் கொண்ட நம்பிக்கையை நான் வீணாக்கக் கூடாது என்பதுபோல் ஒரு வரலாற்று நாயகியாக மனதைத் திடப்படுத்திக்கொண்டேன்.

காவியங்களில் எனில் கண்டிப்பாக இங்கே போர்முளக்கமிட்டு, போர்ச் சங்கு ஊதிக் காவியத்தைச் சிலிர்ப்பூட்டி இருப்பர். ஆனால் இங்கே அத்தனையும் மனதளவில் நடந்தது. மகனை அணைத்து முத்தமிட்டு, எனது கைகளை வருடி விடைபெற்றார் கணவர்.

### தனித்துப்போனோம் தனயனும் நானும்...

ஒரு நாள் கடந்து விட்டது. பயஸ் களப்பணியில். நானும் பிள்ளையும் வலைஞர் மடத்தில். கிடைக்கும் உணவை மகனுக்கு மட்டுமே கொடுத்தேன். கோரப்பசி இப்போது இல்லை. வயிறு பசியை மறந்ததோ தெரியவில்லை. பயஸின் வருகையையே எப்போதும் மனம் எதிர்பார்த்தது. ஒரு நாள் கடந்த நிலையில் பிள்ளையும் அப்பாவைத் தேடுவதை உணரமுடிந்தது. ஆனால் அவனுக்குப் பேசும் வயது வரவில்லையே. "அப்பா" என்று சொல்லத் தெரியும். "அப்பா எங்கே?" என்று கேட்கத் தெரியாது. அவன் ஆவல் கண்களில் தெரிந்தது. மாலை ஆனதும் "வா அப்பாவைப்பார்ப் போம்" என்று கூறி கடற்கரை நோக்கி அவனைக் கொண்டு செல்வேன். அதிர்ந்துவிழும் செல்லும், அவ்வப்போது வரும் சன்னங்களும் எம்மை அச்சுறுத்தி அவ்விடமிருந்து அகலச் செய்யும்.

### இரவைப் பகலாக்கி இடையூறளித்தது இராணுவம்

நேரம் மாலை, ஆறு தாண்டி ஏழை அண்மித்தது. மலம்கழிப்பதற்கு வழமைபோன்று கடற்கரையில் குவிந்தனர் மக்கள். பெண்கள் கூட்டம் அதிகமாகிவிட்டது. இரவு இருள் தானே என எண்ணி வந்த அவர்களை மலம் கழிக்க விடாமல் 'பரா' ஒளிகளை வரிசையாக ஏவி விட்டது இராணுவம். இருள் போர்த்தியிருந்த கடற்கரை பகல்போல ஆனது. எல்லோரும் தவித்துபோகின்றனர். அதுவே பின்னர் வழமையாகியது. ஒவ்வொரு நாளும் இவற்றைப் பார்த்துப் பார்த்து அந்தச் சூழலுக்கும் மக்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டனர். வழமைபோன்றே அப்பாவை எதிர் பார்க்கும் பிள்ளையைக் கடற்கரை கொண்டு சென்று தாக்காட்டித் தூங்க வைக்க நேரம் எட்டுமணியை அண்மித்தது. அங்கே நின்று என்ன செய்வது...? அவரைக் காணவில்லையே...! வருவேன் எண்டவர் வராது போனாரே. தோளிலே தூங்கிப்போன பிள்ளையை அணைத்துக்கொண்டு கூடாரம் நோக்கி நடக்கின்றேன்.

### பிள்ளைக்கு ஆறுதலளித்தபடி பயசின் நினைவுகளுடன்...

ஒரு சாறியை மூன்றாக வெட்டி, ஒவ்வொரு துண்டுகளையும் இரண்டாக மடித்து, பை போன்று தைத்து, அவை நிறைய கடற்கரை மணலை நிரப்பி, அவற்றை ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்கிப் பங்கர் போன்றதொன்றை அமைத்திருந்தோம். காரணம் கடற்கரை மணலை அகழ்ந்து பதுங்கு குழியை அமைப்பது சிரமமாக இருந்தது. இவை ஓரளவாவது செல், குண்டுச் சிதறல்களில் இருந்தும், துப்பாக்கிச் சன்னங்களில் இருந்தும் எமக்குப் பாதுகாப்பைத் தரும். அந்த மணல் மூடைகளுக்கு நடுவில் பிள்ளையை வளர்த்திவிட்டுப் பக்கத்தில் படுத்துக் கொண்டேன். தூக்கம் கண்களுக்கு அருகிலும் இல்லை. புலனும் பூரணமாகப் பயஸ் பற்றியதாயிற்று. அவ்வப்போது வந்து சேரும் குண்டுகளும் அவலக்குரல்களும் பிள்ளையைத் திடுக்கிட வைக்கின்றன. நெஞ்சிலே மெதுவாகத் தடவித் தடவி அம்மா பக்கத்தில் இருக்கிறேன் என்கின்ற ஆறுதலைப் பிள்ளைக்கு ஊட்டிக்கொள்கிறேன்.

### அவலத்தில் சிக்கிய ஒரு தாய்

ஏதுமறியாமல் அசந்து தூங்கும் பிள்ளையின் தூக்கத்தை ஒரு பேதையாய் இரசித்தபடி சற்று அயர்ந்து போகிறேன். மிகமிக அருகில் வந்து விழுந்த எறிகணை ஒன்று அந்த பகுதியைச் சிதைக்கின்றது பத்துப் பன்னிரெண்டு பேர் ஓடிவந்து என் கூடாரத்துக்கு முன்பாக அமர்ந்து கொள்கின்றனர். "பிள்ளை கொஞ்சம் தண்ணிதா அம்மம்மாவுக்குக் காயம்பட்டுட்டு..." என்றார் ஒரு ஐயா. அது அவருடைய மனைவியாகத்தான் இருக்கவேண்டும்! கணுக்கால்களில் இருந்து ஓடிய குருதியைத் தனது சால்வையால் துடைத்துக் கொண்டிருந்தார் ஐயா. குவளை நிறைய நான் கொடுத்த தண்ணீரைக் குடித்துவிட்டு அந்த மணலிலே படுத்துவிட்டார் அந்த அம்மம்மா. எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை. அந்தக் காயத்துக்குக் கட்டுப் போட, மருந்திட எமது கைகளில் எதுவுமே இல்லை. அந்த முதிர்ந்த தாயின் கால்கள் சோர்ந்து, நிலைகுலைந்து, அசைவற்றுக் கிடந்தன. உப்புக் காற்று உரசிச் சென்றது...

(தொடரும்)


## கவிதை

# பேறு

கை.சரவணன்

அலையடித்து ஆர்ப்பரிக்கிறது கடல்.
அப்பாலே, அயலில் மழையால்தேங்கியநீர், "குட்டை" எனப் பெயர் சூடியிருக்கிறது.
கடல் அலைகள் உரக்க உரக்க எக்காளமிட்டுப் பெருங்குரலில் ஆர்ப்பாட்டம் செய்கின்றன. தனது பலம், தனது வளம் என்றெல்லாம் பெருமை பேசித் தொடர்ந்தும் இறுமாப்புக் கொள்கின்றன.
குட்டை அமைதி காத்தபடி இருக்கின்றது.
கொடு வெயிலில் அலைந்து வந்த மாடொன்று கடலைப் பார்த்துச் சலிக்கின்றது.
குதுகலங்கொண்டு குட்டையை நாடி, நீரருந்தித் தாகம் தணித்து உயிர் சிலிர்க்கிறது.
குட்டையை வானுயர வாழ்த்துகிறது. இரையும் கடலுக்கும் இது தெளிவாகக் கேட்கிறது.
வெட்கித் தலை குனிகிறது. மெல்ல மெல்ல அமைதியாகிறது. முகம் தடவி அலையில் கோடுகள் எழுதிய காற்று இப்போது உரத்துக் கூவுகிறது.
"இருப்பதெல்லாம் வேறு...
தேவைக்கு உதவுதலே பேறு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவு... நீ... நான்...

புல்லின் இதழ்களை உதிர்த்தபடியே
நிற்கிறது நிலவு.
இலைகளில் வழிந்த ஒளி
முற்றத்தில் தேங்கியிருக்கிறது.

நீயும் நானுமாய்
அதனையும் இதனையுமென
முழுஇரவையும் பேசிப் பேசியே
கழித்திருந்தோம்.

எல்லோருக்கும் தேவையாயிருந்த
ஒளி மிகுந்த இரவை
முன்னர் நீ வெறுத்திருந்தாய்
நானும் வெறுத்திருந்தேன்.

எமது பணி அப்படியிருந்ததெனினும்
நிலவு சொட்டும் நாள்களில்
மரங்கள் அழுது குத்தும் இருட் புள்ளிகளில்
உடலொடுக்கி ஒதுங்கியிருந்தோம்

எனவே நீளமான உரையாடலால்
இரவைக் குறுக்கி வைத்திருந்தோம்.
ஒவ்வொரு நிலவு நாளிலும்
உரையாடலை கீழ் வானச் சிவப்பு
இடைநிறுத்தும்.

இறுதிச் சொற்களாய் அமைவது
எப்போதுமே
இருந்தால் மறுபடியும்

இன்னோர் நிலவு
நாளில் பேசுவோம்.


இன்றைய நிலவில் முற்றத்தில்
இருக்க முடிகிறது.
இரவல் முற்றம்.
வீதியில் நாய்கள் குரைக்கின்றன.

நிலவு இருக்கிறது
பேசுவதற்கும்தான் நிறையவே
இருக்கின்றன.
நீதான் இல்லை.

வானவன்



## இலிங்க வழிபாட்டுத் தலங்கள் 5



# 2,500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு

அருணா செல்லத்துரை

புராதன குளங்கள் அழிந்ததாலும் மக்கள் வெளியேறியமையாலும் அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தின் நிலப்பரப்பு முழுவதும் காடுகளாக மாறின. அவை உயரமான மரங்கள் இல்லாத காடுகளாக இருந்தமை தெளிவாகிறது. வவுனியாப் பிரதேசத்தில் மக்கள் கூடுதலாக வாழ்ந்து வெளியேறியமையால் அந்தப் பகுதிகளில் உயரம் குறைந்த மரங்கள் வளர்ந்துள்ளன என்ற கருத்தும் முன் வைக்கப்படுகின்றது. வவுனியாப் பிரதேசம், குருமன்காடு, கரம்பைக்காடு, (கரப்பங்காடு) கொண்டல்காடு என்ற பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளமை இங்குள்ள காணிகளின் உறுதிப் பத்திரங்களில் இருந்து தெரிய வருகிறது. முடிக்குரிய காணிகளுக்கு உறுதிகள் வழங்கும் பாரம்பரியம் ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் ஏடுகளில் இந்த விபரங்கள் எழுதப்பட்டுள்ளன. காகித அறிமுகத்துக்குப் பின்னர் அவை காகிதங்களில் எழுதிப் பாதுகாக்கப்படுகின்றன.

புராதன காலத்தில் இருந்த நடுகல் வழிபாட்டு முறையின் வளர்ச்சியாக உருவ வழிபாடுகள் ஆரம்பித்துள்ளன. உருவ வழிபாடுகளின் வளர்ச்சி அபரிமிதமானது. ஆனால் நடுகல் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இலிங்க வழிபாடு இருந்துள்ளது என்பதற்கு அதன் அமைப்புகள் சான்று பகருகின்றன. வட்டமான தனிக் கல்லை நீள் உருண்டையாக வடிவமைத்து இலிங்கத்தைப் பொளிந்திருப்பது சைவ சமய உருவ வழிபாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி முறையாகும். இந்த வடிவங்களை அமைப்பதில் தேர்ச்சியுடையவர்கள் நாகர்களாவர்.

இலிங்க உருவத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் நாகர்களே உருவாக்கினார்கள் என்பதற்கு "இலிங்கங்களிலும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் பொளியப்பட்டு இருக்கின்றன" என்று பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் குறித்துள்ளதின் மூலம் தெளிந்து கொள்ளலாம். சமளங்குளம் மலைச்சாரலில் எண்கோண மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த எண்கோணலிங்கம், அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று முன்னோர்கள் பலர் தெரிவித்துள்ளனர். சமளங்குளத்தை அடுத்திருக்கும் கிராமமான மருதங்குளம் புராதனமானது. ஆங்கிலேயருடைய காலத்தில் எல்லப்பர் மருதங்குளம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மருதங்குளத்துக் கட்டின் கீழுள்ள பிள்ளையார் கோவிலிலுள்ள பிள்ளையார் சிலையின் பின்பக்கத்திலும் எண்கோண இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

### மருதங்குளம் எண்கோண இலிங்கம்



அடங்காப்பற்று வன்னிப் பிரசேத்தில் அநேகமான நடுகற்களையும் சிவலிங்க வடிவக் கற்களையும் பிள்ளையார் என்று வழிபடும் முறைமை இருக்கின்றது.

சமளங்குளத்திலிருந்து கிட்டத்தட்ட பத்துக் கிலோ மீற்றர் தூரத்தில் கல்வீரங்குளம் இருக்கின்றது. அங்கு வட்டமாகக் கோடுகள் பொளியப்பட்டு பாம்பு, அணைக்கட்டின் மேல் இருப்பது போன்ற வடிவில் அமைக்கப்பட்ட இலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. இலிங்கத்தின் உச்சிப் பகுதி கூர்மையானதாகப் பொளியப்பட்டுள்ளது.



கல்வீரங்குள இலிங்கம்

### நாகவழிபாட்டுச் சின்னங்கள் மாற்றப்படுகின்றனவா?

ஈரப் பெரிய குளம் அல்லது இரட்டைப் பெரியகுளம் என்று தமிழில் பேசப்படுவது சிங்களத்தில் 'ரெட்ட பெரியகுளம்' எனக் குறிப்பிடப்படுகிறது. இது 'இரட்டைப் பெரியகுளம்' என்ற சொல்லின் மருவலாகும். இரட்டைப் பெரியகுளத்தின் பெயர் ஆங்கிலத்தில் Iratperiya kulam என்று எழுதப்பட்டது. அதுவே 'ஈரப் பெரிய குளம்' எனத் தமிழிலும் வழக்கத்துக்கு வந்துள்ளது. அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தின் பிற்கால வரைவுகளில் பல பெயர்கள் ஆங்கில உச்சரிப்புக்கு ஏற்றவாறு தமிழில் எழுதப்பட்டு அதன் புராதனப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளதால் பிரதேசத்தின் வரலாற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சமளங்குளத்துக்குக் கீழுள்ள வயல்வெளியில் இருந்து வடிந்து-பாயும் நீர், அருவி ஆற்றுக் கிளையினூடாகப் பாய்ந்து வவுனியா - கண்டி வீதியில் 3 கிலோமீற்றர்கள் தூரமளவில் இரட்டைப்பெரியகுளத்தை வந்தடைகிறது.

இரட்டைப்பெரிய குளத்தின் உயர்ந்த மலையின் உச்சியில் பிள்ளையார் சிலை வைத்து வழிபாடு இடம்பெறுகிறது. உயர்ந்த மலைப்பகுதிக்கும் நேர்கோட்டில் இருந்த மலைக்குன்றுகளுக்கும் இடையே பாயும் அருவி ஆற்றுக் கிளையை மறித்து நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டுப் பகுதி மண்ணினால் நிரப்பப்பட்டுள்ளது. மிகவும் அழகாகக் காணப்படும் இந்தக் குளத்தின் நீரேந்து பகுதி காடுகளால் நிரம்பியுள்ளது.

இந்தக் குளத்தின் அணைக்கட்டில் நாகர்களால் ஐந்துதலை நாகசிலை வைக்கப்பட்டிருந்தது. புராதன தொல்லியல் சின்னமான அந்தச் சிலை பின்னாளில் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. இந்த நாக சிலைக்குப் பதிலாகப் பிற்காலத்தில் சிமெந்தினால் செய்யப்பட்ட ஐந்துதலை நாக சிலை வைக்கப்பட்டது. பௌத்த தலங்களில் காணப்படுவது போன்றிருக்கும் இந்தச் சிலையமைப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரிய ஓர் அடையாளச் சின்னம் என்ற கருத்தும் அந்தச் சிலையுடன்கூடவே வெளியிடப்பட்டது. இப்போதுள்ள இந்தக் கருத்து இன்னும் சற்றுக் காலத்தில் இன்னமும் மாறுபட்டு வழமையான வரலாற்றுத் திரிபுபடுத்தல்களுக்குப் பலம் சேர்க்கும் வகையில் அமையும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

### இரட்டைப் பெரியகுளத்தில் மாற்றி வைக்கப்பட்டுள்ள நாகசிலை

இரட்டைப் பெரியகுளத்தின் கீழுள்ள வயல்வெளியில் இருந்து வடிந்து பாயும் நீர் வடமேற்காகப் பாய்ந்து அருவி ஆற்றின் கிளையாற்றில் கலக்கிறது. இரட்டைப் பெரியகுளத்துக்கு அடுத்தும் பல சிறிய குளங்கள் உள்ளன. அவற்றில் குருந்தன்குளமும் ஒன்றாகும். இங்கிருக்கும் மலைக் குன்றில் சிவலிங்க வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன. குருந்துமரம் அந்தப் பகுதியில் நிறைந்துள்ளது. அது சிவனுக்குரிய மரமாகும். அத்தோடு குன்றின் உச்சியிலிருந்த பல தொல்லியல் அடையாளங்கள் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பகுதியில் தவசிகுளம், மதகுவைத்தகுளம் போன்ற பல சிறிய குளங்களும் உள்ளன.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவாளி என்பதற்கு எதிர்ப்பதம் என்ன?

அறிவாளி என்பதன் எதிர்ப்பதம், "முட்டாள்" என்பர். ஆனால் அந்த 'முட்டாள்' என்ற சொல் எப்படி வந்தது...? அது ஒரு காரணப் பெயர்ச் சொல். அந்தக் காலத்தில் கோவில்களில் திருவிழாக்களின் போது சப்பரம் (சப்பை ரதம்) தூக்குவதற்கென்று சிலர் இருப்பர். சப்பரம் தூக்கிக்கொண்டு போகும்போது, பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக சப்பரம் சிறிது நேரம் நிற்கும். அந்தச் சமயம் சப்பரம் தூக்கிகள் ஓய் வெடுப்பதற்காக, சிலர் முட்டுக் கட்டையுடன் கூடவே வருவர். சப்பரம் நின்ற உடன் முட்டுக் கொடுத்து சப்பரத்தைத் தாங்கிப் பிடிப்பர். அத னால் அவர்களை முட்டுக் கொடுப்பவர்கள், "முட்டு ஆள்" என்பர். அதில் ஈடுபடுபவர்களுக்கு சப்பரத்துக்கு முட்டுக் கொடுப்பதைத் தவிர அநேகமாக வேறு வேலை ஒன்றும் தெரியாதிருந்தது. இதன் காரணமாகவே ஒரு குறித்த விடயத்தை மீறி யோசிக்கத் தெரியா மல் ஒரே வேலையைச் செய்துகொண்டு இருப்பவர்களை "முட் டாள்கள்" என்று அழைப்பது பழக்கமாக ஆகிவிட்டது.

ஆனால், அறிவாளிக்குப் பொருத்தமான எதிர்ப்பதம் "அறிவிலி" என்பதேயாகும்.



## சிந்தனைக்கு

குழந்தைகள் குடி யிருக்கும் வீடுகள், கோவிலுக்குச் சம மாகும்



## சிரி... சிரி...


ஆசிரியர்: ஒரு தட்டில் பத்து லட்டுக்கள் இருக்கின்றன. அதில் ஐந்து லட்டுக்களை உனது தம்பியை எடுக்கச் சொல்கிறேன். மிகுதி எத்தனை லட்டுக்கள் இருக்கும்?

மாணவன்: ஒன்றுமே இருக்காது.

ஆசிரியர்: மக்கு, உனக்கு இந்தக் கணக்குக் கூடத் தெரியாத?

மாணவன்: உங்களுக்குத்தான் சேர் என் தம்பியப் பற்றித் தெரி யெல்ல!

# சின்னக் கண்ணன் செய்யும் லீலை



கண்கள் விளித்து அழைக்கின்றான்
கைகள் வீசிச் சிரிக்கின்றான்
என்னை எங்கோ அழைத்துச்சென்று
புதிய உலகுள் நுழைக்கின்றான்

அம்... மா என்று ஆரம்பித்து
அவ்... வா என்று தொடர்கின்றான்
அச்..... சா என்றே புகழ்கின்றான்
அன்னை என்னை ஈர்க்கின்றான்

சின்ன விழியால் கதைக்கின்றான்
கொள்ளை அழகாய்ச் சிரிக்கின்றான்
சிரிக்கையில் மாயம் செய்கிறான்
கொஞ்சி ரசிக்க வைக்கின்றான்

மெல்லக் குனிந்தால் சிரிக்கின்றான்
சற்றே நெளிந்தால் மலர்கின்றான்
தொட்டில் விளிம்பில் கைபிடித்து
துள்ளி துள்ளி அழைக்கின்றான்

மெல்லத் தவழ்ந்து பார்க்கின்றான்
மேலும் தவழ்ந்து திரும்புகிறான்
சின்னக் கண்ணன் செய்யும் லீலை
அன்னை எனக்கோ உயிர்ச் சோலை

யோ. கௌசி



இ.சரவணபவன்,
தரம் - 10 பி,
யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தி.




# வாழ்க்கையில் சாதிப்பதற்கு...

1. விழுந்தால் அழாதே எழுந்திரு!
2. தோற்றால் புலம்பாதே போராடு!
3. கிண்டலடித்தால் கலங்காதே மன்னித்துவிடு!
4. தள்ளினால் தளராதே துள்ளியெழு!
5. ஏமாந்தால் ஏங்காதே எதிர்த்துநில்!
6. உதாசீனப்படுத்தினால் உலராதே உயர்ந்துகாட்டு!
7. நஷ்டப்பட்டால் நடுங்காதே நிதானமாய் யோசி!
8. நோய் வந்தால் நொந்திடாதே நம்பிக்கை வை!
9. கிடைக்காவிட்டால் ஒதுங்காதேஅடைந்துகாட்டு!
10. கஷ்டப்படுத்தினால் புலம்பாதே பொறு மை யாய் இரு!





ந.யோகப்பிரியா,
தரம் - 7 ஏ,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# அன்னை உருவாக்கிய கண்டுபிடிப்பாளன்

சுட்டிச் சிறுவன் எடிசன் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தான் ஆசிரியர் அவனிடம் ஒரு கடிதத் தைக் கொடுத்து, "இதை அம்மாவிடம் கொடுக்க வேண் டும், அம்மா மட்டுமே படிக்க வேண்டும்" என்று சொல்லி யிருந்தார். இதன்படி அவனும் அந்தக் கடிதத்தை அம்மா விடம் கொண்டு சென்று கொடுத்தான். அதைப் படித்த அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. "கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?" என்று சிறுவன் கேட்டான். அதற்கு, "உங்கள் மகன் மிகவும் புத்திசாலி. அவனின் அறிவுக்கு ஏற்றளவில் இந்தப் பாடசாலை இல்லை. அதனால் எடிசனை வீட்டில் வைத்தே படிக்க வையுங்கள்" என்று எழுதியிருக்கிறது என எடிசனின் அம்மா சொன்னார். இதைக் கேட்ட எடிசன் உற்சாகமடைந்தார். ஆண்டுகள் வேகமாகக் கடந்தன. அந்தச் சிறுவன் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் உலகமே போற்றும் மகத் தான விஞ்ஞானியானான். அவருக்குப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் இருந்தன. பிற்காலத்தில் எடிசனின் அம்மாவும் இறந்துபோனார். அதன்பின் சில நாள்கள் கழித்து எடிசன் ஆராய்ச்சிக்காகப் பொருள் ஒன்றைத் தேடிக்கொண்டி ருந்தார். அப்போது, சிறுவயதில் ஆசிரியர் கொடுத்தனுப்பிய அந்தக் கடிதம் அவருடைய கையில் அகப் பட்டது. தன்னைப் பற்றி உயர்வாக எழுதியிருந்த அந்தக் கடிதத்தை மீண்டும் படிக்க ஆசைப்பட்டுப் படித்தார். "உங்கள் மக னின் மனநிலை சரியில்லை எனக் கருதுகிறோம். அவனை எங்கள் பள்ளியில் தொடர்ந்து படிக்க அனும திக்க முடியாது" என்றே அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது. அந்தக் கடிதத்தில் இருந்த வரிகள் முன்பு அவரின் அம்மா வாசித்தவை அல்ல.

அதனைப் படித்ததும் எடிசன் உறைந்துவிட்டார். இந்த விடயம் எனது சிறிய வயதில் தெரிந்திருந்தால் எந்தள வுக்கு முடங்கிப்போயிருப்பேன் என்று எண்ணியவர், தனது தாயின் செயல் இன்று தன்னை இந்தளவுக்கு உயர்த்தியிருப்பதை அறிந்து மெய் சிலித்தார். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வது மிகவும் கடினமாக இருந் தது. தன் உழைப்பையும் முயற்சியையும் பாராட்டி ஊக் கமளித்த அம்மாவை மனதார நன்றியோடு நினைத்துக் கொண்டார் தோமஸ் அல்வா எடிசன்.

**நீதி: குழந்தை வளர்ப்பின் ஒவ்வொரு அடியையும் மிகவும் கவனத்துடன் நகர்த்த வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பெற்றோர்கள் துணைபுரிந்தால் சிறப்புத் தேவையுடையோர் சாதனைகள் படைப்பர்

அ.அஜந்தன்

நிக் வியூச்



சிறப்புத்தேவையுடையவர்கள் தொடர்பாகக் கதைக்கின்ற பொழுது பொதுவாகவே நாம் சிறப்புத் தேவைக்குரியவர்களை மாத்திரமே கருத்திலெடுத்துச் செயற்படுகின்றோம். சிறப்புத் தேவையுடையவர்களுடன் முழுநேரமும் இருப்பவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் நாம் கவனிக்கத் தவறி விடுகின்றோம். தம்மில் தங்கிவாழும் சிறப்புத்தேவையுடை யவர்களைப் பராமரிப்பதில் அவர்கள் சந்திக்கும் பல்வேறு சவால்களை ஒருபோதுமே நாம் கருத்திலெடுப்பதில்லை. அதனால் சிறப்புத் தேவையுடையோரின் பராமரிப்பாளர்களுக்கு ஏற்படும் உடல், உள ரீதியான தாக்கங்களில் நாம் கவனம் செலுத்துவதில்லை. தமது ஆசைகளையும்,தேவைகளையும் விட்டுக் கொடுத்து, வாழ்வை அவர்களுக்காக அர்ப்பணித்துத் தமது கடமைகளைச் செய்கின்ற அந்தப் பெருந்தன்மைமிக்கவர்களைப் பலப்படுத்துவதும் பாராட்டுவதும் இன்றியமையாத செயலாகும்.

தமக்கு ஏற்பட்ட குறைபாட்டுக்கு சிறப்புத் தேவையுடையோர் எந்தவிதத்திலும் பொறுப்பானவர்கள் இல்லை. பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளினாலும் போர், இயற்கை இடர், விபத்து, போசாக்குக் குறைபாடு, வாழ்வின் இடையில் ஏற்படும் கடுமையான நோய்களாலுமே இவர்கள் வலுவிழக்க நேரிடுகிறது. பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்த இனமாக நாம் இருந்தபோதிலும் எம்மத்தியில் வாழும் சிறப்புத் தேவையுடையவர்களின் சுயகௌரவத்தைப் பற்றிய சிந்தையற்ற வர்களாகவே நாம் வாழமுனைகிறோம்.

### சமூகத்துக்கு வேண்டிய பொறுப்புணர்வும் கடப்பாடும்

சிறப்புத்தேவையுடையவர்களுக்கு மருத்துவம், போசாக்கான உணவு, போக்குவரத்து, சிறப்பு வசதிகளுடனான வீடு அல்லது பொதுக் கட்டடங்கள் போன்றன கிடைக்க வழி செய்வதற்கு முன்பாக அன்பு, ஆதரவு, பொது இடங்களில் சம அந்தஸ்து, முன்னுரிமை, சமூக ஆதரவு, அவர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றை உருவாக்கிக்கொடுக்கும் வேலைகள் எமக்கு உள்ளன. இவற்றில் நிதியோடு தொடர்புற்றவை ஒரு சிலவே. ஏனையவை எம்மால் இலவசமாகக் கொடுக்கக்கூடியவை. ஆனால் நிதிமூலத் தேவைகள் சில இடங்களில் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றாலும், அன்பு, ஆதரவு, அந்தஸ்து, முன்னுரிமை, சமூக ஆதரவு போன்றவற்றின் குறைபாடே அவர்களையும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரையும் மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறது.

பராமரிக்கும் குடும்ப அங்கத்தவர்களின் பொறுமை, அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை என்பன பிறரின் ஆதரவும், பாராட்டும், கணிப்பிடலும் உள்ளவரையே அவர்களுக்குள் நிலைத்து நிற்கும். இல்லாவிட்டால் அவை நாளடைவில் அவர்களை அந்நியப்படுத்திவிடும். இதனால் பெற்றோர்கள் அல்லது குடும்ப அங்கத்தவர்கள் தமது மகிழ்ச்சி, பொழுதுபோக்கு, கொண்டாட்டங்கள் என்பவற்றிலிருந்து ஒதுங்கி வாழ்கின்றனர். இதன் விளைவாக சிறப்புத்தேவையுடையவர்களைப்போலவே அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும், பராமரிப்பாளர்களையும் தனது கட்டமைப்பிலிருந்து சமூகம் வேறுபடுத்திவிடுகிறது. சிறப்புத் தேவையுடைய பிள்ளைகள் குடும்பத்தி லும், சமூகத்திலும், பாடசாலைகளிலும் தாழ்த்தப்படும்போது அந்தக் குழந்தைகளை விட உளரீதியாக அதிகம் பாதிக்கப்படுவது பெற்றோர்களும் குடும்ப அங்கத்தவர்களுமே. மற்றவர்கள் முன்னிலையில் இயலாமையால் தவித்துக் கொண்டிருக்கும் குழந்தையை விட்டுக்கொடுக்க முடியாதவர்களாக அவர்கள் படும் துன்பத்தை சமூகத்திலுள்ள ஏனையோரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### சமூகத்தின் குழந்தைகள்

சிறப்புத்தேவையுடைய அனைவரையும் சமூகத்தின் குழந்தைகளாகப் பார்ப்பது அவசியமாகிறது. சிறப்புத்தேவைக்கு உட்பட்டவர்களாக இருப்பினும் தமக்குரிய உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் அவர்கள் என்பதை நினைவில்கொள்ள வேண்டும். கல்வி, கலை கலாசாரத்தில் பங்குபற்றும் உரிமைகளையும் புறக்கணிப்பிலிருந்து முழுமையான விடுவிப்பையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.



### நிக் வியூச் எனும் தன்னம்பிக்கை

அதேபோல் பெற்றோர்கள் தமது குழந்தைகளின் இயலாமையின் தன்மையை நன்கு உணர்ந்தவர்களாக இருப்பதுடன் அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் பெற்றிருக்க வேண்டும். சாதாரண குழந்தைகளுடன் இவர்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பெற்றோரின் இயல்பு இதனால் ஏனையோரைப்போல அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்குத் தீராத வலியாக மாறிவிடுகிறது. எனவேதான் தங்கள் பிள்ளைகளின் திறன், இயலுமை போன்றன பற்றிய தெளிவான அறிவு பெற்றோர்களுக்குத் தேவை. அவர்களின் திறன்களைத் தெரிந்து வைத்திருப்பதால் அவர்களின் அந்தத் திறனை வளர்ப்பதன் மூலமாக எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும். இயலுமையை தெரிந்து கொள்வதால் அதைவிட அதிகமான எதிர்பார்ப்பு இல்லாமல் போகும். அதனால் பிள்ளையின் செயல்களில் திருப்தி காண முடியும். சமூகத்தின் பார்வை அவர்கள் பிள்ளைகள் மீது தவறாக இருப்பதாகவே எப்பொழுதும் நினைத்து வேதனைப் படாமல் பிள்ளையை சமூகம் மெச்சும் வகையில் மாற்றிக் காட்டவேண்டும். அதற் கான சந்தர்ப்பங்களையும் வலுப்படுத்தலையும் சமூகக் கட்டமைப்பிலிருந்து உள்வாங்கிக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் சாத்தியமாக்கி உலகைத் தன்பக்கம் திசை திருப்புவதற்கு சிறப்புத் தேவையுடையவரான நிக் வியூச்சின் வாழ்க்கை நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையும்.

### நிக் வியூச் எனும் ஆளுமை

கருத்தரித்த நாள்களிலிருந்து தமக்குப் பிறக்கப்போகும் குழந்தையைப்பற்றிப் பல்வேறு கற்பனைகளில் திளைத்திருந்த ஆஸ்திரேலியப் பெற்றோருக்குப் பிரசவ நாள் நெருங்கியது. மிகுந்த ஆவலுடன் எல்லாப் பெற்றோருக்கும் இருக்கக்கூடிய மகிழ்ச்சி வெள்ளத்தில் அவர்கள் மிதந்து கொண்டிருந்தனர். பிரசவித்த குழந்தையைத் தந்தையிடம் காட்டியபொழுது அவர் அந்த பிரசவ அறையை விட்டு வெளியேறி வாந்தியெடுத்தார். தாயிடம் காட்டி "இதுதான் உங்கள் பிள்ளை" என்று கூறியபொழுது "இந்தப் பிள்ளையை என்முன்னே கொண்டுவரவேண்டாம் தூரக் கொண்டு செல்லுங்கள்" என்று துரத்தினார். நான்கு மாதங்கள் பிள்ளையைத் தொடாமலேயே அழுது புலம்பினார் தாயார். அதற்குக் காரணம் தங்களுடன் ஓடி, ஆடி விளையாட ஒரு வாரிசை எதிர்பார்த்திருந்த பெற்றோருக்குப் பிறந்ததோ இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இல்லாத பாதிக் குழந்தை.

அந்தக் குழந்தைதான் இன்று உலகால் அறியப்பட்ட நம்பிக்கையின் சின்னம் நிக் வியூச். தமது குழந்தை கடவுளால் கொடுக்கப்பட்ட குழந்தை என்பதை உணர்ந்து, தமது வாழ்வில் உறுதியான நம்பிக்கையோடு அதை வளர்த்தெடுப்பது என்ற வைராக்கியத்தைத் தமக்குள் வரவழைத்துக் கொண்டனர் அந்தப் பெற்றோர். 18ஆவது மாதத்திலேயே அதற்குக் குழந்தைக்கு நீச்சலைக் கற்றுக்கொடுத்தனர். அவனது கல்வி, விளையாட்டு போன்ற அனைத்துத் துறையிலும் பக்கபலமாக இருந்தனர். அவன் பாடசாலை சென்ற காலப்பகுதியில் அவனுக்கு ஏற்பட்ட அவமானங்களும் வேதனைகளும் புறக்கணிப்புகளும் அவனை, பலமுறை தற்கொலை முயற்சியில் ஈடுபட வைத்தன. ஆனால் அவனால் தற்கொலைகூடச் செய்ய முடியாயத நிலை. வாழ்வு விரக்தியின் உச்சத்துக்குச் சென்றது. ஆனாலும் அவனுக்குக் கிடைத்த ஒரு சாதகமான விடயம் என்ன வென்றால் இடது கால் அமையவேண்டிய இடத்தில் விரல் போன்ற ஒருவித அங்க வளர்ச்சி இருந்தது. அதுவே அவனின் பலமாகவும் திகழ்ந்தது.

### நிக் வியூச்சின் தன்னம்பிக்கையும் வளர்ச்சியும்

தன்னைப்போன்றே கைகளில்லாத ஒரு மனிதர் தனது கழுத்தையும் நாடியையும் பயன்படுத்திக் 'கோல்ப்' விளையாடுவதை அறிந்துகொண்டபொழுது 13 வயதில் அவனுக்குள் ஒரு நம்பிக்கை பிறந்தது. தனது முட்டாள்தனமான தற்கொலை முயற்சிகளை எண்ணி வருந்தினான். அதன்பின் தனது குறையை எண்ணி அழுவதையோ இறைவனைச் சபிப்பதையோ அடியொடு நிறுத்திவிட்டான். கண்ணாடிமுன் நின்று பார்க்கையில் தனது உடல் சகிக்கமுடியாமல் இருந்தாலும் தனது அழகிய கண்களைப் பார்த்து சந்தோசப்படுவதாக தனக்குள் நம்பிக்கையை விதைத்தார். தற்பொழுது 24 நாடுகளிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் இவரது கருத்தமர்வுகளைக் காண்பதற்காகக் காத்துக் கிடக்கின்றனர். நீச்சல், மீன்பிடித்தல், கோல்ப், கால்பந்தாட்டம் என்பவற்றைத் தனது பொழுது



போக்காக மாற்றிய இவர், இரண்டு பட்டப் படிப்புகளை நிறைவுசெய்திருக்கிறார். அமெரிக்காவில் தற்பொழுது வசித்துவரும் இவர் துன்பத்தில் துவண்டுபோகின்றவர்களுக்கு வழிகாட்டும் நம்பிக்கை ஒளியாக மாறியுள்ளார். இதன் பின்னணியில் அவரின் நம்பிக்கையும், பெற்றோரின் அர்ப்பணிப்பும், சமூக ஆதரவும், சமூகத்தில் கிடைக்கப்பெறும் அந்தஸ்துமே முன்னின்று அவரை இவ்வளவுக்கு உயர்த்தியுள்ளன. இவ்வாறான ஒரு சமூகக் கட்டமைப்பே எமக்கும் அவசியமாக உள்ளது. பிறரில் தங்கியிருக்கும் சிறப்புத்தேவையுடையவர்களைக் கவனியுங்கள். அவர்களைப் பராமரிப்பவர்களைக் சமூகத்தில் மதிப்புள்ள மனிதர்களாகப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். அவர்களின் உள ஆரோக்கியத்தைப் பேணுவதே சிறப்புத்தேவையு டையவர்களை சமூகத்தில் தலைநிமிர்த்தி வாழவைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா

# நிபுணன்



## வழமையான அர்ஜுன் படம்

தான் செய்யப்போகும் கொலைக்கு முன்பாக அது பற்றிச் சில துப்புக்களைக் கொடுத்து தொடர்ந்து கொலைகளைச் செய்துவருகிறான் ஒரு கொலையாளி. நிபுணத்துவத்தோடு அவனைக் கண்டுபிடிக்கிறான் நாயகன். இதுவே நிபுணன்.

**கதைப் பார்வை**

மனைவி, குழந்தை, தம்பி என இனிமையான குடும்பத்தைக் கொண்ட அர்ஜுன், குற்றப் புலனாய்வுப் பொலிஸ் அதிகாரி. 'என்கவுன்டர் ஸ்பெசலிஸ்ற்'. குற்றங்களில் ஈடுபட்டு, அரசியல் தலையீடுகளால் தண்டனையிலிருந்து நழுவிச்செல்லும் சிலரைச் சுட்டுத்தள்ளும் செயற்றிட்டம் அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது. பிரசன்னாவும், வரலட்சுமியும் உதவிப் பொலிஸ் அதிகாரிகள். அரசியல் தலைவர், பெண் மருத்துவர், சட்டத்தரணி என அடுத்தடுத்துக் கொலை செய்யப்படுகின்றனர். கொலையாளியைத் தீவிரமாகத் தேடுகிறார் அர்ஜுன். இதற்கிடையில், அவருக்குப் முடக்குவாதி நோய் ஏற்படுகிறது. கை, கால் இடையிடையே மரத்துப்போய், உடல் இயக்கம் தடைப்படுகிறது. கொலையாளியைக் கண்டுபிடிக்கத் தான் முன்னெடுத்திருந்த விசாரணைகளில் இருந்து அவனுடைய அடுத்த குறி தான்தான் என்பதை உணர்கிறார். அதற்கான காரணம் என்ன? உயிரிழந்த மூவருக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? கொலையாளி யார்? அவனை அர்ஜுன் பிடித்தாரா? இல்லையா என்பதுதான் 'நிபுணன்'.

**'பளிச்' ஆகும் ஒன்றிரண்டு நிறை, குறைகள்**

தொடர் கொலையாளி யார் என்பதைப் படத்தின் இறுதிவரை கண்டுபிடிக்க முடியாமல் கதையைக் கொண்டு சென்றதில் கவனம் ஈர்க்கிறார் இயக்குநர் அருண் வைத்தியநாதன். இரசிகர்கள் அதைச் சிறிதுகூடக் கணித்துவிட முடியாதபடி அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. படம் முடிந்ததும் அந்தப் பாத்திரத்தில் நடித்த கிருஷ்ணாவின் பெயரைப் போடும் நிபுணத்துவம் நன்று! அர்ஜுனின் குடும்பத்தை அவ்வப்போது காட்டுவது, வேகமாகப் பயணிக்கும் திரைக்கதைக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. சலிப்பையும் தருகிறது. காட்சிகளின் பின்னணியில் வரும் தொலைக்காட்சி செய்திகளில்கூட கவனம் செலுத்தியிருப்பது அருமை. ஆருஷி கொலை வழக்கைப் பின்னணியாகக் கொண்டு திரைக்கதை அமைத்திருக்கிறார். ஆனால், கொலைக்கான காரணம் சினிமாத்தனமாக உள்ளது. காட்சியமைப்புகளும் நம்பும்படி இல்லை.

**கதாபாத்திரக் கட்டமைப்புக்கள்**

இது அர்ஜுனின் 150ஆவது படம். உடலையும், வசீகரத்தையும் அப்படியே வைத்திருப்பதற்கு முதலில் அவருக்குச் சபாஷ்! பொலிஸ் அதிகாரிக்குரிய கதாபாத்திரத்தில், வழக்கம்போல அர்ஜுன் கச்சிதம்! அவரது மனைவியாக வரும் ஸ்ருதி ஹரிஹரன், பொலிஸ் அதிகாரியுடைய மனைவியின் நிலை என்ன என்பதை மிக அற்புதமாக வெளிப்படுத்துகிறார். படத்தில் அர்ஜுனுக்கு அடுத்து கவனம் ஈர்ப்பது இவர்தான். கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ள பிரசன்னா, வரலட்சுமி சில இடங்களில் நகைச்சுவையையும் தெளிக்கின்றனர். படத்தின் முழுப் பாரத்தையும் தூக்கி அர்ஜுன் மீது வைக்காமல் இவர்களும் இடையிடையே தாங்கிக் கொள்ளுகின்றனர். இடைவேளை வரை ரசிகர்களுக்கு அறிமுகமே இல்லாமல், அதன் பின்னர் திடீரெனத் தோன்றும் வில்லன் கதாபாத்திரம், திரைக்கதையோடு ஒட்டவில்லை. தன் மீது மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டு எழும் நேரத்தில், "கிரிமினல்களைச் சமாளிச்சுடலாம். பிரஸ்சைச் சமாளிக்க முடியாது" என்று அர்ஜுன் சொல்வது, பொலிசாரின் எதார்த்த நிலையைக் காட்டுகிறது.

**இசை, ஒளிப்பதிவு, திரைக்கதை**

நவீனின் இசை சில இடங்களில் தேவைக்கு அதிகமாக இரைகிறது. பாடல்கள் பரவாயில்லை. அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவு நேர்த்தி. வழக்கமான விறு விறுப்பைத் தவிர்த்துக் கதையைப் புதுமையாகச் சொல்ல முயன்றுள்ளார் இயக்குநர். அவர் திரைக்கதையில் இன்னும் நிபுணத்துவம் காட்டியிருந்தால், 'நிபுணன்' நன்கு ஈர்த்திருப்பான்!




# கூட்டத்தில் ஒருத்தன்

## பரவாயில்லை ரகம்

கூட்டத்தில் ஒருவனாக இருக்கும் ஒருத்தனை ஆயிரத்தில் ஒருவனாக மாற்றுகிறது காதல்.

**கதை**

படிப்பு, தனித்திறமை, சுறுசுறுப்பு என எல்லாவற்றிலும் சராசரியாக இருக்கும் ஒரு நடுத்தர மாணவன் அசோக் செல்வன். இவர், எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும் உயர்தர மாணவி ப்ரியா ஆனந்த் மீது காதல் கொள்கிறார். அதற்காகவே, ப்ரியா ஆனந்த் படிக்கும் கல்லூரியில் சேர்ந்து, அவரைச் சுற்றிச் சுற்றி வருகிறார். "உன்னைப் பத்தி சொல்றமாதிரி ஒரு விசயம் பண்ணிட்டுவா, அப்புறம் யோசிக்கலாம்" என வெடுக்கென்று வெட்டிவிடுகிறார் ப்ரியா. மனமுடையும் அசோக் செல்வன் தற்கொலைக்கு முயல்கிறார். அப்போது, கடலில் தத்தளிக்கும் வாய்பேச முடியாத சிறுவனைக் காப்பாற்றப்போக, பிரபலமாகிறார். அதன்பிறகு அவரது வாழ்க்கையில் நிகழும் சில அசாதாரண திருப்பங்கள் அவரைக் கல்லூரியில் முதல் மாணவன் ஆக்குகின்றன. காதலும் கைகூடுகிறது. ஆனால் கூடிய வேகத்திலேயே அது உடைந்தும் போகிறது. காதல் தோல்வியால் நொறுங்கிப்போகும் அவர், மீண்டு எழுந்தாரா, இல்லையா? என்பதுதான் 'கூட்டத்தில் ஒருத்தன்'.



**கவனம் ஈர்க்கிறார் இயக்குநர்**

வழமையான தமிழ் சினிமாவின் காதல் கதைக்குள், இதழியல், வன்மம், சமூக அக்கறை ஆகிய மூன்று அம்சங்களையும் கலந்து திரைக்கதை அமைத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் தா.செ.ஞானவேல். கதைக்குள் கதை, காட்சிக்குள் காட்சி எனத் திரைக்கதையில் அடுக்குகளை உருவாக்குவதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். குடும்பத்தில், 3 குழந்தைகளில், நடுவில் பிறந்தவரான இயக்குநர், வகுப்பறையில் நடுப் பகுதியில் அமர்ந்திருக்கும் மாணவனின் உணர்வுகளை மையமாகக் கொண்டு கதை எழுதியிருக்கிறார். திரைக்கதை, வசனங்களில் அவரது புத்திசாலித்தனம் நன்கு வெளிப்படுகிறது. "சுத்தி நூறுபேரு இருக்கும்போது தனிமைய பீல் பண்ணியிருக்கீங்களா?" என்று நாயகனின் தாழ்வு மனப்பான்மையைச் சட்டெனச் சுட்டிக்காட்டும் வசனம் நல்ல உதாரணம். இறுதிக்காட்சி, முடிவிலும் புதுமையைக் கையாண்டிருக்கிறார். கடைசி 20நிமிடப் படத்துக்கு முதுகெலும்பாக அமைந்திருக்கிறது முடிவுப்பகுதி.

**கதாபாத்திரங்கள்**

கதாபாத்திரத்துக்கேற்ற முகம், நாயகன் அசோக் செல்வனுக்கு. கதைக்கேற்ற நடிப்பையும் கச்சிதமாக வெளிப்படுத்துகிறார். முகம், கண்கள், உடல்மொழி என எல்லாவற்றிலும் தன்னைச் சராசரி மாணவனாக வெளிப்படுத்துகிறார். உருமாற்றம் நிகழ்ந்துவிடும் இறுதிக்காட்சியிலும் நம்பகமான நடிப்பைத் தந்திருக்கிறார். நாயகி ப்ரியா ஆனந்த் அழகு, நடிக்கவும் செய்திருக்கிறார். தனக்குத் தரப்பட்ட கதாபாத்திரத்தை அலட்டல் இல்லாமல் வெளிப்படுத்திச் செல்கிறார். நாயகனின் நண்பனாக வரும் பால சரவணனின் நகைச்சுவைகள் சிறப்பு. "நாயும் மச்சான், நானும் உனக்கு மச்சானா?", "எப்ப நீ படிக்கிற பையனாயிட்டியோ அப்பவே என் நண்பன்கிற தகுதியை இழந்திட்ட" என்பது போன்ற வசனங்களால் திரையரங்கு குலுங்கிச் சிரிக்கிறது. தாதாவாக வருகிற சமுத்திரக்கனியின் பாத்திரம் படத்துக்குப் பெரிய பலம். தாதாவாக, நல்ல மனிதராக, நாயகனுக்கு உதவும் அண்ணனாக, வாய்பேசாத சிறுவனின் தந்தையாக நிறைவான நடிப்பைத் தந்திருக்கிறார் அவர். நாசரும் படத்தில் இருக்கிறார், நடிக்க அதிக வாய்ப்பு இல்லாத கதாபாத்திரம் அவருக்கு.

**இசை, ஒளிப்பதிவு, வீணடிப்பு**

நாயகனுக்குள் காதல் மலரும் தருணம், காதலுக்குப் பிறகு அவரிடம் தோன்றும் மாற்றங்கள் ஆகியவற்றை நிவாஸ் கே.பிரசன்னா இசையின் துணையுடன் புதுமையாகச் சித்தரித்திருக்கிறார் இயக்குநர். அதற்கு பி.கே.வர்மாவின் ஒளிப்பதிவும் கைகொடுக்கிறது. முதல் பாடலும் (ஏண்டா இப்படி, எனக்கு ஏண்டா இப்படி) அதைக் காட்சிப்படுத்திய விதமும் ரசிக்கும்படி இருக்கிறது. கதைக்கும் உதவுகிறது. ஆனால், முதல் பாதியில் உள்ள சுவாரசியமும், விறுவிறுப்பும் இரண்டாம் பாதியில் இல்லை. குடிக்கிற காட்சியும், தேவையற்ற பாடல்களும் படத்தை வீணடிக்கின்றன.

வழமையற்ற தமிழ் சினிமாவின் காதல் கதை, அத்துடன் சமூகத்தின் மீதான அக்கறை, ஏற்புடைய பாத்திரத் தெரிவு, தொழில் நுட்பம், படமாக்கம் என எல்லாம் கச்சிதம். திரைக்கதையில் தொக்கி நிற்கும் மிகைப்படுத்தல் தன்மையைச் சில இடங்களில் ரசிகர்கள் எளிதாக ஊகித்துவிடுகின்றனர். அந்தக் காட்சிகளைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், குடும்பத்துடன் பார்க்க முடிந்த நல்ல சினிமாவாக வசீகரிக்கிறான் 'கூட்டத்தில் ஒருத்தன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தும் எடிட்டிங்கும்

தி.இராஜநாயகி

ஆர்.வெங்கடேஷ்

நண்பர் ஒருவர் தான் எழுதிய கதையை என்னிடம் அனுப்பினார். ஏ4 பேப்பர் அளவில் மூன்றேகால் பக்கம். கதை நன்றாக இருந்தது. பேசும்போது, இன்னும் விரிவாக எழுதியிருக்கிலாமே, ஏன் சின்னதாக எழுதினீர்கள் என்று கேட்டேன். 600 வார்த்தைகள் லிமிட் என்றார் அவர். முன்பெல்லாம் பத்திரிகைகள் 4 பக்க அளவு என்று சொல்லுவார்கள். இப்போது வார்த்தை எண்ணிக்கை அளவுக்கு வந்துவிட்டார்கள் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். என்னால் எப்போதும் சின்னதாகக் கதை எழுத முடிந்ததில்லை. எல்லாமே பெரிய கதைகள் தான் எழுதியிருக்கிறேன்.

அதே சமயம் பத்திரிகைகளின் பக்க அளவு பிரச்சினை, மிகவும் முக்கியமான ஒன்று. அவர்களால், பல சமயங்களில் 4,5 பக்கங்கள் ஒதுக்குவது மிகவும் கஷ்டம். அந்தநான்கு, ஐந்துபக்கங்களுக்குள்ளும் இரண்டு, மூன்று ஜோக்குகள், ஒன்றிரண்டு துணுக்குகள் ஆகிய வற்றுக்கும் இடம் ஒதுக்க வேண்டும். இல்லையெனில் பக்கம் முழுவதும் ஒரே எழுத்தாக நிரம்பியிருக்கும். பார்க்கவே ரிலீஃவ் இருக்காது. அதற்காக என்னால் என் கையைக் குறுக்கிக் கொண்டு, பக்க அளவுகளுக்கு உள்ளோ, வார்த்தை எண்ணிக்கைக்குள்ளோ எழுத முடிந்ததில்லை. இதற்கு நான் ஒரு வழி கண்டுபிடித்துக் கொண்டேன். சமாதானம் தான். என் போக்கில், கதை கோரும் அளவுக்கு ஏற்ப விரிவாகவோ சுருக்கமாகவோ எழுதி விடுவேன். அப்புறம் பத்திரிகைகளுக்கு அனுப்பும் போது, அங்கே இருக்கும் துணை ஆசிரியர்களிடம் பக்க அளவுக்கு ஏற்பவேண்டியதை எடுத்துக்கொண்டு, மிச்சத்தை வெட்டி, வேண்டியதைச் செய்துகொள்ளுமாறு சொல்லி விடுவேன்.




“ எழுத்தாளர்களே நல்ல எடிட்டர்களாக இருப்பதும் உண்டு, எழுதியதை மாற்றி மாற்றி எழுதுவது ஒருவகை எடிட்டிங். பல ஆண்டுகள் பிரதியை அப்படியே வைத்திருந்து, புது வெளிச்சத்தில், புது முதிர்ச்சியோடு, மீண்டும் படித்துப் பார்த்துத் திருத்துவது மற்றொரு வகை எடிட்டிங். அசோகமித்திரன் இதில் மாஸ்டர். பல கதைகளில் ஒவ் வொரு சொல் லையும் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியிருப்பார். அதை நீக்கினால் பொருள் சிதைந்து விடுமோ என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு.

என் கதை வெட்டுப்படுவதை நான் பெரிய பிரச்சினையாகக் கருதியதில்லை. என் கதை நான் எழுதியபடி வரவேண்டும் என்றும் அடம்பிடிப்பதில்லை. வெட்டுப்பட்ட பின்பு அதைப் பற்றி வருந்தியதும் இல்லை.

பத்திரிகைகளுக்குப் பத்திரிகை, பல்வேறு தனிநபர்களின் விருப்பத்துக்கு இணங்க கதைகள் எடிட் ஆகலாம். இருவேறு எடிட்டர்கள் ஒரே முறையில் எடிட் செய்ய மாட்டார்கள். வித்தியாசம் இருக்கவே செய்யும். மேலும் கதைகளை எடிட் செய்வது என்பது மிகவும் லாவகமாகச் செய்ய வேண்டிய கலை.

முதலில் கதை படிக்கும் ஆர்வமும் பல்வேறு கதை சொல்லும் முறைகளைப் பற்றிய தெளிவும் இருக்கிறவர்கள் எடிட் செய்தால், அந்த எடிட்டிங் இன்னும் சிறப்பாக இருக்கும்.

இந்தப் பிரச்சினையே வேண்டாம் என்று பல பத்திரிகைகள் முதலிலேயே, பக்க அளவைச் சொல்லி எழுதச் சொல்லி விடுவார்கள். அல்லது அவர்கள் தம் பத்திரிகையில் கதைக்கு ஒதுக்கும் அளவைப் பார்த்தே எழுத்தாளர்கள் புரிந்து கொள்ளலாம். இன்னொரு வகை ஆசிரியர்கள் உண்டு.

கதையைத் தேர்வு செய்துவிட்டு, பக்க அளவுக்காகச் செய்யப்பட்ட எடிட்டிங்கை, எழுதிய ஆசிரியர்களிடமே படித்துக் காட்டி, ஒப்புதல் வாங்கி வெளியிடும் பழக்கம். கதை சிறப்பானதாக இருந்தால் பொறுத்திருந்து அதற்குத் தேவைப்படும் பக்கங்களை ஒதுக்கி வெளியிடுவது இன்னொரு முறை. ஆனந்த விகடனில் எனக்கு இரண்டு அனுபவமும் உண்டு. என்னுடைய பெரிய கதைகள் 8,9 பக்க அளவுக்கு விகடனில் பிரசுரமாகியிருக்கின்றன. பாலசுப்பிரமணியம் சார் எடிட்டராக இருந்தபோது, ஒரு முறை, கடைசி சில பராக்களை மாற்றிய விவரத்தைத் தெரிவித்துவிட்டு கதையை வெளியிட்டார்கள்!




எடிட்டிங்கின் இன்னொரு பரிமாணத்தை திருப்பூர்கிருஷ்ணனிடம் பார்த்திருக்கிறேன். எங்கே எடிட் செய்யப்பட்டிருக்கிறது என்று கண்டு பிடிக்க முடியாத அளவு எடிட் செய்வதில் அவர் சமர்த்தர். எழுதிய மூலப் பிரதியோடு வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதன் துல்லியம் பிடிபடும். ஒவ்வொரு பத்தியிலும் ஒவ்வொரு காட்சியிலும் அலங்காரத்துக்காக, உணர்ச்சி வெளிப்பாடாக, சிந்தனைப் பாங்காக, எழுத்தாளர்களே அறியாமல் பல உபரிச் சொற்களைச் சேர்ப்பது வழக்கம். படிக்கும்போது இந்தச் சொற்கள் கதையின் வளத்தை மேம்படுத்தும்; அதே சமயம் அது இல்லையென்றாலும் கதையின் போக்கை [illegible] குறையாது. அத்தனை சொற்களை வரிகளை மெல்ல மெல்ல உருவி, விலக்கிவிடுவது நேர்த்தியான எடிட்டிங். திருப்பூர் கிருஷ்ணன் இதை மிகவும் கவனமாகச் செய்வார்.

அது என்ன உபரிச் சொல்? எப்படி அதைக் கண்டுபிடிப்பது? எளிமையாகச் சொல்லவேண்டும் என்றால், என் கட்டுரைகளை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் பல இடங்களில் நான் அழுத்தம் தரவேண்டும் என்பதற்காகவே தான் என்ற விகுதியைப் பயன்படுத்தியிருப்பேன். அதே போல் ஏகாரச் சொற்களை நிறையப் பயன்படுத்தியிருப்பேன். அந்த, இந்த, நான் எனும் சொற்களையும் நிறையப் பயன்படுத்தியிருப்பேன். இதெல்லாம் எழுத்து வேகத்தில் வந்து விழும் சொற்கள். இதையெல்லாம் நீக்கலாம் நீக்கினாலும் வரிகள் பொருள் தரும். இதுபோல் இன்னும் எண்ணற்ற உபரிச்சொற்கள் உண்டு. உபரி வரிகள் உண்டு. எழுத்தாளருக்கு எழுத்தாளர் இது வேறுபடக்கூடும்.

ஆங்காங்கே பத்திகளை உருவி எடுத்து, அளவைக்குறைப்பது, அறுவைச் சிகிச்சை எடிட்டிங். சுலபமான எடிட்டிங் இது. என்ன ஒன்று, படிக்கும்போது கதை மான் மாதிரித் துள்ளித் துள்ளி ஓடும். எந்த ஒரு காட்சியும் மனத்தில் பதியாது. ஆழமாகப் பாதிப்பை ஏற்படுத்தாது. அதுவும் கோல் போஸ்ட்டைத் தொட ஓடும் கதைகளில் இது இன்னும் எளிது.

கோல் போஸ்ட் என்பது பல கதைகளுக்கு இறுதி பத்தி, வரி அல்லது சொல். மொத்த கதையும் அந்த ஒரு வரிக்கு இட்டுச் செல்வதைத்தான் குறிக்கோளாக கொண்டிருக்கும். இதுபோன்ற கதைகளில் இறுதி வரியில் கைவைக்காமல் இருந்தால் போதும். மேலே இருக்கும் மொத்தக் கதையிலும் நீங்கள் என்ன வேண்டு மானாலும் செய்யலாம். ஆனால், வேறு வகைக் கதை சொல்லும் முறைகள் இருக்கின்றன. கதை வாசிப்பையே அனுபவமாக மாற்றும் கதைகளில், எடிட்டிங் மிகவும் சிக்கலானது. அங்கே அறுவைச் சிகிச்சை எடிட்டிங் உதவாது.

பொரும்பாலும் அடுத்த நபருக்குத்தான் எடிட்டிங் சரியாக வரும். என் கதைகளை நான் எடிட் செய்வதை விட, அடுத்தவருடன் இணைந்து பணியாற்றும் போதுதான் பிரதி செம்மையுறும். மூன்றாவது நபருக்குத்தான் நிறைகுறைகள் பளிச்சென்று தெரியும். உலகின் பல முக்கிய எழுத்தாளர்கள், முன்னனி எடிட்டர்களுடன் இணைந்தே பணியாற்றியிருக்கிறார்கள். எடிட்டர்களின் ஆலோசனைகள் பல சமயங்களில் பிரதியை மென்மேலும் செம்மைப்படுத்தியிருக்கிறது. 'விக்ரம்சேத்'தின் 'சூட்டபிள் போய்' நாவலை இதற்கு உதாரணமாகச் சொல்லுவார்கள்.

ஆறு பதிப்பாளர்களிடம் சென்ற நாவல் அது. ஒவ்வொரு பதிப்பாளரும் அந்த நாவலில் வேலை செய்திருக்கிறார்கள். ஆலோசனைகள் வழங்கியிருக்கிறார்கள். இறுதி வடிவம் பெற்றபின் அதை வைக்கிங் வெளியிட்டது. அதன் மூலப் பிரதிக்கும், பதிப்பான பிரதிக்கும் எவ்வளவு முன்னேற்றம் என்று பின்னர் பதிப்பாசிரியர்கள் வியந்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் இது இன்றைக்குச் சாத்தியமில்லை. பத்திருபது ஆண்டுகளுக்கு முன்புகூட நடந்திருப்பதாக அறிகிறேன். பிரபஞ்சனின் 'காதலேனும் ஏணியிலே' என்ற தொடர்கதை, விகடனில் வெளியானது. விகடன் ஆசிரியரின் ஆலோசனையோடு அத்தொடர் எழுதப்பட்டதாகச் சொல்லுவார்கள்.

எழுத்தாளர்களே நல்ல எடிட்டர்களாக இருப்பதும் உண்டு. எழுதியதை மாற்றி மாற்றி எழுதுவது ஒருவகை எடிட்டிங். பல ஆண்டுகள் பிரதியை அப்படியே வைத்திருந்து, புது வெளிச்சத்தில், புது முதிர்ச்சியோடு, மீண்டும் படித்துப் பார்த்துத் திருத்துவது மற்றொரு வகை எடிட்டிங். அசோகமித்திரன் இதில் மாஸ்டர். பல கதைகளில் ஒவ்வொரு சொல்லையும் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியிருப்பார். அதை நீக்கினால் பொருள் சிதைந்துவிடுமோ என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு.

நம்ம ஊரில், 'ஒப்புநோக்குனர்களை' களை எடிட்டர்களாக நினைக்கிறார்கள். பதிப்பாசிரி யர்கள் என்ற சாதி இங்கே 'மைனாரிட்டி - கம்யூனிட்டி'. பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் மற்றும் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புகளில், எடிட்டிங்கை ஒரு பாடமாகவேனும் வைத்து இதற்கு உயிர் கொடுக்கலாம். எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கேற்ப நுண்ணுணர்வு கொண்ட எடிட்டர்களின் எண்ணிக்கை வளரவில்லை என்பது வருத்தமான விசயம்.

*நன்றி யுகமாயினி. டிசம்பர், 2009*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலோடு...!

நெடுந்தீவு மகேஷ்


"உனக்கெங்கே விளங்கப் போகுது? இன்றைய அரசியல் சூழலுக்குள் சிக்காமல் நீ முன்னதாகவே பட்டம் பெற்றுத் தகுந்த பதவியையும் பெற்று விட்டாய்! இன்று கல்விக்குள்ளேயும் எல்லாத் துறைகளிலும் ஊழலும் மோசடிகளுமே நிரம்பிப் போச்சு! அதாலை பாதிக்கப்பட்டவர்கள் என்னைப்போல வால்பிடிக்கத் தெரியாத அப்பாவிகள்தான்! அரசியலோ! ஜனநாயகம் என்ற பெயரோடு நீதிகெட்டுக் கிடக்கிறது.

அந்தப் புதிய தலைவரின் மலர்ந்த முகத்தோடு கூடிய பெரிய 'கட்அவுட்' படத்தை உயரத் தொங்க விடுவதற்குப் பலரும் முயன்றனர். அதற்காக அங்கு கூடி நின்றோரின் செயலிலே உற்சாகம் தெரிந்தது. ஆனால், அங்கு நின்றிருந்த நவநீதனிடம் அது காணப்படவேயில்லை. மனம் குழம்பியநிலையில் அந்தப் புதிய தலைவரின் 'கட் அவுட்' ஓங்கி உயர்ந்து நின்ற கோலத்தை அண்ணாந்து பார்த்தான். முன்னர் நிறுத்தப்பட்டிருந்த தோல்வியுற்ற தலைவரின் மாபெரும் படத்தை நிலத்திலே வீழ்த்திக் கிடத்தியிருந்தார்கள். அதனைப் பரிதாபமாகப் பார்த்த நவநீதனுக்கு தனது வாழ்வில் சில மனிதர்களை உயர்த்திக் காட்டுவதற்காகத் தான் ஓய்வின்றி உழைத்த காட்சிக் கோலங்கள் நினைவுக்கு வந்து ஏளனம் செய்து போயின.

தோல்வியுற்ற முன்னைய தலைவர் வெற்றிபெற வேண்டுமென்பதற்காய் ஓடிஓடிப் பலரையும் தம் வசப்படுத்த அவன் சொன்ன பொய்களும் புழுகுகளும் இப்பொழுது நினைவில் முகிழ்த்தன. அவனிடத்தே விரிந்த அந்த எண்ணங்களில் பூத்தகோபம் தணலாய்க் கொதிப்பதை உணர்ந்தான்.

நவநீதன் ஒரு கலைப்பட்டதாரி. ஆண்டுகள் பலவாகிப்போன கால ஓட்டத்தில் பலரையும் தொழுது வேண்டித் தொழில் தேடி அலைவதையே தன் தொழிலாகக் கொண்டிருந்தான். படித்தவன் வாழ்வு அரசியலாகிப்போனது என்னவோ வேதனைதான். "நாளையஉலகம் நமக்காகவிடியும்" என்று சொல்லிச் சொல்லியே மக்களிடம் வாக்குக் கேட்ட அந்த முன்னாள் தலைவரையும் தொழில் பெற்றுத் தருவோம் என்று ஆசை வார்த்தைகள் கூறிய கட்சி ஆதரவாளர்களையும் அவன் நம்பினான். அவன் பெற்ற பட்டங்களுக்கும் மேலான தகுதி இந்த அரசியல்வாதிகளின் சிபார்சு ஒன்றிலேயே உள்ளதாகப் பலரும் அவனுக்கு உணர்த்தியபோது அதுவே ஜனநாயகமாகிப்போய்விட்ட வேதனையை நினைந்து வெந்தான்.

மக்களால் வேண்டப்படாத கொள்கையை உயரப் பிடித்தும் எவ்வாறோ வெற்றிபெற்றிருந்த அந்தத் தலைவருக்குப் பின்னால் அலைந்தால் மாத்திரமே வேலையைப் பெறலாம் என்ற யதார்த்தத்தையே காலம் அவனுக்கு இப்பொழுது புரியவைத்திருக்கின்றது. அதனால் அவரின் வெற்றிக்காகவே நவநீதன் கடந்த தேர்தலில் உழைத்தான். இத்தனைக்கும் அப்பால் கல்வி என்பது அறிவைப் பெருக்கும், ஆற்றலை வளர்க்கும் என்று சொல்லப்பட்டாலும் அதனால் பெறப்படும் சான்றிதழ்களே அவன் படித்தவன் என்பதை அடையாளப் படுத்தித் தொழில் வாய்ப்பினை வழங்கும் பெறுமதியானஆவணங்களாகவும் போற்றப்படுகின்றன. அவை பரீட்சையின் முடிவுகளைப் பதிவுசெய்தகடதாசிகளே!




இன்று நேற்றா! இதுவரை எத்தனை வருடங்கள்? எனக்கென்றொரு வேலையைத் தேடி ஏறிய படிகள்! என்னைப் பார்த்து இரங்கிய முகங்கள்! எல்லாமே என்னை ஒரு நிலையான கொள்கை உடையவனாக நிறுத்தி வைக்கும் துணிவைத் தரவில்லை...

பட்டம் பெறுவதற்காகஅவன் படித்தவைகளும் மனத்திலிருத்திப் பரீட்சையில் எழுதியவைகளும் இன்று மறந்துபோகத் தொழில் ஒன்றைத் தருபவர் எவரெனத் தேடி அவரின் தயவுக்காய் அலைவதே இப்போது நவநீதனுக்குப் பழக்கமாகிவிட்டது. சிரித்தவாய் மூடாமல் கையை உயர்த்தியவாறு காட்சி தந்தஅந்தப் புதிய தலைவரை மீண்டும் ஒருமுறை விழிகளை மேலுயர்த்திப் பார்த்தான். மெல்லச் சிரித்தன அவனது இதழ்கள்! அப்பொழுது அவனது தோளில் யாரோ கை போடுகின்றனர் எனத் தெரிந்தது.

தோளில் பதிந்த கைக்குரியவரைத் திரும்பிப் பார்த்தான்

"என்னமச்சான் எப்படி இருக்கிறாய்? என்ன இதிலைநிற்கிறாய்?"

கேள்விகள் அவனது பால்ய நண்பனான சுகுணனுடையது. அவனும் ஒரு பட்டதாரிதான். ஆனால், நவநீதனைப் போல் வேலையெதுவும் இல்லாதவனல்ல! அவன் இப்பொழுது ஒருவேலையைத் தனக்கெனத் தேடித்தந்து அதனையே தனதுவாழ்வின் ஆதாரமாக நம்பி வாழ்ந்து வருகிறான். சுகுணனைக் கண்டதும் நவநீதனின் முகத்தில் ஒருமகிழ்ச்சி! பள்ளிக் காலத்துப் பழையநினைவுகள் துள்ளியெழுந்தன. அன்றையநாள்களில் படிப்புக்காக அவன் பட்ட கஷ்டங்களும் அவைசார்ந்த நினைவுகளும் கூடவே வந்துபோயின. அதற்கும் மேலாகப் பெற்றோரும் நண்பர்களும் பட்டம் பெற்ற நாளன்று அவனைப் பரவசமாகப் பாராட்டிய செய்கையை எண்ணியபோது துக்கம் தொண்டையை அடைத்தது. பதில் சொல்லத் தயங்கினான். பட்டம் பெற்றதால் என்ன பயன்? பள்ளிக்குப் போகாதவனும் பணக்காரனாகப் பெரியவனாக உலாவுகிறான்தானே! பாருங்களேன்! மனத்தில் மொய்த்தன கட்டெறும்புகள்!

"ஏன் இதிலைநிற்கிறாய்?"

சுகுணன் மீண்டும் கேட்டான்.

"ஒண்டுமில்லை மச்சான். எலெக்சன் முடிஞ்சு ரெண்டு நாள் ஆகயில்லை! அந்தப் பழைய தலைவரின்ர படத்தைத் தூக்கி எறிஞ்சிட்டாங்கள்! அதைத்தான் பார்த்துக் கொண்டு நிக்கிறன்!"

"அதுக்கேன் நீ கவலைப்படுகிறாய்?"

உள்ளத்தில் வேதனையைப் பெருக்கும் அந்த உண்மையை வெளியே சொல்வதா? விடுவதா? நவநீதன் மெல்லச் சிரித்தான்.

"அதை என்னெண்டு மச்சான் சொல்லுறது"

சிரிப்போடு வார்த்தைகளும் விழுந்தன.

"ஏன் என்ன நடந்தது?"

"இன்று நேற்றா! இதுவரை எத்தனை வருடங்கள்? எனக்கென்றொரு வேலையைத் தேடி ஏறிய படிகள்! என்னைப் பார்த்து இரங்கிய முகங்கள்! எல்லாமே என்னை ஒரு நிலையான கொள்கை உடையவனாக நிறுத்திவைக்கும் துணிவைத் தரவில்லை மச்சான்"

விரக்தியோடு நவநீதனின் வார்த்தைகள் தடம் புரண்டன. சுகுணன் மனம் குழம்பினான்.

"என்னடாப்பா சொல்லுறாய்? எனக்கொண்டும் விளங்கேல்லை!"என்றான் சுகுணன்.

"உனக்கெங்கே விளங்கப் போகுது? இன்றையஅரசியல் சூழலுக்குள் சிக்காமல் நீ முன்னதாகவே பட்டம் பெற்றுத் தகுந்த பதவியையும் பெற்று விட்டாய்! இன்று கல்விக்குள்ளேயும் எல்லாத் துறைகளிலும் ஊழலும் மோசடிகளுமே நிரம்பிப் போச்சு! அதாலை பாதிக்கப்பட்டவர்கள் என்னைப்போல வால்பிடிக்கத் தெரியாத அப்பாவிகள் தான்! அரசியலோ! ஜனநாயகம் என்றபெயரோடு நீதிகெட்டுக் கிடக்கிறது. அரசியல்வாதிகளை அண்டியே காலத்தைப் போக்குகிறவர்களுக்குத் தான் இப்ப வேலை. அதுதான்......"

என்று வார்த்தையை இழுத்துக் கொண்டே சுகுணனைப் பார்த்தான்.

"ஏன் என்ன நடந்தது?" சுகுணன் கேட்டான்.

"என்ர காலமோ என்னவோ தெரியெல்ல மச்சான். ஒவ்வொரு முறையும் நான் ஆதரிச்சு வாக்களிக்கிற வேட்பாளர்கள் எல்லாருக்கும் தோல்விதான் கிடைக்குது. போனமுறைக்கு முந்தின முறையும் இப்பிடித்தான் இந்தமுறையும் அதேமாதிரித்தான் நான் ஆதரிச்சு வேலை செய்த முந்தின தலைவர் நாயக்கா தோற்றுப்போனார் அதால இப்ப வெற்றிபெற்ற பண்டாரவிடம் இருந்து எனக்கு வேலை கிடைக்காது!" உறுதியாகச் சொன்னான்.

"அப்ப என்னடாப்பா செய்யப் போறாய்!"

"வெண்டவனுக்குப் பின்னால நிண்டாத் தான் ஏதும்கிடைக்கும். அதுதான்வெற்றித் தலைவன் பண்டாவின் புகழ்பாடிக் கொண்டு அவருக்குப் பக்கமாக நிண்டு இந்தப் புதுப் பனரைக் கட்டிப் பணிவிடைகள் செய்யிறன்' அவன் சொன்ன வார்த்தைகளைத்துயரங்கள் அலங்கரித்திருந்தன.

33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பழம்’ பெருமை இழக்கும் பழங்கள்



சேரலாதன்

யாழ்ப்பாணத்து மாம்பழங்களுக்கும் பலாப்பழங்களுக்கும் நாடு முழுவதுமே மவுசு அதிகம். மாங்காய்கள் நன்கு முற்றிய பின்னர் அவற்றைப் பறித்து வைக்கோல், வெப்பிலைகள் சகிதம் மூடிப் பழுக்க வைப்பர். இப்படியாக இயற்கையுடன் இணைந்து பழுக்கின்ற பழங்கள் சுவை மிக்கன. அவற்றிலிருந்து வீசுகின்ற நறுமணம் அவற்றை அப்போதே சுவைத்துப் பார்த்துவிட வேண்டும் என்ற அவசர உணர்வைத் தூண்டி விடும். இப்படியாகக் காலம் காலமாகப் பேணப்பட்ட பழுக்கவைக்கும் மரபால் சுவையிலும் மணத்திலும் உச்சங்கொண்டிருந்த யாழ்ப்பாணத்து மாம்பழங்களின் புகழ் நாடு முழுவதும் பரவிக் கொண்டது. தென்பகுதியில், சகோதர மொழியில் ‘யாபணய அம்ப’ என்று யாழ்ப்பாணத்து மாம்பழங்களை விளித்துக் குறிப்பிட்டுக் கூவி அழைத்து மக்களிடம் அவற்றை விற்பனை செய்கின்ற அழகே தனி. அப்பகுதியினருக்கு யாழ்ப்பாணத்தவரைப் பிடிக்கின்றதோ இல்லையோ யாழ்ப்பாணத்து மாம்பழங்களை நன்றாகவே பிடித்துவிடும்.

### கொழு, கொழு... கறுத்தக் கொழும்பான்!

கறுத்தக் கொழும்பான் மாம்பழம் அளவில் பெரிதாகக் காணப்படும். விலையும் அதிகம். இத்தகையதொரு மாம்பழத்தைத் தோல் சீவிய பின்னர் ஒரு சுமாரான அளவுடைய பாத்திரத்துக்குள் நறுக்கிப் போட்டால், அது நிறைந்து விடும். அந்த மாம்பழம் நல்ல சதைப்பிடிப்பையும் சாற்றையும் கொண்டிருப்பதோடு நறுமணமும் சுவையும் அதில் அதீதமாக ஒட்டிக்கொண்டிருப்பதையும் காணமுடியும். அதைப் பார்த்தவுடனேயே நாவில் எச்சில் ஏறிவிடும். முக்கனிகளில் மாம்பழத்துக்கு முதலிடம் உண்டு. பலா, வாழை, என்பனவற்றுக்கு இதற்கு அடுத்த இடம் தான்.

### இலங்கை - யாழ்ப்பாணம் இந்தியா - சேலம்

இந்தியாவிலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவென மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றுக்கு வெளிநாடுகளில் அதிக மதிப்பு உண்டு. இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் மாம்பழங்களுக்கு அதிக மதிப்பு உள்ளதைப் போன்று இந்தியாவில் சேலத்தில் உற்பத்தியாகும் மாம்பழங்களுக்கே மதிப்பு அதிகம். ‘மாம்பழம்’ என்று கூறினால், அங்கு சேலம்தான் நினைவுக்குவரும். அமெரிக்க அரசதலைவராகவிருந்தபோது பில்கிளின்ரன் இந்தியாவுக்கு ஒருமுறை வருகை தந்தார். அவருக்கு உயர்தரமான விருந்து அளிக்கப்பட்டது. அங்கு பரிமாறப்பட்ட மாம்பழ ஐஸ்கிறீம் அவரை வெகுவாகக் கவர்ந்து விட்டது. அவர் அதை மீண்டும் மீண்டும் கேட்டு வாங்கிச் சுவைத்தார் என்று கூறுவார்கள்.

### மாரிப் பழங்களுக்கு மரியாதை குறைவு

மாம்பழங்களுக்கு மட்டுமன்றி சுவை மிக்க பலாப்பழங்களுக்கும் புகழ் பெற்றதுவே யாழ்ப்பாணம். மஞ்சள் நிறத்தில் மணம் கொண்டிருக்கும் பலாப்பழச் சுளைகள் எவரது மனதையும் கொள்ளையடிக்கும் திறன் கொண்டன. ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே இவ்விரண்டும் சுவை மிகுந்த பழங்களாகக் கிடைக்கின்றன. மாரிகாலத்தில் கிடைக்கின்ற பழங்கள் சுவை குறைந்தன. இது பற்றி அதிகம் தெரிந்திருக்கும் உள்ளூரர் இவற்றை அதிகம் விரும்புவதில்லை. எந்தப் பொருளும் அதன் இயற்கைத் தன்மை கெடாத வரைக்குமே தனக்கான மதிப்பை அதிகம் கொண்டிருக்கும். ஆனால் வர்த்தக நோக்குடன் அணுகும்போது எந்தப் பொருளும் அதன் மதிப்பை இழந்துவிடும். புகழ் குவித்த யாழ்ப்பாணப் பழங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.

### வலிந்து பழுக்கின்றன பாவப்பட்ட காய்கள்!

தற்போது யாழ்ப்பாணத்தில் மாம்பழத்தை வாங்குவதற்கு முன் பலமுறை யோசிக்க வேண்டியுள்ளது. அந்த அளவுக்கு அவற்றின் நம்பகத்தன்மை மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. முற்றுவதற்கு முன்பாகவே மாங்காய்கள் மரத்திலிருந்து பறிக்கப்படுகின்றன. பின்னர் இவை இரசாயனங்கள் மூலமாகப் பழுக்க வைக்கப்படுகின்றன. வெளிப்பார்வைக்கு நன்கு பழுத்த தோற்றத்துடன் அவை காட்சியளிக்கின்றன. நிறத்தில் எந்த வேறுபாட்டையும் காணமுடியாது. ஆனால் முகர்ந்து பார்க்கும்போது மாம்பழ வாசனைக்குப் பதிலாக மாங்காயின் வாசனைதான் கிடைக்கும். இந்த வாசனையைக் கொண்டே அது இரசாயனங்கள் விசிறப்பட்டதில் மூர்ச்சையுடன் பழுத்த மாங்காய் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

### தயங்கி நிற்கின்றனர் வர்த்தகர்கள்

முன்பெல்லாம் தென்பகுதி மற்றும் பிற இடங்களிலிருந்து வருபவர்கள் இங்கு கிடைக்கும் மாம்பழங்களை அள்ளிச் செல்லத் தயங்குவதில்லை. ஆனால் இன்று அவர்கள் இவற்றை வாங்குவதில் தயக்கம் காட்டி வருகின்றனர். இந்த நிலை மாம்பழங்களுக்கு மாத்திரம் அல்ல. ஏனைய பழங்களின் நிலையும் இது தான். உதாரணத்துக்குப் பலாப்பழத்தையும் கொள்ளலாம். வைகாசி மாதத்தில் பலாப் பழங்கள் அதிகளவில் கிடைக்கின்றன. தென் பகுதியிலும் பலா நிறையவே பயிரிடப்படுகின்றது. ஆனால் அங்கு மக்கள் பலாச்சுளைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவற்றின் விதை களை மட்டுமே தமது தேவைக்குப் பயன்படுத்துகின்றனர்.

பலாச்சுளைகள் சுவையின்றிக் காணப்படுவதே இதற்கான காரணம்.

பலாப்பழச் சீசனின் போது குடாநாட்டுக்கு வாகனங்களில் வருகின்ற வியாபாரிகள் பலாப்பழங்களை அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். அவை தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டுத் துண்டங்களாக மாற்றப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அங்குள்ள மக்கள் இவற்றைப் போட்டி போட்டு வாங்கிச் செல்கின்றனர். வியாபாரிகளுக்கு நான்கு மடங்கு இலாபம் கிடைப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தான் மாங்காயைப் போன்று பலாக்காயையும் இரசாயனங்களின் உதவியுடன் செயற்கையான முறையில் பழுக்க வைப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் இத்தகைய பழங்கள் சுவை குறைந்தனவாகக் காணப்படுகின்றன.

இன்றைய மனிதர்கள் இயற்கையைச் சிதைப்பதற்குப் படாதபாடு படுகின்றனர். இதனால் இயற்கை தனது துய்மையை இழந்து மாசுபடுகின்றது. இதில் பழங்களும் விதிவிலக்கல்ல என்பது கசப்பான உண்மையாகும்.

# பண்டாரவன்னியன் 7



“குருவி...!”
மெல்லெனத் தழுவும்
மாலைத் தென்றலாய்
அவளின் செவி தொட்டுப் போனது
வன்னியன் குரலொலி.

தென்றல்
தீயை வளர்த்துப் போனது
“காதல் கொண்டது
கடமையை மறக்க அல்ல
உன்மீது நான் கொண்ட காதல்
தேசத்துக்கான காதல்
தேசம் இல்லையேல்,
என் காதலும் தேவையில்லை”

பூவிலும்
புயல் குடிகொள்ள முடியும்.
சுழல் காற்றிலும்
மலர் மலர்ந்திட முடியும்
குருவியின்
நெஞ்சில்
குடிகொள்ளத் தொடங்கியது
வஞ்சினம்.

“இல்லை குருவி
நீ என் இதயம் கவர்ந்தவள்
நாளைய விடியல்
எப்படி இருக்கும்
என்பதை நானறியேன்
ஒற்றன்
உரைத்தவற்றைக் கேட்டபின்
சற்றேனும்
மாசற்ற மனதுடன்
உன்னை வழிப்பனுப்ப
நினைத்தேன்.
அற்றைத் திங்கள்
ஒருபொழுதில்
நான் உனக்கு
உரைத்தவை சத்தியம்
என்உயிர் உனைச்சேரும்
நாள் வெகுவிரைவில்
நலமாய் விடியும்”
ஆற்றொழுக்காய் பேசினான்
வன்னியன்.

இடி விழுந்தாலும்
அசையாத மலையாய்
அசைவற்றுக் கிடந்தது
நாச்சியின் முகம்.

“குருவி...!
இந்தப் போரில்
ஓடும் குருதிகள்
எம் விடியலைத்
தீர்மானிக்கும்
அறுந்து வீழும்
எம்மவர்
கால்களும் கைகளும்
எங்களுக்கான
எல்லைகளை வகுக்கும்
பொங்கிடும் குருதியில்
புதிய வரலாறு
வலிகளால்
எழுதப்படும் போரில்
எம்மவர் மடியலாம்
என்னுறவுகள் மடியலாம்
ஏன்...!
நான் கூட...”
குருவியின் பூங்கரம்
வன்னியன் வாயை மூடிற்று.


“ஐயனே...!
தாங்கள் தங்கள்
இறப்பைப் பற்றிப்
பேசுதல் தகுமா ?
தங்கள் உயிர்
தங்களின் சொந்தமல்ல
இந்த மண்ணின் சொந்தம்”
“இல்லை
என் சிந்தையில் உதிப்பது
அதுவல்ல காதலி...!
கண் முன் நிகழும்
கொடூரம் கண்டு
கொதிக்காதவன்
வன்னியன் அல்ல
சிந்தையை நேர் செய்
செப்பனிடப்படும்
எதிர்காலம்
இந்தப் போர்
இறுதிப் போர்
கொல்லன் உலையில்
வேலும் வாளும்
உறங்கிக் கிடப்பதா...?
சாணை தீட்டப்பட்ட
வாளின் முனைகளில்
பகைவனின் குருதி
பூசப்படும்
மண்ணுக்கான போரில்
இன்றிருப்பதும்
நாளை இறப்பதும்
விதியின் கைகளில்
நாச்சி...!
நாளை
நான் மடிந்தால்
மண் மீட்புப் போரை
நீ வழி நடத்த வேண்டும்.
உன்
தலைமை ஏற்று
வன்னியர்கள்
வாள் எடுப்பர்”

இராம. இராகவா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தவார முகநூலில்...



■ உசிலமணி

யாழ்ப்பாணத்து முதன்மை ஊடகங்கள் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றன என்று 'பேஸ்புக் போராளிகள்' கோசமிடுகின்றனர். அந்தக் கோசங்களை அவர்கள் பக்கச் சார்பாக முன்வைக்கிறார்கள் என்ற கருத்தும் இல்லாமல் இல்லை. 'லைக்'குகளை அள்ளக் கூடிய அரசியல் கருத்துக்களைப் பதிவேற்றுவதில் மாத்திரமே அவர்கள் முன்னிற்கின்றார்கள் எண்டும் ஒரு பகுதி குமுறிக்கொண்டு இருக்குது.

கட்டாய ஆள்சேர்ப்புத் தொடர்பில் முன்னாள் புலி உறுப்பினர்களை விசாரிக்க வேண்டும் எண்டு சுமந்திரன் சொன்னதுக்குக் கத்திக் குழறிய இவர்கள், ஆயுதப் பயிற்சி பெற்ற முழு உறுப்பினர்களையும், இராணுவ விட்டோடிகளின் குற்றச்செயல்களுடன் ஒப்பிட்டுப் பேசிய முதலமைச்சர் விடயத்தில் மௌனத்தைக் கடைப்பிடிப்பதேன்...? எண்டு அந்தப் பகுதி கேட்கிறதிலை நியாயமிருக்கிற மாதிரித்தான படுகுது.



சுமந்திரன் அணிக்குச் சாவகச்சேரியில கண்டம் போல தான் தெரியுது. கடந்த வாரம், சுமந்திரன் அணியின் மாகாண சபை உறுப்பினர் சயந்தனுக்கு எதிராகப் 'பேஸ்புக் போராளிகள்' 'ஓப்பினா பேசுவமா?' எண்டொரு 'ரென்'டைக் கிளப்பியிருந்தனர்.

இந்த வாரம், சாவகச்சேரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், சுமந்திரன் 'எச்சரிக்கின்றேன்' என்று தன்னுடைய கட்சியின் அமைப்பாளரைப் பார்த்துப் பேசியது 'ரென்ட்'ஆகி விட்டது. சாவகச்சேரியும் 'பேஸ்புக் போராளி'களும் சுமந்திரனுக்குக் கண்டம் போல தான் தெரியுது.

யாழ்ப்பாணத்து வாள்வெட்டுச் சம்பவங்கள் மக்களை மட்டுமல்ல 'பேஸ்புக் போராளி'களையும் கொஞ்சம் பீதிக்கு உள்ளாக்கி விட்டிருந்தன. நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முகநூலில் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து மேய்ந்தவர்கள் வாள் வெட்டுக்களில் வாய் வைக்கவில்லை. இந்த விடயத்தில் அவர்கள் கொஞ்சம் அடக்கி வாசித்தமாதிரியே இருக்குது.



இந்த வாரமும் 'பிக்பாஸ்' விவகாரம் முகநூலில் சூடு தணியாமலே இருந்தது. 'ஓவியா ஆர்மி' என்று 'பேஸ்புக் போராளிகள்' பொங்க, பிந்துமாதவியைக் களமிறக்கி, 'ஓவியா ஆர்மி' போராளிகளை இரண்டாக உடைச்சிட்டாங்கள். 'பிக்பாஸ்' க்கு ஆரம்பத்தில இருந்த எதிர்ப்பு முகநூலில இப்ப தணிந்தே விட்டது.

ஓவியா – ஆரவ் காதலும், ஸ்நேகனின் கட்டிப்பிடி வைத்தியமும் தான் பேச்சாகிவிட்டது.

'பிக்பாஸ்' பற்றி சமூகவலைத் தளத்தில் அதிகம் பேசிக் கொண்டிருப்பது ஆண்கள்தான். இதைச் சாட்டாக வைத்து, சீரியல் பார்க்கும் பெண்களை கிண்டலடித்த ஆண்களை, தருணம் பார்த்துச் சில பெண்கள் முகப்புத்தகத்தில் இப்போது கிண்டலடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.



# குழந்தைக்கு தாய் பாலூட்டுவதை சமூகம் பாதுகாக்க வேண்டும்

■ அல்லிதேவி

ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டுவதை ஒளிப்படம் எடுத்து சமூக வலைத்தளமென்றில் பதிவேற்றியிருந்தார். இது சமீபத்தில் நிகழ்ந்திருந்தது. அந்தத் தாய் கிர்கிஸ்தான் நாட்டு அரச தலைவரின் மகள். "எனது குழந்தைக்கு எங்கெல்லாம், எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் நான் பாலூட்டுவேன்" என்பதாக அந்த ஒளிப்படத்துடன் கூடவே தனது கருத்தையும் அவர் பதிவிட்டிருந்தார். தனது குழந்தைக்கு எப்போதெல்லாம் பசி எடுக்கிறதோ அது எந்த இடமாக இருந்தாலும் இல்லையென்று மறுக்காமல் தான் பெற்றெடுத்த பிள்ளைக்குப் பாலூட்டுவேன் எனும் அர்த்தம் அமையப்பெற்றது அவருடைய கருத்து. அவருடைய கடப்பாட்டில் தவறில்லை. ஆனால் அவர் பதிவேற்றியிருந்த ஒளிப்படம் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது. பின்னர் எதிர்ப்புகள் எழுந்ததால் அவர் அதை நீக்கிவிட்டார்.

## தாய்ப்பால் வாரம், ஓகஸ்ட் 1 - 7

இந்த மாதத்தின் முதல் வாரம் முழுதும் தாய்ப்பால் வாரமாகப் பன்னாடுகளால் கடைப்பிடிக்கப்படுகிறது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதமான பல்வேறு கருத்தரங்கு, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உலகெங்கும் நடந்தேறுகின்றன. இந்த நிலையில்தான் கிர்கிஸ்தான் சம்பவம் பதிவாகியிருக்கின்றது. குழந்தையின் வளர்ச்சிக்கு முதல் ஆறு மாதங்கள் வரைக்கும் தாய்ப்பால் அவசியம் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. அபிவிருத்திகண்ட நாடுகளில் இப்படி ஆறுமாதங்கள் வரையாவது தாய்ப்பாலூட்டுவது மிகவும் அரிதாகவே இருக்கின்றது. இதற்கு அங்கிருக்கும் எம்மவர்களும் விதிவிலக்கல்ல.



தாய் ஒருவர் தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டுவதை பாலியல் கண்ணோட்டத்தில் பார்ப்பது தவறானது. அருவருப்புணர்வுடன் பார்ப்பதும் தவறு

## வெளிநாட்டுக் குழந்தை வளர்ப்பு

அண்மையில் கனடாவிலிருக்கும் எனது உறவுச்சகோதரி ஒருத்தி ஊருக்குத் திரும்பியிருந்தார். அவருடைய குழந்தைக்கு இரண்டு வயதிருக்கும். சகோதரியின் கணவரே நாள் முழுதும் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார். உணவூட்டுவதற்குப் பெரும் சிரமப்பட்டார். குழந்தைக்கான உணவுகளைப் போத்தல்கள், பைக்கற்றுக்களில் விமானத்தில் கொண்டு வந்திருந்தனர்.

"புள்ள சாப்பிடுறது சரியான குறைவு" என்று சகோதரி அங்கலாய்த்தார். "பால் குடிய மறப்பிச்சாச்சோ என்று கேட்டதற்கு, "கொடுத்தால் தானே மறப்பிக்கிறதுக்கு... அங்க பிறந்த உடனேயே பவுடர் பால்தான்" என்றார். எனது ஒன்றரை வயதுக் குழந்தை துள்ளிக் குதித்துக் கூச்சலிட்டுக் கொண்டிருந்ததைச் சகோதரியின் இரண்டு வயதுக் குழந்தை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தது. இப்படியாக வெளிநாடு சென்ற எம்மவர்களே வெள்ளைக்காரர்கள் ஆகிவிட்ட நிலையில் தான் அந்தக் கிர்கிஸ்தான் நாட்டுப் பெண்மணி, தான் ஒருபோதும் தனது குழந்தைக்குப் பால் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது என்று தான் திடநிலையிலி ருப்பதாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

## பொது இடங்களில் பாலூட்டுவதற்குத் தயக்கம்...?

ஆசிய நாடுகளில் பொதுவெளியில் தாய்ப்பால் கொடுப்பது இன்றளவும் பெண்களுக்குப் பெரிய சிக்கலாக நீடிக்கின்றது. ஆனால் விருத்தியடைந்த மேலைத்தேய நாடுகளில் இந்த நிலைமையில் ஓரளவுக்காவது முன்னேற்றம் இருக்கிறது.

எமது நாட்டில் ஒரு பொது இடத்தில் குழந்தைக்குப் பாலூட்டும் தாயைச் சில ஆண்கள் மாத்திரமன்றிச் சில பெண்களும் விசித்திரமாகப் பார்க்கவே செய்கின்றனர். பாலியல் பார்வையாக ஆண்களும் ஏதோ ஒரு அருவருப்பான செயலை அந்தத் தாய் செய்து கொண்டிருப்பதாக அங்கு நிற்கும் பெண்களும் பார்க்கும் நிலை எமது சமூகத்தில் இல்லை என்பதை மறுக்க முடியாது. இவை பொது இடங்களில் பசியெடுக்கும் குழந்தைக்குப் பாலூட்டுவதற்குத் தாய்மாரை அச்சம் கொள்ளவைக்கின்றன. அந்தப் பதற்றத்துடன் பால் கொடுக்கும்போது, குழந்தைக்கும் அது ஏற்றதாக இருக்காது.

## சமூகம் பயிற்றுவிக்கப்பட வேண்டும்

தாய் ஒருவர் தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டுவதை பாலியல் கண்ணோட்டத்தில் பார்ப்பது தவறானது. அருவருப்புணர்வுடன் பார்ப்பதும் தவறு.

பொது இடத்தில் தாய் தன்னுடைய குழந்தைக்குக் கோப்பையில் உணவூட்டினால் அதை யாரும் உற்றுப்பார்ப்பதில்லை. கவனிக்கத் தோன்றுவதில்லை. ஆனால் அவள் குழந்தைக்குப் பாலூட்டினால் பலரது பார்வையும் அவள் பக்கமே திரும்பி விடுகிறது. பிறர் உற்றுப்பார்க்காதவாறு தனது குழந்தைக்குத் தாய் பாலூட்டுவதை இயல்பாகச் செய்யும் காலம் உருவாவதற்கு எமது சமூகம் பயிற்றுவிக்கப்பட வேண்டியிருக்கின்றது. இதனால் தான் சமூக வலைத்தளத்தில் அந்தத் தாயின் பதிவைச் சமூகத்தால் சாதாரணமாகக் கடந்து செல்ல முடியவில்லை. எது எப்படி இருப்பினும் பிறந்த குழந்தை ஆரோக்கியமானதாகவும், திடகாத்தி ரமாகவும் வளர்வதற்குத் தாய்ப்பால் அவசியம். என்பதைச் சகல தாய்மார்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் தமது குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட காலம் வரைக்குமாவது நாம் பாலூட்டுவோம் என்ற உறுதியை எமது தாய்மார்களும் எடுப்பார்களாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் கவனம்!



# கொல்ல வருகிறது நீலத் திமிங்கலம்

ஜோதா நகுலதாஸ்

கணினிக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கின்றது இன்றைய உலகம். தொழில் நுட்ப வளர்ச்சி, நன்மைகள் பலவற்றைத் தந்து நிற்பதற்குச் சமமாகத் தீங்குகளையும் தந்தே நிற்கின்றது. அதில் நன்மைகள் மட்டுப்பட்டிருக்கத் தீமைகள் நீண்டு செல்வது தான் துயரமளிக்கிறது.

மென் பொருளின் சாத்தியத்தால் கணினி, அலைபேசித் திரையில் விளையாடுவதில் இன்றைய சிறுவர்களும் இளைஞர்களும் தீவிரமாக இருக்கிறார்கள். விளைவு... ஏராளம் பக்க விளைவுகள். ஆனால், அதில் புதிதாக ஒரு கொடிய பூதம் புறப்பட்டிருக்கின்றது. பக்க விளைவு களுக்கு முதற்படியாக, உடனடியாக அது தன்னை விளையாடி மகிழும் பிஞ்சுகளைக் கொன்று வருகின்றது. தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் எப்போது பார்த்தாலும் கணினியிலும் அலைபேசியிலும் விளையாடுவதில் மூழ்கிப் போய்க் கிடக்கும் பிள்ளைக ளுக்கு கல்வியும் விளையாட்டும் சீரழிவதோடு உறக்கமும் இல்லாமல் போகிறது. இப்போது உச்சக் கட்டமாக உடனடியாக உயிரையே பறித்துப் பரவுகிறது ஒரு இணையவழி விளையாட்டு. அந்த விளையாட்டு ரஷ்யாவில் மட்டும் இதுவரைக்கும் 130 பேரைக் காவுகொண்டுள்ளது. இதனால் இந்தியாவில் அண்மையாகப் 14 வயதுச் சிறுவன் ஒருவன் சாவடைந்திருக்கிறான்.

**பிக்பாஸ் = நீலத் திமிங்கலம்**

15 போட்டியாளர்களை 100 நாள்கள் வரைக்கும் ஒரே அறைக்குள் போட்டு பூட்டி, விதவிதமான செயல்களைக் கொடுத்து அதிலிருந்து வாரந்தோறும் போட்டியாளர்களில் ஒருவரை வெளியேற்றுகின்றனர். இது 'பிக்பாஸ்'. இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பவர்கள் உணர்ச்சி மிகுதியால் 'ஆர்மி' ஆரம்பித்துப் போட்டியாளர்களில் ஒருவரை ஆதரிக்கிறார்கள். பிடிக்காதவர்களைத் திட்டித் தீர்க்கிறார்கள்.

இதே பாணியில்தான், இந்த விளையாட்டிலும் போட்டியாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு, போட்டியை நடத்துபவர்கள் சொல்லும் பணிகளைக் கண்மூடித்தனமாகச் செய்கிறார்கள். 'பிக்பாஸ்' இலிருந்து வெளியேறுவதுபோல், 50ஆவது நாளில் போட்டியாளர்களை இந்த உலகத்தை விட்டே வெளியேற்றி விடுகிறது இந்த இணைய விளையாட்டு. இதில் போட்டியாளர்கள் சிறுவர்கள் என்பதால் இலகுவாகவே இதைச் செய்து விட முடிகிறது.

இந்த விளையாட்டின் பெயர் 'நீலத் திமிக்கலம்'. தன்னை விளையாடுவோரைத் தற்கொலை செய்யத் தூண்டும் விளையாட்டு இது. இதை 50 நாள்கள் விளையாட வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலைச் செய்யச் சொல்கிறது. 27ஆவது நாளன்று முதலாவதாக அது குறித்த செயலென்றைச் செய்யும்படி பணிக்கிறது. அதுவரைக்கும் வன்மமான உணர்வைத் தூண்டும் ஒலி வடிவங்களையும், காணேலிகளையும் அனுப்பி விளையாடுபவரைப் பார்க்கச் செய்கிறது. அதிகாலை 4.20மணிக்கு 'அலாரம்' வைத்து விழிக்கச் செய்கிறது. அந்த நேரம் பேய்ப் படம் பார்க்க வேண்டும், பாரந்தூக்கியில் ஏற வேண்டும் எனக் கட்டளைகளை முன்வைக்கிறது. இவற்றைச் செய்து அதை முகப்புத்தகத்தில் பகிர்ந்துகொள்ளும் வசதியையும் கொண்டிருக்கின்றது.

போகப்போக, ஊசியால் குத்திக் கொள்ள வேண்டும். கையைச் சவர அலகால் வெட்டிக் கொள்ள வேண்டும், உயரத்தில் ஏறி நிற்க வேண்டும் என அதன் பணிப்புக்கள் அபாயகரமாக மாறத் தொடங்குகின்றன. ஒரு சமயத்தில் உடனடியாகத் தற்கொலை செய்யவும் தூண்டுகிறது. உயரத்தில் இருந்து குதி, தூக்கில் தொங்கு, நெற்றியில் துப்பாக்கியால் சுடு, நீர் நிலைக்குள் குதி என்கிறது. செய்ய மறுப்பவர்களை, மிரட்டும் வகையிலும் செயலாற்றுகிறது. உனது தாய், தந்தையைக் கொன்று விடுவதாக அதைச் செய்ய வற்புறுத்துகிறது. இத்தனையையும் அது நிகழ்த்துவது சிறுவர்களிடத்தே...!

> இந்த விளையாட்டின் பெயர் 'நீலத் திமிக்கலம்'. தன்னை விளையாடுவோரைத் தற்கொலை செய்யத் தூண்டும் விளையாட்டு இது. இதை 50 நாள்கள் விளையாட வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலைச் செய்யச் சொல்கிறது. 27ஆவது நாளன்று முதலாவதாக அது குறித்த செயலென்றைச் செய்யும்படி பணிக்கிறது. அதுவரைக்கும் வன்மமான உணர்வைத் தூண்டும் ஒலி வடிவங்களையும், காணேலிகளையும் அனுப்பி விளையாடுபவரைப் பார்க்கச் செய்கிறது.

**ரஷ்யாவில் ஆரம்பம்...**

கடந்த 2013ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சேர்ந்த பிலிப் பியூடெய்க் கின் என்ற உளவியல் மாணவர்தான் இந்த விளையாட்டை உருவாக்கியிருக்கிறார். அப்போது அவருக்கு வயது 22. ஒலி பொறியியல் மற்றும் உளவியல் கற்கைகளை 3 ஆண்டுகள் மேற்கொண்டிருக்கிறார். அதன்பின்னர் ஏதோ ஒரு தவறுக்காகப் பலவந்தமாகக் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். அதன் பின்னரான காலத்தில், அந்தக் கோபத்தில், பழி வாங்கும் எண்ணத்தில், அவரால் உருவாக்கப்பட்ட விளையாட்டுத்தான் இது. இதை உருவாக்கி வெளியிட்டதற்காக அவரைக் கைது செய்து விசாரித்த போது, "வாழத் தகுதியற்றவர்களைச் சமூகத்தில் இருந்து நீக்கி சுத்தப் படுத்தும் நோக்கில் இதை உருவாக்கினேன். சிறுவயதில் தாயும் எனது சகோதரனும் என்னை அடிக்கடி தாக்கித் துன்புறுத்தினார்கள்" என்று வாக்குமூலம் அளித்திருக்கிறார். சிறுவர்களைத் தற்கொலை செய்யத் தூண்டியதாகக் குற்றம் சுமத்தி இவருக்கு நீதிமன்றம் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

ஆரம்பத்தில் ஐரோப்பிய சமூக வலைத்தளம் ஒன்றின் மூலம் இந்த விளையாட்டு பரவியிருந்தது. பின்னர் இதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. பின்னர்ளில் இந்த இணையவழி விளையாட்டைப் பதிவேற்றினார் என்று இணங்காணப்பட்டும் ரஷ்யாவில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இது ஏற்படுத்திய முதலாவது தற்கொலை 2015ஆம் ஆண்டு நடந்திருக்கிறது. 2016இல் மட்டும் ரஷ்யாவில் 16 பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள். அதன்பின்னர் வெனிசுலா, உருகுவே, ஸ்பெய்ன், சேர்பியா, சவூதி, போர்த்துக்கல், பரகுவே, கென்யா, ஆர்ஜென்ரீனா, இத்தாலி, ஜோயோர்ஜியா, கொலம்பியா, சிலி, பல்கேரியா, சீனா, பிரேசில், அமெரிக்கா என உலகம் முழுவதும் பரவி பலரைக் கொலை செய்திருக்கிறது இந்த நீலத் திமிங்கலம்.

**குழந்தைகளைப் பெற்றோர் கவனிப்பதில்லை**

நாகரிக உலகில் கூட்டுக் குடும்பங்கள் குறைந்து வருகின்றன. வேலை முடித்து வீட்டுக்கு வரும் பெற்றோர் குழந்தைகளிடம் அமர்ந்து பேசுவதில்லை. அவர்களைக் கண்காணிப்பதில்லை. குழந்தைகள், சிறுவர்கள் வெளியில் சென்று மற்றவர்களுடன் விளையாடுவதும் குறைந்து விட்டது. தொலைக்காட்சி பார்ப்பதை விட கணினியில் விளையாடுவதே அவர்களுக்கு அதிகம் பிடித்தமானதாயிருக்கின்றது. துப்பாக்கி சுடுதல், சண்டை போடுவது போன்ற வன்ம எண்ணங்களை விதைக்கும் விளையாட்டுக்களை விளையாடுவதில்தான் அவர்களும் அதிக ஆர்வமாக இருக்கின்றனர். அவர்களுக்கு சரி எது, தவறு எது என்பது தெரியாது. அவர்களைப் பயமுறுத்துவதும், அடிமையாக்குவதும் அவர்களைக் கொண்டு காரியத்தைச் சாதிப்பதும் எளிது. கணினி விளையாட்டுக்கள் அவர்களை வேறு உலகத்துக்குக் கொண்டு செல்கின்றன. அவர்கள் அதற்கு அடிமையாகிவிடுகின்றனர். இதன் விளைவுதான் சிறுவர்களின் தற்கொலை.

**பிள்ளைகளில் அக்கறை தேவை**

இதற்கெல்லாம் பெற்றோர்தான் முக்கிய காரணம். வேலைக்குச் செல்லும் பெற்றோர் குழந்தைகளுடன் செலவு செய்ய என்று தினமும் சில மணி நேரங்களையாவது ஒதுக்க வேண்டும். வீட்டுக்கு வந்து குழந்தைகளிடம் அமர்ந்து பேச வேண்டும். அவர்களுடன் விளையாட வேண்டும். குழந்தைகளின் நண்பர்களிடமும் பேச வேண்டும். குழந்தைகளின் நடவடிக்கைகளை ஒவ்வொரு நாளும் கவனிக்க வேண்டும்.

பெரும்பாலும் குழந்தைகள் செய்யக்கூடாது என்று சொல்வதையே செய்வார்கள். அதனால் குழந்தைகளுக்கு எது சரி, எது தவறு என்பதைச் சொல்லிப் புரிய வைப்பது சிரமம் தான். முக்கியமாக வீட்டில் உள்ள கணினியில் ஆபத்தான விளையாட்டுக்களில் அவர்கள் ஈடுபாடு காட்டுவதைத் தடை செய்ய வேண்டும். என்ன மாதிரியான விளையாட்டுக்களை விளையாட வேண்டும், விளையாடக்கூடாது என்பது குறித்த விழிப்புணர்வை பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# தென்கிழக்கு திசையில் இருந்து...

அனார்கலி

## நன்றாகவே புரிந்துவைத்திருக்கிறார்கள் நரி வேசத்தை...

"கிழக்கில் முஸ்லிம் ஆதிக்கம், வடக்கில் தலைமைக்குப் போட்டிகள், தமிழர்களை முஸ்லிம்களிடமிருந்து மீட்ப தற்கான போராட்டத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் இணைந்து கொள்ள வேண்டும்" இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கிறார் முன்னாள் பதில் அமைச்சரும், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான கருணா அம்மன் என அழைக்கப்பட்ட விநாயக மூர்த்தி முரளீதரன்.
அவரது இந்தக் கூற்று கிழக்கில் முஸ்லிம்களிடையே பெரும் கொதிப்பையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு மட்டுமன்றி வடக்கில் தமிழர்களும் கொதிப்படைந்துள்ளனர் என்றே தெரிகிறது. கிழக்கில் அமைதி நல்லிணக்கத்துடன் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிலவுகின்ற இன ஒற்றுமைக்குத் தூபமிடுகின்ற நச்சுக்கருத்து இது எனப்பலரும் தமது குமுறலை வெளிப்படுத்துகின்றனர்.
"அங்கிருந்து நீ செய்த முஸ்லிம்களுக்கு எதிரான கைங்கரியங்களை நாம் இன்னும் மறக்கவில்லை. வடுக்கள் மறையவுமில்லை" என மூத்த முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் கருத்து வெளியிட்டார்.
"உவரைப் பற்றி எங்களுக்கு ஒருத்தரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உவற்ற கட்சியையும் கதையையும் மினக் கெட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறீங்களே..." என்று தெரிவித்துச் சென்றார் வடக்கைச் சேர்ந்த ஒருவர்.




## சிறப்பாக நடைபெற்ற தமிழ் இலக்கிய விழா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்முனையில் நடத்திய மூன்று நாள்களைக் கொண்ட மாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தது. கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலையில் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெற்ற இந்தத் தமிழ் இலக்கிய விழாவையொட்டி மூன்று தினங்களும் கல்முனை நகரம் பெருவிழாக் கோலம் பூண்டிருந்தது. முதல்நாள் பண்பாட்டுப் பேரணி உட்பட தமிழ், முஸ்லிம்களின் பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு நிகழ்வுகள், வெகு சிறப்பாக நடைபெற்றன. இந்த விழா சிறப்பாக நடைபெற்று முடிந்தமையால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். எல்லாவற்றுக்கும் காரணமாக விருந்த கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு மக்கள் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

## முகாம் மூடப்பட்டாலும் ஓயாது குரல்

அம்பாறை மாவட்ட வேலையற்றபட்டதாரிகள் காரைதீவு விபுலானந்தா சதுக்கத்தில் முகாமிட்டு அதிலிருந்து முன்னெடுத்துவந்த கால வரையறையற்ற அறவழிப் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை 156ஆவது நாளுடன் நிறைவு பெற்றது.
எனினும் அனைத்துப் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பில் உள்வாங்கும் வரை எமது போராட்டக் குரல் ஒலித்துக் கொண்டேயிருக்குமென பட்டதாரிகள் சங்கத்தலைவர் தெரிவித்திருக்கிறார்.






## மக்களுக்கு மண்டையக் கழுவுறாராம்...!

"எமது குருதி ஒரே நிறம் தான். எல்லோருக்கும் ஒரே குருதி தான் ஓடுகின்றது. எம்மிடையே பேதமில்லை. எமக்குச் சுதந்திர இலங்கையே வேண்டும். இன, மத பேதமற்ற நாடாக இந்த நாடு திகழ வேண்டும்" கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் டபிள்.யூ.ஜீ.எம்.ஆரியவாதி கலப்பதி இவ்வாறு கூறினார்.
உண்மையான பௌத்தராக இருந்தால் ஆரியவாதி கலப்பதி இதைக் கூறுவதற்குத் தகுதியு டையவர் தான். இதைக் காவியுடுத்தியிருக்கும் ஞானசாரர் கூறுவாரா? அல்லது இங்கு வந்து மக்களுக்குப் போதிப்பதைப் போல இவர் சென்று இதை ஞானாசாரருக்குப் போதிப்பாரா...? எப்படியிருக்கிறது பேச்சு...! எவரும் என்னவும் பேசலாம்... காலம் தான் கெட்டுப் போய் கிடக்கிறதே. என்ன செய்வோம்.

## நாளை தீர்த்தம்!

அம்பாறை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற காரைதீவு மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி மகோற்சவம் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றது.
ஜூலை மாதம் 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த மகோற்சவம் நாளை ஆகஸ்ட் 7ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.
மகோற்சவம் ஆரம்பமானது முதல் தினமும் பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்துக்குத் திரண்டு வருகின்றனர்.



## தனிச் சிங்கள அரச நிர்வாகம்

கிழக்கிலங்கையின் அம்பாறை, திருமலை மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்கள் கூடிய விகிதாசாரத்தில் வாழ்ந்த வருகின்றபோதிலும் தனிச் சிங்களத்தில் அரச நிர்வாகம் இயங்கி வருவது அவர்களின் உரிமையைப் பாதிக்கும் நடவடிக்கையாகவுள்ளது என கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளருடான சட்டத்தரணி ஆரிப்சம் சுடீன் கவலை வெளியிட்டுள்ளார்.
கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவுள்ள ஆரிப்சம் சுடீனின் கவலை நியானமானது தான். இவர் இவ்வாறு கூற, முஸ்லிம் காங்கிரஸால் அம்பாறை மாவட்டத்துக்கு ஒரு தமிழரை மாவட்ட அரச அதிபராக நியமிப்பதற்கு முடியாமலிருக்கும் நிலை நீடிப்பது ஏன் என்றும் வாக்களித்த மக்கள் வினவுகின்றனர். விடை கிடைக்குமா?

## 1,700 பட்டதாரிகளுக்கு நியமனமாம்...!

கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 700 பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகக் கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். அரச தலைவர் இந்தப் பட்டதாரிகள் நியமனத்துக்கு அனுமதியளித்துள்ளார் எனவும் செப்ரெம்பர் மாத இறுதிக்குள் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கிழக்கு மாகாண தமிழ் இலக்கியவிழாவின் முதல் நாள் மாலை நடந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

## வறிய மாணவர்களுக்குச் சில உதவிகள்...

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வே.இராதாக்கிருஷ்ணனின் 65ஆவது பிறந்த தினத்தையொட்டிய நிகழ்வு ஒன்று அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசமான நற்பிட்டிமுனையில் இடம்பெற்றது. நற்பிட்டிமுனை அல் கரீம் நெசவாளர் மற்றும் கைத்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளரும் சமூக [illegible] ஏற்பாட்டில் நடந்த இந்தப் பிறந்தநாள் நிகழ்வில் 65 வறிய மாணவர்களுக்குக் [illegible] வழங்கப்பட்டன. கல்முனை ஆதார மருத்துவமனையில் வைத்திய அத்தியட்சகர் ஆர்.முரளீஸ்வரன். நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் முடிவு என்ன?

ஜெயதேவ உயங்கொட

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் (1987 ஜூலை) இந்தியத் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தியும் அரச தலைவர் ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்டு, முப்பதாண்டுகள் ஓடிவிட்டன. இடையில் இரண்டு நாடுகளின் உறவுகளையும், இரண்டு இன மக்களுக்கு இடையிலான உறவுகளையும் பாதிக்கும் எத்தனையோ வரலாற்று நிகழ்வுகளும் நடந்து முடிந்து விட்டன. இந்த ஒப்பந்தத்தின் கதையோ இந்த இரண்டு நாடுகளின் வரலாற்றிலும் முக்கிய அங்கமாக இடம் பிடித்துவிட்டது. இந்த ஒப்பந்தத்துக்குப் பிறகு இலங்கையின் அரசமைப்பு மாறிவிட்டதா...? என்று கேட்டால், இதற்கான விடை 'ஆம்' - 'இல்லை' என்ற இரண்டுமாகும்.



1987க்குப் பிறகு இலங்கையில் நடந்த முக்கியமான மாற்றம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், இராணுவ மோதலில் தோற்கடிக்கப்பட்டு மறைந்த சம்பவமாகும். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான இனப் பூசலை அரசியல் ரீதியாகவும் சட்டப்படியும் தீர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிதான் இந்திய - இலங்கை ஒப்பந்தம். இந்தியா எடுக்கும் அரசியல் முயற்சியால் இனப்பிரச்சினை தீர்வதுடன், எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் ஓட்டத்தில் பங்கேற்கவும் வாய்ப்புக் கிடைக்கும் என்று ராஜீவ் காந்தி கருதினார். ஒப்பந்தத்தின் கூறுகளும், இணைப்புகளும் இதில் மறைமுகமாக வெளிப்பட்டன.

## உடனடி நோக்கங்கள்

இந்த ஒப்பந்தம் இரண்டு உடனடி நோக்கங்களைக் கொண்டிருந்தது. தமிழ்ப் போராளிக் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு அரசியல் நீரோட்டத்தில் சேர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதன் மூலம் இனப் போரை முடிவுக்குக் கொண்டுவருவது முதலாவது நோக்கம். இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தையும், நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பையும் மாற்றியமைத்து சிறுபான்மையினர் வாழும் மாகாணங்களுக்கு சுயாட்சி உரிமையை, அதிகாரப் பகிர்வு மூலம் பெற்றுத்தருவது இரண்டாவது நோக்கம். இவ்விரு நோக்கங்களுக்கும் ஓரளவுக்குத்தான் வெற்றி கிடைத்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர பிற போராளிக் குழுக்கள் புதிய அரசமைப்புப் பாதையை ஏற்கத் தயார் என்று ஒப்புக்கொண்டன. புலிகள் இயக்கம் இந்த உடன்பாட்டை ஏற்க முடியாது என்று நிராகரித்ததுடன் இலங்கை அரசுடன் மட்டுமல்லாமல் இந்திய அரசுடனும் போரிட முற்பட்டது. இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்ட நான்கு மாதங்களுக்குள் இந்தியாவும் இந்தப் போரில் நேரடியாகப் பங்கேற்க நேர்ந்தது. இலங்கையின் உள்நாட்டு அரசியலில் எதிர்பாராதவகையில் ஏற்பட்ட திருப்பங்களையும் சரிவுகளையும் இது உணர்த்துகிறது.

2009 மே வரையில் இந்த உள்நாட்டுப் போர் நீடித்தது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு, விடுதலைப் புலிகளைப் போரில் வீழ்த்தியது. இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் என்று எல்லாத் தரப்பின் ஆசியுடனும் ஆதரவுடனும் தான் இதை நிகழ்த்த முடிந்தது. இந்த வெற்றி ஏற்படுத்திய உற்சாகத்திலும், நம்ப முடியாத வியப்பிலும் ஆழ்ந்த ராஜபக்ச, "உலகிலேயே பயங்கரவாதத்துக்கு எதிராகப் போர் நிகழ்த்தி பெறப்பட்ட வெற்றி இதுதான்" என்றுகூடப் பெருமைப்பட்டார். இந்தப் போர் முடிவால், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் அணுகுமுறைக்கு நிரந்தரமாகவும் வலுவாகவும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற முயற்சிதான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கே அடிப்படையாக இருந்தது.

இரண்டாவது நோக்கத்துக்கு அரசமைப்புச் சட்டத் திருத்தம் தேவைப்பட்டது. இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்துக்கு 13வது திருத்தம் 1987 நவம்பரில் சேர்க்கப்பட்டது. இந்தியாவில் மத்திய அரசும் மாநில அரசுகளும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் மாதிரியின் அடிப்படையில் இலங்கை மத்திய அரசு, ஒன்பது மாகாண அரசுகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு இந்தத் திருத்தம் வழி செய்தது. இந்தத் தீர்வு தங்களுடைய தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை நிறைவேற்றப் போதாது என்று கூறி விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனர். ஆனால் பிரித்தானியருடைய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பிறகு நாட்டின் பன்மைத்துவம், பல்வேறு இனப் பிரிவுகளின் உரிமைகளுக்கேற்பச் சட்டங்களை இயற்ற வேண்டும் என்ற சீர்திருத்தங் களை விரும்பாத அரசை இந்த 13ஆவது திருத்தமானது, அரசமைப்புச் சட்டப்படியாவது அதிகாரப் பகிர்வை நோக்கி நகர்த்தியிருந்தது.

## உடன்பாட்டு வாசகங்கள்

இரண்டு நாடுகளிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் இலங்கைக்கு குறிப்பிடத்தக்க வகையில், நிரந்தரமாக அளித்துள்ள பங்களிப்பு இந்த அதிகாரப் பரவல் அம்சம்தான். 1987ஆம் ஆண்டு உடன்பாட்டில் குறிப்பிடப்பட்ட கூறுகளுக்கு முக்கிய காரணம் அப்போது இருந்த அரசியல், வரலாற்றுக் கட்டமைப்புத்தான். அது உடன்பாட்டு வாசகங்களிலும் நன்கு வெளிப்பட்டது. அவையாவன:

1. இலங்கை பல்வேறு இன, கலாசாரங்களைக் கொண்ட சமூகம்.
2. தமிழர்கள் தனி நாடு கோருவதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், அரசியல் ரீதியாகத் தருவது சாத்தியமில்லை.
3. ஒற்றையாட்சி அல்லது பிரிவினை என்ற இரு எதிர் நிலைகளுக்கும் சிறந்த மாற்று மாநில சுயாட்சிதான்.
4. இலங்கையின் இன மோதல்களை அரசியல் வழிமுறைகள் மூலம்தான் கையாள முடியும் என்பவையே உடன்பாட்டுக்கான அடிப்படைகள். இலங்கையின் சிறுபான்மையின மக்களுக்கு நியாயமான அரசாட்சி, சமூகக் குறைகளும், தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆசைகளும் இருப்பதை அங்கீகரிப்பவை இந்தக் கூறுகள். இலங்கையை வலுப்படுத்தவும் அரசமைப்பு ரீதியாகச் சீர்திருத்தவும் சட்டத்திருத்தங்கள் அவசியம் என்பதை ஆளும் சிங்கள வர்க்கத்துக்கு உணர்த்த வலுவான ஒரு வெளியாள், வெளியிலிருந்து கையை முறுக்கி உடன்பாட்டைச் செய்துகொள்ள வேண்டியிருந்தது என்பது வியப்பு. அதை ஒப்புக்கொண்டு உடன்பாட்டில் கையெழுத்திட்டதுதான் ஜெயவர்த்தன நாட்டுக்கு ஆற்றிய ஆக்கபூர்வமான ஒரே ஒரு கடமை.

1987ஆம் ஆண்டு நவம்பருக்குப் பிறகு இலங்கையின் மாகாண சபை அமைப்பு முறைக்கு என்ன ஆனது? அதில் பல திருப்பங்களும் திகைப்புகளும் ஏற்பட்டன. மாகாண சபைக்கு நடந்த முதல் தேர்தலில் வெற்றி பெற்ற 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (இ.பி.ஆர்.எல்.எவ்) முதல் கூட்டணி அரசை அமைத்தது. அது தீவிர இடதுசாரி அமைப்பு. கொழும்பில் இருக்கும் இறுக்கமான, அனுதாபமற்ற, நழுவலான போக்குகளை உடைய அதிகார வர்க்கம் அந்த அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்காமல் சலிக்க வைத்தது. பிறகு அந்த அமைப்பு ஒருதலைப் பட்சமாக, சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. அதன் உறுப்பினர்கள் இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்தனர். சிங்களவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஏழு மாகாணங்களில் இந்தச் சபைகள் தொடர்ந்து செயல்பட்டன. எங்கும் அதிகாரப் பகிர்வு வேண்டும் என்ற கோரிக்கை எழவேயில்லை.

இந்தச் சபைகள், சட்டத்தின் உண்மையான நோக்கப்படியாக அமையாமல் மத்திய அரசு மற்றும் ஆளுங்கட்சியின் நீட்சியாகவே அமைந்தன. அங்கு அரசியல் ஊழலும், அரவணைப்பு அரசியலும் அதிகாரப் பரவலாக்கப்பட்டு, ஜனநாயகப்படுத்தப்பட்டது. போருக்குப் பிறகு வடக்கு மாகாணத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்த தமிழ்த் தேசியக் கூட்டணியால்கூட இந்த செயற்பாட்டுத் தன்மையை மாற்றவே முடியவில்லை. முதலமைச்சராக இருக்கும் சி.வி. விக்னேஸ்வரன் தன்னுடைய கட்சியினரின் விருப்பத்துக்கே மாறாக நடக்கிறார். வடக்கு மாகாண மக்களுக்கு பிராந்திய சுயாட்சி அளிப்பதற்கு புதிய வழி ஒன்றைக்கூட அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. 'அதிகாரப் பரவல்' என்பது உண்மையில் 'அதிகாரமற்ற பரவலாகவே' திகழ்கிறது. இது ஏன் என்று அதிகம் விவாதிக்கப்படுகிறது.

## முடிவு என்ன?

1987 ஜூலை முதல் இலங்கை அரசமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இனப் போர் முடிந்து விட்டது. ஆயுதமேந்திய போராளிகளால் அரசுக்கு ஆபத்து என்ற அச்சம் நீங்கிவிட்டது. ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) என்ற இயக்கத்தின் மூலமான ஆயுதக் கிளர்ச்சி 1989இலேயே ஒடுக்கப்பட்டுவிட்டது. ஜே.வி.பி இப்போது தன்னை வலுவான அரசியல் கட்சியாக மாற்றிக் கொண்டுவிட்டது. எதேச்சாதிகார ஆட்சிகள் வந்தன, மறைந்தன. மீண்டும் ஜனநாயக உணர்வுகளை மீட்டும் முயற்சிக்கு ஓரளவுக்குப் பலன் கிடைத்தி ருக்கிறது. இலங்கையின் எதிர்காலம் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான தொலைநோக்குத் திட்டங்களுடன் புதிய தலைமுறை அரசியல் தலைமை ஏற்பட்டிருக்கிறது.

இத்தனை மாற்றங்களுக்கும் நடுவில் ஒன்று நிலையானதாக இருக்கிறது. அரசமைப்பைச் சீர்திருத்த வேண்டும் என்ற முயற்சி கடுமையாக எதிர்க்கப்படுகிறது. இலங்கையைப் பல இன தேசமாக, பன்மைத்துவம் வாய்ந்ததாக மாற்றுவதற்கு எதிர்ப்பு வலுவாக இருக்கிறது. சீர்திருத்தங்களை மக்கள் ஆதரிக்கும் போதும், தேர்தலில் வெற்றி பெற சீர்திருத்தங்களை ஆதரிப்பதாகத் தலைவர்கள் உறுதியளித்த போதும் இந்த எதிர்ப்புகள் நீடிக்கின்றன. உடன்பாடு ஏற்பட்டு முப்பதாண்டுகள் கடந்தும் அரசமைப்பில் சீர்திருத்தத்தைச் செய்வதற்கான வேகத்தை இலங்கை இழந்து கொண்டேயிருக்கிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் விட்டுச் சென்ற முக்கிய மரபு எதுவென்றால் அதிகாரப் பரவலின் அவசியத்தை உணர்த்திய கருதுகோள்கள் மாத்திரம்தான்.

*கட்டுரையாளர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.*

*நன்றி - த ஹிந்து*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# தேர்தலோடு....!

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனுடன் கூடவே நின்றிருந்தஅந்தத் தலைவரின் ஆதரவாளர்கள் எல்லோருமே கட்சித் தலைவரின் வெற்றியைக் கொண்டாடும் மும்முரமான வேலையில் ஈடுபட்டிருந்தனர். நவநீதனும் சுகுணனின் கேள்விகளுக்கு விடை கூறியவாறு புதியதலைவருக்குப் 'பனர்' கட்டும் வேலையில் மூழ்கியிருந்தான். சூழ்ந்திருந்த அந்தப் பெரிய கூட்டத்தைப் பார்த்த சுகுணன் அங்கே சூழ்ந்திருப்போர் யாவருமே வேலை கிடைக்காத பட்டதாரிகள் என்பதைத் தெரிந்துகொண்டான். விரக்தியோடுஅவர்களைப் பார்த்தான்.

எமது அரசும், இன்றைய அரசியலும், இந்த ஆட்சிக்கு இரகசிய வாக்களிப்பு முறைமூலம் தெரிவான அரசியல்வாதிகளும் தமது பிரஜைகளுக்கு வேலை வழங்கத் தேர்ந்த தேர்வு முறைகள் ஆச்சரியமானவையல்ல. இந்தத் தேர்தலில் தம்மை வெளிப்படையாக ஆதரித்துத் தமக்கே வாக்களித்தோர் பட்டியலிலிருந்துதான் அரசியல்வாதிகளால் தொழில் வாய்ப்புக்க[illegible]க்கானோர் தெரிவுசெய்யப்படுகிறார்கள். அ[illegible]னாலேதான் கொள்கைக்கும் நீதிக்கும் புறம்பாக நின்று தேர்தலைப் பார்த்தான் நவநீதன். அவன் படித்தவைகளுக்கும் அப்பால் இந்தப் பச்சோந்தி அரசியல்வாதிகளின் பக்கத்தில் நின்றால்தான் வேலை, வாழ்வு எல்லாமே வந்துசேரும். இன்றைய அரச நிறுவனங்களிலெல்லாம் ஊழல், ஊழல் என்கிறார்களே. தரங்கெட்ட, தகுதியற்ற நியமனங்கள் நிகழ இவைதாம் காரணங்களோ! நான் தனுகுதியுடையவன் என்பதை எந்த வகையிலும் எடுத்துணர்த்தி எதுவுமே நடக்கப்போவதில்லை! இந்த அரசியல்வாதிகளின் பின்னேளங்கள் அனைத்துக் கௌரவத்தையும் அடகுவைத்துத்தான் தொழில் பெறவேண்டுமென்பது எங்களின் விதியாகிப் போனதோ! நவநீதன் கலங்கினான்.

புதியதலைவரின் 'கட்டவுட்'உயரத்தில் கட்டப்பட்டது. அண்ணாந்து பார்த்த நவநீதனின் [illegible]ந்த எண்ணங்களுக்குள் இந்தப் புதிய ஆட்சி நிலைக்க வேண்டும் என்றஆதங்கம்! [illegible]ன்று முழுவதுமாகத் தலைவரின் அலுவலக வாசலில் தவம் கிடந்தான். தனது ஆதரவு தலைவருக்குத்தான் என்பதை உறுதி செய்வதன்



மூலமே தலைவரிடத்தில் நவநீதன் நம்பிக்கைக்குரியவனாக முடியும் அதன் பின்பாகத்[illegible]ான் பட்டதாரியான தனக்கு ஒருதொழிலைப் பெற்றுத் தருமாறு தனது விருப்பை முன்வைக்க முடியும். தலைவரின் பார்வையில் நவநீதன் பலமுறை தோன்றினான். வீட்டுக்குப் போனபின்னரும் தனக்கொருவேலையைத் தலைவர் மூலம் பெற்றுவிடலாம் என்ற கனவுகள் அவனது தூக்கத்தைக் குலைத்தன. விடிந்ததும் அவன் பத்திரிகையை விரித்தபோது கட்சிமாறிப் போனது. "ஊழல் மேசடியால் அரசு கவிழ்ந்து போக, அடுத்த தேர்தலுக்கு முன்அறிவித்தல்" செய்திகள் அவனது கண்களை உறுத்தின.

உற்சாகம் ஒடுங்கிப்போனது. ஜனநாயகம், மக்கள் ஆட்சி என்றெல்லாம் காது கிழியக் கத்திச் சொன்னாலும் ஊழல் ஒழியாதவரை உருப்படியாக எதுவுமே நடக்கப் போவதில்லை. கட்சிகள், கொள்கைகள் அனைத்தையும் கடந்து காசும் பொருளும் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டதாகப் பேசிக் கொண்டார்கள். நவநீதன் போன்ற பட்டதாரிகள், வேலை ஒன்றைத் தேடுவதற்கு மீண்டும் வழியொன்று காண வகையற்றவர்களாக இவர்களுக்கு வாக்களிப்பதைத் தவிர்ப்பதா? வாக்களிப்பதா?

அரசியல்வாதிகளின் எல்லா வாக்குறுதிகளும் தேர்தலோடு...! மறைந்து போயின.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 483

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | | 4 |
| | ■ | | ■ | 5 | | ■ | |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | ■ |
| | ■ | 9 | | ■ | 10 | | 11 |
| ■ | 12 | | | | ■ | 13 | |
| 14 | | ■ | | ■ | ■ | ■ | |
| | ■ | 15 | | ■ | 16 | 17 | |
| 18 | | | ■ | 19 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..................................................................

கையொப்பம்:......................................................

**இடமிருந்து வலம்**

1. மலை உச்சி
3. அரண்மனை
5. நட்சத்திரம்
6. மயக்கமூட்டும் பானம்
7. கவர்ந்து கொள்
9. ரணம்
10. ஒத்தாசை
12. அரசர் தலையில் இருப்பது
13. பகைவன்
14. பசுவில் இருந்து (பால்) எடு
15. சூரியன் உதிக்கும் வேளை
16. அறைகூவல்
18. சாதனை படைப்போருக்கு வழங்கப்படுவது
19. விருந்தாளி

**மேலிருந்து கீழ்**

1. ஒரு ராசி
2. துப்பாக்கியில் இருந்து வெளிப்படுவது
3. வீட்டு வளர்ப்புப் பிராணி ஒன்று
4. சாரத்துக்கு இந்தியாவில் வழங்கும் பெயர்
5. இதில் வைத்த வெண்ணெய்யை கிருஷ்ண பகவான் திருடித் தின்றதாகக் கூறுவர்
7. களஞ்சியம்
8. கணவனை இழந்தவள்
9. நுழை
11. பிளவு
12. ஞாபகத்திலிருந்து அகற்று
14. உபகரணம்
15. கேட்பதற்கு உதவும் உறுப்பு
16. சூழற்சி
17. முறைப்பாட்டுக்காரன்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால்பரிசுக்கும்பாராட்டுக்கும்உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 481 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) வேதம் (3)கிசுகிசு (6)கறி (7)பழமை (8)கயமை (10)அளம்(11)மையல் (12)கரம் (13)புயல் (14) தம் (15)அகம் (17) மகிழ் (18)கரு (19)செதில் (20) தண்டி

**மேலிருந்து கீழ்**
(1)வேகம் (2)தறி (3)கிழமை (4)சுமை (5)சுகி (7)பயம் (8)களம் (9)கயல்(10)அரம் (11)மையம் (12) கதவு (13)புகழ் (15)அகில் (16) குருடி (17)மதி (18)கண்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.483**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (16.08.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 481 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ர.சுபாங்கன்,
பவளம் கடையடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**2 ஆம் பரிசு**
திருமதி சு.விமலாதேவி,
குடமியன், வரணி

**3 ஆம் பரிசு**
க.சந்திரசிறி,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

**4 ஆம் பரிசு**
செல்வி வைஸ்ணவி ஶ்ரீரங்கன்,
வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை.

**5 ஆம் பரிசு**
த.நிர்மலம்,
இல. 2, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

கே.எஸ். சிவஞானராஜா,
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

செல்வி.பொ.சிவகாமி,
இலக்குமிபதி, அம்பிகாவத்தை வீதி,சங்கானை

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

சொற்சிலம்பம் போட்டி இல.483இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.08.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 481 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலித்தீன் விழ பனை ஓலை சிரிக்கட்டும்!



ஸ்டோ ஸ்வாமி

பொலித்தீன், றெஜிபோம்களுக்குத் தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொலித்தீன் உள்ளிட்ட மேலும் சில இரசாயன பல்பகுதியங்களுக்குத் தடையிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பொலித்தீன் பைகள், உணவு சுற்றப் பயன்படும் பொலித்தீன் மென்தாள், 'பொலிஸ்ரர்' இனாலான உணவுக்காப்புப் பெட்டிகள் என்பன இந்தத் தடைக்குள் அடங்குகின்றன. மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை விதித்திருக்கும் இந்தத் தடை, அரச தலைவர் மைத்திரிபால, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் காப்பு என்னும் தோரணையில் பொலித்தீன் பாவனையை ஒழிப்பதற்கும் குறைப்பதற்குமென எடுத்திருந்த நடவடிக்கைகளின் எதிரொலியாகும். பொலித்தீன் சார் பொருட்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் தடை வரவேற்புக்குரியது. மெச்சத்தக்கது. ஆனாலும், பொலித்தீனுக்கான மாற்றீட்டுப் பொருள்கள் பற்றிச் சரியான அளவில் மக்களுக்கு அறிவிக்கப்படாமை, தடை நடைமுறையாவதன் வினைத் திறனை கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.

## வடக்குக்கு வரப்பிரசாதம்!

ஒப்பாரும் மிக்காருமற்ற இடத்தை வகிக்கும் பொலித்தீனை ஒரு இரவில் தடைசெய்து திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடி நிலையை வெற்றிகண்டு விடலாம் என்பது ஒருவகை பகல்கனவாகும். ஆனால், பொலித்தீன் சார் பொருள்களால் சூழலுக்கு ஏற்படும் கெடுதி பற்றி அறிவூட்டுவதற்கும் அதற்கான மாற்றீடு தொடர்பான சிந்தனையைத் தூண்டுவதற்கும் நடவடிக்கைகள் அவசியம். இலங்கையில் பாவனையிலிருக்கும் பொலித்தீன் சார் பொருள்களுக்கான தடை, வட பிரதேசத்தவருக்கு ஒரு வகை வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது எனலாம். அதைச் சரிவரப் பயன்படுத்துவதில் காட்டப்படவேண்டிய ஆர்வம் எம் அனைவருக்கும் உரித்தானது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களுக்குப் பதிலாக, இயற்கையுடன் நட்புறவாக, முன்பு பாவனையிலிருந்து தற்போது வழக்கிழந்து வரும் பொருள்களை மீளவும் மெருகேற்றிச் சந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பை அகலத் திறந்திருக்கிறது பொலித்தீன் உள்ளிட்ட பொருட்களுக்கான தடை. பொலித்தீனுக்குப் பதிலாக எம்மூர் விளைபொருள்களை மாற்றீடாகக் கொண்டு அவற்றின் சந்தைக்கேள்வியை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்பும் இதனால் எமக்குக் கிடைக்கின்றது. வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள் தமது வருமான மட்டத்தை அதிகரித்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் அவர்களது கையில் திணிக்கப்படுகிறது. அதனை முறையாகவும் சரியாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்திக் கொள்வது அவரவரைப் பொறுத்தது.

## பனைவளங்கள் அதிகம் பயன்தரும்

பனையோலை மற்றும் வாழைநார் சார் பொருள்களைப் பொலித்தீன் பொருள்களுக்குப் பதிலாகப் பாவிப்பது ஊக்குவிக்கப்படவேண்டியிருக்கிறது. இனிவருங்காலங்களில் அவை சார் உற்பத்திகள் உள்ளூர்ச் சந்தைகளிலும் வெளியூர்ச் சந்தைகளிலும் கிடைப்பதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை எடுப்பதும் இயற்கையுடன் சிநேகிதமான பொருள்களின் பால் மக்களின் கவனத்தை ஈர்ப்பதும் நடைமுறைக்கிட வேண்டியிருக்கிறது. அந்த வகையில் பனைவளத்தின் மீது நாம் அதிக கவனம் செலுத்துவது பொருத்தமானது.

2012ஆம் ஆண்டு தரவொன்றின்படி நாட்டில் 11 மில்லியன் பனைமரங்கள் இருப்பதாகப் பதிவாகியிருக்கின்றது. அதில் 3.5 மில்லியன் பனைமரங்கள் யாழ். மாவட்டத்திலும் பிறிதொரு 3.5 மில்லியன் பனைமரங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது. மாற்றீடுகள் பற்றி அதிகம் கவனம் செலுத்தாது பொலித்தீன் தடைகள் அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தச் சர்ந்தர்ப்பத்தில், பனைகள் நிறைந்துள்ள வடபகுதிக்கே பனையோலை மற்றும் பனை சார் பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கான பெரிய வேலைத்திட்டம் ஒன்று பொறுப்புடையதாகியிருக்கின்றது. பொலித்தீன் தடையால் ஏற்படவிருக்கும் பொலித்தீன் பைகள் மற்றும் கொள்கலன்களுக்கான கேள்விகள் அவை இல்லாத பட்சத்தில் பனையோலை மற்றும் பனைசார் பொருள்களாலேயே நிரப்பப்பட வேண்டும்.

## யார் செய்ய வேண்டும்?

பனைசார் உற்பத்திகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மனித வளம் மற்றும் மூலப் பொருள் வளம் வடக்கில் அதிகம் இருக்கிறது. அது இலாபமீட்டத் தக்க வகையில், மக்கள் பயனடையுமாறு சரியான முறையில் ஒழுங்கமைக்கப்படவேண்டும். கைதடியில் அமைந்திருக்கும் பனை ஆராய்ச்சி நிலையம், பனை அபிவிருத்தி சபை, யாழ் பல்கலைக்கழக விவசாய, விஞ்ஞான பீடங்கள், வடமாகாண சபையின் விவசாய, சுற்றுச்சூழல் அமைச்சு, மத்திய அரசின் விவசாய, சுற்றுச்சூழல் அமைச்சு, கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிக்கான அமைச்சு என்பவற்றோடு சந்தைப்படுத்தலை துரிதப்படுத்தும் வகையில் தனியாரின் கூட்டுறவும் பெறப்படவேண்டும்.

## கண்காட்சிகள் ஊக்குவிக்கப்படவேண்டும்!

கண்காட்சிகள் வெறுமனே கற்பகச்சோலைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவோ நல்லூர் விழாக்காலக்கொட்டகையை அண்டியதாகவோ மட்டும் நின்றுவிடக்கூடாது. உள்ளூர் மற்றும் பன்னாட்டு கொள்வனவாளர்களை கவர்வதைக் கருத்தில்கொண்டு மேல்மாகாணம் உள்ளிட்ட பிரதேசங்களில் இத்தகைய பொருள்கள் சந்தையில் கிடைப்பதை, அறிமுகமாகியுள்ளதைத் தெரியப்படுத்தும் வகையில் கண்காட்சிகள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

ஆரம்ப காலத்தில் புழக்கத்தில் இருந்து பின்னர் பொலித்தீன் பொருள்களின் ஆக்கிரமிப்பால் வழக்கில் இல்லாது போன பனையோலை சார் பாவனைப்பொருள்களுக்கு கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் இலவச அறிமுகம் ஒன்றைக் கொடுப்பது நல்லது. ஆனால் அது அரசின் ஆசீர்வாதத்துடன் அமையுமானால் அதிலிருந்து மிகச்சிறந்த பலனை எதிர்பார்க்கலாம். அதிக விற்பனையுடன் இயங்கும் பல்பொருள் சந்தை வலையமைப்புக்கள், கூட்டாண்மை சமூகப்பொறுப்பு நடவடிக்கைகளாகத் தமது வாடிக்கையாளர்களுக்குமீள்பாவனையை ஊக்குவிக்கும் வகையில் பனையோலைப்பைகளை வழங்குவார்களாயின் அதுவும் வரவேற்புக்குரியதே.

## கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களின் வகிபாகம்

பொலித்தீனால் எதிர்கொள்ளப்படும் முதன்மைப் பிரச்சினை, அது பாவனையின் பின்னர் பல காலங்களுக்கும் உக்கிப்போகாமலிருந்து சூழலைச் சிதைப்பதே. பனையோலை உற்பத்திகளுக்கான முதன்மைச் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவும் இதுவேதான். தவிரவும் பனையோலையில் வேறுசில குணாதிசயங்கள் மறைந்திருந்தால் அவை கண்டறியப்பட வேண்டும். அது சார்ந்த ஆய்வு முயற்சிகளும் வேண்டும்.

குறிப்பாக பனையோலைப் பதப்படுத்தலில் சூழலுக்குச் சார்பான புதிய தொழிநுட்பங்கள் புகுத்தப்படுமிடத்து, குறித்த மறை குணாதிசயத்தைக் கண்டறிய முடியும். பனையோலை மாத்திரமின்றி பனைநார், வாழைத்தண்டு, நார், கமுகம் மடல் என்பனவும் பொலித்தீன் பாவனைக்குப் பதிலாக இயற்கை பிரேரிக்கும் பொருள்களாகும்.

திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் தோல்வி கண்டுள்ள இலங்கை, பொலித்தீன் உள்ளிட்ட பொருள்களுக்குத் தடையை அறிமுகம் செய்திருந்தாலும் மாற்றீடு ஒன்றுக்கான உபாயங்கள் எதையும் தெளிவாக விபரிக்கவில்லை. பொலித்தீனுக்கான எல்லா அம்சங்களையும் கொண்டிராத போதிலும் பொலித்தீன் வகித்த பாகத்தை சூழலுக்குப் பாதகமில்லாத வகையில் நிரப்புவதற்கு எம்மூர் பனையோலைக்கே அதிக தகுதி இருக்கிறது. தவிரவும் பொலித்தீன் பொருள்களுக்கும் பனையோலைப் பொருள்களுக்கும் இதுவரை நிலவி வந்த பணிப்போர்பனிப்போட்டி, போட்டித்திடலிலிருந்து பொலித்தீனை விலக்குவதன் மூலம் இல்லாமல் செய்யப்படப் போகிறது.

கல்விமான்களும், அரசியல்வாதிகளும், மண் பற்றுடையவர்களும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பொலித்தீன் எனும் பூனைக்குச் சரியான முறையில் மணியைக் கட்டிவிடவேண்டும். அவ்வாறு நடப்பின், தமிழர்களின் பனைசார் பொருள்களை நிரப்பியவண்ணம் வெளியிடங்களை நோக்கிச் செல்வதற்குப் பாரவூர்திகள் வடபுலத்தில், ஏ9 வீதியில் அணிவகுத்துச் செல்வதைக் காணும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

> பொலித்தீனுக்குப் பதிலாக எம்மூர் விளைபொருள்களை மாற்றீடாகக் கொண்டு அவற்றின் சந்தைக் கேள்வியை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்பும் இதனால் எமக்குக் கிடைக் கின்றது. வறுமைக் கோட்டுக்குட் பட்டவர் கள் தமது வருமான மட்டத்தை அதிக ரித்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் அவர்களது கையில் திணிக்கப்படுகிறது.



காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!

எம்.ஐ.முபாறக்



## அம்பாந்தோட்டை துறைமுகமும் அமைச்சர்களின் அடிபாடும்...



அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கும் அரசின் திட்டத்தை எதிர்க்கட்சிகள் எதிர்த்தன. அது மட்டுமல்லாமல் ஆளுங்கட்சியும் எதிர்த்தது. இதனால் அரசுக்குள் பிளவும் வந்து சேர்ந்தது.

இது தொடர்பான ஒப்பந்தம் கடந்த வாரம் அமைச்சரவைக்கு வந்தபோது அமைச்சர்களிடையே பெரும் களேபரமே ஏற்பட்டு விட்டது. அரச தலைவரையும் தலைமை அமைச்சரையும் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போல் நடந்துகொண்டனர் சில ஆளுங்கட்சி அமைச்சர்கள்.

இந்த ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ச,

"இது முறைகேடானது. துறைமுக அதிகாரச் சட்டத்தின்படி துறைமுகத்தை விற்கவோ, குத்தகைக்கு விடவோ முடியாது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கும் திட்டம் வர்த்தக ரீதியான ஏற்பாடு அல்ல. அரசியல் ஏற்பாடாகும். இந்தத் துறைமுகத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை சீனாவுக்கு உண்டு. இதனால் நாம் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் பகைத்துக்கொள்ள வேண்டிவரும். 99 வருடங்களுக்குத் துறைமுகத்தைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் எமது நான்கு தலைமுறைகள் இதிலிருந்து விலகியே இருக்க வேண்டி வரும்.

கொழும்புத் துறைமுகத்தை நாடுகின்ற கப்பல்களில் 90 சத வீத கப்பல்கள் நின்றுவிடும். இதனால் நாம் பொரிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி வரும்" என்றார்.

விஜயதாசவின் கருத்தால் ஆத்திரமடைந்த மங்கள சமரவீரவும் சரத் அமுனுகமவும் விஜயதாச மீது எரிந்து வீழுந்தனர். "நீங்கள் எதிர்க் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகிறீர்கள்" என்று அமுனுகமவும், "நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் நவீனமாகச் சிந்தியுங்கள்" என்று மங்களவும் நச்சரித்தனர்.

இன்னும் பல அமைச்சர்களும் விஜயதாசவுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். அந்த நேரம் சம்பிக்க ரணவக்க பாய்ந்து வந்து விஜயதாசவுக்குப் பக்கபலமாக நின்றார்.

"விஜயதாசவின் கூற்றில் எந்தத் தவறும் இல்லை. அவர் கூறுவது சரி. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்குவதன் மூலம் நாம் பன்னாட்டு மட்டத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும். பூகோள அரசியல் பற்றி எதுவும் தெரியாமல் பேசாதீர்கள்" என்று கடிந்தார்.

சம்பிக்கவின் நிலைப்பாட்டை சஜித் பிரேமதாச எதிர்த்தார். அவர் "இந்தத் திட்டம் மூலம் அம்பாந்தோட்டை அபிவிருத்தி அடையும்" என்றார்.

பல மணி நேரங்களாக அமைச்சர்களின் வாக்குவாதம் நீடித்தது. இடையில் குறுக்கிட்ட தலைமை அமைச்சர் "சீனாவுக்கு வழங்க வேண்டிய கடனை அடைப்பதற்கு இதைத் தவிர சிறந்த வழி இல்லை. இதனால் எமக்கு நன்மையே அன்றி தீமை இல்லை" என்றார்.

எல்லாவற்றையும் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருந்த அரச தலைவர் இப்போது மூக்கை நுழைத்தார். "இதற்கு நான் அனுமதி வழங்குகிறேன். ஆனால், இதை நாடாளுமன்றில் விவாதித்துச் சிக்கலான சரத்துக்கள் திருத்தப்படவேண்டும்" என்றார்.

அமைச்சரவைக் கூட்டம் முடிந்தது. வெளியில் வந்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவைச் சில அமைச்சர்கள் சூழ்ந்து கொண்டனர். "நாட்டுக்குத் தீங்கான இந்தத் திட்டத்தை நிறைவேற்றவே என்னிடம் இருந்து துறைமுக அமைச்சைப் பறித்து மகிந்த சமரசிங்கவிடம் கொடுத்தனர்" என்று மிகவும் மனவேதனையுடன் கூறி நின்றார் அர்ஜுன. சூழ நின்ற அமைச்சர்கள் "சரி என்னதான் நடக்குதென்று பார்ப்போம்" என்று கூறிவிட்டுக் கலைந்து சென்றனர்.

## ஊர் சுற்றி திரிவதில் மகிந்த கடும் பிசி



எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதில்லை என்று குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்படுவதுபோலவே முன்னாள் அரச தலைவர் மகிந்தவுக்கு எதிராகவும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

நாடாளுமன்றில் மிக முக்கியமான விவாதங்கள் இடம்பெறுகின்ற போதெல்லாம் மெல்ல நழுவிவிடுவார் மகிந்த. வாக்களிப்புகளிலும் கலந்துகொள்ளமாட்டார்.

விவாதங்களில் கலந்துகொண்டால் அரசு கேட்கும் கேள்விகளுக்கு பதில்கூற முடியாமல் போகும் என்பதே இந்த நழுவல்களுக்கான உண்மையான காரணமாகும். ஆனால், மகிந்த அணி கூறுவதோ வேறு ஒரு காரணம். மகிந்த நாடுபூராகவும் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக ஊர் ஊராகச் சுற்றித் திரிவதுதான் இதற்குக் காரணமாம்.

*"அப்படியா... திரும்பும் திசையெல்லாம் அவருடைய கூட்டங்கள் தானே நடக்கின்றன. உண்மையாகவே நாங்க நம்பிட்டோம்."*

## ஐ.நா பிரதிநிதியைப் புரட்டி எடுத்தார் நீதி அமைச்சர்



மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்தார். பல இடங்களுக்குச் சென்று பலரைச் சந்தித்தபோதிலும் அவர் அமைச்சர் விஜயதாசவுடன் மேற்கொண்ட சந்திப்பை வாழ்க்கையில் மறக்கமாட்டார். அந்தளவுக்கு அவரைப் புரட்டி எடுத்திருந்தார் அமைச்சர் விஜயதாச.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே ஐ.நா. பிரதிநிதியைக் குழப்பிவிட்டார் அமைச்சர்.

"இங்கு நல்லமுறையில் பேசிவிட்டு வெளியில் போய் இந்த நாட்டின் பெயரைக் கெடுக்க வேண்டாம். காலா காலமாக இதைத்தானே செய்கிறீர்கள்" என்று கூறியே அமைச்சர் சந்திப்பை ஆரம்பித்தார்.

இதனால் ஆரம்பத்திலேயே அசௌகரீகத்தை எதிர்நோக்கத் தொடங்கினார் ஐ.நா. பிரதிநிதி. தொடர்ந்து பிரதிநிதியும் அமைச்சரைச் சீண்டும் வகையிலேயே பேச்சை நீட்டினார். "பொலிஸாரால் கைது செய்யப்படுபவர்களுள் 80 சத வீதமானவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றார்களாமே...!" என்று அவர் ஆரம்பித்தார். ஆத்திரமடைந்தார் அமைச்சர்

"உங்களுக்கு யார் சொன்னது...?"

"தகவல் அறிந்த வட்டாரங்கள்"

"ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடிந்தவற்றை மாத்திரம் அடிப்படையாக வைத்துப் பேசுங்கள். கண்டவர்கள் எல்லாம் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இங்கு வர வேண்டாம்" என்றார்.

பிரதிநிதியும் விடவில்லை.

"கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுள் ஏகப்பட்டோர் இன்னும் சிறைகளில் விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனராமே...!"

"யார் சொன்னது...?"

"நம்பகரமான வட்டாரம்"

"இராஜதந்திரிபோல் பேசுங்கள்"

"பொலிஸ் அறிக்கையின் படிதான் நான் கூறுகிறேன்"

"எந்த நாட்டுப் பொலிஸ்?"

"இலங்கைதான்"

"அப்படியாக 71 கைதிகள் மாத்திரமே சிறைகளில் உள்ளனர். அவர்கள் மிக மோசமான கொலைகளைச் செய்தவர்கள். முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைக் கொலை செய்தவர்கள். அவர்களை விடுவிக்கமாட்டோம். நான் நீதி அமைச்சர்" என்றார் ஆத்திரத்துடன்.

இதற்கும் ஐ.நா பிரதிநிதி அசரவில்லை. தொடர்ந்தும் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

"போர்க் குற்றம் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்...?"

"நாங்கள் போர்க் குற்றம் புரியவில்லை. பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரேசா மே விடம் போய்ச் சொல்லுங்கள் முதலில் அந்த நாட்டின் போர்க் குற்றங்களைத் தேடுமாறு. நாங்கள் எங்கள் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டோம்"

ஐ.நா பிரதிநிதி, "நீங்கள் ஐ.நாவுக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று நான் ஊடக சந்திப்பொன்றை நடத்திக் கூறுவேன்" என்றார்.

"ஊடக சந்திப்பு ஒன்று அல்ல. நூறு சந்திப்புக்களை நடத்திக் கூறுங்கள். எங்களுக்குப் பயமில்லை" ஆழ யோசித்த பிரதிநிதி நீண்ட சிறிது நேரத்தில் எழுந்துசென்றுவிட்டார். இல்லை இல்லை அமைச்சர் விரட்டிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

**"இப்படித்தான் முன்பிருந்தவர்களும் பன்னாடுகளுடன் எரிந்து விழுந்தனர். ஒரேயடியாக அ[illegible]றப்படுத்தவும் பட்டனர். நீங்களாவது கொஞ்சம் பார்த்துப் பேசுங்கள் அமைச்சரே!"**

## காசே தான் கடவுளப்பா...

வாகனங்கள், பரிவாரங்கள் என ஆரவாரத்துடன் ஊர்வலம் வருகின்ற அரசியல்வாதிகளுக்குத்தான் என்றைக்குமே மக்கள் செல்வாக்கு அதிகம். எளிமையாகத் திரிகின்ற அரசியல்வாதிகளை மக்கள் கண்டுகொள்வதில்லை. அதனால்தான் தேர்தல்கள் என்று வரும்போது தேர்தல் செலவுகளுக்கு அரசியல்வாதிகளுக்கு அதிக பணம் தேவைப்படுகின்றது.

ஆனால் ஓர் எளிமையான அரசியல் கட்சிதான் ஜே.வி.பி. மக்களுக்குப் பிரச்சினை என்றால் போராட்டம் நடத்துவதற்காகவே மக்கள் ஜே.வி.பியைப் பயன்படுத்துகின்றனர் என்றும் சொல்லலாம். தேர்தல் வந்தால் அந்தக் கட்சியை மறந்து மக்கள் பணம் உள்ள அரசியல்வாதிகள் பக்கம் சென்றுவிடுகின்றனர். இதற்குச் சிறந்த உதாரணம் உமா ஓயத் திட்டத்துக்கு எதிரான போராட்டம். ஆயிரத்து 500இற்கு மேற்பட்ட வீடுகளைச் சேதப்படுத்தி மக்களுக்கு இழப்பை ஏற்படுத்தி இருக்கும் இந்த வேலைத் திட்டத்தை முற்றாக நிறுத்தும் வகையில் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றது ஜே.வி.பி. இந்தப் போராட்டம் வெற்றிபெற்றாலும்கூட அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்களை ஆதரிக்கமாட்டார்கள் என்று கவலையுடன் தெரிவிக்கின்றது ஜே.வி.பி.

உமா ஓயத் திட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் பண்டாரவளையில் [illegible] வாக்குகள்தான் ஜே.வி.பிக்கு கிடைத்த அதிக வாக்குகளாம். "மக்களுக்காக எவ்வளவுதான் போராடினாலும் [illegible] அரசியல்வாதிகளைத்தான் அவர்கள் ஆதரிக்கின்றார்கள்" என்று மிகவும் கவலையுடன் கூறுகின்றனர் ஜே.வி.பி. முக்கிய பிரமுகர் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடம்



சுக்கிரன், கேது, சந்திரன் நற்பலன் தருவர். நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். பணி நிறைவேற குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரர் விரும்பியதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவி அதிக பாசத்துடன் நடந்து கொள்வார். விருந்து விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் சீராக இருக்கும். பணியாளர்கள் அதிக உழைப்பினால் வருமானம் காண்பர். பெண்கள் தாய் வீட்டினரின் உதவி கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர்.

## இடபம்




பெரும்பான்மை கிரகங்கள் நன்மை தரக் காத்திருக்கின்றனர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர் நற்செயல்களில் ஈடுபட்டு பெருமை தேடித் தருவர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். பகைவரால் உருவான சிரமத்தை சமயோசிதமாக சரி செய்வீர்கள். மனைவியின் செயல்பாடு ஒற்றுமைக்கு வழிவகுக்கும். வெளியூர் பயணம் மூலம் எதிர்பார்த்த நன்மை நடக்கும். தொழிலில் ஆதாயம் அதிர்ஷ்டவசமாக கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## மிதுனம்



சுக்கிரன், ராகு, சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். முன்யோசனையுடன் செயல்பட்டு எதிலும் வெற்றி காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஆதரவாக செயல்படுவர். வாகனப் பயன்பாட்டால் ஓரளவு நன்மை கிடைக்கும். புத்திரர் உங்களிடம் நண்பருக்கு இணையாகப் பழகுவர். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில்,வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் அக்கறை கொள்வது நல்லது.

## கடகம்



சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். கடந்த கால உழைப்பால் நற்பலன் பெறுவீர்கள். தம்பி தங்கையின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரரின் அறிவுத்திறன் வளர ஆலோசனை சொல்வீர்கள். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். உடல்நிலை சீர்படுத்த மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவி உங்களின் நற்குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் செலவில் சிக்கனத்தை பின்பற்றுவர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

## சிங்கம்



குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தரக் காத்திருக்கின்றனர். வாழ்வில் முன்னேற உதவியவருக்கு நன்றி சொல்வீர்கள். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். வாகனப் பயணத்தால் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். புத்திரர் உங்களின் சொல்லை மதித்து செயல்படுவர். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உண்டு. மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிந்து நற்பெயர் காண்பர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் அடைவர்.

## கன்னி



செவ்வாய், சூரியன், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். எதிலும் முன்யோசனையுடன் செயற்பட்டு வருவீர்கள். இனிய நிகழ்வால் மனதில் மகிழ்ச்சி நிலைக்கும், வாகனப் பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரர் உங்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பர். பகைவரால் உருவான தொல்லை மறையும். மனைவி வழி சார்ந்த உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்துஇ லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணித்திறனில் மேம்பட்டு விளங்குவர். எதிர்பார்த்த சலுகை, பாராட்டு கிடைக்கும். பெண்கள் தாராள பணவசதியால் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பில் ஈடுபடுவர்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 06.08.2017 தொடக்கம் 12.08.2017 வரை

## துலாம்




ராகு, புதன், சூரியன், சுக்கிரனால் நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை ஆர்வமுடன் செயல்படுத்துவீர்கள். வாழ்வில் வளர்ச்சிப்பாதையில் வெற்றி நடைபோடுவீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். கடனில் ஒருபகுதி அடைபடும். மனைவி இணக்கமுடன் நடந்து ஒற்றுமையை நிலைநாட்டுவார். தொழிலில் உற்பத்தி பெருகுவதால் ஆதாயம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பெண்கள் நகை, புத்தாடை வாங்கி மகிழ்வர். மாணவர்கள் நன்கு படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## விருச்சிகம்



புதன், குரு, சுக்கிரன் அளப்பரிய நன்மையை வாரி வழங்குவர். உடன்பிறந்தவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப் பயணத்தால் நன்மை காண்பீர்கள். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் சீரான வளர்ச்சி அடைவர். கடனில் ஒரு பகுதி அடைபடும். மனைவி உங்கள் கருத்தை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வார். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும். பணியாளர் விண்ணப்பித்த கோரிக்கை கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவை குறைத்து சேமிப்பில் ஈடுபடுவர். மாணவர்கள் பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடுவர்.

## தனுசு



சந்திரன், கேது நற்பலன் தருவர். கடந்த கால உழைப்பிற்கான நன்மை கிடைக்கும். சமூகத்தில் நற்பெயர் உண்டாகும். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஒவ்வாத உணவு வகைகளை உண்ண வேண்டாம். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றம் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து செயல்படவும். பெண்கள் தாய் வீட்டு உதவியை கேட்டு பெறுவர். மாணவர்கள் ஆசிரியர்களின் அறிவுரையை ஏற்பது நல்லது.

## மகரம்



புதன், குரு, சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். எந்த செயலிலும் மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். உடன்பிறந்தவரால் உதவி கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் அறிவு, வேலைவாய்ப்பில் ஆர்வம் கொள்வர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் அன்பு, பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை நகை பணவசதிக்கேற்ப வாங்குவர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.
பெண்களிடம் கணவர்கள் அன்பாக இருப்பார்கள். பிறமொழி பேசுபவர்கள் உதவி செய்வார்கள்.

## கும்பம்



சூரியன், செவ்வாய், சுக்கிரனால் அதிக நன்மை கிடைக்கும். புதிய உத்தியால் தாமதித்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும். புத்திரருக்கு தக்க ஆலோசனை கூறி நல்வழிப்படுத்துவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். உடல்நிலை சீராக இருக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். வெளியூர் பயணத்தால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் ஞாபகத்திறனால் கல்வி வளர்ச்சி காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனம்



சந்திரன், புதன், சுக்கிரன் அனுகூல பலன் தருவர். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனப் பயணத்தால் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். புத்திரர் பிடிவாத குணத்துடன் செயல்படலாம். நோய் தொந்தரவு ஓரளவு மறையும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தொழில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைவாக நிறைவேற்றுவர். பெண்கள் குடும்ப நலனுக்காக அக்கறையுடன் பாடுபடுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

# ஞாபகமறதி நோய் குணமாகும் வரை ரவியை வெளிநாடு செல்லவிடாதீர்கள்

## மைத்திரிபாலவிடம் கம்மன்பில வேண்டுகோள்



கொழும்பு, ஒக 6

தனக்கு எதுவுமே ஞாபகமில்லை எனச் சகட்டுமேனிக்கு சாதித்துவரும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு ஏற்பட்டிருக்கும் 'டிமென்ஷியா' எனும் ஞாபகமறதி நோய் குணமாகும்வரை அவரை வெளிநாடுகளில் நடைபெறும் மாநாடுகளுக்கோ அல்லது ஏனைய விவகாரங்களுக்கோ அனுப்பவேண்டாம் என்று புதிய ஹெல உறுமய கட்சியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அர்ஜுன் அலோசியஸின் கைப்பேசியிலிருந்து ரவி கருணாநாயக்கவுக்கு 'ரவி.கே. எம்.பி.' என்ற குறியீட்டுடன் அனுப்பப்பட்டிருந்த குறுஞ்செய்திகள் தனக்கானவை அல்ல என ஆணைக்குழுவின் முன்னிலையில் ரவி தெரிவித்திருக்கின்றார்.

நமது நாடாளுமன்றத்திலுள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 'ரவி' என்ற முதற் பெயருடன் ஆரம்பித்து 'கே' என்ற குடும்பப் பெயரின் முதலெழுத்தில் முடிவடையும் பெயரைக்கொண்டவர் 'ரவி கருணாநாயக்க' மாத்திரமே என்பதை சிறு குழந்தை கூட சொல்லும்.

எனவே, தனது பெயரையே மறந்து போயிருக்கும் ரவி கருணாநாயக்கவை வெளிநாடுகளுக்கு இந்த நாட்டின் அயலுறவு அமைச்சராக அனுப்புவது புத்திசாலித்தனமல்ல. அவ்வாறு அவரை அனுப்பினால் வெளிநாட்டு மாநாடுகளிலோ அல்லது ஏனைய நிகழ்வுகளிலோ தான் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது அவருக்கு மறந்து போகலாம்- என்றார். (து)

# குடும்பப் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஒக 6

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள கரவெட்டி கிராமத்தில் மூன்று பிள்ளைகளின் தாயொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நெல்லுச்சேனையில் வசிக்கும் விஸ்ணுகாந்தன் இராசமலர் (வயது-37) என்பவரே.

இவ்வாறு நேற்று முன் தினம் மாலை அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தப் பெண் தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (து)

---

**கடைகள் வாடகைக்கு**

யாழ்.நகரின் மத்தியில் கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகத்துக்கு ஏற்றது.

077 765 1826

**காணி விற்பனைக்கு**

கரணவாயில் தோட்டக் காணி 14 பரப்பு விற்பனைக்குண்டு.
**இடம்:-** இரத்தின ஐயர் சிவன் கோயிலுக்கு அருகில். எல்லாப் பயிரும் செய்யலாம். வீடு கட்டவும் உகந்தது.

071 843 4585

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பத்திற்கு அளவான வீடு வாடகைக்குத் தேவை.

077 659 2015

**வீடு வாடகைக்கு/ காணி/ வீடு கொள்வனவுக்கு தேவை**

யாழ். நகருக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. காணி/ வீடு விற்பனைக்கு இருப்பினும் தொடர்பு கொள்ளவும்.

077 977 5348

**பணியாளர் தேவை**

வயதான ஆண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து கண்காணித்து பராமரிக்கக் கூடிய குடும்பப் பொறுப்புக்கள் எதுவுமற்ற நல்ல தேக ஆரோக்கியமுடைய ஆண் ஒருவர் தேவை. கிராமசேவகரின் நற்சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும். நல்ல சம்பளமும் மூன்று நேரம் உணவும் வழங்கப்படும்.

077 958 1741

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூரடியில் உள்ள வீட்டிற்கு சமையல் வேலை செய்வதற்கு பெண்ணொருவர் தேவை. (தங்கி நின்றும் வேலை செய்யலாம் காலை வந்து மாலை போகலாம்)

076 851 4296

**தொழிற்சாலை, மாடி வீடு விற்பனைக்கு**

பிரதான வீதியை முகப்பாக கொண்ட பெரிய கட்டடங்கள், சகல வசதியுடன் மாடி வீடும் விற்பனைக்குண்டு. கல்யாண மண்டபம், வைத்தியசாலை, தொழிற்சாலை நடத்தக் கூடியது.

077 600 1701

**மணப்பெண் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981, அனுசம், செவ்வாய் குற்றமற்ற கிரகபாவம் மூன்று சுற்றும் 24 உடைய அபுதாபியில் BSc Engineer (Quentity Surveying University of Moratuwa) ஆக கடைமையாற்றும் மணமகனிற்கு படித்த அழகிய, மெல்லிய மணப்பெண் தேவை. அபுதாபியில் குடும்பமாகவும் வசிக்கலாம்.

021 222 5175

**MAJESTIC CINEPLEX** A CEYLON THEATRES CINEMA Jaffna
காா்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**வீடு வாடகைக்குண்டு**

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் இரண்டு அறைகளுடன்(AC/NonAC)கூடியதொடர்மாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
தொடர்பு-077 837 8597

**விற்பனைக்குண்டு**

புடைவை, பலசரக்கு கடைக்குப் பாவிக்கக் கூடிய அலுமினிய கண்ணாடி பிற்றிங் (உறுதியான) 9½ x 8 அளவுடைய இரு அலுமாரியும், 6 x 9½ அளவுடைய இரு அலுமாரியும் விற்பனைக்குண்டு.

076 618 0144

**வீடு வாடகைக்குண்டு**

கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். - சாவகச்சேரி -

077 985 9218

**வீடும் காணியும் விற்பனைக்கு**

மானிப்பாய் உடுவில் வீதியிலுள்ள நிலப்பரப்பு ஐந்தும் (05) குளி 15.5 உம் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவை இல்லை.
தொடர்பு-077 775 5175

**காணி தேவை**

கிளிநொச்சியில் இரத்தினபுரம் அல்லது திருவையாறு பிரதேசத்தில் 1 ஏக்கர் காணி (வீடு இல்லாமல்) தேவையாக உள்ளது.

077 3013620

**காணி விற்பனைக்கு**

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 29 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும். (4 பரப்பு, 6, 8)

076 857 3798, 077 871 5430

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் மெடிக்கல் Collage முன் கருவப்புலம் வீதியில் சகல வசதிகளுடனான ஒரு படுக்கை அறை, வரவேற்பறை, சாப்பாட்டறை, சமையலறை, Attach Toilat உடன் வீடு வாடகைக்கண்டு

077 732 8370/ 011 236 7786

**காணி தேவை**

நாவற்குழி சந்திக்கும் கைதடிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் வீதியோரமாகவும், தெல்லிப்பழைக்கும் காங்கேசன் துறைக்கும் இடைப்பட்ட பரப்பிலும் காணி தேவை.

077 4109151

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி பாண்டியன் தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

077 530 3198

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவக் குடும்பத்தைச் சேர்ந்த தீய பழக்கமற்ற லண்டன் வீசாவுள்ள குறுகிய காலத்துக்குள்ளேயே விவாகரத்துப் பெற்ற 37 வயது மணமகனுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:
T.P: 00447466487026

**சேவை**

ஆலயப்பூசைகளுக்கு மோதகம், வடை, சர்க்கரைப் பொங்கல் செய்து கொடுக்கப்படும். இடம் - கொக்குவில்

075 743 2461

**மணமகள் தேவை**

கனடா PR உடைய மணமகனுக்கு (04) நான்கு வயதிற்கு குறைவான வித்தியாசத்தில் பொறுப்பாக குடும்பத்தை நடத்தக் கூடிய படித்த அழகான மணமகள் தேவை. மணமகன் விவரம்
பிறப்பு - 1988 இந்து கௌரவ குடும்பம்
நட்சத்திரம் - சதயம்
கிரக பாவம் - 61
உயரம் 5' 6"

076 930 1805 (தந்தை)

**வேலையாள்கள் தேவை**

வவுனியாவில் இயங்கிவரும் தனியார் வைத்திய ஆய்வு கூடத்துக்கு வவுனியா, மன்னார் மாவட்டா[illegible] கொண்ட [illegible] தேவை. வயதெல்லை 19-40

077 449 8857

**காணி விற்பனைக்கு**

பலாலி றோட் பக்கமாக ஊரெழு அம்மன் கோயிலுக்கு அருகில் 12 பரப்புக்காணி விற்பனைக்கு.

077 350 7694

**வீடு விற்பனைக்கு உண்டு**

மானிப்பாய், மருதடி பிள்ளையார் கோவிலுக்கு மிக அருகில் Memorial வீதியில் சுற்று மதிலுடன் கூடிய 10 பரப்பு காணியும் அழகிய வீடும் விற்பனைக்கு உண்டு. 077 7112349, 077 636 0814

**திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனத் தேவைக்கு Or அலுவலகத் தேவைக்கு (Office) பாவிக்கலாம்.
தொடர்பு - 076 857 3798, 077 8715430

**தேவை**

சாவகச்சேரியில் உள்ள தனியார் நிறுவனத்துக்கு கணக்கியல் அறிவுள்ள அதே இடத்தைச் சேர்ந்த ஆண்/ பெண் உதவிக் கணக்காளர் தேவை. அடிப்படைக் கணினி அறிவு அவசியம். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
அடிப்படைச் சம்பளம் 15000/-

071 867 6424

**வாடகைக்கு**

யாழ்நகரில் புதிய மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறைகளையுடைய வீடு A/C, TV உட்பட முற்றிலும் தளபாடமிடப் பட்டுள்ளது. விடுமுறை சகல சுபகாரியங்களும் நாள் வாராந்த அடிப்படையில் வீடாகவும் அறைகளாகவும்.

077 810 5102/ 077 301 3659

**வேலை ஆள்கள் தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
1. சாரதி - light vehicle
2. கூலி ஆள்கள் (பொருள்கள் ஏற்றி இறக்குதல்)
(07.08.2017 தொடர்புகொள்ளவும்)

077 386 7696 / 021 224 0514

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் கைத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை. தகைமை O/L Or A/L. அனுபவம் உள்ளவர்களுக்கு சம்பளம் உயர்வாக வழங்கப்படும்.

077 361 1282

**நாவற்குளியில் காணி விற்பனை**

நாவற்குளி தென்னம் தோட்டம் என்னும் பெயருடைய நிலப்பரப்பு 11 குளி. 10.9 விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்கு உண்டு.

077 755 9717

**காணி விற்பனை கைதடியில்**

கைதடியில் கொம்ப நான்டல் பன்டல் புலமும் மறு பிரிவுகளும் என்னும் பெயர் உடைய மேட்டு நிலம் பரப்பு 9 குளி 9 விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்கு உண்டு.

077 755 9717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பில்டிங் கன்ஸ்ரைக்ஸன் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

☑ மேசன் ☑ தச்சுவேலை தெரிந்தவர்கள் ☑ கம்பிவேலை தெரிந்தவர்கள் ☑ வெல்டிங் தெரிந்தவர்கள் } சம்பளம் ரூ.1700/- (தினம்)

(மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 150/= வழங்கப்படும்)

☑ உதவியாளர் - சம்பளம் ரூ.1200/= (தினம்)

(மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 112/- வழங்கப்படும்)

077 712 9690, 077 550 1520 ,
077 853 5248

## எரிபொருள் நிரப்புனர் பதவி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் கீழ் இயங்கும் இல. 73. கண்டி வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புனர் பதவிக்கு தகுதி உடையவர்கள் உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுக் கடிதங்களுடன் தங்களது சுயவிபரக்கோவை யினை எதிர்வரும் 12.08.2017 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்
இல. 73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302/ 075 509 5887

## ECO Friendly Bags

யாழ்பாணத்தில் தயாரிக்கப்படும் சூழலுக்கேற்ற Bags

Textile Bags
Grocery Bags
Food City Bags
Jewellery Bags
Album Bags



நவீன டிசைன்கள் | உயர்தர பிறிண்டிங்
குறைந்த விலை | தெரிவுசெய்ய பல வர்ணங்கள்

Shakkthi ECO FRIENDLY BAGS
# 110, Jaffna Road, Manipay.
email: shakkthibag@gmail.com

தொடர்புகளுக்கு:
076 3290663
071 7666788

## LMRB வெற்றிடங்கள்

சந்தை ஆய்வு தொடர்பாக வடக்கு (யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா) கிழக்கு (மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை) மாகாணங்களில் பல வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

பகுதிநேரம் / முழுநேரம்
நேரடியாக வீடுகளிற்கு சென்று தரவுகளை சேகரிக்கும் திறமையுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கவர்ச்சியான கொடுப்பனவு

விண்ணப்பதாரிகள் கீழ்வரும் முகவரிக்கு / E-mail முகவரிக்கு விண்ணப்பத்தினை அனுப்பவும்.

அல்லது கீழ்வரும் தெலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

கள முகாமையாளர்
இல. 2A அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
தொ.பேசி.இல: 0115235785
0773586600
0716584374
E-mail: santhirapalan.nimalesvaran@kantar.com

## முத்துமாரியம்மன் ஜோதிடம்

பரம்பரை ஜோதிடர்
கிருஸ்ணா சாஸ்திரி
சந்திக்கும் நேரம் தினமும்
காலை 8.30 மணி முதல் – மாலை 7.30 மணி வரை

எத்தனையோ ஆள்களிடம் ஜோதிடம் பார்த்திருப்பீர்கள். ஆனால் இவர்களிடம் பார்த்தல் நூற்றுக்கு நூறு வீதம் எல்லாப் பரிகாரமும் கிடைக்கும். கைரேகை. ஜாதகம். கல்வி. தொழில். வியாபாரம். வாஸ்து சாஸ்திரம். வெளிநாட்டு பயணம். வெளிநாட்டு. உள் நாட்டுப் படிப்புகள் இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.

இந்தியாவின் பிரபல ஜோதிடர்
நாதன் இன்
394, 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தியிலிருந்து 100 மீ. பெருமாள் கோயில் போகும் வீதியில்)
076 872 7062 / 076 887 0886

## தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா? *பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ? *இள நரையா ?
*தலையிடியா ? *முடி அடர்த்தி இல்லையா?

பொன்னாங்காணி. கரிசலாங்காணி. இலாமிச்சைவேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய.

பதிவு இல : 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

*கருப்பு நிறம், கருந்திட்டு, கரும்புள்ளியா?
*பருக்கள், பருவந்த அடையாளமா? உதட்டுக் கறுப்பா?
*கை, கால், முதுகு கறுப்பு நிறம் நீங்க வேண்டுமா?

அனைத்துக்குமான மிக அற்புதமான கேர்வல் கிறீம் 2 வாரங்களில் மிக அழகிய தோற்றத்தைப் பெற. மேலும் இயற்கை மூலப் பொருள்களைப் பயன்படுத்தி இங்கு பேசியல் செய்யப்படும்.
ஒரே தடவையில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.
பக்கவிளைவற்றது.

பதிவு இல:- 16168
077 314 9386
விலை 3500 5500
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ? *ஊளைச்சதையா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ? *வயிற்று கோளாறா ?
*வயிறு. மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
விலை 3500 5500. 9000

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

பதிவு இல : 16168
077 2106 155
221. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர் தேவை.
(ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

விற்பனை உதவியாளர் தேவை

தகைமைகள்-

- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- வயதெல்லை 19 - 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை. அடையாள அட்டை போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 15.08.2017 இற்கு முன்னதாக கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக் கவும்.

பிற்குறிப்பு:-
மாத சம்பளமாக ரூ.25000 வழங்கப்படும்.

விண்ணப்ப முகவரி :-Blue Skyy Agency
173, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

யாழ் மாநகரில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்

பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் திரை இசை நிகழ்ச்சி



இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில்
(வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : இம்மாதம் 12 ஆம் திகதி (12.08.2017)
மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்

டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள
The Phone Shop
நெல்லியடி 077 285 0285
பூபாலசிங்கம் புத்தகசாலை 021 222 6693

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : K.T. பிரசாத்
தொடர்பு 077 550 4910
Ceylon Art Creation

# நுரைச்சோலை குறைபாட்டை ஆராய வருகின்றது சீனக் குழு

கொழும்பு, ஒக 6
நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் அடிக்கடி ஏற்படும் பழுதுகள் பற்றி ஆராய்வதற்காகச் சீன நிபுணர்கள் குழுவொன்று இன்று இலங்கைக்கு வரவுள்ளதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சின் அபிவிருத்திப் பணிப்பாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.
இந்த மின் நிலையத்திலுள்ள மூன்று மின்பிறப்பாக்கிகளில்
ஒன்று பழுதாகியிருப்பதால் தேசிய மின்கட்டமைப்புக்கு 300 மெகாவோற் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக வும், இவ்வாறு அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதற்கான காரணத்தை ஆராய்ந்து அதற்கான நிரந்தரத் தீர்வை இந்தக் குழு பரிந்துரை செய்யவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.
வறட்சியான காலநிலையால் நீர்மின்சார உற்பத்தி வெகுவாகக் குறைந்திருக்கும் நிலையில் நுரைச் சோலை மின்நிலையக் குறைபாடு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியிருப்பதா கவும், அதை உடனடியாகத் திருத்துவதற்காகவே இந்த நிபுணர்கள் குழு வரவழைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (த)

# ரவியை பதவி விலகுமாறு கபே அமைப்பும் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக 6
பிணைமுறி மோசடி விவகாரத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாகத் தனது பதவியைத் துறந்து ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டுமென கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரச்சினை உருவாகியுள்ள இந்தவேளையில் அவர் தொடர்ந்தும் அமைச்சுப் பதவியில் இருப்பது விசாரணைகளுக்குப் பாதகமாக அமையும்.
அரச தலைவர் தலைமையிலான இந்த அரசுக்கு வாக்களித்த 62 இலட்ச மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்காமல் ரவி கருணாநாயக்க தனது பதவியைத் துறந்து ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு இடமளிக்கவேண்டும்.
அரசு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களைத் தொடர்ந்தும் பிற்போட்டு வருவதற்குப் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் அதைச் சார்ந்தவர்கள் மீதும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவப்பெயரும் ஒரு காரணம் என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த தேர்த்திருவிழா கடந்த வாரம் இடம்பெற்றது. அம்பாள் தேரில் எழுந்தருளுவதனையும் தேரில் ஆரோகணித்துப் பத்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவதனையும் காணலாம். (ஐ-250)







இந்துமாமன்ற தலைவர் செ.தேவராசாவின் அமுதவிழா, வவுனியா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது விழாவில் மதகுருமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.சிவசகத்திஆனந்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசாவும் கலந்து கொண்டனர். (ஐ-402)









புலம்பெயர் தமிழர்களின் அமைப்பான வன்னி தமிழ் சமூக கலாசார அமையத்தின் ஏற்பாட்டில் இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம் நடத்திய கணனி பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. மல்லாவி, துணுக்காய், முள்ளியவளை, நெடுங்கேணி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மாணவர்கள் இதன்போது சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.சர்வேஸ்வரன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-402)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சி புலம் முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (ஐ-9)





வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ச.பத்மநாதன் சத்தியலிங்கம் 2017இற்கான வருடாந்த நிதியொதுக்கீட்டில் ஆசிகுளம் பிரி விற்குட்பட்ட எல்லப்பர் மருதங்குளம் இளையதாரகை விளையாட்டு கழகத்துக்கு மைதான பராமரிப்புக்கான புல்வெட்டும் இயந்திரத்தை வழங்கி வைத்தார். நிகழ்வில் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பாலச்சந்திரன் சிந்துஜன் மற்றும் அமைச்சரின் பிரதேச ஒருங்கிணைப்பாளர் தீ தாவீது சீலன் அமைச்சரின் அலு வலக உத்தியோகத்தர்கள் விளையாட்டு கழகத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ‘உயர்த்தும் கரங்கள்’ செயற்திட்டத்தின் கீழ் கீரிமலை மீள்குடியேற்றப் பாடசாலையான வலித்தூண்டல் பாடசாலை மாணவர்கள் 40 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ)





வட்டுக்கோட்டை மூளாய் வீதி ஐக்கிய நாணய சங்கத்தினருக்கு தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து 70 கதிரைகளை அண்மையில் வழங்கி வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் முருகன் ஆலயத்தின் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் 2 ஆம் நாள் நிகழ்வில் இடம்பெற்ற திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி நிகழ்வு. (ஐ)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் ஆங்கில தினமும், வர்ணப்பூச்சி விளையாட்டு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்பள்ளிப் பணிப்பாளர் திருமதி. கர்ணி தனபாலன், வளவாளர்கள் எஸ். சத்தியசீலன், ஆர். கமலநாதன், முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ஜ-29)



யாழ்ப்பாணம் ஆசிரிய வான்மை விருத்தி நிறுவகத்தில் ஆரம்பக்கல்வி பல்மட்டக் கல்விச் செயலமர்வும், நூல் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றன. வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், கலாநிதி பா. தனபாலனிடமிருந்து பல்மட்டக் கற்பித்தல் நூலைப் பெற்றுக் கொண்டார். (ஜ-29)




பாடசாலைச் சமூக உறவுச் செயற்திட்டம் கோப்பாய் வடக்கு றோ.க. வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் தேசியற் கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் வழிகாட்டலில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்டனர். (ஜ-29)







பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரனது தமிழ், சைவப் பணிகளைப் பாராட்டி கனடா நயினை வீரபத்திர சுவாமி சனசமூக நிலையத்தால் அண்மையில் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. (ஐ)



இரணைப்பாலை றோ.க.மகா வித்தியாலயத்தின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியரும், யாழ். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் தற்போதைய ஆசிரியருமான கனகரத்தினம் சசிக்குமார் தனது மகளின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு இரணைப்பாலை றோ.க.மகாவித்தியாலய நூலகத்துக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கினார். (ஜ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன உரோமை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயம்



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

சின்ன உரோமை என அழைக்கப்படும் சில்லாலை பங்கின் புனித கதிரைமாதா ஆலயத்தின் வைரவிழா நிகழ்வுகளைச் சிறப்பிக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

இந்த ஆக்கத்துக்கான தகவல்கள் சில்லாலை மண்ணின் மைந்தனும்,நிரந்தர மறை ஆசிரியருமான எஸ்.ஏ.நாதர் என்று அழைக்கப்படும் ஆரோக்கியநாதர் ஆசிரியரின் 'சில்லாலை கதிரைச்செல்வியின் பொன் விழா சிறப்பு வெளியீடு (1957 2007)' என்ற நூலில் இருந்தும், சில்லாலைப் பங்குத்தந்தையர்கள் வழங்கிய தகவல் மற்றும் ஆவணங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன.

வைரவிழாக் காணும் சின்ன உரோமை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயப் பங்குத் தந்தை ஏ. அகஸ் ரின் அடிகளார் உதயன் நாளிதழின் ஞாயிறு சிறப்பு இணைப்பின் கிறிஸ்தவ பகுதிக்கு வைரவிழா குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது, "எதிர்வருகின்ற 15ஆம் திகதி பெருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் நிகழ்த்தவுள்ளார். அதற்கு முன்பான நிகழ்வாக இன்றைய தினம் அன்னையின் பாடல்கள் அடங்கிய இறுவட்டும், சில்லையூர் பற்றிய சிறப்பு மலர் ஒன்றும் வெளியீடு செய்யப்படவுள்ளன. இந்த நிகழ்வுக்கான முன்னாயத்த ஒழுங்குகளைச் செய்துள்ளோம். ஆலயத்தை சுற்றி உள்ள வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளது. தேக்கு மரத்தோட்டம் ஒன்று ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலய முன்றலில் அமைந்துள்ள புனித யோசவாஸ் அடிகளாரின் முன்பாக சீமேந்துத் தரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த விழா ஏற்பாடு தொடர்பான செலவுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் நிதி உதவி செய்த அனைவருக்கும் குறிப்பாக, வெளிநாடுகளில் வாழும் சில்லாலைப் பங்கு மக்களுக்கும் அன்பான நன்றிகள். இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் உள்ளன. குறிப்பாக புனித யோசவ்ஸ் அடிகளாரின் யாழ்.மறை மாவட்ட யாத்திரைத்தலம் சில்லாலையில் அமைக்கப்படுகிறது. அந்தப் பணிகளையும் இனிதே நிறைவுசெய்ய அதிக நிதி தேவைப்படுகிறது. சில்லாலையூர் கதிரைத்தாயின் அருள் வரங்களைப் பெற்றவர்கள் இப்பணிகளுக்கு உதவ வேண்டுமென அன்பு அழைப்பு விடுகிறோம்." என்றார்.

### சில்லாலையின் அமைவிடமும் சின்ன உரோமையின் சிறப்பும்

யாழ். குடாநாட்டின் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வடமேற்கே 16 கிலோ மீற்றர் தூரத்தில் சில்லையூர் எனச் சிறப்பித்து அழைக்கப்படும் சில்லாலைக் கிராமம் அமைவுபெற்றுள்ளது.

கிழக்கே பண்டத்தரிப்பு,மேற்கே சம்பில்த்துறை, தும்பளைப்பாய் மற்றும்திருவடிநிலை கடற்கரைகளும்,வடக்சே மாதகல்,தெற்கே வடலியடைப்பு என கிராமங்களும், கடற்கரைகளும் அரண் அமைத்து சில்லாலைக் கிராமத்தை அணி செய்கின்றன.

400 ஆண்டுகால விசுவாச வாழ்வு வாழ்ந்த சில்லாலைக் கிராமம் ஒரு வேளாண்மைக் கிராமம் ஆகும். மா, பலா, வாழை என்ற முக்கனி களும் தென்னை, கமுகு, பனை என்ற வானுயர் மரங்களும் செழித்து வளர்ந்த சோலையான சில்லாலையின் குளிர்மைக்கு வரிவரியாய் அமைந்து பச்சைப் பசேலெனக் காட்சிதரும் வெற்றிலைக் கொழுந்து தோட்டங்கள் மேலும் அழகின் செழிப்பாய் செந்தளித்துக் குளிரூட்டுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் காரசாரமான வெற்றிலைக்கு பெயர் போன ஊராக சில்லாலை விளங்கியது.

*"சில்லாலை வெற்றிலையும்,*
*சிறுவிளான் சுண்ணாம்பும்..*
*சுன்னாகப் பாக்கும்..*
*சுதுமலையின் புகையிலையும்..."*


என்பது வெற்றிலையின் சிறப்பையும் சில்லாலைக் கிராமத்தையும் தொடர்புபடுத்திப் பாடப்படும் பாடலாகும்.

*"கதிரைச்செல்வியே..! எம் ஊர் இன்பத்தாய் நீயே...! உம்மையே நம்பி இந்நிலம் வாழும் உம் மக்கள் பாரா"யோ சீரிய கதிரைச்செல்வியே...!"*

என்றுநம்பிக்கை'யாடு பங்கு மக்களுக்காக தினமும் பாடும் சில்லாலை கதிரைமாதா ஆலயப்பங்கு மக்கள்,

*"வாழை கமுகு பல சோலையே இவற்றை வளர்ப்பது உன் செபமாலையே"* எனத் தம் பயிர்களுக்காகவும் கதிரைத்தாயிடம் வேண்டி வந்துள்ளனர் என்பது நாம் அறிய வேண்டிய சிறப்புத் தகவலாகும்.

> சின்ன உரோமை என அழைக்கப்படும் சில்லாலைப் பங்கில் அமைந்துள்ள கதிரைமாதா ஆலயம் இலங்கையில் உள்ள ஒரேயொரு கதிரைமாதா ஆலயமாகும். இந்தப் பெயரில் இலங்கையில் வேறெங்கும் ஆலயங்கள் இல்லை. பிரிட்டனில் வோல்சிங்கம் மாநகர் யாத்திரைத்தலத்தில் சில்லாலையில் உள்ள சொரூபம் போல் கதிரையில் அமர்ந்த அன்னையினுடைய சொரூபமே அமைந்துள்ளது.



சில்லாலை வடக்கு ஜே/148, சில்லாலை தெற்கு ஜே/149 என்ற கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பரம்பரைக் குடும்பங்களான 'காயர் குடும்பம்', 'அகுத்தி குடும்பம்,'கம்மாளம் குடும்பம்', 'மேசர் குடும்பம்', 'கோசாணி குடும்பம்','வீரவான் குடும்பம்' போன்றோர் இங்கு வாழ்கின்றனர்.

சின்ன உரோமை என அழைக்கப்படும் சில்லாலைப் பங்கில் அமைந்துள்ள கதிரைமாதா ஆலயம் இலங்கையில் உள்ள ஒரேயொரு ஆலயமாகும். இந்தப் பெயரில் இலங்கையில் வேறெங்கும் ஆலயங்கள் இல்லை. பிரிட்டனில் வோல்சிங்கம் மாநகர் யாத்திரைத்தலத்தில் சில்லாலையில் உள்ள சொரூபம் போல் கதிரையில் அமர்ந்த அன்னையினுடைய சொரூபமே அமைந்துள்ளது.

சில்லாலை மண்ணின் மைந்தரான அமரர் வைத்தியர் அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தை மனதில் கொண்டவராக பிரிட்டனில் வாழும் சில்லாலை மக்களுக்கென கதிரையில் அமர்ந்த அன்னையின் வோல்சிங்கம் நகருக்கு ஒரு யாத்திரையை ஆரம்பித்தார். அந்த வழக்கம் இன்றும் காணப்படுகிறது. இங்கிலாந்தில் உள்ள தமிழர்களின் யாத்திரையாக ஆண்டுதோறும் இது நடைபெறுகிறது. வோல்சிங்கம் நகரில் இருக்கின்ற கதிரைமாதாவுக்கும்,சில்லாலையில் இருக்கின்ற கதிரைமாதாவுக்கும் இடையில் தொடர்பு உண்டா என்ற ஆய்வில் எந்தவிதமான தொடர்பையும் கண்டுகொள்ள முடியவில்லை.

### சில்லாலை என்ற பெயரின் தோற்றம்

டச்சுக்காரர் காலத்தில் கருப்பம் சீனி செய்யும் கரும்பு நெரிக்கும் சிறிய ஆலைகள் சில்லாலையில் இருந்ததாகவும், சிறிய ஆலை என்பதே கால ஓட்டத்தில் மருவி சில்லாலை என தோற்றம் பெற்றதாகவும் ஒரு வாய்வழிப் பாரம்பரியம் தொடர்பு கொண்டு பேசப்பட்டு வருகிறது.

இங்குள்ள பெருமளவிலான விவசாயக் காணிகளின் கிணற்றில் சில்லுப்பூட்டிய சுழல்சக்கரத்தில் நீர் இறைக்கும் வாளிகள் பொருத்தப்பட்டு சக்கரத்தைச் சுற்றும் போது வெற்று வாளிகள் கிணற்றுக்குள் சென்று நீரை அள்ளி மேலே கொண்டு வரும் அமைப்புடைய நீர் ஆலைகள் இருந்தமையால் சில்லுகள் பூட்டப்பட்ட ஆலை என்ற பெயர் சில்லாலை என பெயர் பெற்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இடப்பெயர்வு ஆய்வு யாழ்ப்பாண மாவட்டம் கலாநிதி இ.பாலசுந்தரம் பக்கம் 206)

சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் (1966 ஆம் ஆண்டு தொடக்கம் 1972 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி) 7ஆம் ஆண்டுவரை கல்வி கற்ற காலத்தில் அன்பு நண்பன் குணம் சூரியின் மனேச்சர் வீட்டுக்குச் சென்று சூத்திரக்கிணறு என அழைக்கப்படும் மேற்படி கிணற்றைப் பார்த்திருக்கிறேன்.

சங்கிலி அரசனிடம் தப்பியோடியவர்களே சில்லாலை கத்தோலிக்க கிராமத்தின் அடித்தூண்கள். போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னரே இலைமறை காயாக சில்லாலையில் கத்தோலிக்கம் இருந்தது என்பதை உறுதிப்படுத்த போதிய சான்றுகள் இல்லை. இருப்பினும் போர்த்துக்கேயரால் யாழ் நல்லூர்ப்பகுதியில் கிறிஸ்தவம் வைத்தியர் பரம்பரையில் பரப்பப்பட்டது என்று அறியவருகின்றது. சங்கிலி அரசன் இவர்களை கொன்றொழிக்கப் புறப்பட்ட போது இரவோடு இரவாக தப்பியோடி சில்லாலையில் புகலிடம் பெற்ற இரண்டு கத்தோலிக்க வைத்தியக் குடும்பங்களே சில்லாலை கத்தோலிக்க பாரம்பரியத்தின் அடித் தூண்கள் ஆகின்றனர். இவர்களால் அமைவு பெறச்செய்யப்பட்டதே சில்லாலைக் கத்தோலிக்க கிராமம் ஆகும்.

1544 ஆம் ஆண்டுகளில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த போது ஆங்காங்கு பல கற்கோவில்களைக் கட்டினர். பண்டத்தரிப்பில் இன்று தென்னிந்தியச் திருச்சபைக் கோவில் இருக்கும் இடத்தில் ஆரோக்கிய மாதாவுக்கு ஒரு கோவில் அமைக்கப்பட்டிருந்தது. அக்கோவிலில் போர்த்துக்கேயர் மிகுந்த பக்தியோடு வணங்கி வழிபட்டு வந்த ஆரோக்கிய அன்னையின் திருச்சொரூபம் கதிரையில் அமர்ந்து இயேசு பாலனை மடியில் வைத்திருக்கும் பாவனையில் காணப்பட்டதால் கதிரைத்தாய் என நாமம் சூட்டப்பட்டது.

ஒல்லாந்தர் நாட்டைக் கைப்பற்றிய போது சில்லாலைக் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி இந்தச் சொரூபத்தை இரவோடு இரவாக எடுத்து வந்து சில்லாலையில் மண்ணால் கட்டப்பட்ட ஆலயத்தில் வைத்து வணங்கி வந்துள்ளனர். 1641 ஆம் ஆண்டுகளில் சில்லாலைக் கிராமத்தில் 395 கத்தோலிக்கர்கள் வாழ்ந்ததான தகவல் போர்த்துக்கேயரின் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1658 ஆம் ஆண்டு ஆவணி மாதம் யாழ் அடைக்கல அன்னை ஆலயப்பகுதியில் அமைந்திருந்த போர்துக்கேயரின் கோட்டையை ஒல்லாந்ததர்கள் கைப்பற்றிய பின்னர் சீர்திருத்தவாத கிறிஸ்தவ மதத்ததைப்பரப்ப வேண்டும் என எண்ணினர். கத்தோலிக்க மதத்தையும் இந்து மதத்தையும் அழிக்க முற்பட்டனர். ஒல்லாந்தப் படையினருடன் வந்திருந்த 'பிலிப்ஸ் பல்டேயுஸ்' என்ற பாதிரியார் பணிமுடித்து நாடு திரும்பிய பின்னர் எழுதிய நூலில் தமது மதப் பரப்புரைகளின் மத்தியிலும் சிலர் கத்தோலிக்க போதனைப்படி வைராக்கியமாக வாழ்ந்தனர் எனவும்,முழுவதுமாகக் கத்தோலிக்கரைக் கொண்ட கிராமமாக சில்லாலைக் கிராமம் இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

### வரலாற்று ஏடுகளில் சில்லாலை

1903 ஆம் ஆண்டு தொடக்கம் 1906 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சில்லாலை மக்களுக்கான கல்லறைத் தோட்டம் அமைக்கப்பட்டது. அங்குள்ள சிற்றா லயத்தையும்,சிறு மணிக்கோபுரத்தையும் ஆலய மூப்பர் இன்னாசித்தம்பி சூசைப்பிள்ளை 1908 ஆம் ஆண்டில் கட்டி முடித்து அன்பளிப்பாக வழங்கினார்.

1913ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் இருந்து ஆயிரத்து 200 ரூபா செலவில் ஆலயத்துக்கென பெரியதொரு மணி பெறப்பட்டு கோபுரத்தில் இணைப்புச் செய்யப்பட்டது.

1836ஆம் ஆண்டு 'யோசவ்வாஸ் பேதுரு' என்னும் குருவானவர் சில்லாலையில் மறைப்பணியாற்ற நியமிக்கப்பட்ட போது இன்று ஆலயம் இருக்கும் இடத்தில் ஆலயத்துக்கான அடிக்கல்லை நட்டார் என்றும் அறியவருகின்றது.

1843ஆம் ஆண்டு சுண்ணக் கற்களால் கட்டப்பட்ட ஓர் நிரந்தர ஓலைக்கூரை ஆலயம் 1850 ஆம் ஆண்டுகளில் ஓடுகளால் வேயப்பட்டு அன்னையின் திருச்சொரூபம் அங்கு வைக்கப்பட்டிருந்தது. 1874 ஆம் ஆண்டுகளில் இக்கோவில் தீப்பற்றி எரிந்த போதும் கதிரைத் தாய்க்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என ஆய்வாளர்கள் தருகின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.



1896 ஆம் ஆண்டு மற்றும் 1916ஆம் ஆண்டுகளில் இரு கட்டங்களாக ஆலயம் புனரமைக்கப்பட்டதுடன் ஆலயத்தின் உள்ளே சிம்மாசனம் எழுப்பி அன்னையின் திருவுருவம் அமைக்கப்பட்டது. பெரிய உயர்ந்த சொரூபமாக சாதாரண நாற்காலியில் அமைந்திருப்பதாக காட்சிதந்த அன்னையை சிம்மாசனத்தில் அமர்த்த விரும்பிய வெந்தக்கோன் அமதி அடிகளார் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு பழைய நாற்காலிகளை அகற்றிப் புதிய சிம்மாசனத்தில் அமரக்கூடிய விதமாக அன்னையின் உருவைக் குறைத்து அடக்கமாக வடிவமைத்தார் என்றும் கூறப்படுகின்றது. அன்னையின் பழைய படங்களில் இதனைக் காணலாம். கதிரையில் அமர்ந்து அருள்மழை பொழியும் கதிரைச் செல்வி உலகெங்கும் பரந்து வாழும் சில்லையூர் மக்களுக்கு அருளும் பாதுகாப்பும் வழங்குவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு...

பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. போர்க் காலச்சூழலைத் திரும்பவும் நினைவுபடுத்தும் வகையில் காட்சிகள் இருந்தன என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

தமது பிள்ளைகளையும் கணவன்மாரையும் பொலிஸார் ஆதாரம் ஏதுமில்லாமல் தான் தோன்றித்தனமாகக் கைது செய்கின்றனர் என்று துன்னாலையைச் சேர்ந்த பெண்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் கிளையில் முறைப்பாடு செய்திருந்தனர். இது நடந்து இரண்டு நாள்களின் பின்னர் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஒரு வார காலமாகவே, துன்னாலைப் பகுதியில் பொலிஸார் தொடர் தேடுதல்களை நடத்தி வந்தனர். சிலரைக் கைது செய்துமிருந்தனர். நேற்றுமுன்தினம் இரவு பேருந்து மற்றும் ட்ரக்குகளில் சிறப்பு அதிரடிப் படையினர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். இவர்களுடன் சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த "பீல்ட் பைக்" குழுவினரும் வந்திருந்தனர்.

வந்திறங்கிய சிறப்பு அதிரடிப் படையினரின் துணையுடன் நேற்றுக் காலை 5 மணிக்கு துன்னாலை குடவத்தைப் பகுதி பொலிஸாரால் சுற்றவளைக்கப்பட்டது. கிராமத்திலிருந்து எவரும் வெளியே செல்லமுடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. கிராமத்தின் உள்ளே வந்தவர்களின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர்.

அந்தப் பகுதி முழுவதும் பொலிஸாரின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் வீடு வீடாக சோதனை ஆரம்பமானது. ஒவ்வொரு வீட்டிலும் இருந்த வாகனங்கள் அவற்றின் ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்டன. முறையான ஆவணங்கள் இல்லாத 11 மோட்டார் சைக்கிள்கள், 6 ஹன்ரர்கள் கைப்பற்றப்பட்டன பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். கடந்த மாதம் பொலிஸார் மீதான தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்திலேயே அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். தெய்வேந்திரம் தனுசன் (வயது-25), பாக்கியநாதன் சுதாகரன் (வயது-26), சி.சிறிவின்சன் (வயது22) ஆகியோரே கைது செய்யப்பட்டனர். தாக்குதலுடன் அவர்களுக்குத் தொடர்பு இருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

காலை 10 மணியளவில் சுற்றிவளைப்புத் தேடுதல் முடிக்கப்பட்டது. 120 சிறப்பு அதிரடிப் படையினர், 80 தொடக்கம் 90 பேர் வரையிலான பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நேற்று மாலையிலும் இந்தப் பகுதியில் பொலிஸார் சுற்றுக்காவல் மற்றும் சோதனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போதும் 2 ஹன்ரர்கள், மேலும் சில மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஹன்ரர்களில் ஒன்றுக்கு ஆவணங்கள் அனைத்தும் இருந்தபோதும் அதனையும் பொலிஸார் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அந்த ஹன்ரரின் உரிமையாளர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளமையால் தான் அதனைத் தாம் எடுத்து வந்ததாகவும் உரிமையாளர் வந்து அதனை எடுத்துச் செல்லலாம் என்றும் பொலிஸார் கூறினார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்திருந்தார். இதனால் கொதிப்படைந்த மக்கள் போராட்டம் நடத்தினர். சிறப்பு அதிரடிப்படையினர் மீதும், பொலிஸ் காவலரண்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 17 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-5-26)

## கோண்டாவிலில்...

அவர்களில் சிலரிடம் அடையாள அட்டை இல்லை என்ற காரணத்தினால் வாகனம் ஒன்றில் பயணித்த அனைவரும் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று மாலை முதல் திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் திடீர் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர். திருநெல்வேலியில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் பணிபுரிந்துவிட்டு பயணித்தவர்களின் வாகனமும் கோண்டாவிலில் சோதனையிடப்பட்டது.

வாகனத்தில் இருந்தவர்களில் சிலரிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என்பதால் எல்லோருமே கைது செய்யப்பட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவுகள் கோப்பாய் பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த இளைஞர்களை விசேட அதிரடிப்படையினரே கைது செய்தமையினால் அவர்களின் அறிக்கையின் பின்பே விடுவிக்க முடியும் எனக் கைவிரித்துவிட்டனர் என்று கூறப்பட்டது. (உ-101)

## 6 மாதங்களுள்...

மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கு இதற்கு முன்னர் தொகுதிவாரித் தேர்தல் ஏதும் நடந்ததில்லை என்பதனால் புதிதாகவே தொகுதி எல்லைகள் வகுக்கப்பட வேண்டும். இந்தப் பணியை முடிப்பதற்குக் குறைந்தது 6 மாத காலம் பிடிக்கும். ஒரு வருட காலம் வரையும்கூட அது நீடிக்கலாம். எனவே உடனடியாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்றே தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கான யோசனை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையில் முன்மொழியப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. 21ஆம் திருத்தச் சட்டமாக வர்த்தமானியில் தலைமை அமைச்சரால் கடந்த 3ஆம் திகதி இது வெளியிடப்பட்டது.

நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை கலப்பு முறையில் நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிடையில் பதவிக் காலம் முடிவடையும் மாகாண சபைகளைக் கையாள்வதற்கு வேறு உத்திகளே பயன்படுத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

(உ-5)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சொக்கலிங்கம்



யாழ். தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும். பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சொக்கலிங்கம் அவர்கள் 03.08.2017 வியாழக்கிழமை பிரான்சில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பிறேமாவதியின் அன்புக் கணவரும், பிரசாந்தின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஞானலிங்கம், குணலிங்கம், மற்றும் லீலாதேவி, கமலாதேவி, புஷ்பராணி, வசந்தாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், மற்றும் ராஜ்குமார், தயாளன், ராஜரஞ்சன், ஞானேந்திரன் சபாரத்தினம், சற்குணேஸ்வரி, இராஜேஸ்வரி, விஜயரட்ணம், புவனேஸ்வரி, துரைசிங்கம், பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராயலட்சுமி, சண்முகசுந்தரம், சிவமகராசா, நகுலேஸ்வரி, மகாதேவன், சசிகலா, கதிர்காமலிங்கம் (சொக்கன்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2017) திங்கட்கிழமை மு.ப 11.30 (பிரான்ஸ் நேரப்படி) பூதவுடல் Entree 95, Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் தகனக்கிரியைகள் இடம்பெறும். அன்றைய தினம் மல்லாகத்தில் அமைந்துள்ள அன்னாரது மைத்துனரது இல்லத்தில் (கிளியர் வீடு) துயர் பகிர்வும் அஞ்சலி நிகழ்வும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம் அருகில்,
மல்லாகம்.
077 909 0236

தகவல்:
திரு.ச.விஜயரத்தினம் (கிளி)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ES Printers




- Poster
- Notice
- Lable
- Wedding Card
- Bag Print
- Award
- Frame Item
- Batch
- Vehicle Brand
- T-Shirt
- Cap
- ID Card
- Key Tag
- Book Mark
- Pen Print
- Book Printing
- Woodent Print







சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471
021 492 7472


## மரண அறிவித்தல்

# சிற்றம்பலம் மகாலிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி கல்வி வலயம்)**



பிறப்பு
22.08.1946

இறப்பு
05.08.2017

யாழ்ப்பாணம், கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் நாவலர் மடம், கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் மகாலிங்கம் நேற்று (05.08.2017) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - வேலாத்தை தம்பதியரின் அன்பு மருமகனும் மதன்ராஜ் (U.K.), மேனகா (U.K.), மேகலா ஆகியோரின்பாசமிகுதந்தையும்காலஞ்சென்றK.C.மகாதேவன், பூபதி, கமலாதேவி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கம்என அன்பாகஅழைக்கப்படும்சிவபாக்கியம்காலஞ்சென்ற பொன்.கணேசன் (ஓய்வுபெற்ற வட்டார கல்வி அதிகாரி), பாலச்சந்திரன் (ஓய்வுநிலை அதிபர்), மங்களம், சரஸ்வதி மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரியங்கா (U.K.), ராஜ்குமார் (U.K.), ரிசாந்தன் (உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுஜானி, தனுஸ்கா, டனிஷ், ஜெசிக்கா, டனுஷா, டனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவலர்மடம், கரணவாய் கிழக்கு, கரவெட்டி. 077 398 4903**

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்கான தேடல்

நாடளாவிய ரீதியில் இயங்கி வரும் எமது Everest Pvt (Ltd) நிறுவனமானது வடமாகாணத்தில் பல கிளை நிறுவ உள்ளது. அதற்கான துடிப்பான இளைஞர் யுவதிகளை இணைக்க உள்ளது. O/L, A/L தகைமையுள்ள அனை வரும் விண்ணப்பிக்கலாம். இந்த வருடம் A/L பரீட்சைக்கு தோற்ற விருக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதவி வெற்றிடங்கள்

*அலுவலக உத்தியோகத்தர்கள் *களஞ்சியப் பாதுகாவலர்கள்
*மேற்பார்வையாளர்கள் *உதவி முகாமையாளர்கள்
*முகாமையாளர்

தொடர்பு - 077 174 3524, 077 1717 278, 077 006 4030

## மயிலை வீரமாணிக்க தேவன்துறை கண்ணகை அம்பாள் ஆலய ஆடிப்பூரணைப் பெருவிழா

அம்பிகை அடியார்களே

கண்ணகை அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரணை தினத்தில் அம்பிகைக்கு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற அம்பிகை திருவருள் பாலித்துள்ளார். அதனைத்தொடர்ந்து அம்பிகை ஆலயத்தின் புனராவர்த்தனப்பணிகள் தொடர்பான கலந்துரை யாடல் ஒன்று நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் உற்சவ காலங்களில் உபயங்களைச் செய்தவர்களும் ஆலயத்தின் பணிகளில் பங்கு பற்ற விரும்பும் அம்பிகை அடியவர்களும் அன்றையதினம் நடைபெறும் பூஜை வழிபாடு களில் கலந்தும் அம்பிகையின் திருப்பணிகளில் பங்களிப்புச் செய்தும் அம்பிகையின் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

**ஆலய ஆதீன கர்த்தர்களும், நிர்வாக சபையினரும்.**

**தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள்**

**077 4717 296, 077 6569 940, 078 914 3019**

## வேலைவாய்ப்புக்கள்

- 26 பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வுகள் வரும் வாரம் நடைபெறவுள்ளன.
- நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் பெயர். முகவரி. தகைமை விரும்பும் பதவியினைக் குறிப்பிட்டு குறுந்-தகவல் அனுப்பி முன்னனுமதி பெற்றுக் கொள் ளுங்கள்.

**குறுந்தகவல் இலக்கம்(SMS) 076 377 5763**

| பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளம் | பால் |
|---|---|---|---|
| Sales | 10 | 15,000/= | Male /Female |
| Personal Assitant | 01 | 35,000/= | Female |
| Graphic Designers | 02 | 15,000/= | Female |
| Nurse | 02 | 18,000/= | Female |
| Marketing Excecutive | 02 | 12,000/= | Male |
| Promotion Girls | 05 | 25,000/= | Female |
| Team Leaders | 05 | 30 000/= | Male |

வேலை தேடுவோரின் 4வருட கால நம்பிக்கை
**WINSTAR JOB BANK**

106. தபாற்பெட்டிச்சந்தி,
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.

T.P: 021 320 2789
Web: www.winstarjaffna.com
Fb: Winstar Job bank

## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் - கைதடி கிளைமுகாமையாளர் (பயிற்சியாளர்) ஆட்சேர்ப்பு

மேற்குறிப்பிடும் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகைமையுள்ள ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி கிளைமுகாமையாளர் (பயிற்சியாளர்)
2. சம்பளம் கூ.வே ஆணைக்குழு சுற்றறிக்கை (13/2015) இற்கமைய வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூபா 450.50 அத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் விசேடபடியும் தீர்மானித்து வழங்கப்படும்.
3. வயதெல்லை 18 - 45
4. தகைமை கூட்டுறவு பணியாளர் சாதாரணதரபத்திரம் க.பொ.தர சாதாரண தரத்தில் 02 அமர்வுக்களுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தகஎண்கணிதம்/ தூயகணிதம்/ சிங்களம்/ தமிழ்மொழி என்பனவற்றை உள்ளடக்கியதாக ஐந்து (05) பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. விண்ணப்பமுடிவுத்திகதி 21.08.2017

விண்ணப்பப்படிவங்களை ரூபா 10.00 செலுத்தி தலைமைக் காரி யாலயத்தில் வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம் பூர்த்தி யாக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர் தென் மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் மானிப்பாய் வீதி, கைதடி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும். அத்துடன் தகை மைச் சான்றிதழ் களின் நிழல் பிரதிகளையும் இணைத்து தபாலுறையின் இடதுபக்க மேல் மூலை யில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிட்டு விண்ணப் பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

06.08.2017 பொதுமுகாமையாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



05.08.2017 நேற்று தஞ்சாவூர்
தமிழ் பல்கலைக்கழகத்தின்
பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி (தமிழ்)
சிறப்புபட்டம் பெற்ற

**தம்பிமுத்து அஜீபன்**

அவர்களை மேன்மேலும் பலபட்டம்
பதவிகளைப் பெற்று சிறப்பாக வாழ
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வில்சன் வீதி, மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர் :
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



05.08.2017 நேற்று தஞ்சாவூர்
தமிழ் பல்கலைக்கழகத்தின்
பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி (தமிழ்) சிறப்புபட்டம்
முதல் தர சித்திபெற்ற

**குஞ்சுத்தம்பி தினேஸ்**

அவர்களை மேன்மேலும் பலபட்டம்
பதவிகளைப் பெற்று சிறப்பாக வாழ
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

தாவளை இயற்றாலை,
வரணி.

வாழ்த்துவோர் :
குடும்பத்தினர்.

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 685
சீட்டிழுப்பு திகதி 05.08.2017 நீலம்

W 44 53 59 61

சுப்பர் ஜக்பொட் ரூ. வெல்லப்படவில்லை

54 55 67 70

ஊதா நிற டிக்கட்டுகள் 2017.08.07 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2912 திகதி 05.08.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 04 30 44 56 V
போனஸ் இல.: 29
திங்கட்கிழமை ஜக்பொட்: 35, 207, 425/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 22 53 54 67

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.08.07 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 63
சீட்டிழுப்பு திகதி 05.08.2017 ரோஸ்

வெற்றி இலக்கங்கள்: 3 21 51 56
சுப்பர் இலக்கம்: 6
அதிர்ஷ்ட மாதம்: அக்டோபர்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 150, 18, 686/= | அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21, 19, 802/= | அடுத்த ஜக்பொட் ரூ. 19, 92, 620/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 10 33 47 65

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 50,000ம் வெல்ல முடியும்

10.08.2017 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## பணி நிலை வெற்றிடம்

பொருள்களை விநியோகம் செய்யும் ஸ்தாபனம் ஒன்றிற்கு கீழ் வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. வாகனத்தில் பொருள்களை கொண்டு சென்று விநியோகிப்பதற்கு ஆண் உதவியாளர் தேவை சம்பளம் ரூபா 25000/= வரை பெறமுடியும்.
2. A/L படித்த, கணினி அறிவுள்ள 35 வயதிற்கு மேற்பட்ட கணக்குப் பார்க்கக்கூடிய பெண் வேலையாளர் தேவை.

விண்ணப்பங்கள் யாவும் உதயன் மே/பா என்ற முகவரிக்கு 14.08.2017 இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல - 6513 C/O உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# விபத்தில் காயமுற்ற முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

சாலையைக் கடந்த முதியவர் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு சிகிச்சை பயனளிக் காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இணுவில் குட்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் விபத்து இடம்பெற்றது. கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா பத்மநாதன் (வயது 68) என்பவரே நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை சாலையில் பயணித்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியது. முதியவர் தூக்கி வீசப்பட் டார். தலையில் படுகாயமடைந்த அவர் தெல் லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டார். எனினும் சிகிச்சை பயனளிக்கவில்லை. போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி ந.பிரேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். அவரை மோதிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகி விசா ரைணையில் உள்ளார் என்று மேலும் தெரி விக்கப்பட்டது. (டு-4-8)

# ரவியின் குற்றம் நிரூபிக்கப்படாமல் பதவி விலகல் அவசியமில்லை

கொழும்பு, ஓக.6

குற்றவாளி என்று அறியப்படும் வரையில் ரவி கருணாநாயக்க பதவி விலகவேண்டிய தில்லையென அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கடந்த அரசியல் புரட்சியில் முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவராக அமைச்சர் ரவி கருணாநாயக்க காணப்பட்டார்.

தவறாக எடை போட்டுவிட்டு யாரும் சொல்லும் வார்த்தைகளுக்காக அவரை நாம் ஓரம் கட்டிவிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். (டு)

# அபிவிருத்தி லொத்தர் சபை மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.6

அபிவிருத்தி லொத்தர் சபையை அயலுறவு அமைச்சின் கீழ் கொண்டுவந்தது அரசமைப் புக்கு முரணானது என உத்தரவிடுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி ஆகியோரால் முன்வைக்கப்பட்டிருந்த மனு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன் னிலையில் நேற்று முன் தினம் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது.

இது குறித்து விளக்கமளிப்பதற்கு கால அவ காசம் தேவையென்று சட்டமா அதிபர் நீதிமன் றத்தைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காய்ச்சலால்...

சிறுமி சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதுடைய குறித்த சிறுமி ஐந்து நாள்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று மதியம் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றிரவு 8 மணியளவில் உயிரிழந்தார். உயிரிழப்புக்கான காரணம் தெரியவரவில்லை. (கு-4-35)

## முடிவெடுக்கும்...

தனக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும் என்று கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களது கூட்டத்தில் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

"அமைச்சரவை மாற்றம் விரைவில் இடம்பெறும். அது பகுதியாகவா, முழுமையாகவா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை" என்று செய்தியாளர்களிடம் நேற்றிரவு தெரிவித்தார் முதலமைச்சர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈபிஆர்எல்எவ் தலைவர் க.சுரேஸ் பிரேமசந்திரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம்அடைக்கலநாதன் மற்றும் செயலாளர் ந.சிறிகாந்தா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு முதலமைச்சரின் இல்லத்தில் நேற்று மாலை 6 மணியிலிருந்து இரவு 9.15 மணி வரையில் நடைபெற்றது.

இந்த நீண்ட சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவிப்பார் என்று கூறி விட்டு எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் புறப்பட்டுச் சென்றார். முதலமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் பங்காளிக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான சுரேஸ்பிரேமசந்திரன் வரமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் நான் அவரை வருமாறு அழைத்தேன். அவர் வந்தார். என் மீது அவர் வைத்துள்ள மதிப்பை அது காட்டுகின்றது.

கூட்டத்தில், தமிழ் மக்களின் நலன் கருதிப் பின்வரும் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளோம். முதலமைச்சர் தனக்கிருக்கும் சட்டரீதியான தற்துணிபு அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்தவோ திருத்தி அமைப்பதற்கோ அங்கத்துவக் கட்சிகள் சம்மதத்தை வெளிப்படுத்துகின்றன. அமைச்சர்கள் மாற்றப்பட்டால் அது குறித்த அமைச்சர்கள் குற்றம் இழைத்தார்கள் என்று அர்த்தப்படாது.

அமைச்சரவை நியமனங்களைப் பொறுத்த மட்டில் அங்கத்துவக் கட்சிகளின் ஆலோசனைகளையும் கருத்தில் எடுத்து அவை மேற்கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, அமைச்சரவையைப் பற்றி முடிவெடுக்கும் உரிமை தனக்கு மட்டுமே இருக்கவேண்டும் என்பதில் முதலமைச்சர் விடாப்பிடியாக இருந்தார் என்று உதயன் அறிந்தது. அதேநேரத்தில் தனக்கு எதிரானவர்கள் என்று அவர் கருதும் சிலரை எந்தக் காரணம் கொண்டும் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளமாட்டார் என்பதையும் அவர் ஆணித்தரமாக இந்தக் கூட்டத்தில் எடுத்துரைத்தார். "யார் பரிந்துரைத்தாலும் அந்த 5 பேரில் எவருக்கும் அமைச்சர் பதவி கொடுக்கமாட்டேன்" என்றார் அவர்.

இது கூட்டத்தில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியது. முதல்வரின் பிடிவாதத்தை அடுத்தும், அமைச்சரவை விடயத்தில் பங்காளிக் கட்சிகளின் ஆலோசனையை ஏற்பதற்கு அவர் தயாரில்லாததை அடுத்தும் அவர் பிடிவாதம் பிடிப்பதைப்போன்றே அமைச்சர்களை நியமிக்கும் அவரது உரிமையை அங்கீகரிப்பது என்று கட்சிகளின் தலைவர்கள் முடிவெடுத்தார்கள். (உ-5-101)

## ராணுவத்துக்கு...

தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவில் மக்களின் காணிகளில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். காணிகளை விடுவிப்பதானால் அதிலுள்ள தமது முகாம்களை இடமாற்ற நிதி தேவை என்று நிபந்தனை விதித்து வருகின்றனர். இதனால் மீள்குடியேற்ற அமைச்சு ஏற்கனவே 5 மில்லியன் ரூபா நிதியை வழங்கியிருந்தது. இதனை அடுத்து 180 ஏக்கர் காணிகளை விடுவித்தனர். மக்கள் குடியிருப்பு இல்லாத காடுகளே அவ்வாறு விடுவிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 111 ஏக்கர் காணிகளையும் விடுவிப்பதற்காக இராணுவத்துக்கு 48 மில்லியன் ரூபாவை வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்தை மீள்குடியேற்ற அமைச்சு விரைவில் அமைச்சரவையின் முன் வைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## பிரச்சினை...

சர்களான சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரனையும் பதவி நீக்குவதிலும் முதலமைச்சர் தீவிரமாக இருந்தார். இதற்காக மற்றொரு விசாரணைக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்தார். அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இதையடுத்து முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றும் கொண்டுவரப்பட்டது. எனினும் இறுதி நேரத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் தலையீட்டை அடுத்து முதலமைச்சருக்கு எதிரான தீர்மானம் கைவிடப்பட்டது.

அதன் பின்னரும் பதவியில் இருந்த அமைச்சர்களுக்கு எதிரான விசாரணை நடக்கும் என்று முதலமைச்சர் அறிவித்ததால் இது ஒரு சர்ச்சையாகத் தொடர்ந்தது. அதனைச் சரி செய்வதற்காகவே நேற்று சம்பந்தன், முதலமைச்சர் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் நான்கினதும் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் கூடிக் கலந்துரையாடினர்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களை நியமிக்கும் முதலமைச்சரின் அதிகாரத்தில் தலையீடு செய்வதில்லை என்று கட்சிகளின் தலைவர்கள் இணங்கினர்.

"இறுதியில் இவ்வாறானதொரு இணக்கம் எட்டப்பட்டது என்றாலும் முதலமைச்சரின் நிலைப்பாட்டுக்கு சில கட்சிகளின் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். வேறு வழியில்லாமல் அந்த இடத்தில் அவர்கள் இணங்கிப் போயிருந்தாலும் முழுமனதோடு அவர்கள் இணங்கினார்கள் என்று சொல்வதற்கில்லை. எனவே இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்துபோகும் என்று நான் நினைக்கவில்லை. அது தொடர்வதற்கான வாய்ப்புகளே இருக்கின்றன" என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் தலைவர் ஒருவர்.

நேற்றைய கூட்டம் தொடர்பில் உதயன் அறிந்தவைகள் வருமாறு:

ரெலோ அமைப்பினர், தமது கட்சியின் சார்பில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற பா.டெனீஸ்வரனை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பேசப்பட்டபோது, விசாரணைக் குழு விடுவித்த இரு அமைச்சர்களையும் நீக்கி விட்டு, டெனீஸ்வரனுக்குப் பதிலாக ரெலோ அமைப்பு பிரேரிப்பவருக்கும் மற்றைய அமைச்சுப் பதவியை புளொட்டுக்கும் வழங்கும் முடிவை முதலமைச்சர் முன்வைத்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டார். தமது கட்சியின் அமைச்சரவைப் பிரதிநித்துவத்தை மாற்றி வழங்குவதற்கு எதிர்ப்பு வெளியிட்டார்.

மாகாண சபையில் 15 பேர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது அந்தக் கட்சிக்கு அமைச்சர் ஆசனம் வழங்காமல் விடுவது மேலும் பிரச்சினையை சிக்கலாக்கும் என்று ரெலோ மற்றும் புளொட் கட்சியினர் கூறியுள்ளனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா, திருமதி அனந்தி சசிதரனை எங்களது கட்சியின் அங்கத்தவராக இப்போது கருத வேண்டாம் என்று கூறினார். எங்கள் கட்சிக்குரிய அமைச்சர் யார் என்பதை நாம் பிரேரிப்போம் என்று கூறியுள்ளார்.

இதற்கு முதலமைச்சர், அந்த ஐவரின் (மாகாணசபையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அணி என்று அடையாளப் படுத்தப்படுபவர்கள்) பெயரைத் தந்தால் அவர்களை நியமிக்கவே மாட்டேன் என்று நேரடியாகச் சொன்னார்.

விசாரணைக்குழு விடுவித்த இரு அமைச்சர்களும் நான் நியமிக்கும் விசாரணைக்குழு முன்பாகத் தோன்றமாட்டோம் என்று கூறியுள்ளனர். அப்படி அவர்கள் தோன்றாவிட்டால் எனக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை நீக்குவேன் என்று கூட்டத்தில் ஒரு கட்டத்தில் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இழைத்த தவறுகளே இந்தப் பிரச்சினை எல்லாவற்றுக்கும் காரணம் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் குற்றஞ்சுமத்தினார். (உ,5,101)

## நிமலரூபன்...

மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. அதனையொட்டிச் சில கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாண மையப் பேருந்து நிலையம் முன்பாகச் செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு அல்லது வழக்குகளைத் துரிதப்படுத்துமாறு வலியுறுத்தி 2012ஆம் ஆண்டு ஜூலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டனர். அன்றைய மகிந்த ராஜபக்ச ஆட்சியாளர்கள் வவுனியா சிறையில் அரசியல் கைதிகள் நடத்திய போராட்டத்தை நிறுத்த இராணுவத்தினரை அனுப்பினர். அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தோர் என்று சந்தேகிக்கப்பட்டோரைத் தனிமைப்படுத்தி மேற்கொண்ட மோசமான தாக்குதலில் 15 பேர் வரை கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள். இதில் நிமலரூபன் அடுத்த நாளே உயிரிழந்தார். டில்ருக்ஸன் உடல் அசைவற்ற நிலையில் வைத்தியசாலையில் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் சிகிச்சை வழங்கப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் உயிரிழந்தார்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சிறைகளில் அரசியல் கைதிகளில் 100 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். காயங்களுக்குள்ளாகி ஊனமுற்றுள்ளனர்.

போர் முடிந்து 8 வருடங்கள் கழிந்தும் 130 பேர் வரையிலான அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் முடக்கப்பட்டுள்ள னர். சிலருக்கு வழக்குத் தொடுக்கப்படவேயில்லை. வழக்கு தொடுக்கப்பட்டோரில் பலருக்கு 10 வருடங்களுக்கும் மேலாக வழக்கு முடிவின்றி இழுத்தடிக்கப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டதால் பிணை மறுக்கப்படுகின்றது.

1971 மற்றும் 1989 இல் தெற்கில் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கினர். கைது செய்யப்பட்டோரின் வழக்குகள் 34 வருடங்களுக்குள் நிறைவு செய்யப்பட்டன. தற்போது சிறைகளில் உள்ளோர் பயங்கரமானவர்கள். இவர்களை விடுதலை செய்ய முடியாது என்று நீதிமன்றங்களில் வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதே நீதியமைச்சர் கூறியிருப்பது சட்டத்தையும் நீதிமன்றையும் அவமதிக்கும் செயல். இவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது.

வடக்கின் காணிப்பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை, அகதிகள் பிரச்சினை எனப் பல தீர்க்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் சாலைகளில் அமர்ந்து போராடுகின்றனர். அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவுகளின் விடுதலைக்காக ஏங்கித் தவிக்கின்றனர்.

நல்லாட்சி அரசில் நம்பிக்கை வைத்து வாக்களித்த நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எம் அரசியல் தலைவர்களும் ஏமாற்றுகிறார்கள் என்பது எம்மை விரக்தி நிலைக்குள் தள்ளியுள்ளது.

டில்ருக்ஸன் நினைவேந்தல் நாளில் அரசிடம் கோருவது காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி, இராணுவ முகாம்களை அகற்றுதல், காணிவிடுவிப்பு, அரசியல் தீர்வு, நல்லிணக்கத்தின் அடையாளமாக ஆட்சியாளர் அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய்யவேண்டும் என்பவற்றையே.

டில்ருக்ஸனின் நினைவு நாளில் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாண மைய பேருந்து நிலையம் முன்பாகக் கவனவீர்ப்பு இடம்பெறும். அதில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம் - என்றுள்ளது.

(கு-4)

## அமைச்சர்...

விலகுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார். முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவைப் பதவி விலகுமாறு கோரியதைப் போன்றே ரவியையும் பதவியிலிருந்து விலகுமாறு அவர் கேட்டுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் இந்தத் தகவலை அமைச்சர் ரவி கருணாநாயக்க மறுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி வழங்கலில் முறைகேடு இடம்பெற்றிருந்தது. இந்த விவகாரத்துடன் தொடர்புடைய நிறுவனம், முறைகேடு இடம்பெற்றதாகச் சொல்லப்படும் காலத்தில் நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்காவின் அதி சொகுசு வீட்டுக்கான வாடகையைச் செலுத்தியதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலையில் சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் ரவி கருணாநாயக்கா வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

பிணைமுறி விவகாரத்தால் அமைச்சர் ரவிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் தற்போதைய அயலுறவுத்துறை அமைச்சரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்கவைப் பதவி விலகுமாறு கடந்த 3ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேரடியாகக் கோரியுள்ளார்.

கூட்டு அரசில் உள்ள அமைச்சர்கள் சிலரும் இதேபோன்றதொரு கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இந்தத் தகவலை அமைச்சர் ரவி மறுத்துள்ளார். அரச தலைவர் தன்னிடம் அவ்வாறு கோரவில்லை என அவர் கூறியுள்ளார்.

(உ,5)

## யார்...

ளாக இருந்தாலும் சந்தித்து விவாதிக்கலாம் என்று தெரிவித்தார் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்.

கூட்டமைப்புத் தொடர்பான விடயங்கள் அதன் பங்காளிக் கட்சிகளின் தலைமை மட்டத்தில்தான் ஆராயப்படவேண்டுமே தவிர, மாவட்ட மட்டத் தலைவர்களினால் அல்ல என்று ரெலோ நேற்றுமுன்தினம் தெரிவித்தது. புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகிய கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள் வவுனியாவில்கூடி கூட்டமைப்பின் அரசியல் குறித்துக் கலந்துரையாடியதுடன் தமக்கிடையில் இணைந்து செயற்படவும் முடிவு செய்தனர்.

இது ஏற்கப்படக்கூடியதல்ல என்று அதற்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார் ரெலோவின் செயலாளர் ந.சிறிகாந்தா. இத்தகைய நடவடிக்கைகள் கட்சித் தலைமை மட்டத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

அவரது கருத்தை மறுத்துள்ள புளொட் தலைவர், "மாவட்ட மட்டத்தில் மட்டுமல்ல அதன் கீழே உள்ள எந்த மட்டங்களிலும் இது பேசப்பட வேண்டும்" என்றார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடையக் கூடாது என்பது எமது நிலைப்பாடு. இதனை நான் பல தடவைகள் கூறியிருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் தலைமை எடுக்கும் முடிவு தவறு என்ற விமர்சனங்கள்கூட உண்டு. எனவே அதற்குக் கீழான ஒவ்வொரு மட்டங்களிலும் கூட்டமைப்புத் தொடர்பில் பேசுவதில் தவறில்லை. எந்தக் கட்சியினர் கூப்பிட்டாலும் சென்று பேசுங்கள் என்று நான் எனது மாவட்டத் தலைவர்களுக்குக் கூறியிருக்கின்றேன். கருத்துக்களைக் கேட்பதில் கலந்துரையாடுவதில் தவறில்லை. முடிவு எடுக்கப்படும்போது கட்சித் தலைமையுடன் பேசித்தான் முடிவு எடுக்கவேண்டும்" - என்றார் சித்தார்த்தன்.

(உ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுக்கு வந்தன கருத்து மோதல்கள்

ஊதிய ஒப்பந்த விவகாரத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களின் சங்கத்துக்கும் இடையில் நிலவிய நீண்டகால கருத்துமோதல்கள் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்துள்ளன. இரதரப்பில் இருந்தும் சில விட்டுக் கொடுப்புக்களுடன் புதிய ஒப்பந்தம் கைச்சாத்தானது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம், கடந்த மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் இருந்தது. ஆஸ்திரேலிய வீரர்களின் ஊதியத்தில் இருந்து குறிப்பிட்ட தொகையை எடுத்து உள்நாட்டு கிரிக்கெட்டை மேம்படுத்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை திட்டமிட்டிருந்தது. இதனாலேயே இரு தரப்புக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரையில், கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றப் போவதில்லை என வீரர்கள் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சில் உடன்பாடு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



# பணத்துக்காக விலகவில்லை

## 4,000 கோடி விவகாரத்தில் நெய்மர் சொல்லும் நியாயம்

"பார்சிலோனா அணியில் இருந்து பணத்துக்காக நான் விலகவில்லை" என்று தெரிவித்தார் பிரேசில் அணியின் தலைவரும், பார்சிலோனா கழகத்தின் முன்னாள் நட்சத்திர வீரருமான நெய்மர்.

தேசியத்தைப் பொறுத்தவரையில் பிரேசில் அணியின் தலைவரான நெய்மர், ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காகவும் விளையாடி வந்தார். அந்தக் கழகத்தின் நம்பிக்கை வீரராகவும் உருவெடுத்திருந்தார். பார்சிலோனா அணியின் மெஸ்ஸி, சுவாரஸ் ஆகிய வீரர்களுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினார். மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் கூட்டணி உலகப் புகழ்பெற்று விளங்கியது. நெய்மரின் விலகலை அடுத்து தற்போது இந்தக் கூட்டணி உடைந்துள்ளது.

இலங்கை மதிப்பில் சுமார் 4ஆயிரம் கோடி ரூபா கொடுத்து 5 வருடங்களுக்கு பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக நெய்மர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். வீரர்களுக்கும் கழகங்களுக்குமான ஒப்பந்த வரலாற்றில் இது உலக சாதனைத் தொகையாக அமைந்துள்ளது. நெய்மர் பணத்துக்காகவே பார்சிலோனாவில் இருந்து விலகினார் என்று கருதப்படும் நிலையில் இந்தக் கருத்துக்களை அவர் மறுத்துள்ளார்.

"பரிஸ் அணியுடனான எனது ஒப்பந்தத்துக்கு பணம் மட்டுமே காரணம் என்று மக்கள் நினைப்பது கவலை அளிக்கிறது. பணத்தை நான் பெரிதாக எடுத்து இருந்தால் வேறு ஒரு கழகத்துக்கு எப்போதோ ஒப்பந்தமாகியிருக்கலாம். பரிஸ் அணியின் நிர்வாகம் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை மதிக்கிறேன். அந்த அணிக்கு முக்கிய கிண்ணங்களைப் பெற்றுக் கொடுப்பதே எனது இலக்கு" என நெய்மர் மேலும் தெரிவித்தார். (ம)



# யூனியன், ஏ.எல். வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஓக. 6

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன், அராலி ஏ.எல். அணிகள் வெற்றிபெற்றன.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

5:4 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஸ்மாட் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணி மோதியது. ஏ.எல். அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# வித்தியா வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 6

புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் முள்ளியவளை வித்தியா அணி வெற்றிபெற்றது.

முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் முள்ளியவளை வித்தியா அணியை எதிர்த்து விசுவமடு தோழர்கள் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற விசுவமடு தோழர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹரிகாலன் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் முள்ளியவளை வித்தியா அணி சார்பாக அருணன், பிரசாந் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர்.

112 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய முள்ளியவளை வித்தியா அணி 17.4 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக அஜிதரன் 40 ஓட்டங்களையும், அருனன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விசுவமடு தோழர்கள் அணியின் சார்பில் கஜாபரன் 3 இலக்குகளையும், சசிதரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-23)



# சங்கக்காரவே எனது மாதிரி என்கிறார் ஸ்மிரிதி மந்தனா

இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீராங்கனையான ஸ்மிரிதி மந்தனா, தனது துடுப்பாட்ட மாதிரி இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்காவே எனத் தெரிவித்தார்.

மந்தனாவின் துடுப்பாட்டம், இந்திய அணியின் முன்னாள் வீரரான சவுரவ் கங்குலியின் பாணியில் உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கப்படும் நிலையில் இவ்வாறு தெரிவித்துள்ளார் மந்தனா. "நான் கங்குலின் ஆட்டத்தை ரசிப்பேன், அவரது ஆட்டம் எனக்கு மிகவும் பிடிக்கும், ஆனால் சங்கக்காரவின் துடுப்பாட்டத்தைப் பார்த்து விளையாடுவது எனக்கு சிறு வயதிலிருந்தே பழகிவிட்டது. சங்ககாரவை பார்த்து விளையாடுவது எனக்குள் ஒரு தெளிவு மற்றும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும். அவரிடம் இருந்து நான் என்னை மேம்படுத்தி கொள்கிறேன்" என மந்தனா மேலும் தெரிவித்தார். (ம)



# பல்கலை - சென்றலைட்ஸ் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஓக. 6

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் துடுப்பாட்டப் பயிற்றுனர் வி.கே.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பெண்கள் சம்பியன்



யாழ்ப்பாணம், ஓக. 6
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 12 வயதுப் பிரிவினருக்கான தொடரில் பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனானது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதேநிலைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் பெறாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. (ம-108)

# வலுவிழந்த பின்னரும் இலங்கை போராட்டம்

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 'முதலாவது இன்னிங்ஸில் 439 ஓட்டங்களால் பின்னடைவைச் சந்தித்து' வலுவிழந்த பின்னரும், இரண்டாவது இன்னிங்ஸிற்காக பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது இலங்கை அணி.

கொழும்பில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 9 இலக்குகளை இழந்து 622 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் கேரத் 4 இலக்குகளையும், புஸ்பகுமார 2 இலக்குகளையும், கருணாரத்ன, பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களுடனும், சந்திமல் 8 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக இரண்டு ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் சந்திமல். குசல் மெண்டிஸால் முடிந்தது 24 ஓட்டங்களே. ஓர் முனையில் தடுமாற்றம் இருந்தாலும் மறுமுனையில் அடித்தாடி பலம் சேர்த்தார் டிக்வெல்ல. அவர் 44 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். 51 ஓட்டங்களுடன் டிக்வெல்லவை வீழ்த்தினார் சமி. இலக்குச் சரிவு தொடர்ந்து சென்றது. 183 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் அஸ்வின் 5 இலக்குகளையும், ஜடேயா, சமி இருவரும் தலா 2 இலக்குகளையும், உமேஸ் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் 439 ஓட்டங்கள் முன்னிலை பெற்றதால், இன்னிங்ஸ் வெற்றியைப் பெறும் நோக்கில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக இலங்கையைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணித்தது இந்தியா. 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து மீண்டும் தடுமாற்றம் காட்டினார் தரங்க. இலங்கை அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த இலக்குச் சரிவு ஏற்பட்டது. கருணாரத்ன, மெண்டிஸ் இணைந்து அதியற்புத ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்தியாவின் இன்னிங்ஸ் வெற்றியை இல்லாது செய்யும் வகையிலான ஆட்டமது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். குசல் மெண்டிஸ் அடித்தாடிக் கொண்டிருந்தார். அவர் 135 பந்துகளில் 110 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். நாள் முடிவில் இலங்கை 2 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கருணாரத்ன 92 ஓட்டங்களுடனும், புஸ்பகுமார 2 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## இன்றைய மோதல்கள்

**குமரநகர் வி.க. தாச்சித் தொடர்**

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா முன்னேற்றக் கழக விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# சென். பற்றிக்ஸ் மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், ஓக. 6
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட 12 வயதுப் பிரிவினருக்கான தொடரில், ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. இரண்டாம் பாதியில் சென். ஹென்றிஸ் கல்லூரி அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்து ஆதிக்கம் செலுத்தியது.

எனினும் பதிலடி கொடுத்தது சென். பற்றிக்ஸ். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் அணி கிண்ணம் வென்றது.

பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுனத்தின் நிறுவுனர்; வேலாயுதம் கணேஸ்வரன் கலந்து கொண்டார். (ம-23)

# திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி அமோக வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி வெற்றிபெற்றது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வின்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெரிக்சன் 57 ஓட்டங்களையும், மைக்கல் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியின் சார்பாக சுரேந்திரன் 2 இலக்குகளையும், பிரபு, அனுரதன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

110 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 18.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. தர்சிகன் 27 ஓட்டங்களையும், லவன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மதர் கெயார் (Pvt) Ltd

நவீன உபகரணங்களின் உதவியோடு விசேட வைத்திய நிபுணர்களினால்,
யாழ் நகரில் **பற்சிகிச்சை**

- பல்கிளிப் போடுதல்,
- நிரந்தர பல்கட்டுதல்,
- பல் வெண்மையாக்கல்,
- இடைவெளி சீராக்கல் உட்பட

சகல **"பல், வாய்"**
சிகிச்சைகளும் ஓரிடத்தில்



Contact No.077 220 2769 / 077 375 4490



# ARUL STUDY CIRCLE

111,Bonjean Road,Kotahena,Colombo - 13
T.P.: 011 233 1495, 011 247 0148

**2017 - G.C.E. O/L** பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கொழும்பு
அருள் கல்வி வட்டத்தினால் நடத்தப்படும்
இலவசக் கல்விக் கருத்தரங்கு

## இலவசக் கல்விக் கருத்தரங்கு

### குறிப்பு - இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள்

1. சகலபாடங்களும் அடங்கிய கையேடு
2. 2016 ஆம் ஆண்டு கடந்தகால வினாவிடை
3. 2016 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வித்திட்டத்திற்கு அமைய விஞ்ஞான வினா விடைக்கொத்து (30 வருடம்)
4. கணிதபாடம் 5 மாதிரி வினாத்தாள்கள் பகுதி IA, பகுதி - IB

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 10.08.2017 (வியாழக்கிழமை) | வேலணை பிரதேச செயலகம் வேலணை (இருபாலரும்) | காலை : 08.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை |
| 11.08.2017 (வெள்ளிக்கிழமை) | தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை (இருபாலரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 12.08.2017 (சனிக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (பெண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 13.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (ஆண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 14.08.2017 (திங்கட்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (இருபாலரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 15.08.2017 (செவ்வாய்க்கிழமை) | உருத்திரபுரம் தமிழ்மகா வித்தியாலயம் கிளிநொச்சி (இருபாலரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 16.08.2017 (புதன்கிழமை) | கற்சிலைமடு அறிஞர் தமிழ் கலவன் பாடசாலை கற்சிலைமடு (இருபாலரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 17.08.2017 (வியாழக்கிழமை) | மன்னார் நகரசபை மண்டபம் மன்னார் (இருபாலரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 18.08.2017 (வெள்ளிக்கிழமை) | வவுனியா நகரசபை மண்டபம் (இருபாலரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |

| பாடங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | திரு. V.தேவசேனாதிபதி - திரு. K.வசந்தன் - திரு. S. மனோகரன் - திரு. M.விக்னேஸ்வரன் |
| விஞ்ஞானம் | திரு. V.சுந்தரேஸ்வரன் - திரு. V.பிரேம்குமார் - திரு. மகேந்திரன் - திரு. [illegible] |
| தமிழ் | திரு. S.நடராஜா - திரு. K. திவாகர் |
| வரலாறு | திரு. S.நடராஜா - திரு. S. ஜங்கரன் |

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர் :
சட்டத்தரணி திரு. V. தேவசேனாதிபதி LLB
T.P. 077 113 3400 / 011 232 7524

தொடர்புகளுக்கு :
திரு. P.இளமுருகன் - 077 907 3593 - திரு. சக்திதரன் AD - 077 842 9649
திரு. சுந்தரேஸ்வரன் - 077 385 0841 - திரு. A. முருகானந்தன் - 071 856 1252
திரு. ஜங்கரன் - 077 715 7779

ஊடக அனுசரணையாளர்: உதயன்

அனைவரும் பாடசாலை சீருடையில் கலந்துகொண்டு பயன் அடையுமாறு வேண்டப்படுகின்றீர்கள்




# சென்னை சுப்பர் கிங்ஸை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்

டினேஸ் கார்த்திக் வெளிப்படை

சென்னை, ஒக.6

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிதான் எனது கழகம். அடுத்த ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாட முடிந்தால் மிகவும் மகிழ்ச்சியடைவேன் என்று தெரிவித்தார் டினேஸ் கார்த்திக். இந்திய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். "நான் எப்போது சென்னை சூப்பர் கிங்ஸ் பற்றி பேசினாலும் என் முகத்தில் புன்னகை தவழும். அதுதான் எனது கழகம். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு விளையாடுவதை பெரிதும் நேசிக்கிறேன். ஆனால் அணிச் சேர்க்கையைப் பொறுத்துத்தான் அனைத்தும் அமையும். அடுத்த ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்துக்காக காத்திருக்கிறேன்" என டினேஸ் கார்த்திக் மேலும் தெரிவித்தார். (ம)


**PSP Rent a Car**
Premio, Axio, Nissan, Alto, Daweov, Indica கார்கள்
நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.
(CS 6479) (34)
077 377 7502



யாழ் நகரில் உடனடி வேலைவாய்ப்பு
**வெளிநாட்டு பயணங்கள், கார் .வீடு வேண்டுமா?**
நீங்கள் O/L இல் சித்தி பெற்றவர்களா?
பகுதி நேர வேலை செய்து மேலதிக வருமானம் உழைக்க ஆசையா?
உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள
தொடர்பு கொள்ளுங்கள் 077 241 7007





**யாழ். திருநெல்வேலியில் இயங்கிவரும் ஏற்றுமதி இறக்குமதியில் முன்னணி வகிக்கும் N.S.K Pvt.Ltd நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.**

- சிட்டைஎழுதுனர்
- தரவுபதிவாளர்(ஆண்/பெண்)
- காசாளர்
- பொதிசெய்பவர்
- காசுவசூலிப்பவர்

தொடர்பு - 077 815 4781, 077 873 0114, 077 776 9231, 021 222 2120
விரும்பியவர்கள் 07.08.2017 திங்கட்கிழமை சுயவிவரக் கோவையுடன் நேரில் சந்திக்கவும்.



4 ஆம் 5 ஆம் தர புலமைப்பரிசில் மாணவர்களுக்கு

# சிங்களம்

தமிழ் பாடசாலையில் பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியர்க சேவை செய்த அனுபவமுள்ள நான் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தை அண்மித்த பிரதேசங்களில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்களில் சேவை செய்வதற்கு விரும்புகின்றேன்.

**சனி, ஞாயிறு**
தினங்களில் நேரம் ஒதுக்க முடியுமானால் நடத்துநர்கள் தொடர்பு கொள்ளவும்.

M.N.RAZEEM - 077 283 8382



**Herbal Doctor Plus**
சித்த ஆயுள்வேத சிகிச்சைகள் மற்றும் யோகாசனப் பயிற்சிகள் வீட்டிற்கு வந்து வழங்கப்படும்.
076 617 0707



**காணி விற்பனைக்கு**
அரியாலை தபாற்கட்டை சந்திக்கு அருகில் 03 பரப்பு காணி, வீடு, கடை கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 518 7526





01 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம்
02 தொழில்துறை அனுபவமும் தகமையும் வாய்ந்த விரிவுரையாளர் குழாம்
03 குறைந்த செலவில் தேசிய, சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறி

# MBA

A FLEXIBLE PROGRAM
IDEAL FOR THE BUSY PROFESSIONALS

XT INTAKE
9th August
TLINE :
71 777 5666

IIS CITY CAMPUS
No-200, Sivan Pannai Road, Jaffna.
021 222 8060 | 021 4900 900
www.iis.edu.lk | info@iis.lk



**வேலைவாய்ப்பு**
வடக்கின் முன்னணி பொறியியல் நிர்மாணத்துறையின் நிபுணத்துவம் மிக்க நிறுவனத்துடன் இணைய அரிய வாய்ப்பு.

- ✓ பட வரைஞர் (2D/3D Auto CAD) தேர்ச்சி பெற்றவர்கள்)
- ✓ மேற்பார்வையாளர்கள் (கட்டடம்/ நீர்ப்பாசனம் / வீதி/ மின்னியல்)
- ✓ எழுதுவினைஞர் (ஆண்/ பெண்)
- ✓ JCB ஒப்பரேட்டர்

KBS ENGINEERS
3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
021 223 1364, 077 353 8030
மின்னஞ்சல் :- rubankbs@gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வேலை வாய்ப்பு

**எமது வாகன பராமரிப்பு துறைசார்ந்த கம்பனிக்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களை இணைத்துக்கொள்ளவுள்ளோம்.**



### நிர்வாக உத்தியோகத்தர்

**கடமைகள்:**
* கம்பனியின் நாளாந்த நடவடிக்கைகளை முகாமை செய்தல்
* உயர்மட்ட முகாமைக்கு அறிக்கையிடல்

**வேண்டப்படும் அடிப்படை தகைமை :**
* 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்
* அரச / அரச சார்பற்ற நிறுவனங்களில் நிர்வாகம் சம்பந்தமான அனுபவம்
* மும்மொழி தேர்ச்சி

### வரவேற்பாளர் (ஆண்)

**தகைமை :**
* மும்மொழிகளிலும் சரளமாக உரையாடும் திறன்
* க.பொ.த உயர்தரம் தகைமை
* தகவல் தொழில்நுட்ப அறிவு

### கணக்கு உதவியாளர் (Account Assistant)

**தகைமை :**
* க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் சித்தி அல்லது சமமட்ட கணக்கியல் துறையில் சித்தி.
* தகவல் தொழில்நுட்ப அறிவு
* அடிப்படை ஆங்கில அறிவு

### ஸ்பிரே பெயின்டர் & டிங்கர்ஸ் (Spray painters & Tinkers)

**தகைமை :** * குறிப்பிட்ட துறையில் வெளிநாட்டில் பணிபுரிந்த அனுபவம்.


**16.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்**

AUTO MAASTERS

**AUTO MAASTERS LANKA (Pvt) Ltd**
No.63, Nedunkulam Road,
Ariyalai Jaffna.
T.P : 021 221 6363
077 393 1393

TOYOTA HONDA Mahindra Ford HYUNDAI DAIHATSU

## விழிநீர் சொரிகின்றோம்



# சிவகுரு மார்க்கண்டு

**(சாரங்கா நகைமாட உரிமையாளரின் மாமனும் சாரங்கா நகைமாட முன்னாள் முகாமையாளரும்)**

சிரித்த முகமும் சிந்தனை தவழும் நெறிமுறையும்
மெதுவான பேச்சும் வடும்பான நெஞ்சும்
வெள்வெளில் மனமும் கனந்த நினைவுகளாய்
எம்மை கண்கலங்க வைக்கிறது.

விதி வலிது தெரிகிறது எனினும்
மனம் தான் பேதலிக்கிறது
தித்திக்கும் உங்கள் நினைவுகள் மீள
நாமும் உங்களைத் தேடுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**சாரங்கா நகைமாட ஊழியர்கள்**

சாரங்கா நகைமாடம்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மலிவு விற்பனை

40Kg கோதுமைத்தவிடு
மொத்த விற்பனைக்கு 1360/=
(30 மூடைகளுக்கு மேல்)
**தொடர்பு - 077 362 8944**

## தேவை

அச்சகத்தில் பணியாற்றுவதற்கு கணினியிலும் பைன்டிங் வேலையிலும் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவோரும் தேவை.
**தொடர்பு - 077 828 6497, 077 555 3918**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**(06.08.2017)**

அன்னை மடியில்
26.03.1946

அரன் அடியில்
16.08.2016



### செல்வராசா சிதம்பரநாதன்


ஓய்வுபெற்ற அதிபர் -
கலட்டி றோமன்
கத்தோலிக்க ஆண்கள்
பாடசாலை

எமது இல்லத்தின் குல தெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் உறைவிடமே!
அன்பின் இலக்கணமே!
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்து எமக்கு வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஓராண்டு கழிந்திட்டாலும் உங்களை
எம் உள்ளத்திருத்தி எண்ணும் தோறும்
கண்கள் நிறைந்து கண்ணீர் சொரிகிறதே!
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்மைவிட்டு நீங்கிடாது
உங்கள் ஆத்மா சாந்திபெற
என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அம்புலிஓடை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

அன்பு மனைவி,
சகோதரர்கள்

## மரண அறிவித்தல்



# சிவகுரு மார்க்கண்டு

சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு மார்க்கண்டு நேற்று (05.08.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு சிவகாமி தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிரமராம்பாளின் அன்புக் கணவரும் வைகுந்தன் (ஆஸ்திரேலியா), உமாபாலன் (உப அதிபர் SLGTI கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகம்மா (கனடா), மகேஸ்வரி அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணாயினி (ஆஸ்திரேலியா), பிரீத்தா ஆகியோரின் அன்பு மாமனும் ஆரூரன், மிருனா, குந்தவை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2017) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 525 8637,**
**+61 403 523 948**

**மகளிர் கல்லூரி வீதி,**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



தோற்றம் 16 . 07 . 2001 — மறைவு 04 . 08 . 2017

### செல்வன் தயாபரன் அனித்திரன்

(மாணவன், அச்சுவேலி மத்திய கல்லூரி, க.பொ.த. சாதாரணதரம் - 2017)


நாவற்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தயாபரன் அனித்திரன் நேற்று முன்தினம் (04.08.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தயாபரன் குந்தவை தம்பதியரின் அன்பு மகனும் செல்வநாயகம் தங்கக்கட்டி தம்பதியரினதும் கந்தசாமி தவமணி தம்பதியரினதும் அன்புப் பேரனும் பவுத்திரன் (கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி), பவதான்ஜா (அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் சகோதரனும் காலஞ்சென்ற மகிந்தன், சகுந்தலன் மற்றும் விஜிதா, கோகுலன் (பிரான்ஸ்), கயூனா (பிரான்ஸ்), கலாநந்தன் (சுவிஸ்), காந்திமதி (சுவிஸ்), கிருபாகரன், தயாமதி ஆகியோரின் மருமகனும் மாதவி (பிரான்ஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்), தமயந்தி (ஜேர்மன்), ராஜமோகன் (ஜேர்மன்), பரராஜசேகரம், அமிர்தலதா, பிரதீபன், கவிதா, இந்திரநேசன், பிரியதர்சினி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு, அச்சுவேலி.

தகவல்: குடும்பத்தினர்.



தோற்றம் 09 . 04 . 1933 — மறைவு 05 . 08 . 2017

### திருமதி சரஸ்வதி சதாசிவம்

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும், பலகாட்டை வசிப்பிடமாகவும் தற்போது இல.01, கருவப்புலம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி சரஸ்வதி சதாசிவம் (05.08.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - ஆனந்தி தங்கம்மா தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்புமனைவியும் வேலாயுதர் (லண்டன்) காலஞ்சென்றவர்களான கமலாதேவி, இராஜேஸ்வரி, சிறீஸ் கந்தராசா ஆகியோரின் சகோதரியும் பராசக்தி (வசந்தா), பத்மாவதி (இந்திரா), பத்மராணி (சாந்தி - கனடா), காலஞ்சென்ற பவானி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற நவரட்ணம், சுந்தரலிங்கம், மகேந்திரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுதர்சினி (கொழும்பு), சுபாசினி (இத்தாலி), Dr.காந்தீபன் (வவுனியா பொதுவைத்தியசாலை) Dr.பிரதீபன் (வவுனியா பொது வைத்தியசாலை), நதீபா (லண்டன்), அஜிதா (கனடா), சாரா (கனடா), ரவீந்திரன் (இத்தாலி), Dr.தமிழினி (வவுனியா பொது வைத்தியசாலை), பகீரதி (மக்கள் வங்கி), சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் கியாறா கியன், ராகவி, ஆரூரன், நவயுகன், தீட்ஷண்யன், சமவர்தன், ஹருணி, ஹர்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## 05 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 10 . 08 . 1958 — இறப்பு 06 . 08 . 2012



அமரர்

### சின்னராசா அன்ரன் அரியரட்ணம்

[மெக்கானிக் சின்னண்ணை]

"நீ என் பார்வைக்கு அருமையான படியினால் கனம் பெற்றாய்"
- ஏசாயா 43:4 -

ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

மகன், பிரசாந்தன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா குமாரசாமி



பிறப்பு 25.02.1928 — இறப்பு 04.08.2017


யாழ். ஏழாலை தெற்கு, களவாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா குமாரசாமி 04.08.2017 வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கைச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் செல்வராணி, செல்வேஸ்வரி (சிவா), கீதா, சுமதினி, காலஞ்சென்ற ஜெசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவலிங்கம், கண்மலர் (நேசமணி), கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தகுமாரன், ஜேசுஜீவகன், ரகுபதி, ஜெறோம் ஆகியோரின் அன்பு மாமனும் ஜனனி, கிஷான், சிந்துஜன், ஜெனீபன், ஜெனீபா, ராகுல், விபுல், யாவின், யாவியா, சுமியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2017) திங்கட்கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை, காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0213207217

தகவல்: குடும்பத்தினர்.



தோற்றம் 04 . 03 . 1941 — மறைவு 04 . 08 . 2017

### தம்பு சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் என அன்பாக அழைக்கப்படும் தம்பு சிவசுப்பிரமணியம் கடந்த (04.08.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ராசா என அன்பாக அழைக்கப்படும் அரியராணியின் அன்புக் கணவரும் சுஜீவா (சுவீடன்), காலஞ்சென்ற பகீரதன் மற்றும் பரணிதரன் (உரிமையாளர், ஹார்ணி சென்ரர் நல்லூர்), ஜெனி (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இளங்கோவன் (சுவீடன்), துஷ்யந்தி, ஜெயகரன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம், இராசேந்திரம், பரராஜசிங்கம், பாக்கியவதி மற்றும் அரசரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆரங்கன், அபினாஷ், அஸ்வனா, லக்ஸ்ஷரண்யா, லஷ்நிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2017) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் இல. 18/13, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 0212215558

தகவல்: குடும்பத்தினர்.

## 116 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் வைத்திருந்த நால்வர் கைது

கொழும்பு, ஓக. 6

சட்டவிரோதமான முறையில் 12 மில்லியன் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகளைக் கடத்த முற்பட்ட நால்வரைக் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் சுங்கப் பிரிவினர், நேற்று முன் தினம் இரவு கைது செய்தனர்.

நேற்று முன் தினம் இரவு 9.35 மணியளவில் டுபாய்க்குக் கடத்தத் தயாராகவிருந்த நிலையில் சுமார் 116 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

**வீடு வாடகைக்கு**
யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு - 077 557 3677

**விற்பனைக்கு**
பாவனையிலுள்ள சூரிய ஒளியில் இயங்கும் நீர்பம்பி (சோலர் மோட்டர்) விற்பனைக்குண்டு. 076 371 0514

**வேலையாள்கள் தேவை**
கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. தொடர்பு - 076 664 4749

**பிரத்தியேக வகுப்புகள்**
A/L இணைந்த கணிதம், Grade 11 கணிதம் என்பன பிரத்தியேகமாக கற்பித்துத் தரப்படும். தொடர்பு - 077 832 4002

**விற்பனைக்கு**
யமுனா பாரி, கிடாரி, மறி ஆடுகள், குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 687 4839

**கடை வாடகைக்கு**
ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் பொருத்தமானது. தொடர்பு - 077 557 3677

**காணி விற்பனைக்கு**
அரியாலை குசவமால் லேனில் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
077 132 6489, 077 128 8930

**விற்பனைக்குண்டு**
திருநெல்வேலி Farm School இற்கு மிகவும் அருகில் 5 பரப்பு காணி உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 220 4680, 077 716 6461

**சாரதிகள் தேவை**
கிளிநொச்சியில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பாரவூர்தி (10 Weel) சாரதிகள் தேவை.
தொடர்பு - 0771512032

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.
அனுவலக உத்தியோகத்தர்கள்
07.08.2017, 9 am - 11.30 am
உங்கள் சுயவிவரக்கோவையுடன் சமூகம் அளிக்கவும்
பின்வரும் இடத்தில் நேர்முகம் இடம்பெறும்.
Gaja Rest House
K.K.S. Road, Chunnakam.
(சுன்னாகம் பிரதேசசபை முன்பாக)
தொடர்பு - 077 707 5606

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org